மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழகம்
திருநெல்வேலி

# Manonmaniam Sundaranar University
# Tirunelveli

தொலைநெறித் தொடர்கல்வி இயக்கம்

## Directorate of Distance and Continuing Education

B.A. / B.Sc. / B.Com/ B.B.A/ B.C.A முதலாமாண்டு
முதலாமாண்டு பொதுத்தமிழ் பாடத்திட்டம்

பருவம் - **II**

தாள் 1 (செய்யுள், இலக்கணம், உரைநடை, வாழ்க்கை வரலாறு இலக்கிய வரலாறு)

முனைவர் எ. ஜாஸ்மின் விஜி

உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை மற்றும் தமிழாய்வு மையம்
நேசமணி நினைவு கிறித்தவக் கல்லூரி,
மார்த்தாண்டம் - 629 165.
குமரிமாவட்டம்

பகுதி - ஒன்று, பொதுத்தமிழ் - தாள் - 2

## இரண்டாம் பருவம்

**உள்ளடக்கம்** பக்கம்


| | | |
|---|---|---|
| அலகு : 1 - செய்யுள் | | |
| | சமய - நீதி இலக்கியங்கள் | 2 - 35 |
| அலகு : 2 - இலக்கணம் | | |
| | அ. சொல் இலக்கணம் | 36 - 55 |
| | ஆ. கடிதங்கள் | 55 - 59 |
| அலகு : 3 - உரைநடை | | 60 - 111 |
| அலகு : 4 - வாழ்க்கை வரலாறு | | 112 - 171 |
| அலகு : 5 - இலக்கிய வரலாறு | | 172 - 210 |

# அலகு 1

## சமய - நீதி இலக்கியங்கள்

1. **சைவம்**

    1. தேவாரம் - திருஞானசம்பந்தர்
    2. தேவாரம் - திருநாவுக்கரசர்
    3. திருவாசகம் - மாணிக்கவாசகர்
    4. திருமந்திரம் - திருமூலர்
    5. திருவருட்பா - வள்ளலார்

2. **வைணவம்**

    1. பெருமாள் திருமொழி - குலசேகர ஆழ்வார்
    2. பெரியாழ்வார் திருமொழி - பெரியாழ்வார்
    3. பெரிய திருமொழி - திருமங்கை ஆழ்வார்
    4. திருப்பாவை - ஆண்டாள்

3. **சமணம்**

    வளையாபதி - ஆசிரியர் அறியப்படவில்லை

4. **பௌத்தம்**

    குண்டலகேசி - நாதகுத்தனார்

5. **கிறித்தவம்**

    இரட்சண்ய மனோகரம் - என்றி ஆல்பிரட் கிருட்டிணப்பிள்ளை

6. **இசுலாம்**

    குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள் - குணங்குடி மஸ்தான் சாகிபு

7. **நீதிநூல்கள்**

    1. திருக்குறள் - திருவள்ளுவர்
    2. நாலடியார் - சமண முனிவர்கள்
    3. பழமொழி நானூறு - மூன்றுறையரையனார்
    4. மூதுரை - நீதிநெறி விளக்கம்
    5. நன்னெறி - சிவபிரகாசர்

# 1. சைவம்
## 1. தேவாரம்

**திருஞானசம்பந்தர் வாழ்க்கை குறிப்பு :**

இயற்பெயர் ஆளுடையபிள்ளை. இவருடைய பெற்றோர் சிவபாத இருதயார், பகவதி அம்மையார். இவர் சீர்காழி ஊரைச் சார்ந்தவர் இவர் இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட இடம் சீர்காழி, இவர் இறைவனடி சேர்ந்த இடம் பெருமணநல்லூர், இவரின் தமிழ் கொஞ்சு தமிழ் திருஞானசம்பந்தருடைய 1, 2, 3 -ஆம் திருமுறைகளை "திருகடைகாப்பு" எனப்போற்றுவர். ஆளுடையபிள்ளை என்ற இயற்பெயருடைய திருஞானசம்பந்தர் நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தம் (சுந்தரர்) திராவிடசிசு, இன்தமிழ் ஏசுநாதர், சத்புத்திரன், காழி வள்ளல், முருகனின் அவதாரம் கவுணியர், சந்தத்தின் தந்தை, காழியர்கோன், ஞானத்தின் திருவுரு நான்மறையின் தனித்துணை கல்லாமல் கற்றவன் (சுந்தரர்) என்று பல பெயர்களில் அழைக்கப்பெற்றவர். மூன்று வயதில் இவருக்கு உமையம்மையே நேரில் வந்து இவருக்கு "ஞானப்பால்" ஊட்டினார். அன்று முதல் இவர் "ஞானசம்பந்தன்" எனப் பெயர் பெற்றார். இவர் தந்தையாரின் தோளில் அமர்ந்தவாறே சிவத்தலங்கள் சென்று பாடினார். இவரின் அனைத்துப் பதிகங்களிலும் எட்டாவது பாடல் "இராவணன்" பற்றியும், ஒன்பதாவது பாடல் "மாலும் அயனும்" காண இயலாத சிவபெருமானின் பெருமையும், பத்தாவது பாடல் "சமண பௌத்த சமயங்கள்" துன்பம் தரும் தீங்கினை உடையன என்றும் பாடும் பாங்கினை கொண்டுள்ளன.

**பாடல் எண் : 1**

**வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்**
**வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக**
**ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே**
**சூழ்க வையக முந்துயர் தீர்கவே.**

**விளக்கவுரை**

உலக நன்மையின் பொருட்டு வேள்விகள், அர்ச்சனைகள், வழிபாடுகள் ஆகியவை செய்யும் அந்தணர்கள் வாழ்க. அவ்வேள்விகளைச் சிவன் நியதிப்படி ஏற்றுச் செலுத்தும் வானவர்கள் வாழ்க. வேள்வி, வழிபாடு இவற்றிற்குரிய பஞ்ச கௌவியங்களையும், திருநீற்றினையும் அளிக்கும் பசுக்கூட்டங்கள் வாழ்க. வேள்வியின் பயனால் குளிர்ந்த மழை பொழிக. சிவாலய பூசை முதலியவற்றை அழியாது காத்துவரும் மன்னனின் செங்கோலாட்சி ஓங்குக. வேள்விகளால் வரும் நலன்களை அடையவொட்டாது கேடு விளைவிக்கும் அயனெறிகளிலுள்ள (சைவ சமயம் அல்லாத பிற சமயங்களிலுள்ள) தீயவை ஆழ்க. உயிர்கள்

யாவும் சிவன் நாமத்தை ஓதுக. இவ்வுலக மக்களின் துன்பம் நீங்குக. (பஞ்சகௌவியம் அல்லது பஞ்சகவ்வியம் என்பது பசுவிலிருந்து கிடைக்கும் ஐந்து பொருட்களால் உருவாக்கப்படும் ஒரு உயிரி நீர்மக்கலவை. இது இந்து சமயக் கோயில்களில் அபிசேகப் பொருளாக பயன்படுத்தப்படுகிறது)

பாடல் எண் : 2

**சுற்றமொடு பற்றவை துயக்கற அறுத்துக்**
**குற்றமில் குணங்களொடு கூடும்அடி யார்கள்**
**முற்றவரை வானவர்தம் வானுலக மேற்றக்**
**கற்றவ னிருப்பது கருப்பறிய லூரே**

விளக்கவுரை

சுற்றம், பற்று ஆகியவற்றை முற்றிலும் நீக்கி, குற்றமற்ற நல்ல குணங்களோடு கூடி விளங்கும் அடியவர்களைத் தேவர்கள் வாழும் வானுலகை அடையச் செய்பவர் சிவபிரான் அவர் இருக்குமிடம் கருப்பறியலூர்.

குறிப்புரை :

சுற்றமொடு பற்று அவை – (துணையும்) சுற்றமும் பற்றும் ஆகியவற்றை, துயக்கு – அறிவு வேறுபடல், சிவபிரானையே அறியும் அறிவு வேறுபடாதவாறு சுற்றம் முதலியவற்றை அறுத்து (கருமூலத்தைப் பறிப்பதால் கருப்பறியலூர் என்றாயிற்று கலந்தவர் கருப்பறியல் என ஆசிரியரே இப்பதிக முடிவில் ஊர்ப்பெயர்ப் பொருளை உணர்த்தியது உணர்க. திருகருப்பறியலூர் – தேவாரப்பாடலில் இடம்பெற்றுள்ள 274 சிவாலயங்களில், 27 –வது தேவாரத் தலமாக இருப்பது திருகருப்பறியலூர். இங்கு இறைவன் குற்றம் பொறுத்த நாதர் சுயம்பு மூர்த்தியாக எழுந்தருளியிருக்கிறார்)

பாடல் எண் : 3

**இடரினும் தளரினும் எனதுறுநோய் தொடரினும் உன்கழல்தொழுதெழுவேன்**
**கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை மிடறினில் அடக்கிய வேதியனே**
**இதுவோஎமை ஆளுமாறீவதொன் றெமக்கில்லையேல்**
**அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை அரனே.**

விளக்கவுரை

திருப்பாற்கடலில், அமுதம் பெறும் பொருட்டுக் கடைந்தபோது தோன்றிய நஞ்சினைக் கழுத்தில் அடக்கித் தேவர்களைக் காத்த வேதநாயகனே! வாழ்க்கையில் இடையூறு ஏற்பட்டுத்

துன்பம் உண்டானாலும், இளமை நீங்கி மூப்பினால் தளர்ச்சி யற்றாலும், தீவினைப்பயனால் நோய் தொடர்ந்து வந்தாலும், உன்திரு வடிகளைத் தொழுது வணங்குவேன். அத்தகைய அடியேனை நீ ஆட்கொள்ளும் தன்மை இதுவோ? திருவாவடு துறையில் வீற்றிருக்கும் சிவபெருமானே (உலக நன்மையின் பொருட்டுத் தந்தை செய்ய விரும்புகின்ற வேள்விக்குத்) தேவைப்படுகின்ற பொருளை நீ எனக்குத் தரவில்லையானால் அ.்.து உன் திருவருளுக்கு அழகாகுமா?

குறிப்புரை :

இடரினும் - துன்பத்திலும் : தளரினும் - தளர்ச்சியிலும் : நோய் தொடரினும் - வினைத் தொடர்ச்சியிலும் - உன்கழல் தொழுது எழுவேன் - உம்முடைய திருவடிகளைத் தொழுது எழுவேன். இங்குத் தளர்ந்தாலும், நோய் தொடர்ந்தாலும் - எனக்கூறின் இடர் என்பதோடு ஒத்து, தளர், தொடர் என்பன முதனிலைத் தொழிற்பெயராய் நின்றன.

பாடல் எண் : 4

**தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்**
**வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்**
**இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்**
**அம்மை யினுந்துணை அஞ்செ ழுத்தாமே**

**விளக்கவுரை**

தும்மல், இருமல் தொடர்ந்து வந்த பொழுதும், கொடிய நரகத் துன்பத்தை அனுபவிக்க நேரும் பொழுதும், முற்பிறப்புக்களில் செய்த வினை இப்பிறவியில் வந்து வருத்தும் பொழுதும், இப்பிறவியில் நாள்தோறும் ஓதிவந்ததன் பயனால் மறுபிறவியிலும் வந்து துணையாவது திருவைந்தெழுத்தேயாகும். (சைவ சமயத்தின மூல மந்திரம் “நமசிவாய” எனும் திருவைந்தெழுத்து ஆகும். இது பஞ்சாட்சரம் எனவும் பஞ்சாட்சர மந்திரம் எனவும் அழைக்கப்படுகிறது.)

குறிப்புரை :

தும்மும்போதும் இருமும்போதும் உடலில் நீங்குவது உள்ளமையால் அப்பொழுதும், கொடிய நரகத்துன்பம் நுகரவந்த விடத்தும், முற்பிறப்பிற் செய்தவினை இம்மைக்கண் அடர்த்துச் சேரும்பொழுதும், உச்சரிக்கத் துணையாவதும் இம்மையில் ஓயாது ஓதி வந்ததின் பயனாக மறுபிறவியில் வந்து துணையாவதும் திருவைந்தெழுத்தே.

# 2. தேவாரம்

**திருநாவுக்கரசர் வாழ்க்கை குறிப்பு :**

சோழநாட்டின் திருமுனைப்பாடி பகுதியிலிருந்த கடலூர் மாவட்டத்தில் உள்ள திருவாமூர் எனும் ஊரில் வேளாள குலத்தில் புகழனார் மற்றும் மாதினி இணையாருக்குப் பிறந்தவர். இவருடைய இயற்பெயர் மருணீக்கியார் ஆகும். இவர் பாடிய தேவாரப் பாடல்கள் 4, 5, 6 ஆகிய மூன்று திருமுறைகளில் வகுக்கப்பட்டுள்ளன. இளமையில் சமணசமயத்தினை விட்டு சைவ சமயத்தவரானார். சைவ நூல்களைக் கற்று அம்மத தலைவர்களில் ஒருவராகவும் இருந்தார். இவரைத் திருஞானசம்பந்தர், "அப்பர்" (தந்தை) என்று அழைத்தமையால் அப்பர் என்றும், நாவுக்கரசர் என்றும் அறியப்படுகிறார், இவர் தாண்டகம் என்னும் விருத்த வகையைப் பாடியமையால், இவரைத் தாண்டகவேந்தர் என்றும் அழைக்கின்றனர். பல்வேறு சிவாலயங்களுக்குச் சென்று தேவாரப் பதிகங்களைப் பாடினார். அத்துடன் சிவாலயங்களைத் தூய்மை செய்யும் பணியையும் செய்தார். இதனை உழவாரப் பணியென்று சைவர்கள் அழைக்கின்றனர். பல்வேறு சிவாலயங்களில் உழவாரப் பணிச் செய்து முன்னோடியாக இருந்தமையால், "உழவாரத் தொண்டர்" என அழைக்கப்பட்டார். இன்றும் சைவர்கள் உழவாரப் பணியின் தலைவராக நாவுக்கரசரையே கொள்கின்றனர். இவர் இறைவனை தொண்டு வழியில் வழிபட்டமை குறிப்பிடத் தக்கதாகும்.

**பாடல் எண் : 1**

**விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்**
**மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்**
**உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினான்**
**முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே.**

**விளக்கவுரை**

விறகின்கண் மறைந்திருக்கும் நெருப்பைப் போலவும் நல்ல பாலில் மறைந்திருந்து பின்னர்த் தோன்றும் நெய்போலவும், சிறந்த மணியின் கண் மறைந்திருந்து பின் அது வடிவமைப்பு பெற்றவுடன் ஒளி வெளிப்படுவது போலவும் இறைவன் உள்ளத்துள்ளே மறைந்து இருக்கின்றான். உறவு என்னுங்கோலை நட்டு உணர்வு என்ற கயிற்றினால் முறுகவாங்கிக் கடைந்தால் முன்னின்று அருள் வழங்குவான். (விறகு, பால், மணி இவற்றுள் மறைந்து நிற்கும் தீ, நெய், ஒளி முதலானவற்றை முறையே முறுகக் கடைதல், வாங்கிக் கடைதல், கடைதல் என்பனவற்றால் வெளிப்படுத்தலாம். அதுபோல இறைவனை உணராத பக்குவம் இல்லாதோர் அன்பினால் அறிவாகிய உணர்வினால் பக்குவம் அடைந்தால் அவர்கள் முன் இறைவன் தோன்றி அருள் செய்வான்)

பாடல் எண் : 2

**சொற்றுணை வேதியன் சோதி வானவன்**
**பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்**
**கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்**
**நற்றுணை யாவது நமச்சி வாயவே.**

விளக்கவுரை

வேதமான வாசகத்திற்கு நிகரான வாக்கியப் பொருள் வடிவாக உள்ளவனாய், பரஞ்சோதியாகிய அழியாத வீட்டுலகினனாய் உள்ள எம்பெருமானுடைய, பொலிவுடைய, தமக்குத்தாமே இணையான சேவடிகளை உள்ளம் பொருந்தக் கைதொழுதலால் கல்லைத் துணையாகச் சேர்த்து அதனோடு இணைத்துக் கடலில் தள்ளிவிட்டாலும் எம்பெருமானுடைய திருவைந்தெழுத்தே நமக்குப் பெரிய துணையாகும்.

குறிப்புரை

சொல் துணை வேதியன் - சொல்லளவான வேத முதல்வன் - வேதம் (வாசகம்) சொல்வடிவாகத்தான் அச்சொல்லின் (வாக்கியப்) பொருள் வடிவானவன் என்க – சோதி – பரஞ்சோதி – வானவன் - அழியாத வீட்டுலகினன், பொன் துணை திருந்து அடி – பொன்னடி – துணையடி – திருந்தடி எனப் பொலிவும் இணையும் செய்மையும் கொள்க அடி பொருந்தக் கைதொழலாவது உள்ளத்தை அடியும் அடியை உள்ளமும் பற்றக் கொண்டு – கை குவித்து வணங்குதல் - கையொன்று செய்யக் கருத்தொன்று எண்ணலாகாது – கல்துணைப் பூட்டி – கல்லைத் துணையாகப் பூணச்செய்து – கல்லொடு கட்டி என்றபடி – கடலிற் பாய்ச்சினும் கை அடிதொழ நற்றுணையாவது திருவைந்தெழுத்து.

பாடல் எண் : 3

**உடம்பெனும் மனையகத்து உள்ளமே தகளியாக**
**மடம்படும் உணர்நெய் அட்டி உயிரெனும் திரிமயக்கி**
**இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்து நோக்கில்**
**கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே**

விளக்கவுரை

உடம்பு என்னும் வீட்டில் உள்ளத்தை அகல் சட்டியாக்கி, அதில் உணர்வு என்னும் நெய்யை ஊற்றி, உயிரையே திரியாக வைத்து, ஞானத்தீயை ஏற்றினேன். அவ்வொளி, கடம்ப மலர் மாலையை அணிந்த முருகனின் தந்தையான சிவனைக் காண்பதற்கான வழி இது.

குறிப்புரை :

உடலான வீட்டில், சிவமான பொருள் இருப்பது, மடமான இருளால் தெரிந்திலது; விளக்கேறிப் பார்த்துணர்தல் வேண்டும். உள்ளமான அகலுள் பசுஞானமான நெய் சேர்த்து, உயிரான திரியிட்டுச் சிவஞானமான தீயால் எரிதலைக்கொள்ள, அச்சிவஞானப் பிரகாசத்திலிருந்து நோக்கினால், சிவமான பொருளைக் காணலாம். (கடம்பமர் காளை தாதை ஸ்ரீ கடம்ப மலர் மாலையை விரும்பும் முருகப் பிரானின் தந்தை)

பாடல் எண் : 4

**மனமெனுந் தோணி பற்றி மதியெனுங் கோலை ஊன்றிச்**
**சினமெனுஞ் சரக்கை யேற்றிச் செறிகட லோடும் போது**
**மனனெனும் பாறை தாக்கி மறியும்போ தறிய வொண்ணா**
**துனையுனு முணர்வை நல்கா யொற்றியூ ருடைய கோவே.**

விளக்கவுரை

ஒற்றியூர் உடைய கோவே! மனம் என்னும் தோணியைப் பொருந்தி, அறிவு என்று சொல்லப்படும் சவள் தண்டை ஊன்றிச் சினம் எனும் சரக்கை அத்தோணியில் ஏற்றிப் பாசக்கடலாகிய பரப்பில் அத்தோணியைச் செலுத்தும் போது மன்மதன் என்ற பாறை தாக்க அத்தோணி கீழ்மேலாகக் கவிழும் போது உன்னை அறிய இயலாதோனாய் வருந்துவேன். அப்போது அடியேன் என்னை மறந்து உன்னையே தியானிக்கும் அறிவை அடியேனுக்கு விரும்பி அளிப்பாயாக.

குறிப்புரை :

மனம் தோணி : மதிகோல் : சினம் சரக்கு : (பாசம்) கடல் : மனன் (மன்மதன்) பாறை : மறியும்போது – கீழ்மேலாகும் பொழுது. ஒண்ணாது – ஒன்றாது, பொருந்தாது. மனத்தோணி பற்றி மதிக்கோலை ஊற்றி, சினச் சரக்கை யேற்றி (ப் பாச) க் கடற் பரப்பில் ஓடும் வேளையில், காமப்பாறை தாக்கிக் கவிழ்ந்து கீழ்மேலாகும் பொழுது, ஒற்றியூருடைய கோவே. உன்னை அறிய ஒன்றாது வருந்துவேன். அப்போது என்னை மறந்து உன்னை உன்னும் உணர்வை நல்குவாய். முனன் என்பது பழமையான பாடம், மனன் - மன்மதன் இத்திருப்பாடலை மறவாது எஞ்ஞான்றும் ஓதிவருதல் வீடுபேறு விழைவாரது கடனாகும்.

# 3. திருவாசகம்

**மாணிக்கவாசகர் வாழ்க்கைக் குறிப்பு**

சைவ சமயக் குரவர்கள் நால்வரில் ஒருவராவர். முன்னைய மூவரும் தேவாரம் பாடியிருக்க இவர் பாடிய நூல்களாவன: திருவாசகமும் திருக்கோவையாருமாகும். இவர் 9-ஆம் நூற்றாண்டில் வரகுண பாண்டியன் காலத்தைச் சேர்ந்தவர். இவர் அரிமர்த்தன பாண்டியனிடம் தலையமைச்சராகப் பணியாற்றினார். இவர் பாடிய பாடல்கள் "திருவாசகம்" என அழைக்கப்படுகின்றன. பக்திச் சுவையும் மனதை உருக்கும் தன்மையும் கொண்ட திருவாசகப் பாடல்கள், தமிழில் சிறந்த இலக்கியங்களின் வரிசையில் வைத்து எண்ணப்படுகின்றது. தமிழ் கற்று ஞான நெறியைப் பின்பற்றிய இவர் 32 ஆண்டுகளே வாழ்ந்து ஆனி மகத்தில் சிவனடி சேர்ந்தார்.

இவருக்கு அருள்வாசகர், மாணிக்கவாசகர், திருவாதவூரடிகள், தென்னவன் பிரமராயன் என்ற பெயர்களும் உண்டு. இவரது பால்கள் 8-ஆம் திருமுறையாக உள்ளன.

**பாடல் எண் : 1**

**கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை**
**தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடீ**
**தாயுமிலி தந்தையிலி தான்தனியன் ஆயிடினுங்**
**காயில் உலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ**

**விளக்கவுரை**

சுடுகாட்டைக் கோயிலாகவும், புலித்தோலை ஆடையாகவும் கொண்டான். அன்றியும் அவனுக்குத் தாய் தந்தையரும் இல்லை. இத்தன்மையனோ உங்கள் கடவுள்? என்று புத்தன் வினாவ, எங்கள் கடவுளுக்குத் தாய் தந்தையர் இல்லாவிடினும், அவன் சினந்தால் உலகம் முழுவதும் கற்பொடியாய் விடும் என்று ஊமைப்பெண் விடை சொன்னாள்.

**குறிப்புரை :**

கோயில் - அரண்மனை: நல்லாடை – உயர்ந்த உடை இதன்பின் 'ஆகுக' என்பது வருவிக்க, "தந்தை" என்றவிடத்து எச்ச வும்மை தொகுத்தலாயிற்று. "தாயும் இலி தந்தையும் இலி தான் தனியன்" என்றது. ஒருவரும் துணையில்லாத தனிமையன் என்று இகழ்ந்ததாம் காயில் - வெகுண்டால்.

‘உன்னாற் புகழப்பட்ட தலைவனுக்குச் சுடுகாடே அரண்மனையும், புலித்தோலே பொன்னாடையுமாதல் ஒருபால் நிற்க; அவன், துணையற்ற தனியனாய் இருத்தல் பொருந்துமோ என்பது தடை. அவன் வெகுண்டவழி முன்னிற்பது ஒன்றுமில்லையாதலின், அவனுக்குத் துணை வேண்டுவது எற்றுக்கு’ என்பது விடை.

“தாயும் இலி தந்தையும் இலி” என்றதனால் ‘பிறப்பற்றவன்’ என்பது கூறப்பட்டது.

பாடல் எண் : 2

**என்புள் ளுருக்கி இருவினையை ஈடழித்துத்**
**துன்பம் களைந்து துவந்துவங்கள் தூய்மை செய்து**
**முன்புள்ள வற்றை முழுதழிய உள்புகுந்த**
**அன்பின் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.**

விளக்கவுரை

எலும்பையும் உள்ளே உருகச்செய்து, இருவினைகளாகிய சஞ்சிதம் (முற்பிறவியில் செய்த வினை) பிராரத்தத்தின் (முற்பிறவியில் பலனாக கிடைத்த இப்பிறவியில் செய்த வினை) வலியினை ஒழித்து, அவற்றால் உண்டாகின்ற துன்பத்தைப் போக்கி, தொடர்புகளையும் அறுத்துப் பரிசுத்தமாக்கி, முன்னேயுள்ள சஞ்சித வினையை, முற்றிலும் தொலையும் வண்ணம், என் நெஞ்சத்தே எழுந்தருளிய, அன்பினையுடைய, விளக்கம் பொருந்திய தில்லை ஆண்டவனை, அடியேன் பற்றிக்கொண்டேன் அல்லவா?

குறிப்புரை :

பிராரத்த அனுபவத்தில் உண்டாகும் விருப்பு வெறுப்புகள் துவந்துவங்களாம். விரும்பினால் நன்மையும் வெறுப்பினால் தீமையும் உண்டாதலின், இரண்டும் கூடா என்றவாறு, தூய்மை செய்தலாவது, அவற்றை இல்லையாகச் செய்தல் ‘முன்புள்ளவற்றை’ என்றது. முற்பிறவிகளில் செய்த பழவினையை குரு தரிசனத்தால் நெருப்பின்முன் பஞ்சுப்பொதி போல இவை அழிந்து ஒழியுமாதலின், ‘முன்புள்ளவற்றை முழுதழிய உள்புகுந்த ஆண்டானை’ என்றார்.

பாடல் எண் : 3

**பூதங்கள் ஐந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்**
**பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனைக்**
**கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை**
**வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே**

**விளக்கவுரை**

ஐம்பூதங்களாகிச் (வானம், காற்று, நெருப்பு, நீர் மற்றும் நிலம்) சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற புலன்களாகி ஏனைய எல்லாப் பொருள்களுமாகி, அவற்றிற்கேற்ப வேறுபாடுகளுமாய்த் தான் வேறுபடுதலில்லாத பெருமை யுடையவனாய்த் துன்பங்களைப் போக்கி எம்மை ஆண்டு அருளிய ஒளிப்பொருளானவனைப் பச்சைமணி போன்றவனை வேதங்கள் வணங்கித் துதிக்கின்ற தில்லையம்பலத்தில் கண்டேன்.

பாடல் எண் : 4

**பிறவிதனை அறமாற்றிப் பிணிமூப்பென் றிவையிரண்டும்**
**உறவினொடும் ஒழியச்சென் றுலகுடைய ஒருமுதலைச்**
**செறிபொழில்சூழ் தில்லைநகர்த் திருச்சிற்றம் பலம்மன்னி**
**மறையவரும் வானவரும் வணங்கிடநான் கண்டேனே**

**விளக்கவுரை**

பிறவியை முற்றிலும் நீக்கி, நோய், முதுமை ஆகிய இவை இரண்டையும், சுற்றமாகிய பற்றோடுங் கூட நீங்கிப்போய் உலகத்தையுடைய ஒப்பற்ற முதல்வனை, நெருங்கிய சோலை சூழ்ந்த தில்லையம்பதியில் திருச்சிற்றம்பலத்தை அடைந்து அந்தணரும் தேவரும் தொழுதிட நான் கண்டேன்.

## 4. திருமந்திரம்

**திருமூலர்**

திருமூலர் அல்லது திருமூல நாயனார் சேக்கிழார் சுவாமிகளால் புகழ்ந்து பேசப்பட்ட அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரும், பதினெண் சித்தர்களுள் ஒருவரும் ஆவார். இவர் சிறந்த ஞானியாய் விளங்கியவர். திருமூலர் வரலாற்றை நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதியில் சுருக்கமாய்க் கூறுகிறார். பன்னிரு திருமுறைகளில் திருமூலர் எழுதிய திருமந்திரம் 10 –ம் திருமுறையாகும். இது மூவாயிரம் பாடல்களைக் கொண்டது. யோகிகள் பல்லாண்டு காலம் உயிர் வாழ்ந்திருப்பார் என்பது நூற் கொள்கை. திருமூலர் ஒரு யோகி. ஆகவே அவர் தான் கற்ற வித்தையை உலகிற்குக் கூறுகின்றார். உடல் வேறு, உயிர்வேறு, இவையிரண்டும் ஒன்று சேர்ந்து இருந்தால் தான் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருட்களையும் அடைய முடியும் என்ற அந்த உபாயத்தைத் திருமூலர் நமக்குக் கூறுகின்றனர். திருமந்திரம் ஒன்பது பகுதிகளாக உள்ளது. ஒவ்வொரு பகுதியும் ஒரு தந்திரம் எனப்பெயர் பெறும்.

பாடல் எண் : 1

ஊரெலாங் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே

விளக்கவுரை

உடம்பு விழுந்தபின் இல்லத்தளவில் செயற்படுவோராகிய பெண்டிரும், மக்களுமேயன்றி, ஒருங்கு திரண்டு பலவற்றைச் செய்து முடிப்போராகிய ஊரவரேனும் பிரிந்தோருடன் செல்ல வல்லரோ எனின் அல்லர்; அவரும் அப்பெண்டிர் மக்களுடன் ஒருங்கு கூடி முன்னர்ப் பேரொலி உண்டாக அழுது, பின் அது காறும் அவர்க்குக் கூறி அழுத இயற்பெயர் சிறப்புப் பெயர்களை ஒழித்து, 'பிணம்' என்னும் பெயரையே சொல்லி எடுத்துக் கொண்டு போய், 'சூரை' என்னும் ஒருவகை முட்செடிகள் நிரம்பியுள்ள காட்டில் வைத்து எரித்து விட்டுத் தீட்டுப் போதற்கு நீரினுள் மூழ்கித் தூய்மை பெற்றாராய்ப் பின்பு அவரைப் பற்றிய நினைவும் இல்லாதவரே ஆவர்.

பாடல் எண் : 2

அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்
இடப்பக்க மேஇறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே

விளக்கவுரை

உணவு சமைத்தற்கு வேண்டுவனவற்றை ஈட்டிக் கொணர்ந்து வைத்த தலைவர், சமைத்தாயின பின்பு அவ்வுணர்வை உண்டார்; பின் தம் இல்லக்கிழத்தியாரொடு தனிமையில் இருந்து சிலவற்றை உசாவுதல் செய்தார்; அச்செயலுக்கிடையே, 'உடம்பில் இடப்பக்கம் சிறிது நோகின்றது' என்று சொல்லி, அது நீங்குதற் பொருட்டு ஓய்வு கொள்ளுதற்குப் படுத்தார்; படுத்தவர் படுத்துவிட்டவரே யாயினார்; மீள் எழுந்திருக்கவில்லை.

குறிப்புரை :

'இவ்வாறாகின்றது சிலரது வாழ்க்கை' என்றவாறு 'நிலையாமை வரும் காலத்தை அறிந்தார் இல்லை; அதனால் செய்யவேண்டுவதை விரைந்து செய்தலே அறிவுடைமை' என்பதாகும்.

பாடல் எண் : 3

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே

விளக்கவுரை

பிற உயிர்களை கொன்று அதன் உடலிலிருந்து பெறுவதாலும் மனித உடலுக்கு தீமை தருவதாலும் பொல்லாத புலாலை (அசைவத்தை) விரும்பி சாப்பிடும் கீழ் மக்களை அவர்கள் இறக்கும் தருவாயில் அவர்களைச் சுற்றி நின்ற அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே எமதர்மனின் தூதுவர்கள் வந்து கரையானை போல இறுக்கமாக பற்றி இழுத்துக்கொண்டு போய் எப்போதும் எரிந்து கொண்டிருக்கும் கொடிய நரக தீயினுள் அவர்களின் முதுகு கீழேபட முகமும் உடலும் மற்றவர்கள் பார்க்கும்படி மேலே தெரிய மல்லாக்க தள்ளிவிட்டு அவர்கள் சுடும் தீயில் இருந்து தப்பிச் செல்லாமல் இருக்க கதவுகளையும் மூடி விடுவார்கள்.

குறிப்புரை :

பொல்லாங்கு, கொலையால் வருவதாயும், கொலை செய்யத் தூண்டுவதாயும் இருத்தல், இது பற்றி அதனை உண்பாரை, ‘புலையர்’ என்றார். புலையர் – கீழ்மக்கள்.

பாடல் எண் : 4

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதமே

விளக்கவுரை

மரத்தால் செய்யப்பட்ட பெரிய மதயானை உருவம் சிற்பியின் கைவண்ணத்தால் மரத்தை உணர ஒட்டாமல் மறைத்து, மக்களை மயக்குகின்றது. ஆயினும் சிற்பியினது வேலைப்பாடுகளை அழித்து விட்டால், அந்த மத யானையாய் இருந்த பொருள் அழியாதிருப்பினும் மரத்தினுள்ளே மறைந்துவிடும். அது போல, பரம்பொருளால் இயங்குகின்ற உலகம், ஆன்மாவின் காலத்தில் தானே சுதந்திரமாய் இயங்குவனவாய் அதற்குக் காட்சியளிக்கும். ஆயினும் குருவருளால் ஞானத்தைப் பெற்ற முத்தி காலத்தில் உண்மை ஞானம் பொது ஞானத்தை அழித்துவிடுவதால், உலகம் சுதந்திரம் அற்றொழியப் பெரும் பொருளின் இயக்குதலே விளங்கி நிற்கும்.

# 5. திருவருட்பா

**வள்ளலார்**

திருவருட் பிரகாச வள்ளலார் என்று அழைக்கப்படும் இராமலிங்க அடிகளார் ஓர் ஆன்மீகவாதி ஆவார். இவர் சத்திய ஞான சபையை நிறுவியவர். “வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம், வாடினேன்” என்று பாடியவர் இவர். இராமலிங்க சுவாமிகள் சித்தர்கள் வரிசையில் வைத்து எண்ணப்பட வேண்டியவர். இறைவன் ஒளிமயமானவன் என்கிற பேருண்மையை உலகுக்குணர்த்தியவர் அவர். சீவகாருண்ய ஒழுக்கத்தோடு அன்னதான சிறப்பையும் மக்களுக்கு வலியுறுத்தியிருக்கிறார். சுவாமிகள் மருதூர் என்னும் சிற்றூரில் 1823 –ஆம் ஆண்டு அக்டோபர் 5 –ல் அவதரித்தார். சமத்துவம், கல்வி, தியான யோகம் இவற்றை வலியுறுத்தினார். உயிர்ப்பலியைத் தடுத்து நிறுத்தினார். சன்மார்க்க சங்கம், சத்திய ஞானசபை, அறக்கூழ்ச்சாலை என்று அவர் தோற்றுவித்த ஆன்மிகப் பணிகள் இன்றும் வடலூரில் நடந்து வருகின்றன.

பாடல் எண் : 1

**வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம் வாடினேன்**
**பசியினால் இளைத்தே**
**வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த வெற்றரைக்**
**கண்டுளம் பதைத்தேன்**
**நீடிய பிணியால் வருந்துகின் றோர்என் நேருறக்**
**கண்டுளந் துடித்தேன்**
**ஈடின்மானிகளாய் ஏழைக ளாய் நெஞ்(சு) இளைத்தவர்**
**தமைக்கண்டே இளைத்தேன்**

**விளக்கவுரை**

நீர் இல்லாமல் வெயிலால் வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன் பசியினால் இளைத்து உடல் மெலிந்து வீடுதோறும் இரந்தும் பசி விலகாமல் சோர்ந்த ஒன்றும் இல்லாதவர்களைக்கண்டு உள்ளம் பதைத்தேன். நீண்ட நாள் நோயால் வருத்தப்படுபவர் என் முன்னால் வரும் போது அவர்களைப் பார்த்து உள்ளம் துடித்தேன் ஒப்பில்லாத மானம் உள்ளவர்கள் கஷ்டப்பட்டாலும் மற்றவர்களிடம் போய் உதவி கேட்க மாட்டார்கள் அப்படிப்பட்ட ஈடின் மானிகள் ஏழைகளாய் நெஞ்சம் இளைத்தவர்களை அப்படிப்பட்ட மக்களைக் கண்டு நானும் இளைத்தேன்.

(மற்றவர்கள் துன்பத்தை கண்டு வருத்தப்படுவது எல்லோருக்கும் எளிதான் ஒன்று தான். அந்த துன்பத்தை போக்க ஏதாவது செய்வது தான் கடினம். மனிதனுக்கு வரும் பெரிய துன்பம் பசி துன்பம் தான். அந்த துன்பத்தை போக்க வள்ளலார் அணையாத அடுப்பை கொண்ட உணவு சத்திரத்தை நிறுவினார். வடலூரில் அந்த உணவு சாலை இன்றும் இயங்கி கொண்டு இருக்கிறது. அவர் மறைந்த பின்னும் அவர் நிறுவிய அந்த சத்திரம் மக்களின் பசிப் பிணியை நீக்கிக் கொண்டு இருக்கிறது. அவருடைய மனித நேயத்திற்கு இந்த பாடல் ஒரு சாட்சி)

**பாடல் எண் : 2**

**ஈயெனப் பறந்தேன் எறும்பென உழன்றேன்**
**எட்டியே எனமிகத் தழைத்தேன்**
**பேயெனச் சுழன்றேன் பித்தனே எனவாய்ப்**
**பிதற்றொடும் ஊர்தொறும் பெயர்ந்தேன்**
**காயெனக் காய்த்தேன் கடையென நடந்தேன்**
**கல்லெனக் கிடந்தனன் குரைக்கும்**
**நாயெனத் திரிந்தேன் என்னினும் உனையே**
**நம்பினேன் கைவிடேல் என்னையே**

**விளக்கவுரை**

ஈயைப்போன்று பறந்தேன் எறும்பைப் போன்று பொருள்சேர்ப்பதற்காக இவ்வுலகில் வருந்தினேன். எட்டி மரத்தைப் போன்று தழைத்தேன் (எட்டி மரம் கசப்பு சுவையுடைய காயினை உடையது) பேய் போல அலைந்து திரிந்தேன் பித்தனைப் போல பேசிக்கொண்டு ஊர்தோறும் அலைந்தேன் உலக வாழ்வில் சோர்ந்து முடிவில்லாது நடந்தேன். கல்லைப் போன்று பயனற்றுக் கிடந்தேன். குரைக்கும் நாயினை போன்று திரிந்தேன் ஆனாலும் இறைவனே உன்னையே நம்பினேன் என்னை கைவிடாயாக.

## 2. வைணவம்

## 1. பெருமாள் திருமொழி

**குலசேகர ஆழ்வார் குறிப்பு :**

இவர் சேரநாட்டுத் திருவஞ்சிக் களத்தில் தோன்றியவர் - இவர் எழுதிய பாடல்கள் பெருமாள் திருமொழி எனப்படும். அவை மொத்தம் 105 பாடல்கள் ஆகும். இவர் கௌத்துவமணியின் (ஐவகை மணிகளுள் ஒன்று) அம்சமாகப் பிறந்தவர். இவர் வடமொழியில் "முகுந்த மாலை" என்னும் நூலினை எழுதியுள்ளார் ஒவ்வொரு வைணவத்திருக்கோயிலிலும்

இறைவனின் கருவறைக்கு முன் உள்ளபடி “குலசேகரன் படி” என்ற பெயரில் வழங்கப்படும். திருவரங்கத்தின் மூன்றாம் மதிலை இவர் கட்டினார்

**வேறு பெயர்கள் :**

கொல்லிக் காவலன், கூடல் நாயகன், கோழிக்கோ என்ற வேறு பெயர்களை உடையவர். இவரது படைப்பு பெருமாள் திருமொழி ஆகும். திருவரங்கம் சென்று திருவரங்கப் பெருமானை வாயார வாழ்த்தி நின்று தம் அனுபவத்தைப் பாடியருளினார். இவருடைய பாடல்கள் பெருமாள் திருமொழி என்றழைக்கப்படும் இதனில் 31 பாசுரங்கள் திருவரங்கப் பெருமானைப் பற்றியது. இவர் திருவேங்கடம், திருக்கண்ணபுரம் முதலான திருத்தலங்களையும் பாடியுள்ளார்.

பெருமாள் திருமொழியில் பத்து பாசுரங்கள் ராமபிரானுக்காகப் பாடப்படும் தாலாட்டுப் பாடல்களாக அமைந்துள்ளன.

பாடல் எண் : 1

**ஊனேறு செல்வத் துடற்பிறவி யான்வேண்டேன்**
**ஆனேறேழ் வென்றா னடிமைத் திறமல்லால்**
**கூனேறு சங்க மிடத்தான்தன் வேங்கடத்து**
**கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே**

**விளக்கவுரை**

நாளுக்கு நாள் மாம்சம் வளர்ந்து தடிப்பதாகிற செல்வத்தையுடைய இம்மனித வுடம்பெடுத்துப் பிறத்தலை யான் வேண்டேன். நப்பின்னைப் பிராட்டிக்காக ஏழு எருதுகளை ஜயித்தவனான எம்பெருமானுக்கு அடிமைப்பணி செய்வதையே நான் வேண்டுவதல்லாமல், வளைந்திருக்கிற ஸ்ரீபாஞ்சஜந்யத்தை (திருமாலின் சங்கு) இடத்திருக்கையிலேயுடையனான எம்பெருமானுடைய திருவேங்கட மலையில் கோனேரியில் வாழும் நாரையாயாவது பிறக்கக் கடவேன்.

பாடல் எண் : 2

**ஒண்பவள வேலை யுலவுதண் பாற்கடலுள்**
**கண்துயிலும் மாயோன் கழலிணைகள் காண்பதற்கு**
**பண்பகரும் வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்து**
**செண்பகமாய் நிற்கும் திருவுடையே னாவேனே**

**விளக்கவுரை**

ஒளியுள்ள பவழக் கொடிகளைக் கரையிலே கொணர்ந்து கொழித்து (அலைகள்) உலாவுகிற குளிர்ந்த திருப்பாற்கடலிலே யோக நித்திரை செய்தருள்கின்ற ஆச்சரிய

சக்தியுக்தனான எம் பெருமானுடைய இரண்டு திருவடிகளை சேவிக்கும்படியாக இசையையே பேசுகிற வண்டுகளின் கூட்டங்கள் பண்ணிசை பாடப்பெற்ற திருமலையிலே சண்பக மரமாய் நிற்கும் பாக்கிய முடையேனாகக் கடவேன்.

பாடல் எண் : 3

**வானாளும் மாமதிபோல் வெண்குடைக்கீழ் மன்னவர்தம்**
**கோனாகி வீற்றிருந்து கொண்டாடும் செல்வறியேன்**
**தேனார்பூஞ் சோலைத் திருவேங் கடமலைமேல்**
**கானாறாய்ப் பாயும் கருத்துடையே னாவேனே**

**விளக்கவுரை**

ஆகாயத்தைத் தனக்கு இடமாகக் கொண்டு விளங்குகின்ற பூரண சந்திரன் போன்ற ஒற்றை வெண்கொற்றக் குடையின் கீழ் ராஜாதி ராஜனாய்ப் பெருமை தோன்ற இருந்து (அனைவராலும்) கொண்டாடப்படுவதற்குக் காரணமான செல்வத்தை (யான் ஒரு பொருளாக) மதிக்கமாட்டேன் தேன் மிக்க மலர்களுள்ள சோலைகளையுடைய திருவேங்கடமலையின் மேல் ஒரு கானாறாய்ப் பெருகும் படியான கருத்து உடையவன் ஆகின்றேன்.

## 2. பெரியாழ்வார் திருமொழி

**பெரியாழ்வார் ஆசிரியர் குறிப்பு**

பெரியாழ்வார் வைணவ நெறியைப் பின்பற்றிப் பக்தியில் சிறந்து விளங்கிய பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர். திருவில்லிபுத்தூரில் ஆனிமாதம் சுவாதி நட்சத்திரத்தில் கருடன் அம்சமாக ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிறந்தவர். ‘விஷ்ணு சித்தர்’ என்பது இயற்பெயர். இறைவனுக்கே கண்ணேறு கழிக்க முயன்றதால் இவரை ஆழ்வார்களில் பெரியவர் எனும் பொருள்பட “பெரியாழ்வார்” என அரங்கன் அழைக்க, பின்னர் இதுவே இவர் பெயராகிப்போனது. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் முதலாயிரத்தில் திருப்பல்லாண்டு பெரியாழ்வார் திருமொழி ஆகிய இரு இவரது இரு நூல்களும் அடங்கியுள்ளன. கண்ணனைப் பிள்ளையாகப் பாவித்து இவர் பாடிய பாடல்கள் பிற்காலத்தில் பிள்ளைத்தமிழ் என்னும் சிற்றிலக்கியம் தோன்ற முன்னோடியாக அமைந்துள்ளன. திருவில்லிபுத்தூரில் கோயில் கொண்டுள்ள வடபத்திரசாயி பெருமாளுக்கு அன்றலர்ந்த மலர்களைப் பறித்துப் பூமாலையாகச் சாற்றுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஆழ்வார்களில் ஒரே பெண் ஆழ்வாரான ஆண்டாளின் வளர்ப்பு தந்தையானவர். ஆண்டாளைத் திருவரங்கம் உறையும் அரங்கனுக்கு மணம்முடித்துக் கொடுத்ததன் மூலம் அரங்கனுக்கே மாமனார் ஆனார்.

பாடல் எண் : 1

**எழிலார் திருமார்வுக்கு ஏற்கும் இவையென்று**

**அழகிய ஐம்படையும் ஆரமும் கொண்டு**

**வழுவில் கொடையான் வயிச் சிரவணன்**

**தொழுதுவனாய் நின்றான் தாலேலோ தூமணி வண்ணனே தாலேலோ**

**விளக்கவுரை**

பெருமாளின் (திருமால்) அடையாளங்களான பஞ்சாயுதங்களின் சின்னங்கள் பொருந்திய முத்து மாலை ஒன்றை கண்ணனின் அழகான திரு மார்பிற்கு உகந்தவை என்றெண்ணி அப்பழுக்கு இல்லாத குபேரன் உனக்கு சமர்ப்பித்து விட்டு கை கூப்பி நிற்கின்றான். கண்ணுறங்கு, தூய நீல மணி போன்றவனே கண்ணுறங்கு. (பஞ்சாயுதம் = பஞ்ச + ஆயுதம்)

(பாஞ்ச சன்னியம் என்னும் சங்கு

சுதர்சனம் என்னும் சக்கரம்

கௌமோதகீ என்னும் கதை

கட்கம் என்னும் வாள்

சாரங்கம் என்னும் வில்லம்பு)

பாடல் எண் : 2

**ஓதக் கடலின் ஒளிமுத்தின் ஆரமும்**

**சாதிப் பவளமும் சந்தச் சரிவளையும்**

**மாதக்க வென்று வருணன் விடுதந்தான்**

**சோதிச் சுடர்முடியாய் தாலேலோ! சுந்தரத் தோளனே தாலேலோ!**

**விளக்கவுரை**

அலை மோதும் சமுத்திரத்திலிருந்து எடுக்கப்பட்டதும், ஒளிபடர்ந்த முத்துக்களால் கோர்க்கப்பட்டதுமான மாலையையும், நல்ல ஜாதிப் பவளத்தாலான அழகான கை, தோள் வளையல்களையும், விலை மதிப்பில்லாதவை எனக் கருதி வருணன் உனக்கு அனுப்பியிருக்கிறான். மிக்க பிரகாசமுடைய திருமுடியையுடைய கண்ணனே கண்ணுறங்கு, அழகிய தோள்களையுடைய கண்ணனே கண்ணுறங்கு.

பாடல் எண் : 3

**கானார் நறுந்துழாய் கைசெய்த கண்ணியும்**

**வானார் செழுஞ்சோலைக் கற்பகத்தின் வாசிகையும்**

**தேனார் மலர்மேல் திருமங்கை போத்தந்தாள்,**

**கோனே! அழேல் அழேல் தாலேலோ! குடந்தைக் கிடந்தானே தாலேலோ!**

விளக்கவுரை

தேன் நிறைந்த சிவப்புத் தாமரையில் உறைபவளான பெரிய பிராட்டி, காட்டில் உற்பத்தியான மணமுள்ள துளசியால் தொடுத்த மாலையையும், சுவர்க்கலோகத்தில் பசுமையாகவும் சோலையாகவும் தழைத்துக் கிடந்த கற்பக விருட்சத்தின் பூக்களால் தொடுத்த நெற்றியில் அணிவதற்கு உரிய மாலையையும் கொடுத்து அனுப்பியிருக்கிறாள். இளவரசே! கண்ணா, அழாதே, அழாதே, கண்ணுறங்கு, திருக்குடந்தையில் சயனத்திருப்பவனே கண்ணுறங்கு.

## 3. பெரிய திருமொழி

ஆசிரியர் குறிப்பு

திருமங்கையாழ்வார் என்பவர் வைணவ நெறியைப் பின்பற்றிப் பக்தியில் சிறந்து விளங்கிய பன்னிரு ஆழ்வார்களுள் இளையவர் மற்றும் இறுதியானவர். சோழ நாட்டில் உள்ள திருவாலிதிருநகரி என்னும் ஊருக்கு அருகில் உள்ள திருக்குரையலூரில் கள்ளர் குடியில் பிறந்தார். இவரது இயற்பெயர் ‘கலியன்’ ஆகும். ஆதியில் இவர் சோழமன்னனுக்குப் படைத்தலைவனாக இருந்தார். ஒருமுறை போர்க்களத்தில் இவருடைய வீரத்தைக்கண்ட அரசன் இவரைச் சோழதேசத்தின் “திருமங்கை” நாட்டின் மன்னனாக்கினான். அன்று முதல் இவர் “திருமங்கை மன்னன்” என அழைக்கப்பட்டார். ஆழ்வார்களிலேயே மிகவும் சிறப்புடையவர் திருமங்கை மன்னன். ஆழ்வார் பாடல்கள் நம் ஆலயங்களின் பழமையை நிரூபிக்கும் சரித்திரச் சான்றுகளாக உள்ளன.

பாடல் எண் : 1

**மறந்தேன் உன்னை முன்னம் மறந்தமதிஇல் மனத்தால்**
**இறந்தேன் எத்தனையும் அதனால் இடும்பைக் குழியில்**
**பிறந்தே எய்த்து ஒழிந்தேன் பெருமாள் திருமார்பா**
**சிறந்தேன் நின்அடிக்கே திருவிண்ணக மேயவனே**

விளக்கவுரை

உன்னை முதலிலே மறந்தொழிந்தேன்; இப்படி மறந்தோமே! என்கிற அனுதாப வுணர்ச்சியுமில்லாத மனத்தையுடைமையினால் மிகவும் கெட்டுப் போனேன். ஆகையினாலே துக்கங்களுக்கு இடமான கர்ப்பக் குழியில் இடைவிடாது ஜனன மரணங்களை உடையனாய்க் கொண்டு உன்னை எண்ணாது போனேன்; பிராட்டியை மார்பிலேயுடைய பெருமானே! உனது திருவடிகளுக்கே (இப்போது) தகுந்தவனாக அமைந்தேன்.

பாடல் எண் : 2

**தீவாய் வல்வினை யாருட னின்று சிறந்தவர்போல்**
**மேவா வெந்நர கத்திட உற்று விரைந்து வந்தார்**
**மூவா வானவர் தம்முதல்வா மதி கோள்விடுத்த**
**தேவா நின்அடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே**

**விளக்கவுரை**

நெருப்பையுமிழ்கின்ற வாயையுடைய கொடிய பாவங்கள் பந்துக்கள் போன்று என்னோடு பிரியாமல் கலந்துநின்று, பொருந்தாத கொடிய நரகத்திலே (என்னைத்) தள்ள முயன்று வெகுவேகமுடையனவாயிருக்கின்றன. கீழத்தனம் முதலிய விகாரங்களற்ற தேவாதிதேவனே! சந்திரனுடைய சயரோகத்தைப் போக்கின தேவனே, திரு விண்ணகர் மேயவனே! உன்னை அடைந்தேன்.

பாடல் எண் : 3

**பாண்தேன் வண்டறையும் குழலார்கள் பல்லாண்டு இசைப்ப**
**ஆண்டார் வையம் எல்லாம் அரசாகிமுன் ஆண்டவரே**
**மாண்டார் என்று வந்தார் அந்தோமனை வாழ்க்கைதன்னை**
**வேண்டேன் நின்அடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே**

**விளக்கவுரை**

இசைப்பாட்டையுடையனவாய் தேனைப் பருகுகின்ற வண்டுகள் ரீங்காரம் செய்யப்பெற்ற கூந்தலையுடையவரான மாதர்கள் மங்களா சாஸனம் பண்ண, அரசர்களாயிருந்து கொண்டு பூமண்டலம் முழுவதையும் ஆட்சிபுரிந்தார்கள். (இப்படி) முன்பு ஆண்டு வந்த அவர்களே மாண்டு போனார்கள், என்ற சொல்லுக்கு இலக்காய்க் கொண்டு வருகிறார்கள் ஐயோ! திரு விண்ணகர் மேயவனே; மனை வாழ்க்கை தன்னை வெறுத்தவனாய்க் கொண்டு உன்னைப் பற்றினேன்.

## 4. திருப்பாவை

**ஆண்டாள் குறிப்பு:**

ஆண்டாள் தமிழகத்தில் 7–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வைணவ ஆழ்வார்களுள் ஒருவர். வைணவம் போற்றும் 12 ஆழ்வார்களில் இவர் ஒருவரே பெண்ணாவார். ஆண்டாள், திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்னும் இரண்டு பாடல் தொகுதிகளை இயற்றியுள்ளார். வைணவ சமய நூல்கள் கூறும் இவரது வரலாறு இறைவன் மீது இவர் கொண்டிருந்த காதலை நமக்கு எடுத்துரைக்கிறது. மேலும், ஆண்டாள் பூமிப் பிராட்டியின் அவதாரமாகக்

கருதப்படுகிறார். ஆண்டாள் தனது 15 ஆம் வயதில் இறைவனுடன் இரண்டறக் கலப்பதற்கு முன் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்னும் இரண்டு நூல்களை இயற்றியுள்ளார். இவ்விரு நூல்களும் அதன் இலக்கிய செழுமை, தத்துவம், பக்தி ஆகியவற்றிற்காக அனைவராலும் போற்றப்படுகின்றது. இவரது முதல் படைப்பான திருப்பாவை 30 பாடல்களைக் கொண்டுள்ளது. இத் திருப்பாவை ஆண்டாள் தன்னை ஆயர்பாடியில் வாழும் கோபிகையாக நினைத்துக் கொண்டு பாடப்பெற்ற பாட்டுகளின் தொகுப்பாகும். இவரது இரண்டாவது படைப்பான நாச்சியார் திருமொழி 143 பாடல்களைக் கொண்டுள்ளது. இறைவனை நினைத்துருகிப்பாடும் காதல்ரசம் மிகு பாடல்களின் தொகுப்பாகக் காணப்படுகின்றது.

பாடல்

**மாயனை மன்னு வடமதுரை மைந்தனை**
**தூய பெருநீர் யமுனைத் துறைவனை**
**ஆயர் குலத்தில் தோன்றும் அணிவிளக்கை**
**தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை**
**தூயமாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது**
**வாயினால் பாடி மனதினால் சிந்திக்க**
**போய பிழையும் புகுதருவான் நின்றனவும்**
**தீயினில் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய்**

**விளக்கவுரை**

மாயவித்தைகள் செய்பவனும், நிலைத்த புகழ்பெற்ற வடமதுரையில் பிறந்தவனும், மிகத்தூய்மையான பெரும் நீரினைக் கொண்ட யமுனை நதிக்கரையில் கோபியர்களுடன் விளையாடியவன் கண்ணன். அவன் ஆயர்குலத்தில் வந்து தோன்றிய இரத்தின தீபம் போன்றவன். தாயாகிய யசோதையின் பெற்ற வயிற்றைப் பெருமைப்படுத்திய தாமோதரன் என்ற பெயரினைக் கொண்டவன் கண்ணன். நாம் தூய்மையான மனத்தோடு அவன்முன் சென்று மணமுள்ள மலர்களை அவனின் திருவடிகளில் இட்டு வணங்குவோம். வாயினால் அவனுடைய புகழினைப் பாடி மனதினால் அவனை சிந்தித்து வழிபடுவோம். அவ்வாறு செய்தால் இதுவரை நாம் செய்த பிழைகள் யாவும் போகும். இனிமேல் நம்மிடம் வரவிருக்கும் தீயவினைகளும் நம்மை நெருங்காது. அவைகள் யாவும் தீயில் இட்டப்பஞ்சுபோல் பொசுங்கி தூசியாக மறைந்து விடும். (இறைவன் மிக எளியவன். அவன் நம்மிடமிருந்து நிறைய எதிர்பார்க்கவில்லை. அவன் எதிர்பார்ப்பது நமது தூய மனதை மட்டும்தான். நம் மனதைத் தூய்மைப்படுத்த அவனே ஒரு வழியையும் தருகிறான். அதுதான் அவனுடைய திருப்பெயர். இறைவனின் திருப்பெயர் நம் மனதில் நுழையும் போது நம்முடைய தீய எண்ணங்கள்

தானாகவே நம் மனதிலிருந்து வெளியேறி விடுகின்றன. எனவே கண்ணனின் திருப்பெயரினை இடைவிடாது சொல்லிக் கொண்டே இருங்கள். நம்மால் நம்மைப் பெற்ற தாய் மற்றவர்களால் புகழப்பட வேண்டும். அதுவே நம்முடைய தாய்க்கு நாம் செய்யும் கடமையாகும். குழந்தைகள் பெற்றவர்களுக்கு நல்ல பெயர் வாங்கித் தரவேண்டும் என்பதை ஆண்டாள் இப்பாசுரத்தில் கூறுகிறார்.)

## 3. சமணம்

**வளையாபதி**

தமிழில் ஐம்பெருங் காப்பியங்கள் என அழைக்கப்படும் ஐந்து நூல்களுள் ஒன்றாக விளங்குவது வளையாபதி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் இது சமணம் சமயம் சார்ந்த ஒரு நூல். இதனை எழுதியவர் யாரென்பதும் அறியப்படவில்லை. இந்நூல் தற்காலத்தில் முழுமையாகக் கிடைக்கவில்லை. இந்நூலுக்குரிய 72 பாடல்கள் மட்டுமே கண்டெடுக்கப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

**பாடல்**

**உயிர்கள் ஓம்புமின் ஊன்விழைந்து உண்ணன்மின்**
**செயிர்கள் நீங்குமின் செற்றம் இகந்துஓரீஇக்**
**கதிகள் நல்லுருக் கண்டனர் கைதொழு**
**மதிகள் போல மறுவிலிர் தோன்றுவீர்**

**விளக்கவுரை**

எல்லாவுயிர்களையும் அருள் கூர்ந்து காப்பாற்றுவீராக! பிறவுயிரினங்களின் ஊனை விரும்பி உண்ணற்க; காமமுதலிய குற்றங்களினின்றும் நீங்கி வாழுவீராக; இவ்வாறு வாழ்வீராயின் மேல்வரும் பிறப்புக்களிலே மேனிலை உலகங்களிலே தேவர் முதலியோராய் அழகிய உருவங்களை அடைந்து; உலகத்தார் கை குவித்துத் தொழுகின்ற குறிர்ந்த நிறைத்திங்கள் போன்று; குற்றமில்லாதவர்களாய் அருள் நிரம்பிய புகழொடு விளங்குவீர் என்பதாம்.

## 4. பௌத்தம்

**குண்டலகேசி**

தமிழின் ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்ற குண்டலகேசி என்னும் நூல் ஒரு பௌத்தம் சார்ந்த நூலாகும். பல்வேறு தமிழ் நூல்களுக்கு உரை எழுதிய ஆசிரியர்கள் தங்கள் உரைகளிலே குண்டலகேசிப் பாடல்களை எடுத்தாண்டுள்ளார்கள். இந்நூலிலிருந்து கிடைத்துள்ள பாடல்கள் அனைத்தும் வேறு நூல்களிலிருந்து கிடைத்தவையே.

பத்தொன்பது முழுமையான பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன. குண்டலகேசியை இயற்றியவர் நாதகுத்தனார். இதன் காலம் 10-ஆம் நூற்றாண்டு. தன்னை கொல்ல முயன்ற கணவனைக் கொன்றுவிட்டுப் பிக்குணியாகி பௌத்த சமயத்தின் பெருமையைப் பரப்புவதில் ஈடுபட்ட குண்டலகேசி என்னும் வணிகர் குலப் பெண்ணொருத்தியின் கதையே இக் காப்பியத்தின் கருப்பொருளாகும்.

பாடல்

**கோள்வலைப்பட்டுச் சாவாங்**

**கொலைக்களம் குறித்துச் சென்றே**

**மீளினு மீளக் காண்டு**

**மீட்சி ஒன்றானும் இல்லா**

**நாளடி யிடுத றோன்று**

**நம்முயிர் பருகும் கூற்றின்**

**வாளின்வாய்த் தலைவைப் பாக்குச்**

**செல்கின்றோம் வாழ்கின்றோமா!**

விளக்கவுரை

பகைவரால் சிறையாக பிடிக்கப்பட்டு கொலைக்களத்தில் கொண்டுபோய் நிறுத்தினாலும் கொலையுண்ணாமல் மீண்டும் வருபவரை நாம் காணலாம். ஆனால் எவ்வாற்றானும் மீள்வது என்பது இல்லாத நம்முடைய உயிரை குடித்து ஒழித்தற்கு உரிய நாளின் கண் எமன் நமது உயிரை குடித்து செல்வான் என்பதை அறியாது வாழ்கின்றோம். இது வாய்மையான வாழ்வாகாது. (யாம் நாள்தோறும் நாள்கள் வருதல் கண்டு அறியாமையால், வாழ்கின்றோமென்று மகிழ்கின்றோம். ஆராய்ந்து பார்க்குமிடத்து யாம் ஒருநாளும் வாழுகின்றோமில்லை. நாள்தோறும் நமது வாழ்நாளை ஈர்கின்ற கூற்றுவன் வாளின்கண் நமது தலையை வைப்பது நன்கு விளங்கும் என்பதாம்)

## 5. கிறிஸ்தவம்

இரட்சண்ய மனோகரம்

கிருத்துவக் கம்பர் என்ற ஆல்பிரட் கிருஷ்ணபிள்ளை (எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை, ஏப்ரல் 23, 1827 - பெப்ரவரி 3, 1900) என்பவர் ஒரு கிருத்தவ தமிழறிஞர், புலவர், ஆசிரியர் ஆவார். ஹென்றி ஆல்பிரடு என்ற பெயர்களின் சுருக்கமே எச்.ஏ. ஆகும். தமிழ் ஆசிரியராகப் பணியாற்றிய இவரது படைப்புகள் போற்றித் திருவருகல், இரட்சணிய யாத்திரிகம், இரட்சணிய மனோகரம்

ஆகியவை. இவர் எழுதியனவாகச் சொல்லப்படும் இரட்சணிய குரல், இரட்சணிய பால போதனை என்பன இப்பொழுது கிடைத்தில. இரட்சணிய மனோகரத்தின் பெரும்பகுதி இரட்சணிய யாத்திரிகத்திலிருந்து எடுத்துத் தொகுக்கப்பெற்றது ஆகும்.

பாடல் எண் 1.

**நான்பிறந் ததுமுயிர்ச் சுமையினால் நலியவோ**
**கான்பிறங் கலினுறுங் கதழ்விடப் பாந்தளில்**
**ஊன்பிறங் குடல்வளர்த் துழலுவே னுணர்விலேன்**
**ஏன்பிறந் தேன்கொலா மேழையிவ்வுலகினே.**

**விளக்கவுரை :**

நான் உடலில் உயிரை சுமந்து வாழ்வதற்காகவா பிறந்திருக்கிறேன்? மலையில் ஊர்ந்து செல்லும் பாம்பாகச் சதை வளர்ந்த உடலை உணவாலும் பாவங்களாலும் வளர்த்து அலைந்து திரிகிறேன் நன்மை செய்யும் எண்ணமும் நல்லறிவும் சிறிதும் இல்லாமல் இருக்கிறேன்.

பாடல் எண் 2.

**கனிதரும் தருமெனக் கவலுநம் கருணைமன்**
**இனிதரும் பாதவித் தருவெறிந் திடுகென**
**முனிதரும் பொழுதினே முடுகுமேன் முடுகுவெந்**
**துனிதரும் கனல் கடத் துடிதுடித் தயர்வலோ.**

**விளக்கவுரை :**

இந்த மரம் பயன்மிக்க கனிதரும் என்று நினைத்து உருவாக்கிய மரம் பயன் தராமல் காலம் கடத்துகிற போது இறைவன் இதனை வெட்டி எறியுங்கள் என்று கூறினால் நான் இரங்கத்தக்கவனாவேன் அந்நிலையில் துன்ப நெருப்பில் நின்று அவ் வேதனையை எப்படிப் பொறுப்பேன்.

பாடல் எண் 3.

**ஓரணுத் துணையுநல் லுணர்விலே னுலகுசெய்**
**கோரணிக் குளமுடைந் திடையுமோர் கோழையான்**
**ஆரணத் துறைபடிந் துயர்வுயிர்த் திலன்இனி**
**மாரணக் கடல்குளித் தயர்வனோ மதியிலேன்.**

விளக்கவுரை :

நான் சிறிதும் அறிவற்றவன் உலகம் எனக்கு துன்பம் செய்தாலும் ஏன் என்று கேள்வி எழுப்ப இயலாத அளவு மனத்திடம் அற்றவன். இறைவன் அருளிய வேதத்தில் மனம் கொள்ளாமல் துன்பத்தில் சிக்கி உழல்கிறேன் இனி மரணத்தைத்தவிர அடைவதற்கு பெரிய துன்பம் என்ன இருக்கிறது.

பாடல் எண். 4

**அண்டர்நா யகனையே யவமதித் தலகையின்**
**தொண்டனாய்ச் செய்ததீ வினையெலாம் துன்னிமுன்**
**கொண்டலின் திரளெனக் குழுமிநின் றுரறுமால்**
**கண்டிலே னோடியான் புகுதவோர் காவிடம்.**

விளக்கவுரை :

இறைவனை வெறுத்தேன், அலகையுடன் (தீமைகளுடன்) கைகோர்த்து கொண்டேன். என் துன்பங்கள் இடிபோல் முழக்கம் செய்து துன்புறுத்துகின்றன. துன்பங்களிலிருந்து என்னை காத்து கொள்ள எந்த வழியும் இல்லாமல் இருக்கிறேன்.

பாடல் எண். 5

**உரவுநீ ருததிசூ முலகெலா முய்யநம்**
**புரவலன் புதல்வனைப் புனிதநீ தியிலிவண்**
**வரவிடுத் தமையறிந் தினும் ஏனோ மடமையான்**
**பரவிநின் றருள்பெறாப் பாவமென் பாவமே.**

விளக்கவுரை :

கடல் சூழ்ந்த உலகில் வாழும் மக்கள் அனைவரையும் காத்தருள்பவன் இறைவன். அவன் மக்கள் தன்னிலை அடையும் பொருட்டு தேவ மகனாக இயேசுவை மண்ணுலகிற்கு அனுப்பி வைத்தான். நான் அவனையும் வணங்கி அருள் பெறாமல் பாவத்தின் வழி பட்டவனாகவே இருக்கின்றேன்.

## 6. இசுலாம்

### குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள்

குணங்குடி மஸ்தான் சாகிபு ஒரு இசுலாமிய தமிழ் அறிஞர். இவர் பல இசை உணர்வு மிக்க பாடல்களை எழுதியுள்ளார். இவர் தமிழ் சித்த மரபினரில் ஒருவராகவும் கருதப்படுகிறார்.

குணங்குடி மஸ்தான் சாகிபு இராமநாதபுரம் தொண்டிக்கு வடமேற்கில் பத்து மைல் தொலைவிலுள்ள குணங்குடி என்னும் சிற்றூரில் 1792 ஆம் ஆண்டு பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் 'சுல்தான் அப்துல் காதிர்' என்பதாகும். இளமையிலேயே குர்ஆன் மற்றும் இசுலாமிய சமய சாத்திரங்களைக் கற்றுணர்ந்து 'ஆலிம்' (சமயக் கல்வி அறிஞர்) என்னும் பட்டம் பெற்றார். இவருடைய பாடல்கள் அனைத்தும் தொகுக்கப்பட்டு குணங்குடி மஸ்தான் சாகிப் திருப்பாடல்கள் என பெயரிட்டு தொகுக்கப்பட்டுள்ளன. இவரது படைப்புகள் அகத்தீசர் சதகம், ஆனந்தக்களிப்பு, நந்தீசர் சதகம், நிராமயக்கண்ணி, பராபரக்கண்ணி மனோன்மணியக்கண்ணி என்பனவாகும்.

குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள்

1. பித்தம் பிடித்தலையும் பேய்க்குரங்கு போற்கரணம்
புத்தி தனையலைக்கப் போமோ நிராமயமே

2. தஞ்சமெனும் ஞானத் தடாகத்தின் மூழ்குநர்க்கு
விஞ்சிய நாத விளக்கே நிராமயமே

3. ஆரிருந்தென் னார்போயென் ஆவிக் குறுந்துணையாம்
பேறுபெறச் செய்தாற் பிழைப்பேன் நிராமயமே

4. போகாக் கவலைப் புழுக்கமெலாந் திருதற்கு
வாகாயருள்புரிய வாராய் நிராமயமே

5. சிந்தை யறிவைச் சிதையவிட்டுன் னருள்பெறவே
வந்தேற்குன் திருக்கருணை வைப்பாய் நிராமயமே

6. தேனமுதே பாகு திரண்ட பெருங்கடலே
வானவர்க்கும் எட்டா மணியே நிராமயமே

7. இந்த இதயம் இணங்கி வணங்கஅருள்
தந்தடிக்காட் கொண்ட தாணே நிராமயமே

8. இடம்பொருள் ஏவல் எவையும் மறந்தகுணங்
குடியார்க் குவமை குறியேன் நிராமயமே

விளக்கவுரை

1. 'நிராமயப் பொருளே' பைத்தியம் பிடித்து அலையக்கூடிய பேய்க் குரங்கைப்போல் என் எண்ணத்தையும் அறிவினையும் அலைக்கழிக்க விடலாமோ என்கிறார்.

2. நிராமயப் பொருளே! அடைக்கலம் என்னும் ஞானக்குளத்தில் முழுகினவர்களுக்கு விளக்காக உள்ள நாத விளக்கே! இறைவனிடம் அடைக்கலம் அடைந்தவர்களுக்கு எல்லாம் அருள் செய்வாயாக.

3. நிராமயப் பொருளே! யார் இருந்தால் என்ன? யார் போனால் என்ன? என்னுடைய உயிருக்கு உயர்ந்த துணையாகிய பேற்றினை அடையச் செய்தாலே பிழைப்பேன். (யார் இருந்தும் என்ன பயன், இறைவன் அருள் கிடைக்காதபோது என்கிறார் குணங்குடியார்.)

4. நிராமயப் பொருளே! ஒழிக்க முடியாத துன்பத்தை விளைவிக்கின்ற துன்பங்களை எல்லாம் நீக்குவதன் காரணமாக உன் திருவருள் எனக்கு வேண்டும். மயக்கத்தையுடைய மாயை அழித்து, எனக்கு நற்கதி அளித்து அருள் தர வேண்டும்.

5. நிராமயப் பொருளே! மனதில் உள்ள மூட (அஞ்ஞான) அறிவைக் கெடுத்து உன்னுடைய திருவருளை அடைவதற்கு வந்த எனக்கு, உன்னுடைய திருவருளைத் தந்தருள்தல் வேண்டும். வேறொன்றும் நான் உன்னிடம் வேண்டுவதில்லை என்கிறார் குணங்குடியார்.

6. நிராமயப் பொருளே! தேன் போன்ற அமிர்தம் போன்றவனே, சுவைமிகுந்த பாகின் (இனிய) கடல் போன்றவனே! தேவாதி தேவர்களுக்கும் எட்டாத உன்னத மாணிக்கம் போன்றவனே!

7. நிராமயப் பொருளே! இந்த இருதயமானது சம்மதித்து வணங்கும்படி உன்னுடைய திருவடிகளை எனக்கு அருள்புரிதல் வேண்டும். உன்னுடைய திருவடிகள்தான் எனக்குப் புகலிடம். பெருமை வாய்ந்த இறைவன் என்னை ஆண்டு அருள் செய்யாமல் விட்டுவிடமாட்டார் என்று உறுதியுடன் பாடுகிறார் குணங்குடியார்.

8. நிராமயப் பொருளே! இடம், பொருள், ஏவல் இவைகளையெல்லாம் மறந்திருக்கின்ற குணங்குடிக்கு, தலைவனுக்கு ஒப்புமை ஏதும் உண்டோ? என்றால் இல்லை என்பதே பொருளாகும் என்று இறையருளை நாடி இறைவனின் இன்னருள் கிடைக்க மன்றாடித் துதிக்கின்றார் குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்கள்.

## 7. நீதிநூல்கள்

### 1. திருக்குறள்

திருக்குறள், இலக்கிய வகைப்பாட்டில் பதினெண்கீழ்க்கணக்கு எனப்படும் பதினெட்டு நூல்களின் திரட்டில் இருக்கும் இந்நூல் குறள் வெண்பா என்னும் பாவகையினாலான 1,330 ஈரடிச் செய்யுட்களைக் கொண்டது. இந்நூல் முறையே அறம், பொருள், காமம் (அல்லது இன்பம்) ஆகிய மூன்று பகுப்புகளை கொண்டது. அறநெறிகளைப் பற்றிய உலகின் மிகச்சிறந்த படைப்புகளில் ஒன்றாகக் கருதப்படும் இந்நூல், பொதுத்தன்மைக்கும் மதச்சார்பற்ற தன்மைக்குப் பெயர் பெற்றது. இதனை இயற்றியவர் திருவள்ளுவர் ஆவார்.

**கேள்வி**

1. **செல்வத்துள் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்**
   **செல்வத்து ளெல்லாந் தலை**

செவியால் கேட்டறியும் செல்வம், செல்வங்களுள் ஒன்றாகப் போற்றப்படும் செல்வமாகும், அச் செல்வம் செல்வங்கள் எல்லாவற்றிலும் தலையானதாகும். செவியால் கேட்டுப் பெறும் செல்வமே சிறந்த செல்வம் இது பிற செல்வங்கள் எல்லாவற்றிலும் முதன்மையானது.

2. **செவிக்குண வில்லாத போழ்து சிறிது**

**வயிற்றுக்கும் ஈயப் படும்.**

செவிக்கு கேள்வியாகிய உணவு இல்லாத போது வயிற்றுக்கும் சிறிது உணவு தரப்படும்.

3. **செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின்**

**ஆன்றாரோ டொப்பர் நிலத்து.**

செவி உணவாகிய கேள்வியைப் பெற்றிருப்பவர் இப்பூமியில் வாழ்பவரே என்றாலும், வேள்வித் தீயில் கொடுக்கப்படும் நெய் முதலிய உணவைப் பெறும் விண்ணுலகத் தேவர்க்குச் சமமாவர்.

4. **கற்றில னாயினும் கேட்க அ∴தொருவற்கு**

**ஓற்கத்தின் ஊற்றாந் துணை.**

நூல்களைக் கற்கவில்லையாயினும், கற்றறிந்தவர்களிடம் கேட்டறிய வேண்டும். அது ஒருவனுக்கு வாழ்க்கையில் தளர்ச்சி வந்த போது ஊன்றுகோல் போல் துணையாகும்.

5. **இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே**

**ஒழுக்க முடையார்வாய்ச் சொல்.**

ஒழுக்கமுடைய சான்றோரின் வாய்ச்சொற்கள், வழுக்கல் உடைய சேற்றுநிலத்தில் ஊன்றுகோல் போல் வாழ்க்கையில் உதவும்.

6. **எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்**

**ஆன்ற பெருமை தரும்.**

நல்லவற்றை எந்த அளவுக்குக் கேட்கிறோமோ அந்த அளவுக்குப் பெருமை கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.

7. **பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்**

**தீண்டிய கேள்வி யவர்.**

எதையும் நுணுகி ஆராய்வதுடன் கேள்வி அறிவும் உடையவர்கள், சிலவற்றைப் பற்றித் தவறாக உணர்ந்திருந்தாலும் கூட, அப்போதும் அறிவற்ற முறையில் பேசமாட்டார்கள்.

8. **கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியால்**

**தோட்கப் படாத செவி.**

இயற்கையாகவே கேட்கக்கூடிய காதுகளாக இருந்தாலும் அவை நல்லோர் உரைகளைக் கேட்க மறுத்தால் செவிட்டுக் காதுகள் என்றே கூறப்படும்.

9. **நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய**

**வாயின ராதல் அரிது.**

தெளிவான கேள்வியறிவு இல்லாதவர்கள், அடக்கமாகப் பேசும் அமைதியான பண்புடையவர்களாக இருக்க இயலாது.

10. **செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்**

**அவியினும் வாழினும் என்.**

செவியால் கேள்விச் சுவை உணராமல் வாயின் சுவையுணர்வு மட்டும் உடைய மக்கள், இறந்தாலும் என்ன, உயிரோடு வாழ்ந்தாலும் என்ன.

## 2. நாலடியார்

நாலடியார் பதினெண் கீழ்க்கணக்கு நூல் தொகுப்பைச் சேர்ந்த ஒரு தமிழ் நீதி நூல். இது நான்கு அடிகளைக் கொண்ட வெண்பாக்களால் ஆனது. இது சமண முனிவர்களால் இயற்றப்பட்ட நானூறு தனிப்பாடல்களின் தொகுப்பாகக் கருதப்படுகிறது. இதனால் இது நாலடி நானூறு எனவும் பெயர் பெறும். 'வேளாண் வேதம்' என்ற பெயரும் உண்டு. பல நேரங்களில் இது புகழ் பெற்ற தமிழ் நீதி நூலான திருக்குறளுக்கு இணையாகப் பேசப்படும் சிறப்பைப் பெற்றுள்ளது. பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் உள்ள ஒரே தொகை நூல் நாலடியார் ஆகும். வாழ்க்கையின் எளிமையான பொருட்களை உவமைகளாகக் கையாண்டு நீதி புகட்டுவதில் நாலடியார் தனித்துவம் பெற்று விளங்குகிறது. இந்நூலினை ஆங்கிலத்தில் ஜி.யூ.போப் மொழி பெயர்த்துள்ளார்.

**அறன் வலியுறுத்தல்**

**பாடல் எண். 1**

**கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்**
**துரும்பெழுந்து வேம்கால் துயராண் டுழவார்**
**வருந்தி உடம்பின் பயன்கொண்டார் கூற்றம்**
**வருங்கால் பரிவ திலர்.**

**விளக்கவுரை :**

கரும்பை ஆலையிலே வைத்து நசுக்கி வெல்லக் கட்டியினை முற்காலத்திலே எடுத்துக் கொண்டவர்கள். பின்னர் அதன் சக்கையாகிய துரும்பு நெருப்பிலே பொருந்தி வேகும்பொழுது, அவ்விடத்தே அதனைக்கண்டு, கொஞ்சமும் துயரப்படமாட்டார்கள். அது போலவே உடம்பினை இச்சைகளுக்கு ஆட்படாமல் வருத்தி, உடம்பினாலாகும் உண்மைப் பயனான அறநெறிகளைக் கைக்கொண்டவர்கள், கூற்றமானது தம்மீது வருகின்ற காலத்திலே, உடம்பை விடுவது குறித்து வருத்தம் அடையமாட்டார்கள்.

பாடல் எண். 2

**இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது**
**பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி**
**ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையால்**
**மருவுமின் மாண்டார் அறம்.**

விளக்கவுரை :

இறப்பு இன்று வருமோ? அன்று வருமோ? என்று வருமோ? என்று நினைக்காமல், எமன் பின்புறத்திலே நிற்கிறான் என எண்ணி தீய செயல்களை விட்டு விடுங்கள் முடிந்த அளவு மாண்புடையார் போற்றிய அறத்தை செய்யுங்கள்.

பாடல் எண். 3

**வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்**
**வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்**
**வைகலும் வைகல்தம் வாழ்நாள்மேல் வைகுதல்**
**வைகலை வைத்துணரா தார்.**

விளக்கவுரை :

நாள்தோறும் நாட்காலம் தோன்றிவரக் கண்டும் அறத்தைக் கருதாதவராய் என்றும் நாட்பொழுதை அது நிலைத்திருக்கும் என்று கருதித் துய்த்து மகிழ்வர்; அவர் யாரெனின், ஒவ்வொரு நாளும் அந்நாட்பொழுது தம் ஆயுள் கழிதலின்மேல் நிற்றலாக அந் நாட்காலத்தைக் கருத்திருத்தி அறியாதவர். (நாடோறும் வாழ்நாட்கள் ஒவ்வொரு நாளாகக் கழிந்து போதலின், அந்நாட்களைத் துய்த்து இன்புற்றுக் கொண்டிராமல் உடனே அறஞ்செய்து கொள்ள வேண்டும் என்பதே கருத்து)

பாடல் எண். 4

**மான அருங்கலம் நீக்கி இரவென்னும்**
**ஈன இளிவினால் வாழ்வேன்மன் - ஈனத்தால்**
**ஊட்டியக் கண்ணும் உறுதிசேர்ந்து இவ்வுடம்பு**
**நீட்டித்து நிற்கும் எனின்.**

விளக்கவுரை :

இந்த உடம்பானது எனக்கு நீட்டித்துக் கொண்டே இருக்குமாயின், மானமுடைமை என்னும் அரிய அணிகலனை நீக்கிவிட்டு பிச்சை எடுக்கும் ஈன வாழ்க்கையும் வாழ்வேன். அப்படி ஈனப் பிழைப்புப் பிழைத்தாலும் இந்த உடம்பு நீடித்து இருப்பதில்லையே எப்படி ஊட்டினாலும் இவ்வுடம்பு அழியக்கூடியதே. பின் எதற்காக ஈனப் பிழைப்புப் பிழைக்க வேண்டும்? அறம் செய்து நற்பேறு பெறலாமே.

## பழமொழி நானூறு

பழமொழி நானூறு அதன் சிறப்புப் பாயிரத்தையும், கடவுள் வணக்கத்தையும் சேர்த்து நாலடியால் அமைந்த நானூற்றொரு (401) பாடல்களைக் கொண்ட நீதி நூலாகும். சங்கம் மருவிய காலத் தமிழ் நூல் தொகுப்பான பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான இது முன்றுறையர் அல்லது முன்றுறை அரையனார் என்னும் சமண முனிவரால் இயற்றப்பட்டது. இதன் ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் ஒரு பழமொழி சார்ந்த நீதி கூறப்படுவதால் பழமொழி நானூறு என்ற பெயர் பெற்றுள்ளது.

**பாடல் எண். 1**

**அன்பின் நெகிழ வழிபட்டுக் கொள்ளாது**
**நின்ற பொழுதின் முடிவித்துக் கொள்வதே**
**கன்றுவிட்டு ஆக்கறக்கும் போழ்தில் கறவானாய்**
**அம்புவிட்டு ஆக்கறக்கு மாறு.**

**விளக்கவுரை :**

அன்பினால் நெகிழும்படி வழிபட்டு ஒருவன் தன் செயலைச் சாதித்துக் கொள்ளாமல், ஒருவர் எதிர்த்து நிற்கும்பொழுது அவரிடம் காரியம் சாதித்துக்கொள்ள முனைவது கன்றை விட்டுப் பசு பால் சுரக்கும்போது கறக்காமல் அம்பு விட்டு அப் பசுவிடம் பால் கறக்க முனைவது போன்றதாகும்.

**பாடல் எண். 2**

**பெரியநட் டார்க்கும் பகைவர்க்கும் சென்று**
**திரிவின்றித் தீர்ந்தார்போல் சொல்லி அவருள்**
**ஒருவரோ டொன்றி ஒருப்படா தாரே**
**இருதலைக் கொள்ளியென் பார்.**

**விளக்கவுரை :**

தம்மிடத்தில் மிகுதியாக நட்பு பூண்டவர்க்கும் அவரது பகைவர்க்கும் அவரிடத்தில் சென்று மன வேறுபாடின்றி மிகவும் நல்லவர் போன்று நின்று அவர்களது பகைமையை வளர்க்கும் சொற்களை சொல்லி அவர்களுள் ஒருவரோடு மனம் பொருந்த ஒருமைப்பட்டு விளங்காதவர் இருபுறமும் சுடுகின்ற நெருப்பு கட்டை என்று சொல்லப்படுவர்.

**பாடல் எண். 3**

**நிலத்தின் மிகையாம் பெருஞ்செல்வம் வேண்டி**
**நலத்தகு வேந்தருள் நல்லாரைச் சார்ந்து**
**நிலத்து நிலைகொள்ளாக் காலரே காணின்**
**"உலக்கைமேல் காக்கை" என்பார்.**

**விளக்கவுரை :**

இந்த உலகத்திலே, அளவுக்கு அதிகமான பெருஞ் செல்வத்தை விரும்புகிறவர்கள் சிலர். அவர்கள், நலத்தின் தகுதிகளால் மேம்பட்ட அரசர்களுள், நல்லவர்களைச் சார்ந்து அதனை ஈட்ட நினைப்பர். எனினும், அவர்களைச் சென்று சார்ந்ததும் நிலை கொள்ளாத காலினராகத் தடுக்கி, ஏதும் அடையாதே கெடுவர். ஆராய்ந்து பார்த்தால், இத்தகையவரே உலக்கையின் மேலே இருக்க முயலும் காக்கை என்று சொல்லப்படுவராவர். ஊலக்கையை உயர்த்திக் குத்துகின்ற காலத்து, அதன் மேல் காக்கை அமர்வதும் இயலாது. உரலின் கண் இருப்பதை அதனால் உண்ணவும் முடியாது. இது போல, மனத்திலே அறியாமையுடையவர்களின் முயற்சியும் பயனற்றுப் போகும். 'உலக்கை மேல் காக்கை' என்பது பழமொழி.

**பாடல் எண். 4**

**உரைசான்ற சான்றோர் ஒடுங்கி உறைய**
**நிரையுளர் அல்லார் நிமிர்ந்து பெருகல்**
**வரைதாழ் இலங்கருவி வெற்ப! அதுவே**
**சுரையாழ அம்மி மிதப்பு.**

**விளக்கவுரை :**

மலையினின்றும் விழுகின்ற ஒளிவிளங்கும் அருவியை உடைய மலை நாடனே! புகழ் நிறைந்த குடியிற் பிறந்த அறிவு நிறைந்தவர்கள் வறுமையால் வருந்தி நிற்க. நல்ல குடிமரபின் வரிசையில் சேராதவரான கீழோர் செல்வத்தால் தலைநிமிர்ந்து பெருகுதல் ஆகிய இது. நீரிலே சுரை ஆழ்வதையும் அம்மி மிதப்பதையும் ஒக்கும். சுரை ஆழ்தலும் அம்மி மிதத்தலும் இயற்கையில் பொருந்தாதவாறுபோல, சான்றோர் வருந்திநிற்கக் கீழோர் பெருகிநிற்றல் பொருந்தாத தொன்றாம்.

## 4. மூதுரை

**நூற்குறிப்பு:**

மூதுரை, ஔவையார் இயற்றிய ஒரு தமிழ் நீதி நூல். பழமையான அறக்கருத்துகளைக் கொண்டிருப்பதால் இது மூதுரை (முதுமை + உரை) என அழைக்கப்படுகிறது. இதற்கு வாக்குண்டாம் என்ற இன்னொரு பெயரும் உண்டு. இந்நூலில் 30 வெண்பாப் பாடல்கள் அமைந்துள்ளன. ஒவ்வொரு பாடலும் ஒரு தனிக்கருத்தை வலியுறுத்துகிறது.

## கல்லாதான் கற்ற கல்வி

1. **கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி**
   **தானும் அதுவாகப் பாவித்து – தானும்தன்**

**பொல்லாச் சிறகைவிரித்(து) ஆடினால் போலுமே**

**கல்லாதான் கற்ற கவி.**

**விளக்கவுரை :**

முறையாக யாப்பிலக்கணம் கற்காதவன், கற்றறிந்தோர் சபையில் கவி பாடுவதானது, காட்டில் உள்ள மயில் தன் அழகிய தோகையை விரித்தாடியதைக் கண்ட வான் கோழி, தன்னையும் அந்த மயில் என்று எண்ணிக் கொண்டு, அதுவும் தன் அழகில்லாத சிறகுகளை விரித்தாடியது போலாகும்.

(கல்லாதவன் - வான் கோழி

கற்றவன் - கான மயில்

தவறான கவிதைகள் - வான் கோழிச் சிறகு

இலக்கணக் கவிதைகள் - மயில்தோகை)

### மன்னனும் கற்றோனும்

2. **மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்**
**மன்னனில் கற்றோன் சிறப்புடையன் - மன்னர்க்குத்**
**தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்**
**சென்றஇடம் எல்லாம் சிறப்பு**

**விளக்கவுரை :**

மன்னனையும் கசடறக் கல்வி கற்றவனையும் ஆராய்ந்து அளவிட்டுப் பார்த்தால், மன்னனை விட கற்றவனே சிறப்புடையவன், மன்னர்களுக்கு தன் நாடு இல்லாத பிற நாடுகளில் சிறப்பு இல்லை; கற்றவர்களுக்கு சென்ற இடம் எல்லாம் சிறப்பு.

## 5. நீதிநெறி விளக்கம்

நீதி நெறி விளக்கம் ஒரு தமிழ் நீதி நூல். குமரகுருபரர் இயற்றிய இந்நூல் 17 –ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இளமை, செல்வம், யாக்கை ஆகியவற்றின் நிலையாமை, கல்வியின் சிறப்பு, துறவியர் பின்பற்ற வேண்டியன, செய்யக் கூடாதவை ஆகியவற்றை எடுத்துரைக்கிறது. இதில் கடவுள் வாழ்த்துப் பாடல் உட்பட 102 செய்யுள்கள் உள்ளன. மதுரையை ஆண்ட திருமலை மன்னரின் விருப்பத்திற்கு ஏற்ப இந்நூலைக் குமரகுருபரர் இயற்றினார். இந்நூலிலுள்ள கருத்துகள் திருக்குறள் கருத்துகளை அடியொன்றியவை.

### கல்வியழகே யழகு

1. **கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்**
**மற்றோ ரணிகலம் வேண்டாவாம் - முற்ற**

முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகு செய்வார்

**விளக்கவுரை :**

முழுமையாக ஒளி வீசக்கூடிய மாணிக்கக் கற்களால் ஆன மாலைக்கு மேலும் அழகு கூட்ட வேறு அணிகலன் எதுவும் தேவையில்லை. அதுபோல, கல்வி கற்றோருக்குத் தான் கற்ற கல்வியே அழகு தரக்கூடியது. அது அல்லாமல் அவருக்கு அழகூட்ட வேறு அணிகலன்கள் எதுவும் தேவையில்லை என்பதாம்.

கருமமே கண்ணாயினார் இயல்பு

2. **மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்.**

**விளக்கவுரை :**

ஒரு செயலில் முனைப்பாக இருப்பவர் உடலுக்கு வரும் வருத்தம், நோய் நொடிகளைப் பொருட்படுத்த மாட்டார். பசித்தாலும் கவலைப்படமாட்டார். தூங்க மாட்டார். யாரேனும் கெடுதல் செய்தாலும் அதையும் மனதிற் கொள்ளார். காலம் பற்றியும் கவலைப்படமாட்டார். தனக்கு வரும் அவமதிப்பையும் எடுத்துக்கொள்ளார்.

## 6. நன்னெறி

நன்மைகளைத் தரும் ஒழுக்க நெறிகளை கூறும் நூல். ஆகவே நன்மை + நெறி = நன்னெறி என வழங்கப்படுகிறது. கடவுள் வாழ்த்தோடு சேர்ந்து 41 பாடல்கள் உள்ளன. கடவுள் வாழ்த்து மட்டும் 2 அடி ஏனையவை நான்கு அடிகளைக் கொண்ட நேரிசை வெண்பாக்களால் ஆனது. முதல் இரண்டடியில் ஆசிரியர் சொல்ல வந்த கருத்தும், அடுத்த இரண்டடிகளில் அதனை விளக்க வந்த உவமையும் கூறப்பட்டுள்ளன. இந்நூலை இயற்றியவர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்.

வெகுளியை அடக்குக

1. **உள்ளம் கவர்ந்தெழுந்து ஓங்கு சினம்காத்துக்
கொள்ளும் குணமே குணம்என்க - வெள்ளம்
தடுத்தல் அரிதோ? தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ? விளம்பு.**

**விளக்கவுரை :**

திரண்டு வரும் வெள்ளத்தை எப்போதும் கடந்து விடாமல் கரையானது காத்து விடும். கரையைத் தாண்டி வெள்ளம் ஊருக்குள் புகுவது என்பது அரிதானது. அதுபோல உள்ளத்திலிருந்து பொங்கிவரும் கோபத்தை மனத்தில் அடக்கிக் கொள்வதே சிறந்த குணம்.

## புலவன்களால் வரும் தீமை.

2. **பொய்ப்புலன்கள் ஐந்துநோய் புல்லியர் பால்அன்றியே**
**மெய்ப்புலவர் தம்பால் விளையாவாம் - துப்பிற்**
**சுழன்றுங்கொல் கற்றூணைச் சூறா வளிப்போய்ச்**
**சுழற்றும் சிறுபுன் துரும்பு.**

**விளக்கவுரை :**

சுழன்று வீசும் சூறாவளிக் காற்று எடை குறைவான பொருள்களையும் வலிமையற்ற தூசுகளையும் கவர்ந்து கொண்டு செல்லும். அது தன்னுடைய வலிமையினால் கல்லால் ஆன தூணை அள்ளிச் செல்ல இயலாது. அதுபோல மாயையில் உழலும் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் புலன்கள் ஐந்தும் குறைந்த அறிவு உடையவர்களை மட்டுமே துன்புறுத்தும் தன்மையன. அவை சான்றோர்களிடம் சென்று துன்பங்களை ஏற்படுத்தாது.

## அலகு 2

### சொல் இலக்கணம்

1. சொல் இலக்கணம், வகைகள்
2. பெயர்ச்சொல் - இலக்கணம், வகைகள்
3. வினைச்சொல் - இலக்கணம், வகைகள்
4. இடைச்சொல் - இலக்கணம், ஏகார ஓகார, உம்மை இடைச்சொற்கள்
5. உரிச்சொல் - இலக்கணம், வகைகள்
6. கடிதங்கள்

    முறையீட்டுக்கடிதம்

    வேண்டுதல் கடிதம்

    விண்ணப்பக் கடிதம்

    பத்திரிக்கையின் செய்திகள் வெளியிடுவதற்குப் பயிற்சி அளித்தல்

# சொல்லிலக்கணம்

## சொல்

எழுத்து தனித்து நின்றோ பல எழுத்துகள் தொடர்ந்து நின்றோ பொருள் தருமாயின் அது சொல் எனப்படும். பொருளை அறிவதற்குக் கருவியாய் இருப்பது சொல். சொல், பதம், கிளவி, மொழி என்பன ஒரு பொருளைத் தரும் பல சொற்களாம்.

**ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி என்றா**
**இருதிணை ஐம்பால் பொருளையும் தன்னையும்**
**மூவகை யிடத்தும் வழக்கொடு செய்யுளின்**
**வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொஷல்வனே** - நன்னூல் (259)

சொல் என்பது ஒருமொழி, தொடர்மொழி, பொதுமொழி என மூன்று வகையாகி வரும். திணை, பால், எண், இடம் என்பவற்றை உணர்த்தி நிற்கும். உலக வழக்கிலும், செய்யுள் வழக்கிலும் வரும். வெளிப்படையாகவும் குறிப்பாகவும் பொருள் தரும்.

சொல்லை வடமொழியில் 'பதம்' என்பர். இப்பதம் பகுபதம், பகாப்பதம் என இருவகைப்படும். பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் என்று பிரிக்கப்படும் சொல் அல்லது பதம் பகுபதமாகும். (பகுத்தல் என்றால், 'பிரித்தல்' என்று பொருள்) 'பகுநிலை' பிரிக்க முடிந்தது. 'பகாநிலை' பிரிக்க முடியாதது. இவ்வாறு பிரிக்க முடியாதது பகாப்பதமாகும்.

| | | |
|---|---|---|
| (எ.கா) பார்த்தனன் | - | பார் + த் + த் + அன் + அன் |
| பார் | - | பகுதி |
| த் | - | சந்தி |
| த் | - | இடைநிலை |
| அன் | - | சாரியை |
| அன் | - | விகுதி |

பகுதி, விகுதி, சந்தி, இடைநிலை, சாரியை, விகாரம் என்பனவற்றைப் பகுபத உறுப்புகள் என்பர்.

செய், கொடு, வா, போ ஆகிய வினைச் சொற்களில் பகுதிகள் மட்டுமே உள்ளன. இவற்றைப் பிரிக்க முடியாது எனவே இவை பகாப்பதங்களாகும்.

## தமிழ்ச் சொல்லின் வகைகள்

தமிழ்ச் சொற்களைப் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்காக வகைப்படுத்துவது மரபு.

## பெயர்ச்சொல்

பொருள்களின் பெயரைக் குறிக்கின்ற சொல் பெயர்ச்சொல் எனப்படும். இது இடுகுறியாகவோ, காரணமாகவோ, பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற ஆறனுள் ஒன்றன் பெயரைக் குறிப்பதாகவோ வரும்.

❖ பெயர்ச்சொல் எழுவாயாக வரும்.

(எ.கா.) **இராதா** பாடினாள்

❖ *அடைகளை ஏற்று வரும்

(எ.கா.) **நல்ல** மாணவன் **அழகிய** ஓவியம்

❖ வேற்றுமை உருபுகளை ஏற்று வரும்.

(எ.கா.) கடவு**ளைக்** கண்டேன், மாமாவு**க்குக்** கொடுத்தேன்.

❖ பெயர்ச்சொல் காலம் காட்டாது. ஆனால் வினையாலணையும் பெயராக வரும் போது காலம் காட்டும்.

❖ (எ.கா.) நடந்தவனை, படித்தவனை (நடத்தல், படித்தல் ஆகிய காரணம் பற்றி வந்த பெயர்கள். இவை காலத்தை உணர்த்தியது.)

❖ இருதினை, ஐம்பால், மூவிடங்களில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்கும்.

| | | |
|---|---|---|
| (எகா.) வேட்டுவன் | - | உயர்தினை, ஆண்பால், படர்க்கை ஒருமை |
| கண்ணகி | - | உயர்திணை, பெண்பால், படர்க்கை, ஒருமை |
| மக்கள் | - | உயர்திணை, பலர்பால், படர்க்கை, பன்மை |
| குதிரை | - | அ.்.றிணை, ஒன்றன்பால், படர்க்கை, ஒருமை |
| பறவைகள் | - | அ.்.றிணை, பலவின்பால், படர்க்கை, பன்மை |

❖ பெயர்ச்சொல் இடுகுறிமரபு, இடுகுறி ஆக்கம், காரண மரபு, காரண ஆக்கம் என்னும் நான்கு வகைகளுள் ஏதாவது ஒன்றாக வரும்.

(எ.கா.) பனை, கல், மண், இடுகுறி மரபுப்பெயர் இவை ஒரு காரணமும் இல்லாமல் முன்னோர்களால் இடப்பட்ட பெயராய் தொன்றுதொட்டு வழங்கி வருவது.

**'மானவேல் முட்டைக்கு மாறாய தெவ்வர் போல்**

**கானவேன் முட்டைக்குங் காடு'** - எனும் பாடல் அடியில் வேட்டுவக் குமரன், தன் பெயர் முட்டை, என்றது இடுகுறி ஆக்கப்பெயராம் (முட்டை என்பது தானாக இட்டு வழங்கிய இடுகுறிப்பெயர், அதைத் தன் பெயராக 'முட்டை' என்று ஆக்கிக் கொண்டு வழங்கியமையால் இடுகுறி ஆக்கப்பெயர்.

விலங்கு, பறவை, அணி - காரண மரபுப் பெயர்கள் (இவை தொன்று தொட்டு வழங்கி வருபவை)

(முதுகெலும்பு குறுக்கே இருப்பது, பறப்பது, அணியப்படுவது)

பொன்னன், பூணன் - காரண ஆக்கப் பெயர்கள் (பொன்னை உடைய காரணத்தால் பொன்னன் என்றும், பூண் அணிந்த காரணத்தால் பூணன் என்றும் ஒருவரால் ஆக்கப்பட்டடு வந்த பெயர்கள்.)

**"இடுகுறி காரண மரபோ டாக்கந்**
**தொடர்ந்து தொழிலை காலந் தோற்றா**
**வேற்றுமைக் கிடனாய்த் திணைபால் இடத்தொன்**
**றேற்பவும் பொதுவு மாவன பெயரே"** - நன்னூல் (275)

## பெயர்ச்சொல்லின் வகைகள்

இடுகுறியாகவோ, காரணமாகவோ வரும் பெயர்கள் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என ஆறாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

❖ பொருட்பெயர் (**Nowns of Things**)

ஒரு பொருளின் பெயரைக் குறிப்பது பொருட்பெயர்

(எ.கா.) கண்ணன், நாய், மரம்

❖ இடப்பெயர் (**Nowns of Places**)

இடத்தைக் குறிப்பது இடப்பெயர்

(எ.கா) வீடு, கல்லூரி, குழித்துறை.

❖ காலப்பெயர் (**Nowns of days. months, year etc**)

காலத்தைக் காட்டுவது காலப்பெயர்

(எ.கா.) திங்கட்கிழமை, மாலை, ஆடித்திங்கள்

❖ சினைப்பெயர் (**Nowns of parts of whole**)

ஒரு பொருளின் சினையைக் (உறுப்பை) குறிப்பது சினைப்பெயர்.

(எ.கா.) கை, தலை, கிளை.

❖ பண்புப்பெயர் (**Abstract Nouns or Name of Qualities**)

ஒரு பொருளின் பண்பைக் (நிறம், வடிவம், சுவை, அளவு தன்மை) குறிப்பது பண்புப் பெயர்.

| | | |
|---|---|---|
| (எ.கா) கருமை, சிவப்பு | - | நிறம் |
| சதுரம், வட்டம் | - | வடிவம் |
| இனிப்பு, கசப்பு | - | சுவை |
| உயரம், குட்டை | - | அளவு |
| அன்பு, கருணை | - | தன்மை |

**தொழிற்பெயர்**

தொழிலைக் காட்டுவது தொழிற்பெயர்

(எ.கா.) படித்தல், எழுதுதல், ஓடுதல்.

## வினைச்சொல்

ஒரு பொருளின் தொழிலை அல்லது செயலை அறிவித்துக் காலத்தை காட்டி முற்றுப்பெறும் சொல் வினைச்சொல் எனப்படும். எழுவாயின் தொழிலைக் குறிப்பது வினைச்சொல் என்றும் கூறலாம்.

(எ.கா.) ஆசிரியர் பாடம் கற்பிக்கிறார்.

இத்தொடரில் கற்பிக்கிறார் என்ற சொல் ஆசிரியர் செய்யும் தொழிலைக் குறிக்கிறது.

❖ **வினைச்சொல்லின் பண்பு**

- எழுவாயின் தொழிலைக் குறிப்பது வினைச்சொல்
- (எ.கா.) மாலா **எழுதினாள்**
- வினைச் சொற்கள் வேற்றுமை உருபை ஏற்காது
- வினைச் சொற்கள் **காலம் காட்டும்.**
- (எ.கா.) பாடினான் (இறந்தகாலம்), பாடுகிறான் (நிகழ்காலம்), பாடுவான் (எதிர்காலம்)
- **வினைச்சொல்** முற்றாகச் செயல்படும்

  (எ.கா.) அவன் **வந்தாள்**
- வினைச்சொல் எச்ச அமைப்பில் வரும்

  (எ.கா.) **செய்து** கொடுத்தான் (வினையெச்சம்)

  **அழுத** குழந்தை (பெயரெச்சம்)
- அடைமொழியை ஏற்று வரும்.

  (எ.கா.) **மெல்லப்** பேசினான், **வேகமாக** ஓடினான்
- உயர்திணை, அ.ீறிணை, பொதுத்திணை என மூன்று திணைகளையும் சார்ந்து வரும்.

(எ.கா.) வந்தான் - உயர்திணை

வந்தது - அஃறிணை

வருக - பொதுத்திணை

- வினைச்சொல்லின் விகுதிகள் திணை, பால், எண், இடம் உணர்த்தும்.

(எ.கா.) ஆடினான் - உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை

மேய்ந்தது - அஃறிணை, ஒன்றன்பால், ஒருமை, படர்க்கை

வினைச்சொற்கள் தெரிநிலை வினைச்சொல், குறிப்பு வினைச்சொல் என இரு வகைப்படும்.

❖ தெரிநிலை வினைச்சொல்

செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் (செயப்படுபொருள்) ஆகிய ஆறினையும் வெளிப்படையாகத் தெரிவிக்கும் வினைச்சொல் தெரிநிலை வினைச்சொல் எனப்படும்.

(எ.கா.) சிற்பி சிலை வடித்தான்.

இத்தொடரில் வடித்தான் என்பது வினை முற்று, இவ்வினை முற்று செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்ற ஆறினையும் வெளிப்படையாக உணர்த்துகின்றனது. **இது செயப்படுபொருள் குன்றா வினை எனப்படும்**.

| | | |
|---|---|---|
| செய்பவன் | - | சிற்பி |
| கருவி | - | உலோகம், உளி, கண், கை |
| நிலம் | - | சிற்பியின் இடம் (மனை) |
| செயல் | - | வடித்தல் (சிலை உருவாக்குதல்) |
| காலம் | - | இறந்த காலம் |
| செய்பொருள் | - | சிலை |

சில தெரிநிலை வினை முற்றுகளில் செய்பவன், கருவி ஆகிய ஆறு பொருள்களில் சில குறைந்து வருவதும் உண்டு.

(எ.கா) நடந்தான், எழுதினான், வந்தான் என்பனவற்றில் செயப்படுப்பொருள் இல்லை. எனவே இவை செயப்படுபொருள் குன்றிய வினையாகும்.

**‘செய்பவன் கருவி நிலம் செயல் காலம்**
**செய்பொருள் ஆறுந் தருவது வினையே’**

❖ **குறிப்பு வினைச்சொல்:**

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் எனும் ஆறின் அடிப்படையில் பிறந்து செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்ற இவ் ஆறினுள் கருத்தா (செய்பவன் பெயர்) ஒன்றை மட்டுமே விளக்குவது குறிப்பு வினைமுற்று எனப்படும். அதாவது செய்பவனை மட்டும் வெளிப்படையாகக் காட்டி செயலையும், காலத்தையும் குறிப்பாக உணர்த்தும் வினைச்சொல் குறிப்பு வினைச்சொல் என்றும் கூறலாம்.

| | | | |
|---|---|---|---|
| (எ.கா) | பொன்னன், குழையினன் | - | பொருள் |
| | வீட்டினன், நாடன் | - | இடம் |
| | ஆதிரையான், சித்திரையான் | - | காலம் |
| | செங்கண்ணன், குட்டையன் | - | சினை |

நல்லன், கொடியன் - குணம்

உழைப்பாளன், நடிகன் - தொழில்

இத்தொடர்களில் பகுதி ஒரு பெயராக உள்ளது. விகுதியே கருத்தாவை (செய்பவனை) உணர்த்துகிறது. ஆனால் காலம் வெளிப்படையாக இல்லை. 'பொன்னன்' என்பது பொன்னையுடையவனாக ஆயினான், ஆவான், ஆகின்றான் என்ற முக்காலத்தில் ஏதாவது ஒரு காலத்தைக் குறிப்பால் உணர்த்தி நிற்கும் ஏனைய எடுத்துக்காட்டுகளும் இவ்வாறே காலத்தைக் குறிப்பாக உணர்த்தும்.

**'பொருள்முதல் ஆறினும் தோற்றி முன் ஆறனுள்**
**வினை முதல் மாத்திரை விளக்கல் வினைக் குறிப்பே'** (நன்னூல்-321)

**வினைச்சொல்லின் வகைகள்:**

தெரிநிலையாகவும், குறிப்பாகவும் வருகின்ற வினைச்சொற்களை வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் என்று வகைப்படுத்தலாம்.

**வினைமுற்று**

வினைச்சொல்லின் பொதுவிலக்கணமாகிய செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் முதலிய ஆறினையும் தோன்றச் செய்து, பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற அறுவகைப் பெயர்களையும் பயனிலையாக ஏற்று வேறு எதனையும் பயனிலையாக ஏற்காதது முற்று வினையாகும்.

ஒரு செயல் முற்றுப் பெற்ற நிலையைக் குறிப்பது வினைமுற்று எனப்படும். முற்றுவினை இன்னொரு வினைமுற்றை ஏற்காது. வினைமுற்று அறுவகைப் பெயர்களைத் தனக்குப் பயனிலையாகக் கொள்ளும், இவை காலம் காட்டி வரும் போது தெரிநிலை வினை முற்றுகளாகவும், காலம் காட்டாது வரும் போது குறிப்பு வினை முற்றுகளாகவும் அமையும்.

❖ **தெரிநிலை வினை முற்று**

(எ.கா.) படிப்பாள் செல்வி<br>பறந்தது பட்டம் } பொருட்பெயர் பயனிலையாக வந்தது

குளிர்ந்தது நிலம்<br>விளைந்தது வயல் } இடப்பெயர் பயனிலையாக வந்தது

வந்தது கோடை<br>நெருங்கியது இரவு } காலப்பெயர் பயனிலையாக வந்தது

சிவந்தன கண்
குவிந்தன கைகள் } சினைப்பெயர் பயனிலையாக வந்தது

மறைந்தது களங்கம்
நிறைந்தது பொறுமை } குணப்பெயர் பயனிலையாக வந்தது

வந்தது சிறப்பு
ஒழிந்தது பொறுமை } தொழிற்பெயர் பயனிலையாக வந்தது

**குறிப்பு வினைமுற்று:**

(எ.கா.) கரியன் கண்ணன்
நல்லன் அவன் } பொருட்பெயர் பயனிலையாக வந்தது

நல்லது நிலம்
கரியது நிலபரப்பு } இடப்பெயர் பயனிலையாக வந்தது

நல்லது கார்
சிறியது பொழுது } காலப்பெயர் பயனிலையாக வந்தது

நெடியது கை
நல்லது கண் } சினைப்பெயர் பயனிலையாக வந்தது

சிறந்தது வள்ளண்மை
நல்லது பசப்பு } குணப்பெயர் பயனிலையாக வந்தது

பெரியது வெற்றி
நல்லது பிறப்பு } தொழிற்பெயர் பயனிலையாக வந்தது

**'பொது இயல்பு ஆறையும் தோற்றிப் பொருட்பெயர்**
**முதல் அறுபெயரலது ஏற்பில முற்றே'**

## ஏவல் வினைமுற்று

தம் முன்னின்றாரை ஒரு தொழிலைச் செய்ய ஏவுதலைக் குறிப்பது ஏவல் வினைமுற்று எனப்படும். ஏவுதல் என்பது ஒருவரை ஒரு பணி செய்யுமாறு பணிப்பது ஆகையால் எதிர்காலத்திற்கு மட்டுமே வரும்.

இவ்வினையில் ஒருவரை ஏவுதல் ஒருமை வினையென்றும், பலரை ஏவுதல் பன்மை வினையென்றும் பெயர் பெறும். எனவே இது ஏவல் ஒருமை வினைமுற்று, ஏவல் பன்மை வினைமுற்று என இருவகைப்படும். ஏவல் வினை எதிர்காலம் காட்டி ஒருமை, பன்மை உணர்த்தி உயர்திணை, அஃதிணை என்னும் இரு திணைகளிலும் வரும். (ஏவல் வினை குறிப்பு வினையாக வராது)

**ஏவல் ஒருமை வினைமுற்று:**

இவ்வினைமுற்று ஆய், இ, அல், ஏல், ஆல் என்னும் ஈறுகளை உடையன ஆகும். இவற்றுள் அல், ஆல், ஏல் என்பன எதிர்மறை வினைக்கு மட்டும் வரும்.

(எ.கா.) உண்ணாய் - ஆய்

உண்ணுதி - இ(உண்பாய்)

உண்ணல் - அல் (உண்ணாதே)

உண்ணேல் - ஏல்

உண்மறால் - ஆல்

முன்னிலையை உணர்த்தும் அமைப்பிலான ஏவல் வினைகளும் காணப்படுகின்றன. இவற்றை '**ஈறு குறைந்த வினைகள்**' என்பர்.

(எ.கா.) நீ உண், நீ நட, நீ வா

ஏவல் வினைமுற்றை உடன்பாட்டு ஏவல் வினைமுற்று எதிர்மறை ஏவல் வினைமுற்று என இரண்டாக வகைப்படுத்துவர். உடன்பாட்டு ஏவல் ஒருமைக்கும் பன்மைக்கும் உரியதாகும்.

**உடன்பாட்டு ஒருமை ஏவல் வினைமுற்று:**

இது ஆய், தி, மோ ஆகிய விகுதிகளைப் பெற்று வரும்.

(எ.கா.) நடவாய் - ஆய்

போதி - தி

கேண்மோ - மோ

**உடன்பாட்டு பன்மை ஏவல் வினைமுற்று:**

ஈர், உம், மின் என்னும் ஈறுகளை உடைய வினைமுற்றுக்கள் உடன்பாட்டுப் பன்மை ஏவல் வினைமுற்றுக்களாகும்.

(எ.கா.) உண்ணீர் - ஈர்

உண்ணும் - உம்

உண்மின் - மின்

**எதிர்மறை ஏவல் வினைமுற்று:**

எதிர்மறை ஏவல் வினைமுற்றானது எதிர்மறை ஒருமை ஏவல் வினைமுற்று, எதிர்மறைப் பன்மை ஏவல் வினைமுற்று என இரு வகைப்படும்.

**எதிர்மறை ஒருமை ஏவல் வினைமுற்று:**

இது 'ஏல்' என்ற விகுதியைப் பெற்று வரும்.

(எ.கா.) உண்ணேல் - ஏல்

**எதிர்மறைப் பன்மை ஏவல் வினைமுற்று:**

இவ்வினைமுற்று 'அன்மின்' என்னும் விகுதியைப் பெற்று வரும்.

(எ.கா.) உண்ணன்மின் - அன்மின்

## வியங்கோள் வினைமுற்று

வியங்கோள் என்றால் ஏவலைக் கொள்ளுதல் என்று பொருள். க, ய, ர் என்ற மூன்றையும் இறுதியாகவுடைய சொற்கள் வியங்கோள் முற்றாக வரும். இவை மூன்று இடங்களிலும் ஐம்பால்களிலும் வரும். வியங்கோள் வினைமுற்று எதிர்காலத்தைக் குறிப்பதாக வரும்.

க, இய, இயர் என்னும் மூன்றும் வியங்கோள் வினைமுற்று விகுதிகள் என்றும் கொள்ளப்படும்.

(எ.கா.) வாழ்க, பாடுக

வாழிய, ஆடிய

வாழியர், ஆடியர்

இவ்வினைமுற்று ஏவல், வாழ்தல், சபித்தல் (வைதல்) வேண்டிக்கோடல் முதலிய பொருட்களில் வரும்.

(எ.கா.) நிற்க, கற்க - ஏவல் பொருள்

வாழ்க, வெல்க - வாழ்த்தல் பொருள்

ஒழிக, கெடுக - வைதல் பொருள்

அருளுக, செலுத்துக - வேண்டிக் கோடல் பொருள்

இவை தவிர அ, அல், தல், இ, உம் என்பனவும் வியங்கோள் வினைமுற்று விகுதிகளாக வரும்

(எ.கா.) வாழ, நீங்க - அ

மகனெனல், நன்மைசெயல் - அல்

மாசிலனாதல் - தல்

வாழி, போற்றி - இ

சேரவும், வேண்டும் - உம்

**'கயவொடு ரவ்வொற்று ஈற்ற வியங்கோள்**
**இயலும் இடம்பால் எங்கும் என்ப"** (நன்னூல் - 338)

### ஏவல் வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று

### இரண்டிற்கும் உரிய வேறுபாடு:

| ஏவல் வினைமுற்று | வியங்கோள் வினைமுற்று |
|---|---|
| • முன்னிலை இடத்தில் மட்டுமே வரும் | • தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களிலும் வரும். |
| • ஒருமை, பன்மை வேறுபாடு உண்டு. | • ஒருமை, பன்மை வேறுபாடு இல்லை. |
| • ஏவல் பொருளை (கட்டளையிடுதல்) மட்டுமே உணர்த்தும். | • ஏவல், வாழ்த்தல், வைதல், வேண்டிக்கோடல் ஆகிய நான்கு பொருட்களில் வரும். |

## எச்சங்கள்

எச்சம் என்பது ஒரு சொல்லின் கருத்து முற்றுப் பெறாமல் எஞ்சியிருப்பது. அதாவது குறைவுபட்டிருப்பது என்பது பொருள்.

எச்சச் சொற்களில் கருத்து முற்றுப்பெற மற்றொரு சொல் தேவைப்படும். இச்சொல் பெயராகவோ, வினையாகவோ வரும்.

(எ.கா.) **படித்த** பையன்

**செய்து** முடித்தான்

இதில் படித்த என்ற எச்ச சொல் பையன் என்ற பெயரைக் கொண்டு முடிந்ததால் பெயரெச்சம் ஆயிற்று.

செய்து என்ற எச்ச சொல் முடித்தான் என்ற வினையைக் கொண்டு முடிந்ததால் வினையெச்சம் ஆயிற்று. எனவே பெயரெச்சமும், வினையெச்சமும் எச்சச் சொற்கள் எனப்படும்.

### பெயரெச்சம்

செய்த, செய்கின்ற, செய்யும் என்பன பெயரெச்சத்தின் வாய்பாடுகள் ஆகும். இவ்வாய்பாடுகள் மூன்று காலமும், தொழிலும் தோன்ற வரும். பால் விகுதி (அவன், அவள், அவர், அது, அவை எனும் ஐம்பால்) தோன்றாமல் செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் எனும் அறுவகைப் பொருட் பெயர்களும் ஒழிய நிற்பது (இது என அறியப்படாமல் எஞ்ச நிற்பது) பெயரெச்சம் ஆகும்.

(எ.கா.) படித்த பையன் - செய்த (இறந்த காலம்)

படிக்கின்ற பையன் - செய்கின்ற (நிகழ்காலம்)

படிக்கும் பையன் - செய்யும் (எதிர்காலம்)

பெயரெச்சம் தெரிநிலை பெயரெச்சம், குறிப்பு பெயரெச்சம் என இருவகைப்படும்.

### தெரிநிலைப் பெயரெச்சம்:

ஒரு பெயரைக் கொண்டு முடியும் எச்சம், செயலையும் காலத்தையும் காட்டினால் அது தெரிநிலைப் பெயரெச்சம் எனப்படும்.

(எ.கா.) **பாடிய** பாட்டு, **ஓடிய** மாணவர்

இதில் பாடிய, ஓடிய எனும் எச்சச் சொற்கள் செயலையும், காலத்தையும் தெளிவாக உணர்த்துவதால் இது தெரிநிலை பெயரெச்சம் எனப்படும்.

### குறிப்புப் பெயரெச்சம்:

காலத்தையோ, செயலையோ உணர்த்தாமல் குறிப்பினால் பண்பினை உணர்த்தும் பெயரெச்சம் குறிப்புப் பெயரெச்சம் எனப்படும்.

(எ.கா.) நல்ல பையன், பெரிய வீடு

நல்ல, பெரிய என்ற சொற்கள் காலத்தையும், செயலையும் உணர்த்தாமல் பண்பை மட்டும் குறிப்பினால் உணர்த்துவதால் குறிப்புப் பெயரெச்சம் எனப்படும்.

**ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்:**

பெயரெச்ச விகுதிகளில் ஈறு இடம் பெறாமல் வருகின்ற எதிர்மறைப் பெயரெச்ச அமைப்புகளும் உண்டு.

(எ.கா.) ஓடா குதிரை - ஓடாத குதிரை என்னும் பொருளில் எதிர்மறை பொருளைத் தருவதுடன் ஈறுகெட்டு வந்தது.

பெயரெச்சச் சொற்களை வாய்பாடு அடிப்படையில் சுட்டுவது மரபு.

**‘செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டிற்**
**காலமுஞ் செயலுந் தோன்றிப் பாலொடு**
**செய்வ தாதி யறுபொருட் பெயரும்**
**எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே’** (நன்னூல் - 340)

## வினையெச்சம்

தொழிலும், காலமும் தோன்றி பால்விகுதி இன்றி முற்றுப் பெறாமல் வரும் சொல் வினையெச்சம் ஆகும்.

❖ **வினையெச்ச வாய்பாடுகள்**

**செய்து செய்பு செய்யச் செய்யூச்**
**செய்தெனச் செயச் செயின் செய்யிய செய்யியர்**
**வான் பான் பாக்கு இன வினையெச்சம்பிற**
**ஐந்து ஒன்று ஆறுமுக் காலமும் முறைதரும்.** (நன்னூல் - 343)

வினையெச்சத்தில் மூன்று காலத்திற்கும் தனித்தனி வாய்ப்பாடுகளை நன்னூல் கூறுகிறது.

❖ **இறந்த காலம்:**

செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென என்னும் வினையெச்ச வாய்பாடுகள் இறந்த காலத்தைச் சுட்டுவன.

(எ.கா.) செய்து - வந்து, உண்டு, படித்து, இற்று. அற்று

செய்பு - இடுபு, தெரிபு, சொல்லுபு

செய்யா - வணங்கா, உண்ணா, கல்லா, காணா

செய்யூ - காணூஉ, உண்ணூஉ, வணங்கூஉ

செய்தென - பசித்தென, உண்டென, இற்றென, தெற்றென

❖ **நிகழ்காலம்**

செய - கொள்ள, மோப்ப, காண, பாட

❖ எதிர்காலம்

செயின் - வேண்டின், காணின், வரின்

செய்யிய - ஊடிய, உண்ணிய, பூணிய

செய்யியர் - பணியியர், காணியர், உண்ணியர்

வான் இறுதியில் வருவன - **ஓதுவான், எழுதுவான்**

பான் இறுதியில் வருவன - **காண்பான், தடுப்பான்**

பாக்கு இறுதியில் வருவன - **தருபாக்கு, உண்பாக்கு**

வினையெச்சம் தெரிநிலை வினையெச்சம், குறிப்பு வினையெச்சம் என இரு வகைப்படும்.

**தெரிநிலை வினையெச்சம்:**

வினைச்சொல்லைச் சார்ந்து முடியும் எச்சம் செயலையும், காலத்தையும் வெளிப்படையாக உணர்த்தினால் தெரிநிலை வினையெச்சம் எனப்படும்.

(எ.கா.) பாடி முடித்தான், வந்து போனான்.

இதில் பாடி, வந்து எனும் முற்றுப் பெறாத எச்சச் சொற்கள் காலத்தையும் செயலையும் வெளிப்படையாக உணர்த்தியதால் தெரிநிலை வினையெச்சமாயிற்று.

**குறிப்பு வினையெச்சம்**

(எ.கா.) மெல்ல நடந்தான், நோயின்றி வாழ்ந்தான்

மெல்ல, இன்றி ஆகிய எச்சச் சொற்கள் வெளிப்படையாக காலத்தை உணர்த்தாமல் குறிப்பினால் பண்பின் அடிப்படையில் வினைச் சொல்லை தழுவி முடிந்ததால் குறிப்பு வினையெச்சமாயிற்று.

**[எதிர்மறை வினையெச்சம்:**

எதிர்மறை வினையெச்சம் எதிர்மறைப் பொருளை உணர்த்தும் தன்மையில் எதிர்மறை இடைநிலையுடன் மே, மை, மல், து என்னும் வினை எச்ச விகுதிகளைப் பெற்று வரும்

(எ.கா.) உண்ணாமே - உண்(ண்) + ஆ + மே

உண்ணாமை - உண்(ண்) + ஆ + மை

உண்ணாமல் - உண்(ண்) + ஆ + மல்

உண்ணாது - உண்(ண்) + ஆ + து

இவை ஆகார எதிர்மறை இடைநிலையுடன் மே, மை, மல், து என்னும் எதிர்மறை வினையெச்ச விகுதிகளைப் பெற்றுள்ளன.*]*

## இடைச்சொல்

பெயர்ச் சொற்களுக்கும் வினைச்சொற்களுக்கும் இடையே வந்து, அவற்றைச் சார்ந்து வழங்குவன இடைச்சொற்கள் எனப்படும்.

### ❖ இடைச்சொல்லின் பொது இலக்கணம்:

வேற்றுமை உருபுகள், வினை உருபுகள், சாரியைகள், உவம உருபுகள், தத்தம் பொருளை உணர்த்தும் ஏ.ஓ, உம் முதலிய பலவகை உருபுகள், இசைநிறைக்க வருவன, அசை நிலையாக வருவன, குறிப்பிற் பொருள் தருவன எனும்எட்டு வகைகளும் தனித்து இயங்கும் தன்மையின்றி, பெயரையும், வினையையும் சார்ந்து அவற்றின் பின்னும் முன்னும் ஏதேனும் ஓரிடத்தில் வந்து, ஒன்றும் பலவுமாக பெயர்சொல்லுடனும் வினைச்சொல்லுடனும் பொருள் பொருந்தப் பொருந்தி வருவன இடைச்சொல்லாகும்.

- **வேற்றுமை உருபுகள்** - ஐ, ஆல், கு. இன், அது, கண், போல்வன.
- **வினை உருபுகள்** (இடைநிலைகளும், விகுதிகளும்) - த், ட், இன், கிறு, கின்று, ப், வ், ஆன், ஆள், ஆர் என வருவன.
- சாரியை - அத்து, இன், அற்று போல்வன
- **உவமை உருபுகள்** - போல, புரைய, ஒப்ப, அன்ன என வருவன.
- **தத்தம் பொருள்** - ஏ, ஓ. உம், மற்று, கொல் - முதலான தத்தமக்கென பொருள் உணர்த்த வருவன.
- **இசைநிறை** - வேறு பொருள் உணர்த்தாது, செய்யுளில் ஓசையை நிறைத்து நிற்பது.
- **அசைநிலை** - வேறு பொருள் உணர்த்தாது பெயர்ச்சொல் வினைச்சொற்களுடன் சார்ந்து நிற்பன.
- குறிப்பு - வெளிப்படையாகப் பொருள் உணர்த்தும் மேலே கூறப்பட்டவைகளைத் தவிர ஒலி, அச்சம், விரைவு என்பனவற்றைக் குறிப்பால் உணர்த்தி வருவன.
- **ஒலிக்குறிப்பு** - அம்மென, இம்மென, சோவென, கடகடென, திடுதிடென, படபடென இவ்வாறு வருவன ஒலிக்குறிப்புப் பொருளைத் தருவன.
- **அச்சக்குறிப்பு:**

நுண்ணென, துணுக்கென, திட்கென, திடுக்கென என வருவது அச்சக்குறிப்புப் பொருளைத் தருவன.

- **விரைவுக் குறிப்பு:**

பொள்ளென, பொருக்கென, கதுமென, ஞெரேலென, சரேலென இவை போல்வன விரைவுக் குறிப்பு பொருளைத் தருவன.

- சுட்டு எழுத்துகள் (அ, இ, உ) வினா எழுத்துக்கள் (எ, ஏ, யா, ஆ, ஓ) முன், பின், இனி, தொறும், தோறும், வாளா, சும்மா, ஆவது, ஆதல், ஆயினும், தான், ஐயோ, அந்தோ, ஆ, அம்ம, ஓ, ஓகோ, கூகூ, சீ, சிச்சீ, கை முதலியனவும் இடைச்சொற்களாக வரும்.

- தெரிநிலை, தேற்றம், (தெளிவு), ஐயம், முற்று, எண், சிறப்பு, எதிர்மறை, எச்சம், வினா, விழைவு, ஒழியிசை, பிரிப்பு, கழிவு, ஆக்கம், முதலிய பொருள்களை உணர்த்தும் வகையில் இடைச்சொற்கள் வரும்.

**'தெரிநிலை தேற்றம் ஐயம்முற்று எண்சிறப்பு**
**எதிர்மறை எச்சம் வினாவிழைவு ஒழியிசை**
**பிரிப்புக் கழிவு ஆக்கம் இன்னன இடைப்பொருள்** (நன்னூல் - 421)

பாடப்பகுதியில் மூன்று வகையான இடைச்சொற்கள் இடம்பெற்றுள்ளன.

- ஏகார இடைச்சொல்
- ஓகார இடைச்சொல்
- உம் எனும் இடைச்சொல்.

## ஏகார இடைச்சொல்

பிரிநிலை, வினா, எண், ஈற்றில் அசைத்தல் (ஈற்றசை) தெளிவு, இசைநிறைத்தல் என ஆறு பொருள்களில் ஏகார இடைச்சொல் வரும்.

**"பிரிநிலை வினா எண் ஈற்றசை தேற்றம்**
**இசைநிறை என ஆறு ஏகாரம்மே"** (நன்னூல் 422)

- **பிரிநிலை:**

(எ.கா.)"பாண்டவருள் தருமனே நல்லவன்" - இங்கே ஒரு கூட்டத்திலிருந்து ஒருவனை மட்டும் பிரித்துக் காட்டுதலால் பிரிநிலை.

- **வினா:**

(எ.கா.)"பள்ளிக்கூடத்திற்குத் தானே போகிறாய்", இங்கு ஏகாரம் வினாப் பொருளைத் தருதலால் வினா ஆகும்.

- **எண்:**

(எ.கா.)"நிலமே, நீரே, தீயே, வளியே" - இங்கே நிலம், நீர், நீ, வளி எனப் பொருள்பட எண்ணி நிற்றலால் எண் ஆகும்.

• **ஈற்றசை:**

(எ.கா.)"என்றும் ஏத்தித் தொழுவோம்யாமே"

இங்கே வேறு பொருளின்றி ஏகாரம் சொல்லின் இறுதியில் அசைநிலையாக நிற்றலால் ஈற்றசை.

• **தெளிவு (தேற்றம்):**

(எ.கா.)"இன்றே செய்வேன்"

இங்கே இன்றே என்பதற்கு ஐயமில்லை என்னும் தெளிவு பொருளை, ஏகாரம் தருதலால் தேற்றம்.

• **இசை நிறை:**

(எ.கா.)"ஏயே இவள் ஒருத்தி பேடியோ என்றார்"

இங்கே ஏகாரம் வேறு பொருளினின்றிச் செய்யுளில் இசை நிறைத்து நிற்றலால் இசைநிறைத்தல்.

## ஓகார இடைச்சொல்

ஒழியிசை, வினா, சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை, கழிவு, அசைநிலை, பிரிநிலை என எட்டுப் பொருளில் ஓகார இடைச்சொல் வரும்.

**"ஒழியிசை வினாச்சிறப்பு எதிர்மறை தெரிநிலை**

**கழிவு அசைநிலை பிரிப்புஎன எட்டு ஓவே"** (நன்னூல் - 420)

• **ஒழியசை:**

(எ.கா.)"படிக்கவோ வந்தாய்" - இங்கே படிப்பதற்கு அன்று விளையாடுவதற்கு வந்தாய் என ஒழிந்த பொருளைத் தருதலால் ஒழியிசை.

• **வினா:**

(எ.கா.)"அவன் சிறந்த தலைவனோ"? இங்கு வினாப் பொருளைத் தருதலால் வினா.

• **சிறப்பு:**

இது உயர்வுச் சிறப்பு, இழிவுச் சிறப்பு என இரு வகைப்படும்.

(எ.கா.)"ஓஓ பெரியன்" - இங்கே ஒருவனது பெருமையாகிய உயர்வின் மிகுதியை விளக்குவதால் உயர்வுச் சிறப்பு.

"ஓஓ கொடியன்" - இங்கே ஒருவனது கொடுமையாகிய இழிவின் மிகுதியை விளக்குவதால் இழிவுச்சிறப்பு.

• **எதிர்மறை:**

(எ.கா.) "தீயது செய்தல் அறமோ"? அறம் அல்ல என எதிர்மறைப் பொருளை தருவதால் எதிர்மறை.

• **தெரிநிலை:**

(எ.கா.) ''ஆணோ அதுவுமன்று; பெண்ணோ அதுவுமன்று'' - இங்கே ஆண், பெண், தன்மையில்லாமையைத் தெரிவித்து நிற்றலால் தெரிநிலை.

• **கழிவு:** (கழிவு-கழிவிரக்கம் - கழிந்ததற்கு இரங்குதல்)

(எ.கா.) "ஓ ஓ தாயும் மறைந்தனளே''

இங்கு மறைந்து போன தாயை நினைத்து இரங்குதலால் கழிவு.

• **அசைநிலை:**

(எ.கா.) "காணியவம்மினோ'' - இங்கே வேறு பொருளின்றி ஓகாரம் நிற்றலால் அசைநிலை.

• **பிரிநிலை:**

(எ.கா.) "இவனோ கள்வன்'' - இவனே எனப் பலரில் நின்று பிரித்துக் காட்டுதலால் பிரிநிலை.

**உம் எனும் இடைச்சொல்**

**''எதிர்மறை சிறப்பு ஐயம் எச்சம் முற்று அளவை**

**தெரிநிலை ஆக்கமொடு உம்மை எட்டே''** (நன்னூல் - 425)

'உம்' எனும் இடைச்சொல் எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, எண், தெரிநிலை, ஆக்கம் ஆகிய எட்டுப் பொருள்களில் வரும்.

• **எதிர்மறை:**

(எ.கா.) "நான் மறப்பினும் நீ மறவாதே'' - இங்கே மறக்கமாட்டேன் என்னும் பொருளை 'உம்' தருதலால் எதிர்மறை.

• **சிறப்பு:** இது உயர்வுச் சிறப்பு, இழிவுச்சிறப்பு என இரு வகைப்படும்.

(எ.கா.) "குறவரும் மருளும் குன்றம்'' - இங்கு குன்றின் உயர்வு சிறப்பித்தலால் உயர்வுச் சிறப்பு.

'நாயும் இச்சோற்றைத் தின்னாது' - சோற்றின் இழிவு கூறப்பட்டதால் இழிவுச் சிறப்பு.

• **ஐயம்:**

(எ.கா.) 'இது வைரமாகவும் இருக்கலாம்' - இங்கு துணிந்து கூறாமையால் ஐயம்

• **எச்சம்:**

(எ.கா.) "தலைவரும் வந்துவிட்டார்''

இதில் மற்றவர்கள் வந்தது அன்றி தலைவரும் வந்தார் என எச்சப் பொருளில் வந்தது.

• **முற்று:**

(எ.கா.) "எல்லாரும் வந்தார்'' - இங்கே எஞ்சாப் பொருளைத் தருதலால் முற்று.

• **எண்:**

(எ.கா.) “பாலும், பழமும், தேனும்” - இது எண்ணுப் பொருளைத் தருதலால் எண்.

• **தெரிநிலை:**

(எ.கா.) “ஆணுமன்று, பெண்ணுமன்று” - இதில் இன்னது எனத் தெரிவித்து நிற்றலால் தெரிநிலை.

• **ஆக்கம்:**

(எ.கா.) “கல்வி அறிவும் தரும்” - அதுவே வேலை வாய்ப்பும் தரும் என்னும் பொருளைத் தருதலால் ஆக்கம்.

இடைச்சொற்கள் என்பது, பெயர் சொற்களும் ஆகாது. வினைச் சொற்களும் ஆகாது இடைப்பட்டனவாய் நிற்றலின் இப்பெயராயிற்று.

## உரிச்சொல்

இசை, குறிப்பு, பண்பு போன்ற பல்வேறு வகைப்பட்ட பண்புகளை உணர்த்தும் பெயராகி அவ்வாறு உணர்த்தும் போது ஒரு சொல் ஒரு குணத்தை உணர்த்துவதாகவும் பல குணங்களை உணர்த்துவதாகவும் பெயர் வினைகளைச் சார்ந்து செய்யுளுக்கு உரியவையாய் பொருளுக்கு உரிமை பூண்டு நிற்பவை உரிச்சொல் ஆகும்.

**“பல்வகைப் பண்பும் பகர்பெயராகி**
**ஒருகுணம் பலகுணந் தழுவிப் பெயர்வினை**
**ஒருவா செய்யுட் குரியன உரிச்சொல்”** (நன்னூல் - 442)

## உரிச்சொல்லின் வகைகள்

உரிச்சொல் இருவகைப்படும் அவை.

• ஒரு குணம் தழுவிய பல உரிச்சொல்
• பல குணம் தழுவிய ஓர் உரிச்சொல்

• **ஒரு குணம் தழுவிய பல உரிச்சொல்**

• சால, உறு, தவ, நனி, கூர், கழி எனும் ஆறு உரிச்சொற்களும் மிகுதி என்ற ஒரு குணத்தை (பொருளை) உணர்த்தும்.

(எ.கா.) சாலப்பெரிது
உறுபசி
தவச்சிறிது
நனி நல்லார்
கூர் அறிவு
கழிகண்ணோட்டம்

‘சால உறுதவ நனிகூர் கழிமிகல்’ (நன்னூல் 456)

**"மாற்றம் நுவற்சி செப்பு உரைகரை நொடி இசை**
**கூற்றுப் புகறன் மொழிகிளவி விளம்பு அதை**
**பாட்டுப் பகர்ச்சி இயம்பல் சொல்லே"** (நன்னூல் - 458)

- சொல் என்ற ஒரு குணத்தைத் தருவதாக மாற்றம், நுவற்சி, செப்பு, உரை, கரை, நொடி, இசை, கூற்று, புகறல், மொழி, கிளவி, விளம்பு, அறை, பாட்டு, பகர்ச்சி, இயம்பல் என்ற பதினாறு உரிச்சொற்களும் வரும்.

(எ.கா.) "கோவலர்வாய் **மாற்றம் உணர்ந்து**"
"இரு பிறப்பாளர் பொழுதறிந்து**நுவல**"
"தெருண்டார் அவை **செப்பலுற்றேன்**"
"காமஞ்செப்பாது கண்டது **மொழிமோ**"
"இடிபோல **இயம்பினானே**"

**'முழக்குஇரட்டு ஒலிகலி இசைதுவை பிளிறுஇரை**
**இரக்குஅழுங்கு இயம்பல் இமிழ் குளிறுஅதிர் குரை**
**கனைசிலை சும்மை கௌவை கம்பலை**
**அரவம் ஆர்ப்போடு இன்னன ஓசை'** (நன்னூல் - 459)

முழக்கு, இரட்டு, ஒலி, கலி, இசை, துவை, பிளிறு, இரை, இரக்கு, அழுங்கு, இயம்பல், இமிழ், குளிறு, அதிர்வு, குரை, கனை, சிலை, சும்மை, கௌவை, கம்பலை, அரவம், ஆர்த்த எனும் இருபத்திரண்டு உரிச்சொற்களும் இதைப் போன்ற பிறவும் ஓசை என்ற ஒரு பொருளைத் தருவதாக வரும்.

(எ.கா.) பறை **இசை** அருவி
பல்லியந்**துவைப்ப**
**பிளிறு**வார் முரசம்
**இமிழ்**கடல் வளைஇய
**குரை**புனற் கன்னி
**ஆர்த்த** பல்லியக்குழாம்

- **பலகுணம் தழுவிய ஓர் உரிச்சொல்:**

**'கடியென் கிளவி காப்பே கூர்மை**
**விரையே விளக்கம் அச்சம் சிறப்பே**
**விரைவே மிகுதிபுதுமை ஆர்த்தல்**
**வரைவே மன்றல் கரிப்பின் ஆகும்'** (நன்னூல் - 457)

‘கடி’ எனும் உரிச்சொல் காப்பு (காவல்), கூர்மை விரை (வாசனை) விளக்கம், அச்சம், சிறப்பு, விரைவு, மிகுதி, புதுமை, ஒலித்தல், வரைவு (நீக்கல்), மன்றல் (மணம்), கரிப்பு ஆகிய பதின்மூன்று பொருள்களில் வரும்.

(எ.கா.) கடிநகரடைந்து - காப்பு (காவல்)

கடி நுனைப்பகழி - கூர்மை

கடி மாலைசூடி - வாசனை (மன்றல்)

கடி மணச்சாலை - புதுமை

கடி முரசு - ஆர்த்தல் (ஒலித்தல்)

## கடிதங்கள்

கடிதம் எழுதுவது என்பது ஒரு கலை. அறிவுசால் பெரியவர்கள் எழுதிய கடிதங்கள் நூலாக வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஒரு கடிதமானது செய்தியை மட்டும் கூறுவதோடு எழுதுபவரின் திறனை வெளிப்படுத்துவதாக அமையும். எனவே கடிதம் எழுதும் போது நம் கருத்தைப் பிறர் புரிந்து கொள்ளும்விதம் எளிய சொற்களைப் பயன்படுத்தி சிறிய வாக்கிய அமைப்பில் எழுத வேண்டும். பிழை இல்லாமல் எழுதுவது தனிச்சிறப்பு.

கடிதங்கள் பல வகைப்படும். பல்கலைக்கழகப் பாடப்பகுதியில் **முறையீடு, விண்ணப்பம், வேண்டுகை** எனும் மூன்று வகையிலான கடிதங்கள் தரப்பட்டுள்ளன. இக்கடிதங்களை எழுதும் போது கவனிக்க வேண்டிய சில விதிமுறைகள் கீழே வரிசைப்படுத்தித் தரப்பட்டுள்ளன.

- ‘அனுப்புநர்’ என்ற சொல் இடம் பெற வேண்டும். இச்சொல்லிற்கு எவ்வகைக் குறியீடும் தேவையில்லை. அடுத்து அனுப்புநரின் முகவரியை எழுத வேண்டும். ஒவ்வொரு வரியின் இறுதியிலும் காற்புள்ளி (,) இட வேண்டும். இறுதிச்சொல் இடம்பெறும் வரியில் முற்றுப்புள்ளி(.) இடவேண்டும்.

- ‘பெறுநர்’ என்ற சொல் இடம் பெற வேண்டும். இதற்கும் குறியீடு தேவையில்லை. அடுத்து வரும் பெறுநர் முகவரியின் ஒவ்வொரு வரியின் இறுதியிலும் காற்புள்ளியும் (,) இறுதி வரியில் முற்றுப்புள்ளியும்(.) வரும்.
- அழைப்புச் சொல்லான ஐயா, அம்மா, பெருந்தகையீர், அறிவுசால் பெரியீர் என்பதில் பொருத்தமான ஒரு சொல் இடம்பெற வேண்டும். சொல்லின் இறுதியில் காற்புள்ளி(,) இடம் பெற வேண்டும்.
- ‘பொருள்’ என்ற பகுதி இடம் பெற வேண்டும். பொருள் என்ற சொல்லின் இறுதியல் முக்காற்புள்ளி (:) (Colon) வரும். இதில் கடிதத்தின் நோக்கத்தை ஓரிரு சொற்றொடர்களில் குறிப்பிட வேண்டும். பொருளுக்கு அடுத்து ‘பார்வை’ என்ற

பகுதியும் இடம் பெறலாம். அவ்வாறாயின் பார்வை என்ற சொல்லின் இறுதியிலும் முக்காற்புள்ளி (:) இடம் பெறும்.

- கடிதத்தில் சொல்லப்போகும் கருத்தைத் தெளிவாக எளிய சொற்களில் சுருக்கமாகப் படிப்பவர்களுக்குப் புரியுமாறு எழுத வேண்டும்.
- ‘முடிப்புத்தொடர்’ இடம் பெறும். இது கடிதத்தின் இறுதியில் வலப்புறம் எழுதப்படும். தங்கள் உண்மையுள்ள, தங்கள் கீழ்ப்படிதலுள்ள என்று கடிதத்திற்குத் தகுந்தாற்போல் பயன்படுத்த வேண்டும். இதிலும் காற்புள்ளி (,) இட வேண்டும். இதன் கீழே கடிதம் எழுதுபவரின் கையொப்பம் முற்றுப்புள்ளியுடன் இடம் பெறவேண்டும்.
- இறுதியாக, பெறுநரின் முகவரியை உறைமேல் முகவரி என்று குறிப்பிட்டு எழுத வேண்டும்.

## பயிற்சிக்கான மாதிரிக்கடிதங்கள்

**அ) முறையீட்டுக்கடிதம்:-**

**விரைவு அஞ்சல் கால தாமதம் குறித்து அஞ்சலக அதிகாரிக்கு முறையீட்டுக் கடிதம் எழுதுக?**

அனுப்புநர்

பி. ஹரி,
90/21 பிரஸ்காலனி,
மாட்டுத்தாவணி,
மதுரை - 628 015.

பெறுநர்

தலைமை அஞ்சலக அதிகாரி,
40/20 - இரண்டாவது குறுக்குத்தெரு,
அண்ணா நகர்,
சென்னை - 628 015.

அய்யா,

பொருள் : விரைவு அஞ்சல் சேராமை தொடர்பாக.

நான் 10.05.2022 அன்று மதுரை மாட்டுத்தாவணி தலைமை அஞ்சல் நிலையத்திலிருந்து சென்னை, அண்ணாநகர் 9/21 - விநாயகர் தெருவில் வசிக்கும் என் நண்பன் கண்ணனுக்கு விரைவு அஞ்சல் ஒன்று அனுப்பியிருந்தேன். அதில் சில முக்கியமான ஆவணங்களும் 10,000 ரூபாய்க்குரிய வரைவோலையும் இருந்தன பத்து நாட்கள் கழிந்த பின்பும் (20.05.2022) அஞ்சல் போய் சேரவில்லை என்பதை அறிந்தேன்.

விரைவு அஞ்சல் எண். 218/10/05/2022 வரைவோலை எண். 0080406/09/05/2022.

எனவே முக்கியமான என்னுடைய கடிதம் நண்பனுக்கு உடனே கிடைக்க நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை — இப்படிக்கு

21-05-2022 — உண்மையுள்ள,

பி. ஹரி.

உறைமேல் முகவரி

தலைமை அஞ்சலக அதிகாரி,

41/20 இரண்டாவது குறுக்குத்தெரு,

அண்ணாநகர்,

சென்னை - 628015.

**ஆ) விண்ணப்பக்கடிதம்:-**

**செய்தித்தாளில் வெளியான துணைப் பேராசிரியர் நியமன விளம்பரம் குறித்து அவ்விளம்பரம் வெளியிட்ட நிறுவனத்திற்குக் கடிதம் வரைக?**

அனுப்புநர்

செல்வி. ஆ. மாயா,

த/பெ. சுரேஷ்,

72, வாகைஅடி வடக்குத்தெரு, கோட்டார்,

நாகர்கோவில் - 629002.

பெறுநர்

முதல்வர் அவர்கள்,

மகாத்மா கலை கல்லூரி,

திருநெல்வேலி.

மதிப்பிற்குரிய அம்மா,

பொருள் : துணைப்பேராசிரியர் நியமனம் சார்பாக.

பார்வை : 04.05.2022 தினமணி நாழிதழில் வெளியான விளம்பரம் எண். 4236.

தங்கள் கல்லூரியில் சுயநிதிப் பிரிவில் 2018 - 2019 ஆம் கல்வியாண்டு முதல் இளங்கலைப் பட்டப்படிப்பில் தமிழ் மொழிப் பாடப்பிரிவு தொடங்க இருப்பதாகவும், இத்துறைக்குத்

தேவையான துணைப் பேராசிரியர் நியமனம் நடக்க இருப்பதையும் தினமணி நாழிதழில் வெளியான விளம்பரம் மூலம் அறிந்தேன்.

நான் எம்.ஏ. எம்.ஃ.பில் தமிழ் பாடப்பிரிவில் தனி சிறப்பான முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளேன். எம்.ஏ. பட்டப்படிப்பில் பல்கலைக்கழகத் தர வரிசையில் இரண்டாம் இடம் பெற்றுள்ளேன். பி.எச்.டி. ஆய்வும் முடித்துள்ளேன். மேலும் துணைப் பேராசிரியர் பணிக்குரிய தகுதித்தேர்விலும் (NET) தேர்ச்சி பெற்றுள்ளேன். ‘மனோ’ கல்லூரியில் இரண்டாண்டுகள் பணியாற்றிய அனுபவமும் உண்டு. இப்பணி எனக்குக் கிடைத்தால் மாணவர்களுக்கு நிறைவளிக்கும் வகையில் சிறப்பாகப் பணியாற்றுவேன் என உறுதியளிக்கிறேன்.

என் கல்வித்தகுதி உள்ளிட்ட தன் விவரப் பட்டியலை (Bio-data) இத்துடன் இணைத்துள்ளேன்.

கோட்டார், இப்படிக்கு,

05.05.2022 தாங்கள் உண்மையுள்ள,

ஆ. மாயா.

நகல் இணைப்பு:

1. விவரப்பட்டியல் (Bio-data)
2. பட்டச் சான்றிதழ்கள் - 4
3. துணைப் பேராசிரியர் நியமனத் தகுதிச் சான்றிதழ் - 1
4. ஆசிரியப்பணி அனுபவ சான்றிதழ் - 1.

உறைமேல் முகவரி

பெறுநர்

முதல்வர் அவர்கள்,

மகாத்மா கலை கல்லூரி,

திருநெல்வேலி.

**இ) வேண்டுதல்க்கடிதம்:-**

**நூல் ஆலை ஒன்றினை பார்வையிட அனுமதி கேட்டு அதன் மேலாளருக்கு ஒரு வேண்டுகை விடுக்க?**

அனுப்புநர்

பி. ஹரிபிரியா,

முதுகலை இரண்டாம் ஆண்டு தமிழிலக்கியம்,

மகாத்மா கலை கல்லூரி, திருநெல்வேலி.

பெறுநர்

மேலாளர் அவர்கள்,

கதர் கிராமிய நூலாலை,

10/41 - கருப்பசாமி சாலை,

ஆறுமுகநேரி,

தூத்துக்குடி - 628 202.

மதிப்பிற்குரிய அய்யா / அம்மா,

பொருள் : நூலாலை பார்வையிடுதல் சார்பாக.

வணக்கம், மகாத்மா கலை கல்லூரியில் முதுகலை தமிழாய்வுத் துறையில் பயின்று வரும் நானும் என்னுடன் பயிலும் மாணவிகள் ஆறுபேரும் எங்களுடைய ஆய்வுக்குத் (Project) தேவையான தரவுகளைச் சேகரிக்கத் தங்கள் நூலாலைக்கு 25-02-2022 அன்று வர எண்ணியுள்ளோம். தாங்கள் எங்களுக்கு அனுமதி தந்து எங்கள் ஆய்வுக்கு உதவி புரிந்திட வேண்டுமென்று மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் வருகையின் போது நூலாலைப் பணிகளுக்கு எவ்வித இடையூறும் நேராமல் மிகக் கவனமுடன் நடந்து கொள்வோம் என்பதையும் தங்களுக்கு உறுதி கூறிக் கொள்கிறேன். தாங்கள் அனுமதி தந்தால் எங்கள் ஆய்வுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும். இத்துடன் கல்லூரி முதல்வரின் பரிந்துரைக் கடிதமும் இணைக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி,
10.02.2022

இப்படிக்கு,
தாங்கள் உண்மையுள்ள,
பி. ஹரிபிரியா.

அனுமதி கோரும் மாணவிகள்:

1. பி. ஹரிபிரியா. 2. க. கீதா 3. த. அனு
4. அ. சிவகாமி 5. க. தனலெட்சுமி 6. வே. ராணி

**உறைமேல் முகவரி**

பெறுநர்

மேலாளர் அவர்கள்,

கதர் கிராமிய நூலாலை, 10/41 - கருப்பசாமி சாலை,

ஆறுமுகநேரி,

தூத்துக்குடி - 628 202.

## அலகு 3

## உரை அமுதம்

- முனைவர் கெ. செல்வத்தாய்

1. **வறுமைக்கு ஓர் வணக்கம்**

   - இராமையா, இ.ஆ.ப.,

2. **சாதனை கண்ட நிகழ்ச்சிகள்**

   - எஸ். சுந்தர சீனிவாசன்

3. **படித்தாலே இனிக்கும்**

   - டாக்டர். இரா. ஆனந்த குமார். இ.ஆ.ப.,

4. **வெற்றி அருகில் நான்**

   - முனைவர் செ. கஸ்தூரி

5. **காலமறிதல்**

   - முனைவர். வி. பார்த்தீபன்

6. **உனக்குள் நீ**

   - ஏ.எஸ். சந்துரு குணசேகரன்

7. **நேர்வழியில் செல்லும் மனப்போக்கு**

   - பசுமைக்குமார்

8. **இளைஞனே.. நீ பாதை மாறலாமா?**

   - முனைவர் கெ. செல்லத்தாய்

9. **ஒத்துப்போங்கள்**

   - சிவசூரியன் இ.ஆ.ப.,

# உரை அமுதம்

## 1. வறுமைக்கு ஓர் வணக்கம்

-இராமையா, இ.ஆ.ப.,

மனித வாழ்க்கை பல பரிமாணங்கள் கொண்டது அதில இன்பமும் துன்பமும், ஏற்றமும் இறக்கமும், உயர்வும் தாழ்வும், துன்பமும் துயரமும் உண்டு. அவற்றில் வறுமையைப் போல் வாட்டும் துன்பம் எதுவும் கிடையாது. இருப்பினும் அந்த வறுமையிலும் வளர்ச்சியுண்டு வள்ளுவர் கூட

**"இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்**
**இன்மையே இன்னா தது"** என்பார்

அதாவது வறுமைத் துன்பத்திற்கு உவமையாகக் காட்ட வறுமை துன்பத்தைத் தவிர வேறு துன்பம் எதுவுமில்லை.

இதை அறிந்து அதற்குத் தக்க வாழ்பவன்தான் மனிதன், வறுமைதான் மனிதனைச் செம்மைப்படுத்துகிறது.

**வறுமை - நேர்மறை சக்தி**

வறுமைதான் மனித முன்னேற்றத்திற்கு உந்து சக்தியாக உள்ளது. வறுமையை வறுமையாய் நினைத்தவர்கள் வறண்டு போனார்கள். வறுமையிலும் செம்மையாய் வாழ நினைத்தவர்கள் வரலாற்றினைப் படைத்தார்கள். யாருக்கில்லை வறுமை? எனவே வறுமையை ஒரு எதிர்மறை எண்ணமாக எடுக்கக்கூடாது. அதை ஒரு நேர்மறை எண்ணமாக எடுக்கவேண்டும்.

கம்ப நாடன் அப்போதே சொல்லியுள்ளார், வறுமை இருந்தால் தான் உடல் உறுதிபெறும். பிரச்சினைகளைத் தீர்க்க செயல்படும். செயல்படுகின்ற போதுதான் வீரம் வரும். கம்பன் சொல்வது போல வண்மையும், திண்மையும் உண்டாகும். பொய் இருந்தால்தானே உண்மைக்கு மதிப்பு, எல்லோரும் கற்றவராக இருந்தால் கேட்பவர் யார்? கற்றவரும் வேண்டும், கேட்பவரும் வேண்டும். இதோ கம்பன் பாடல்.

**"வன்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்**
**திண்மை இல்லை நேர் செறுநர் இன்மையால்**
**உண்மை இல்லை ஓர் பொய்யுரை யிலாமையால்**
**ஒண்மை இல்லை பல்கேள்வி ஓங்கலால்"** - என்பார் கம்பநாடன்

கோசல நாட்டில் வறுமை இல்லாத காரணத்தால் வண்மை இல்லையாம். அதை முறியடிக்க இன்றைய சமுதாயம் முயன்று கொண்டிருக்கிறது.

அதுபோல வறுமை என்ற சொல்லின் அர்த்தமானது ஒரு எதிர்மறை சக்தியின் (negative force) மொத்த உருவம் என எண்ணத் தோன்றும். ஆனால் ஒரு நேர்மறை சக்தியை உருவாக்கும். அப்படி நேர்மறை சக்தியை உருவாக்கி, பல்வேறு ஞானிகளும், தலைவர்களும் உருவானது தான் வரலாறு. எனவே வறுமை முன்னேற்றத்திற்குத் தடைக்கல்லாக இருந்ததே இல்லை. தடைகள் எல்லாம் எங்கே இருக்கின்றது என்றால் மனதிலேதான் இருக்கின்றது.

இன்று புகழேணியில் கொடிகட்டிப் பறந்துகொண்டிருப்பவர்கள் எல்லாம் பிறக்கும்போதே வெள்ளிக் கிண்ணத்தை தனது வாயிலே வைத்துக்கொண்டு பிறந்தது இல்லை. வறுமைதான் ஒரு மனிதனைச் சாதிக்கத் தூண்டுகிறது. வறுமைதான் ஒரு மனிதனுடைய நாடி நரம்பை அசைத்துக்கொண்டிருக்கிறது.

**வறுமையிலும் சாதித்தோர்**

இளம் வயதிலேயே ஒருவர் தந்தையை இழந்துவிட்டார். பள்ளிக்குச் செல்ல முடியாத வறுமை. பள்ளிக்கூட கட்டணம் மிகவும் குறைவுதான். அதைக்கூட கட்ட முடியவில்லை. சிறிய பையன்களைப் போல் அவரும் அழகான உடையை உடுத்திக் கொண்டு செல்ல வேண்டுமென்று ஆசை. அதுதான் உலக நியதி, ஆனால் அதற்குக்கூட பணம் இல்லை. சோப்பு வாங்கக் காசு இல்லை. அழுக்குத்துணியைப் போட்டுக்கொண்டு ஒரு ஓரத்திலேயே உட்கார்ந்திருந்தார். பார்த்தார் ஆசிரியர். இந்த அழுக்குத்துணியைப் போட்டுக்கொண்டு பள்ளிக்கு வருவதற்கு உனக்கு வெட்கமாக இல்லையா? என்று கேட்டார் ஆசிரியர். அதைக்கேட்ட அந்தச் சிறுவன் தலை சுற்றியது. 10 பைசா கொடுத்து சோப்பு வாங்கமுடியாத சிறுவன் எப்படி நல்ல சட்டை போடமுடியும். நல்ல சட்டை போடாததற்கு எப்படி 50 காசுகள் அபராதமாகக் கட்டமுடியும். பீஸ் கட்ட முடியாமலும் அபராதம் கட்ட முடியாமலும் பல்வேறு கஷ்டங்களுக்கு ஆளான அந்தச் சிறுவன், ஆங்கிலேயரும் வியக்கும் வண்ணம் அழகாக ஆங்கிலம் பேசினார். அவர்தான் பிற்காலத்தில் ரைட் ஹானரபிள் சீனிவாச சாஸ்திரியார் என்று அழைக்கப்பட்டார்.

கொட்டும் மழையிலே ஒரு பாத்திரத்தில் தண்ணீரை வரிசையில் நின்று பிடித்து அதைச் சாப்பிட்டு வாழ்ந்து இருக்கிறேன் என்று ஹாலிவுட் நடிகை சோபியா லாரன்ஸ் சொன்னார்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனை உலகமே புகழ்ந்து கொண்டிருக்கிறது. வறுமையில் வாழ்ந்த காலத்தில் நாடகத்திலே பெண் வேடம் போட்டு நடித்துப் புகழை அடைந்தவர். பிரான்சு நாட்டில் அவருக்கு மேயர் என்று அந்தஸ்து கொடுத்து அந்த நாட்டின் வழக்கமான சாவியைக் கொடுத்து அந்த மாமனிதர் கௌரவிக்கப்பட்டார். மக்கள் திலகம் என்னும்

பேரோடு மங்காப் புகழோடு பூதவுடல் மறைந்தாலும் அவரது புகழ் மறையாது. இம்மண்ணின் முதலமைச்சராக 13 ஆண்டு கொலோச்சிய கொள்கைச் சிகரம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். தனக்கென ஒரு ஸ்டைலை உருவாக்கி, வேற்று மொழியெல்லாம் ஒரு தடையல்ல எனத் திரைவானில் சிட்டுக்குருவி போல் இன்னும் சிறகடித்துப் பறந்து கொண்டிருக்கிறாரே? அவரை வறுமை வாட்ட வில்லையா? பிற்காலத்தில் அவர்தான் வறுமையை வாட்டினார். சிவாஜிராவ் என்ற ரஜனிகாந்த், போன்றோருக்கெல்லாம் வறுமை ஒரு பொருட்டாகவே தெரியவில்லையே?

அன்றைய வறுமை தாங்கமுடியாமல் வீட்டிலேயே இருந்து கொண்டு அச்சுக்கோப்பவராக இருந்தவர் ம.பொ.சி. தமிழ் உலகம் தாங்கி நிற்கும் அந்த மிகப்பெரிய தமிழ் அறிஞர் பத்திரிகை அலுவலகத்தில் அச்சுக் கோப்பவராக சேர்ந்து தமிழ்நாட்டினுடைய மேலவைக்குத் தன்னுடைய உழைப்பால் உயர்ந்தவர். சிலம்பின் ஆழத்தைக் கண்டதால் சிலம்புச் செல்வர் என அழைக்கப்பட்டார். ‘வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு’ என்னும் ஆராய்ச்சிப் புத்தகம் எழுதி வான்புகழ் கொண்டார். சிறிய வயதிலேயே மிகப்பெரிய சோதனையையும், வேதனையையும் சந்தித்து சாதாரண குமஸ்தாவாக பணிபுரிந்த சிம்சன் அனந்தராம கிருஷ்ணன் மிகப்பெரிய தொழிலதிபர்.

சைக்கிள் கடை வைத்து நடத்திய டி.வி. சுந்தரம் ஐயர் உலகமே போற்றக்கூடிய அளவுக்கு டி.வி. சுந்தரம் அண்டு சன்ஸ் என்று சொல்லக்கூடிய ஒரு கம்பெனியை உருவாக்கி இந்தியா முன்னேறுவதற்கு வழிகாட்டினார். விளம்பரம் சேகரிக்கும் தொழிலை மேற்கொண்ட திரு. வாசன், மிகப்பெரிய சினிமாப்படத் தயாரிப்பாளர் ஆனது தமிழகத் திரைப்பட வரலாறு. பஸ் டிரைவராகக் காலம் கழிந்த ஜி.டி.நாயுடு மிகப்பெரிய கண்டுபிடிப்புகள் நிகழ்த்தியவர் ஆவார்.

தொழிற்சாலையிலே கூலி வேலையாளராகச் சேர்ந்த சாண்டோ சின்னப்பத் தேவர் பாமர மக்கள் போற்றும் பல்வேறு படங்களை தயாரித்து உழைத்தால் உயர முடியும் என்று உலகிற்குப் பறைசாற்றினார். அது போன்று வி.ஜி. சந்தோஷம் இரவும் பகலும் அயராது உழைத்து இறவாப் புகழ் பெற்றார். கலைவாணர் என்.எஸ்.கே. போன்ற வரலாற்று நாயகர்கள் எல்லாம் வறுமையிலேயே வாடியவர்கள்தான்.

வாழ்க்கையில் மிகப்பெரிய வெற்றிகளை அள்ளிக் குவித்துப் புகழ்பெற்ற, பெரும்பாலானவர்கள் மிக எளிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர்கள்தான். வார்த்தைகளால் சொல்ல முடியாத மிகப்பெரும் வறுமையிலும், துர்பாக்கிய துயர நிழல்களிலும் தவழ்ந்தவர்கள்தான், உயர் புகழின் உச்சியைத் தொட்டிருக்கிறார்கள் என்பதை அவர்களின் வாழ்க்கை வரலாறுகள் நமக்குத் தெரிவிக்கின்றன. இதோ,

ஓர் ஏழை விறகு வெட்டியின் மகன்தான் ஆபிரகாம் லிங்கன். செருப்புத் தொழிலாளியின் மகன்தான் ஸ்டாலின். பண்ணைத் தொழிலாளியின் மகன்தான் ஹென்றி போர்டு. படகு செய்யும் தொழிலாளியின் மகன்தான் எடிசன். குதிரைக்கொட்டிலில் பணியாற்றியவரின் மகன்தான் ஷேக்ஸ்பியர். உழவரின் மகன்தான் வல்லபாய் பட்டேல்.

தொழில் செய்யும் குடும்பத்திலே பிறந்து சமதர்மம் உலகறியச் செய்த ஸ்டாலினும், லெனினும் இந்த வகுப்பை சேர்ந்தவர்கள்தான். அவர்கள் எல்லாம் வறுமை என்று சொல்லக்கூடிய வீட்டில் வாழ்ந்தவர்கள்தானே தவிர, அந்த வீட்டை அவர்கள் உடைக்கத் தவறவில்லை. மனம் என்று சொல்லக்கூடிய உளியை வைத்து அப்பாறைகளைத் தகர்தெறிந்தனர் பார் போற்றியது.

பல பேர்கள் எனக்கு யாரும் உதவி செய்யவில்லை, என்னை யாரும் கண்டு கொள்ளவில்லை, எனது கல்வி வசதிக்கு யாரும் உதவி செய்வதில்லை, என்னை வறுமை வாட்டுகிறது என்று புலம்பும் வேடிக்கை வித்தை மனிதர்கள் இன்னும் உலவிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வறுமையை ஒரு தடையாகவே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். வறுமை அவர்களை ஆட்கொண்டுவிட்டது. அது அவர்களின் மனத்தில் இருக்கும் மாறாத வடு. நாம் முன்னேறவேண்டும் என முயற்சி செய்யாத கோழைத்தனம். தைரியமும் திறமையுமற்ற அற்ப மனம் கொண்ட மனிதர்கள் அவர்கள் வளத்தோடு வாழ்ந்தாலும் வாழ்ந்ததாகாது. அதுபோன்ற மனிதர்களைச் சந்திக்காதீர்கள். அவர்களால் உங்கள் முன்னேற்றத்திற்கு ஊனம் வரும் அவர்கள் இருந்தாலென்ன? இறந்தாலென்ன? முன்னேறக் கூடியவர்கள் வறுமையை விரட்டுங்கள். நீங்கள் பணத்தால் வறுமையில் இருக்கலாம். ஆனால் குணத்தில் வறுமையில் வாடும் நிலையை ஏற்படுத்திக் கொள்ளாதீர்கள். உழையுங்கள், சிந்தியுங்கள், உங்கள் சக்தியை எல்லாம் ஒன்று திரட்டுங்கள். அச் சக்தி வறுமையைப் பல காத தூரம் செல்ல வைத்துவிடும்.

## 2. சாதனை கண்ட நிகழ்ச்சிகள்

### அன்பு தந்த வெற்றி

-எஸ். சுந்தர சீனிவாசன்

நியூயார்க்க நகரில் சிறியதொரு ஓட்டலில் ஜார்ஜ் என்பவர் வரவேற்பாளராகப் பணியாற்றி வந்தார். ஒவ்வொரு நாளும் அவர் தனது பணியை முழு ஈடுபாட்டுணர்வுடன் செவ்வனே செய்து வந்தார். நேர்மை, அன்பு, உதவி மனப்பான்மை ஆகியவை அவரது பண்புகள்.

ஒரு நாள் இரவு நல்ல மழை பெய்து கொண்டிருந்தது. அப்போது அந்த ஓட்டலுக்கு ஒரு தம்பதியர் வருகை தந்தனர். தங்களுக்கு ஓர் அறை வேண்டுமென்று வரவேற்பாளரான

ஜார்ஜிடம் கேட்டனர். ஆனால் அப்போது அங்கு அறை ஏதும் காலி இல்லை. எந்த ஒரு வரவேற்பாளரும் அந்த நிலையில் இங்கு அறை ஏதும் காலி இல்லை என்று எளிதில் கூறியிருப்பார். முன்னரே பதிவு செய்தால்தான் இங்கு அறை கிடைக்கும் என்று கூறவாரும் உளர்.

ஆனால் ஜார்ஜ்ஜைப் பொருத்தவரை அவரது செயல்பாடோ மாறுபட்டது. பிறருக்கு உதவுவதே தனது கடமை என்ற கொள்கை உடையவர் அவர். இந்த முதிய தம்பதியர் இந்த மோசமான மழைக் காலத்தில் அலைந்து திண்டாட வேண்டாம் என்று நினைத்தார். "தற்போதைக்கு இங்கு முறையான அறை ஏதும் காலி இல்லை. எனினும் தாங்கள் சற்றுக் காத்திருக்க முடியுமானால் தங்களுக்கு மாற்று ஏற்பாடு செய்ய முடியும்" என்றார் அவர். உடனடியாக பணியாளரை அழைத்து அந்த முதிய தம்பதியர் தங்குவதற்கு ஏற்றதாக தனது அறையினை ஒழுங்குபடுத்தித் தருமாறு வேண்டினார்.

பின்னர் அந்த முதியவர்களை, அறை தயாரானவுடன் அங்கு அழைத்துச் சென்றார். "இந்த அறை சிறந்தது என்று கூற முடியாது. எனினும் இந்த நிலையில் உங்களுக்கு ஓரளவு வசதியாக இருக்குமாறு அமைத்துள்ளோம். இன்று இரவு இங்கு நீங்கள் ஓய்வெடுக்கலாம். நாளை உங்களுக்கு முறையான அறை ஒன்று கிடைக்கும். இன்னும் சிறிது நேரத்தில் உங்களுக்குத் தேவையான உணவினை அனுப்பி வைக்கிறேன்." என்று கூறி முடித்தார் ஜார்ஜ். இந்த நிகழ்ச்சி நடந்து பல மாதங்கள் ஆயிற்று. ஜார்ஜ் அந்நிகழ்ச்சியினை அறவே மறந்து போனார். ஏனெனில் அது போன்ற நிகழ்ச்சிகள் அவரது பணியின்போது அடிக்கடி நிகழக்கூடியவையே.

நியூயார்க் நகரிலே வால்டார் அஸ்டோரியா எனும் மிகப் பெரிய ஓட்டல் ஒன்று கட்டப்பட்டது. பெரிய பணக்காரரான ஜான் ஜோசப் ஆல்டர் என்பவர் அதனைக் கட்டியவர். அவர் அதற்குத் தலைமை மேலாளரைத் தெரிவு செய்யும் கட்டம் வந்தது. அவரது உதவியாளர் அதனை நினைவுறுத்திய போது ஜோசப் ஆல்டர் "நான் ஏற்கெனவே இந்த ஓட்டலின் மேலாளரைத் தெரிவு செய்துவிட்டேன்" என்றார்.

யார் அவர்? நமது வரவேற்பாளர் ஜார்ஜ்தான். நாம் குறிப்பிட்ட நாளன்று அவரது ஓட்டலில் அறை தேடி வந்தவர்கள் ஆல்டர் தம்பதியினரே. அவரது அன்புள்ளம் மற்றும் கடமை உணர்ச்சி அந்தத் தம்பதியினரை மிகவும் கவர்ந்தது. தங்களது ஓட்டலை நிர்வகிப்பதற்கு அவரே தகுதியானவர் என்று அவர்கள் தெரிவு செய்து விட்டார்கள்.

**ஈகையால் வென்ற நிகழ்ச்சி**

தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடு ஒரு காலகட்டத்தில் பொது மக்களுக்குத் திருப்தியளிப்பதாக இல்லை. அதன் நிர்வாகத்திற்கு இலாபமோ நற்பெயரோ ஈட்டிக் கொடுக்கவில்லை.

நிற்கவேண்டிய நிறுத்தங்களில் நின்று பயணிகளை ஏற்றிச் செல்வதில்லை. குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட இடத்திற்கு மக்களை ஏற்றிச் செல்லவுமில்லை. இதற்குத் தீர்வு காண போக்குவரத்துக் கழக நிர்வாகம் அமைச்சரின் ஆலோசனையின்பேரில் ஒரு முடிவினை எடுத்தது. மாதச் சம்பளத்தைத் தவிர ஈட்டித்தரும் இலாபத்தின் அடிப்டையிலும் ஓட்டுநர், நடத்துநர் ஆகியோருக்கு ஊக்கத் தொகை வழங்குவதற்கு முடிவு செய்தது. இந்த முடிவு கழகப் பணியாளர்களின் செயல்பாட்டை மேம்படுத்தியது.

இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் தங்களை முறையாக ஏற்றிக்கொண்டு செல்லவில்லை என்ற குறையும் பயணிகளால் கூறப்படவில்லை. அதுமட்டுமின்றி பழுதுபார்க்கும் பட்டறைகளிலும் அவர்களது செயல்பாட்டிற்கேற்ப ஊக்கத்தொகை வழங்கப்பட்டதால் உந்துகள் நன்கு பராமரிக்கப்பட்டுப் போக்குவரத்தின் போது பழுதாகி நிற்பது தவிர்க்கப்பட்டது.

மின் உற்பத்தி நிலையங்களில் அடிக்கடி மின் உற்பத்தி நடைப்பட்டு வந்தது. பல்வேறு சாதனங்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகள் காரணமாக அவை அவ்வப்போது மூடப்பட்டு மின் உற்பத்தி பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டது. இதனால் நுகர்வோருக்கு மின்சாரம் வழங்குவதில் பெரிதும் சிக்கல் ஏற்பட்டது. தொழிற்சாலைகள் மட்டுமின்றி மின்சார வாரியமும் பண இழப்பைச் சந்திக்கும் நிலை ஏற்பட்டது.

இந்நிலையினை சமாளிக்க மின் வாரியம் ஒரு முடிவினை மேற்கொண்டது. மின் நிலைய பளுக்காரணி தேவையான குறிப்பிட்ட சதவிகிதத்திற்கு மேல் பராமரிக்கப்பட்டால் ஒவ்வொரு சதவிகிதத்திற்கும் ஊக்கத் தொகை வழங்குவதாக அறிவிக்கப்பட்டது. அது எல்லாப் பணியாளர்களுக்கும் அவர்கள் ஊதியத்திற்கேற்ப வழங்க முடிவு செய்யப்பட்டது.

இதன் காரணமாக அனைத்துப் பணியாளர்களும் முனைப்போடு பணியாற்றினர். பழுதுகள் வராத முறையில் சாதனங்கள் அவ்வப்போது பராமரிக்கப்பட்டன. பழுதுகள் உடனுக்குடன் சரிசெய்யப்பட்டன. தேவையான உபரிப் பொருள்கள் முன்னரே வாங்கி வைக்கப்பட்டன. எனவே உற்பத்தித் தடை வெகுவாகக் குறைந்தது. உற்பத்தித் திறன் அதிகரித்தது. பணியாளர்கள் மட்டுமன்றி மின்சார வாரியமும், தொழிற்சாலைகளும் பயன் பெற்றன. மின் உற்பத்தி நிலையங்கள் மைய அரசின் பரிசினையும் பாராட்டினையும் பெற்றன.

**உள்ளுணர்வால் உயர்வடைந்த நிகழ்வு**

கணித மேதை ராமானுஜத்தைப் பற்றி கேள்விப்படாத தமிழர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். இளமையிலேயே வறிய குடும்பத்தில் பிறந்து உடல்நலமும் பாதிக்கப்பட்டு கல்லூரிப் படிப்பை எட்ட முடியாமல் அல்லல்பட்ட அந்த அரிய மேதை கணிதத்தில் பல்வேறு தேற்றங்களை உருவாக்கி, பல்லாண்டு காலமாக விடைகாண முடியாத கணிதப் புதிர்களுக்கு

விடை கண்டு விளக்கிய விதத்தை இன்று உலகே போற்றுகிறது. அவர் கண்டுபிடித்த பல்வேறு தேற்றங்களும் கோட்பாடுகளும் இன்று கணிப்பொறியில் பல்வேறு மென்பொருள் தீர்வுகளுக்கு அடிப்படையாகத் திகழ்கின்றன. எண்ணிலியைக் கண்ட மனிதன் என்ற தலைப்பில் ஹாலிவுட்டில் அவர் மேல் ஒரு திரைப்படம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

அவர் பெரிய மேதையாய் இருப்பினும் அவரது மேதா விலாசம் உலகின் பார்வைக்கு வந்தது எப்படி? அவருக்குப் பேரும் புகழும் ஈட்டியதோடு மட்டுமன்றி உலகிற்குப் பயன்பட்டது எப்படி? பல்வேறு மேதைகளின் மேதாவிலாசம் பயன்படாமல் ஆங்காங்கே புதையுண்டு விடுவதை காண்கிறோம். நாட்டு வைத்தியம் எனும் சித்த வைத்தியம் இதற்கோர் எடுத்துக்காட்டு. பல்வெறு மருத்துவ முறைகளும், மருந்து தயாரிப்பு முறைகளும் வாய்மொழியாக வந்த அந்தக் குடும்பங்களோடு நின்றவிட்டன.

ஆனால் ராமானுஜம் அவர்களது மேதாவிலாசகம் வெளிப்பட்டு உலகுக்குப் பயன்படக் காராணம் ஹார்டி எனும் ஆங்கிலேயக் கணிதப் பேராசிரியரிடம் அவர் ஏற்படுத்திக் கொண்ட தொடர்பு, சென்னை கப்பல் துறையில் சாதாரண எழுத்தராக ராமானுஜம் பணியாற்றியக் கொண்டிருந்தபோது இங்கிலாந்தை சேர்ந்த பேராசிரியர் ஹார்டி கணிதத் துறையில் பெயர்பெற்று விளங்குவதை அறிந்தார்.

தான் கண்ட தேற்றங்களையும் கோட்பாடுகளையும் பேராசிரியர் ஹார்டிக்கு எடுத்து அனுப்பினார். அவை புதியனவாக இருந்தமையால் பேராசிரியர் ஹார்டிக்கே புரியவில்லை. ராமானுஜம் அயராது விக்கிரமாதித்தன் போல மீண்டும் மீண்டும் தாமஸ் ஹார்டிக்கு எழுதினார். அதனைக் கண்டு வியந்த ஹார்டியும் அவரது நண்பரும் அவரது கோட்பாடுகளைக் கவனமாகப் படித்தனர். அவை மேதாவிலாசத்தின் வெளிப்பாடுகள் என உணர்ந்தனர்.

ஹார்டி ராமானுஜத்துடன் தொடர்பு கொண்டு அவரை லண்டனுக்கு அழைத்தார். அங்கு அவர்களுக்கு இடையில் உருவான தொடர்ப்பு வேறு நிபுணர்களுடன் உரையாடல் ஆகியவை ராமானுஜத்தின் மேதாவிலாசம் உலகெங்கும் பயன்பட உதவின.

இதற்கெல்லாம் மூல காரணம் இராமானுஜத்தின் உள்ளுணர்வுதான். அதன் உந்துதலின் அடிப்படையில் அவர் தாமஸ் ஹார்டிக்குக் கடிதம் எழுதாவிட்டால் அவரது மேதாவிலாசம் உலகிற்குப் பயனளிக்காமல் போயிருக்கும்

**ஊக்கத்தால் உயர்வு பெற்ற நிகழ்ச்சிகள்**

உடல் நலமும், அறிவாற்றலும் உயர்ந்து காணப்படும் பலர் ஊக்கமில்லாத காரணத்தால் வெற்றி காண இயலாது தடுமாறுவதை நாம் கண்கூடாகக் காணலாம். அத்தகைய சூழ்நிலையில்

உடல் ஊனமுற்ற சிலர் அந்த ஊனத்தை மறந்து உத்வேகத்தாலும், உற்சாகத்தாலும் உந்தப்பட்டு உச்சத்தை எட்டுவதையும் கண்டிருக்கலாம்.

கோபால் எனும் மாணவனைப் பார்ப்போம். அவன் கை, கால்கள் செயல்படாமல் செயற்கைச் சாதனங்களின் துணையுடன் நகர்பவன். எனினும் இனிமையான சுபாபம் உள்ளவன். அது மட்டுமா? படிப்பில் படுசுட்டி! பள்ளிப்படிப்பில் மட்டுமில்லாது பொது அறிவிலும் பல்வேறு பரிசுகளைப் பெற்றவன். அவனது ஆசிரியர்களாலும் சக மாணவர்களாலும் பரிசும், பாராட்டும் பெற்றவன்.

ஒருநாள் அவனது சகமாணவன் அவனிடம் கேட்டான் 'உனக்கு இந்த உடல் ஊனம் எவ்வாறு ஏற்பட்டது? இப்படிப்பட்ட ஊனத்துடன் நீ எவ்வாறு மகிழ்ச்சியோடு காணப்படுகிறாய்? வெற்றிகளைப் பெறுகிறாய்? அதற்கு கோபால் கூறினான்; "குழந்தைப் பருவ வாதம் (INFANTILE PARALYSIS) எனும் நோயால் எனக்கு இவ்வகையான உடல் ஊனம் ஏற்பட்டது. இந்த ஊனம் என் உடலைத்தான் பாதித்ததே அன்றி உள்ளத்தைப் பாதிக்கவில்லை. என் ஊக்கத்தைப் பாதிக்கவில்லை.''

என்ன அருமையான குறள்.

**'வெள்ளத்து அனைய இடும்பை அறிவுடையான்**
**உள்ளத்தின் உள்ளக் கெடும்.'**

வெள்ளம் போல் வருகின்ற இடர்களையும் துயர்களையும் உள்ளத்தின் திண்மையும் ஊக்கமும் போக்கி விடுமல்லவா?

தமிழ்நாட்டிலே ஜனா எனும் சிறுவனைப் பற்றி நாம் கேள்விப்பட்டிருப்போம். ஒரு விபத்தினால் கைகளையும், கால்களையும் இழந்தவன் அவன், சாதாரண தொழிலாளர் குடும்பத்திலே பிறந்தவன். அவன் வாயில் பிரஷினை (Brush) வைத்துக் கொண்டு சிறப்பாக ஓவியம் தீட்டுகிறான். அவனது சித்திரங்கள் தேசிய அளவில் பரிசினையும், பாராட்டினையும் பெற்று விளங்குகின்றன.

தமிழக முதல்வரிடமிருந்து பரிசினையும் பாராட்டினையும் பெற்றுள்ளான். மேலும் குடியரசுத் தலைவரின் விருதினையும் பெற்றுள்ளான். இவை எல்லாம் ''அங்கத்திலே ஒரு குறையிருந்தாலும் அகத்தினில் குறைவில்லை" என்பதையும் ஊக்கம் உயர்வு தரும்" என்பதையும் உணர்த்துகின்றன அல்லவா?

**எழுச்சியால் ஏற்றம் பெற்ற வரலாறு**

அரசியல் சட்ட மேதை அம்பேத்கர் அவர்களை அறியாதவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். சிறந்த சட்ட நிபுணர் நாட்டு விடுதலைக்காகப் போராடியவர். தாழ்த்தப்பட்டவர்களின் நலன் காக்க தன் வாழ்நாள் முழுவதும் போராடியர்.

அவர் ஓர் ஏழ்மையான தாழ்த்தப்பட்ட குடும்பத்திலே மகாராஷ்டிரா மாநிலத்தில் பிறந்தார். அவர் தனது பெற்றோர்களுக்குப் பதினான்காவது பிள்ளை, எப்படி இருக்கும் அந்த ஏழைக் குடும்பத்தின் நிலை? பள்ளியிலே அவர் படிக்கும்போது தாழ்த்தப்பட்டவர் என்ற காரணத்தால் அவருக்குத் தனி இருக்கை அளிக்கப்பட்டது. அது பிற சாதி மாணவர்கள் இருக்கையினின்றும் ஒதுக்கியே வைக்கப்பட்டிருக்கும். பிற சாதி மாணவர்களும், ஆசிரியர்களும் அவருடன் பேசுவதைத் தவிர்த்து வந்தனர். ஆசிரியர்கள் பலர் தாழ்த்தப்பட்டவருக்குப் போதிப்பதையே வெறுத்து ஒதுக்கி வந்தனர். இவர்களுக்குப் படிப்பு ஒரு கேடா? என்பது அவர்கள் நினைப்பு. இந்த சூழ்நிலையிலும் பிறரது வெறுப்பும், அவமதிப்பும் அவரது உள்ளத்தை நிலைகுலையச் செய்யவில்லை. உள்ளத்தில் ஓர் எழுச்சியையே அவை ஊட்டின. பிற சாதி மாணவர்களைப் போல ஏன் அவர்களைக் காட்டிலும் படிப்பில் சிறந்து விளங்கவேண்டும் என்ற உறுதியை அந்த எழுச்சி அவருக்குத் தந்தது.

எனவே ஆர்வத்தோடு படித்துச் சிறப்பான இடத்தைப் பிடித்தார். அவரது இயற்பெயர் பீமாராவ், அம்பேத்கர் என்ற அந்தண வகுப்பைச் சார்ந்த ஆசிரியர் படிப்பின் மேல் அவருக்குள்ள ஆர்வத்தையும் அவரது நிலையையும் உணர்ந்து அவர் மேல் பரிவும் பாசமும் காட்டினார்.

அவரது ஐயப்பாடுகளைப் போக்கிப் பாடங்களை அவர் நன்கு புரிந்துகொள்ள உதவினார். அதற்கு நன்றிக்கடனாக அவ்வாசிரியர் முன்னேறிய சாதியாளர் என்று வேறுபலர் போல் வெறுக்காதது கண்டு அவரது பெயரை தன் பெயருக்குப் பின்னர் சூட்டிக் கொண்டார். அவரது திறமையை அவரது தந்தை, தான் பணிபுரிந்த அரசிடம் எடுத்துரைக்க அவர் அம்பேத்கர் இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் பட்டம் பெற உதவினார்.

பள்ளி நாட்களில் தீண்டாது ஒதுக்கப்பட்ட நிகழ்ச்சிகள் அவரது உள்ளத்திலே எழுச்சியை ஏற்படுத்த, தேர்ச்சி பெற்ற அவர் சட்ட வல்லுநராகவும், அரசியல் தலைவராகவும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் தலைவகராகவும் விளங்கினார். தமிழ் மக்களின் தளைகள் நீங்க சமூக ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் போராடி மறுக்கப்பட்ட உரிமைகள் பலவற்றை அவர்களுக்கு மீட்டுத் தந்தார்.

இந்திய அரசு விடுதலை பெற்ற போது இந்திய அரசியல் சட்டத்தை இயற்ற அமைக்கப்பட்ட குழுவிற்கு அவர் தலைவராக நியமிக்கப்பட்டார். தாழ்த்தப்பட்ட ஒருவருக்கு ஒத்துழைப்புத்தர உயர்சாதியை சேர்ந்த இதர உறுப்பினர்கள் மறுத்த போது தனி ஒருவராகத் தனக்குக் கொடுக்கப்பட்ட கடமையை தவறாது, தளராது உழைத்து நிறைவேற்றினார்.

மகாத்மா காந்தியிடம் வாதாட மற்ற தலைவர்கள் தயங்கிய போது அவரது கருத்துகளுடன் மாறுபட்டபோது, தயங்காது ஆணித்தரமாகத் தனது கருத்தினைத்

தக்கவாதங்களோடு எடுத்துரைத்தார். ஆரம்ப காலத்தில் அவர் பட்ட அவமானங்கள் அவர் உள்ளத்திலே எழுச்சியை ஏற்படுத்தி பின்னர் ஏற்றம் பெற உதவின.

**ஏற்றபொழுதில் வினையாற்றி வெற்றி பெற்ற நிகழ்ச்சி**

**'எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே**
**செய்தற்கு அரிய செயல்'**

அரியதான ஒரு வினையினைச் செய்வதற்கு வாய்ப்பு நேரிடும் போது அதை தழுவவிடாமல் செயற்கரிய செயலைச் செய்து முடிக்க வேண்டும் என்பதே வள்ளுவர் வாக்கு.

**ஞாலம் கருதினும் கைகூடும்காலம்**
**கருதி இடத்தாற் செயின்.**

தக்க இடத்தையும் ஏற்ற காலத்தையும் தேர்ந்தெடுத்துச் செயல்படுவோர் உலகத்தையேகூட வெல்லாம் என்கிறார் வள்ளுவர் மேற்கண்ட, குறளில்.

இவற்றிற்கேற்ப தக்க இடத்தில் தக்க தருணத்தில் செயலாற்றி வெற்றி பெற்றதொரு நிகழ்ச்சியைப் பார்ப்போம். ரம்மல் (Rammel) என்பவர் ஒரு ஜெர்மன் நாட்டுத் தளபதி. இரண்டாம் உலகப் போரில் ஜெர்மன் நாட்டிற்குப் பல களங்களில் வெற்றி தேடித் தந்தவர். அவர் குறிப்பிட்டதொரு சண்டையில் தோல்வியடைந்து பிரிட்டீஷ் படையை எவ்வாறாயினும் தோற்கடிக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்தார். போரில் தளபதிகள் ஆங்காங்கு தங்கள் தூதுவர்களை அனுப்பி எதிராளிகளின் நிலைபற்றித் துப்பறிவது வழக்கம். அதுபோன்றே ரம்மலின் தூதுவர்கள் அவருக்கு அளித்த செய்தி அவருக்கு நம்பிக்கை தருவதாக அமைந்தது. பிரிட்டீஷ் படைகள் களைப்படைந்ததும், பிளவுபட்டுக் குழப்பத்தில் ஆழ்ந்துமிருப்பதாக அவர்கள் தகவல் அளித்தனர்.

ரம்மலிடம் அப்போது ஐம்பது புதிய டாங்கிகள் அவர்கள் நாட்டிலிருந்து வந்து சேர்ந்திருந்தன. அவற்றைப் பயன்படுத்த வேண்டிய கட்டம் வந்துவிட்டது என்பதை அவர் உணர்ந்தார். உடனடியாக அந்த டாங்கிகளின் துணைகொண்டு தன் வீரர்கள் மூலம் பிரிட்டிஷ் படையின்மேல் தாக்குதல் தொடர்ந்தார். அது அவருக்குத் சரித்திரத்திலே இடம் பெற்று வெற்றியைத் தேடித் தந்தது. அந்த வெற்றியின் பலனாக அவர் வரலாற்றுப் புகழ்வாய்ந்த டோப்ருக் கோட்டையைக் கைப்பற்றினார்.

சற்றும் தயங்காது, தளராது தக்க தருணம் கிட்டியவுடன் செயலில் இறங்கிய காரணத்தால்தான், இந்த வியத்தகு வெற்றியைப் பெற முடிந்தது.

'TIME AND TIDE WAIT FOR NO MAN'

‘நேரமும், அலையும் யாருக்காகவும் காத்திருப்பதில்லை’ என்பது ஆங்கிலப் பழமொழி. எனவே ரம்மல் (Rammel) போன்று நேரம் கிடைத்த உடன் விரைந்து செயல்பட்டால் வெற்றி நிச்சயம்.

**ஓங்கி உலகு வெல்லும் உயர்வான சொல்லாட்சி**

**விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது**

**சொல்லுதல் வல்லார்ப் பெறின்**

சொல்ல வேண்டிய செய்திகளை வரிசையாக இனிமையாக ஒருவர் சொல்லக்கூடுமானால் அவர் சொன்னபடியே உலகம் விரைவாகச் செயல்படும் என்பது வள்ளுவர் கருத்து.

ஃபிராங்கிளின் ரூஸ்வெல்ட் அமெரிக்கக் குடியரசு தலைவராகப் பதவியேற்ற காலம். அப்போது அமெரிக்க நாட்டின் பொருளாதாரம் சீர் குலைந்திருந்தது. பணவீக்கமும் வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டை அச்சுறுத்தி வந்தன. நானூறு வங்கிகளுக்கு மேல் மூடப்பட்டன. பங்குச் சந்தைகளும் மூடப்பட்டன. வங்கிகள் எப்போது திறக்கும் என்று பணம் போட்டவர்கள் அச்சத்தோடும் வியப்போடும் காத்திருந்தனர். வங்கிகள் மூடப்படும் முன்னர் அவசரமாகப் பணம் எடுத்தவர்கள் பணத்தை வீட்டிலே தலையணைக்கடியில் ஒளித்து வைத்திருந்தனர்.

மக்களுக்கு நம்பிக்கையூட்டிப் பொருளாதாரத்தை சரியான திசையில் கொண்டு செல்வது குடியரசுத் தலைவரின் கடமையாயிற்று. அன்று நாடெங்கும் வழக்கிலிருந்த ஊடகமான வானொலியைப் பயன்படுத்தினார் ரூஸ்வெல்ட்.

“நம்பிக்கையும், துணிவுமே நமக்கு நல்வாழ்வையளிக்கும், உங்கள் பணத்தின் பாதுகாப்பிற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. வங்கிகள் திறக்கப்படும். திறக்கப்படும் வங்கிகளில் உங்கள் பணத்தை மறுமுதலீடு செய்யுங்கள். நாம் அனைவரும் இணைந்து செயல்பட்டால் வெற்றி காண்பது உறுதி. நாம் அஞ்ச வேண்டியது ஒன்றிற்குத் தான்! அதுதான் அச்சம்.”

இவ்வாறு ரூஸ்வெல்ட் உரை நிகழ்த்திய மறுநாளே வங்கிகளில் முதலீடு குவித்தது. நாளாக நாளாக அதிக முன்னேற்றமும் ஏற்பட்டது. படிப்படியாகப் பொருளாதாரம் மீண்டது. நம்பிக்கையூட்டுகின்ற பேச்சுகள் வெற்றியையே தேடித் தரும் என்பதற்கு ரூஸ்வெல்ட்டின் உரை சிறந்த எடுத்துக்காட்டு.

மகாத்மா காந்தியடிகள் பேச்சிலே வல்லவர்! புன்னகையால் மக்கள் உள்ளத்தை வென்றவர். எனினும் அவரது பல்வேறு சுதந்திரப் போராட்டத் திட்டங்களை விளக்கி மக்கள்

மனத்திலே நிறுத்தி எழுச்சியூட்டுவதற்கு ஜவஹர்லால் நேருவின் பேச்சுத் திறன் பெரிதும் உதவியது.

ஜவஹர்லால் நேரு தனது கல்லூரி நாட்களிலே மேடை ஏறுவதற்குத் தயங்கியவர். முதன்முதலாக மேடை ஏற வேண்டிய கட்டாயம் வந்த போது வியர்த்து விறுவிறுத்துப் போனார். மேடையிலே அவரது நாக்கு குழறியது. சில நிமிடங்கள் அவரால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. அப்படிப்பட்ட நேரு அவர்கள் பின்னர் படிப்படியாகத் தனது துணிவாலும், பயிற்சியாலும் மேடைப் பேச்சில் தேர்ச்சி பெற்று தனிப்பெரும் இடத்தைப் பிடித்தார். சொலல் வல்லன், சோர்விலன் அஞ்சானாகத் திகழ்ந்தார். மக்கள் கூட்டம் அவர் பேச்சிலே மயங்கி அவர் பேச்சுப்படி நடக்க தயாராக இருந்தது.

இந்தியா சுதந்திரம் அடைந்ததை அறிவிக்கும் போது "நள்ளிரவு மணி ஒலிக்கும் போது உலகம் முழுதும் உறங்கிக் கொண்டிருக்கும் போது இந்தியா விடுதலை பெற்று விழிக்கிறது" என்று தொடங்கியப் பேச்சு உலக சரித்திரத்தில் இடம் பெற்று உள்ளது. அன்றிலிருந்து அவர் உயிர் பிரிகின்ற வரை இந்திய நாட்டில் அசைக்க முடியாத தலைவராக, ஆட்சியாளராக விளங்கி வந்தார்.

நமது தமிழகத்தினை எடுத்துக் கொண்டால் பேரறிஞர் அண்ணா அவர்கள் தனது பேச்சுத் திறத்தாலே தமிழர்கள் மனத்திலே இனமானம், மொழிமானம் எனும் உணர்வுகளைத் தூண்டி எழுச்சியூட்டி தமிழர் தலைவராக, திராவிட இயக்கத்தின் தளபதியாக விளங்கி வந்தார் என்பதை நாமறிவோம்.

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்," "கடமை, கண்ணியம், கட்டுப்பாடு "தோல்வியைக் கண்டு துவண்டு விடாதே வெற்றியைக் கண்டு இறுமாப் படையாதே" எனும் அவரது சொற்கள் தமிழர்கள் உள்ளத்திலே தாரக மந்திரமாக இன்றளவும் ஒலித்துக் கொண்டிருப்பதை நாம் உணரலாம்.

அகால மரணமடையாவிட்டால் இன்றளவும் அண்ணா அவர்கள் தமிழ்களின் தலைவராக இடம்பெற்றிருப்பார் என்பது உறுதி.

**கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்**
**வேட்ப மொழிவதாம் சொல்.**

என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப தனது சொல்லைக் கேட்டவர்கள் மட்டுமின்றி கேளாதோரும் விரும்புமாறு செய்தவர் அண்ணா.

பேச்சுத் திறன் வாழ்வின் பல்வேறு துறைகளிலும் கட்டங்களிலும் வெற்றி காண உதவுவதோடு சாதனை படைக்கவும் உதவும் என்பது தெளிவு.

## 3. படித்தாலே இனிக்கும்

-டாக்டர் இரா. ஆனந்தகுமார். இ.ஆ.ப.,

**உலகில் நீங்கதாங்க வி.ஐ.பி.**

உலகெங்கிலும் அன்பைப் பரப்பிக்கொண்டிருந்தது அழகான தென்றால் காற்று. பாலக்காட்டுக் கணவாய் வழியாகக் கோவைத்தென்றல் புகுந்து வந்து தாலாட்டும் அழகான சிற்றூர் சின்னவதம்பச்சேரி.. பரம்பிக்குளம், ஆழியாறு கால்வாய் ஒரு ஓரத்தில் பாய்ந்து தான், நீர் கொண்டுவரும் பொழுதெல்லாம் பசுமைகொண்டு வந்து அக்கம்பக்கத்து கிராமங்களை செழிப்பாக்கிக் கொண்டிருந்தது.

சொக்கன் செட்டியார் மல்லம்மாள் மேனிலைப்பள்ளியும்..., ஊ. சவுண்டப்ப செட்டியார் ஆரம்பப்பள்ளியும் அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகள், அங்கே படித்த ஒரு மாணவனது அழகான ஓட்டு வீடு சின்னவதம்பச்சேரியின் முக்கியமான ஒரு சாலை ஓரமாக, மேனிலைப் பள்ளிக்கு சுமார் நூறு மீட்டருக்கும் குறைவான தொலைவில் எதிரேயே அமைந்திருக்கிறது. ஊரின் கிழக்காலே அமைந்திருந்த ‘காவேரிக்காடு’ என்கின்ற சிறு சிறு சரளைக் கற்கள் பரந்துபட்ட கட்டாந்தரை, மேடுபள்ள கிரிக்கெட் மைதானத்தையும்.. ‘அம்மன்கோவில் கிழக்காலே’ என்ற பாடலுக்கேற்ப அமர்ந்திருந்து அருள்பாலிக்கிற சௌடேஸ்வரி அம்மன் ஆலயத்தையும்... சுற்றி இருக்கின்ற ஆயிரம் வீடுகளையும் 2003-இல் கணக்கெடுத்தால் ஆகிவிடுகிறது.

அந்தக் கிராமம்...

நாம் அறிமுகமாகிக் கொள்கின்ற அந்தக் கிராமத்தின் ஒரு சராசரி.... மாணவன் தான் வளர்ந்து இந்தப் புத்தகத்தை எழுதிக் கொண்டிருக்கிறான்.

தொலைபேசி சிணுங்குகிறது... புது செல்லிட தொலைபேசி அது.. அந்த ஓட்டு வீட்டில் நீளவாக்கில் மூன்று தடுப்புகள் அதில் ‘கடைசி ரூம்’ என்றழைக்கப்படும்... சின்ன அறையில் அமர்ந்து கொண்டிருந்த ஒரு பிற்பகல் பொழுது... கோவை வானொலி நிலையத்திலிருந்து அழைப்பு.

அந்த நீலநிற பட்டன் நோக்கியா... அடிப்படை (Basic) வடிவமைப்பு (Model) ஆகும்...

வானொலிப் பெட்டியைக் கொஞ்சம் தள்ளி வைத்துக்கொள்ளுங்கள்.... அதன் ஒலியைக் குறைத்தும்விடுங்கள்... இது “வி.ஐ.பி. நேரம்” என்கின்ற நிகழ்ச்சி... இதில் உங்களுக்குப் பிடித்தமான பாடலை ஒலிபரப்ப இருக்கின்றோம்... என்று நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் பெண்மணி பேசத் தொடங்கினார். ஒரு நிமிடம் அந்த மாணவனுக்கு எதுவும் தலைகால் புரியவில்லை.

நீங்க இன்றைக்கு வி.ஐ.பி. என்பதால்.... உங்களையும் இந்நிகழ்ச்சியில் சேர்த்து உள்ளோம்.... என்று அந்த ஒருங்கிணைப்பாளர் மகிழ்ச்சியோடு பேசினார்.

''யாருங்க... மேடம் வி.ஐ.பி'' நீங்க யாருகிட்ட பேசணும்ங்க'' என்று பணிவாக கோவைத் தமிழில் கேட்க....

நீங்கதான் வி.ஐ.பி. இன்றைக்கு..

இந்திய ஆட்சிப்பணித் தேர்வில் தமிழகத்திலிருந்து இரண்டாயிரத்து மூன்றில் (2003) தேர்வான அதிகாரிகளில் மாநிலத்தில் முதலிடத்திலும்... அகில இந்திய அளவில் ஐம்பத்தியிரண்டாம் இடத்திலும் இருக்கின்றீர்கள் வாழ்த்துக்கள்..'' என்று அவர்கள் பேசப் பேச பல காலமாக.. படித்து வந்த மாணவனது கனவு நிறைவேறிய... ஒரு மகிழ்ச்சிப் பிரவாகம்... அந்தக் கணத்தில் பொங்கி வழிந்து ஓடத்துவங்கி... அந்தக் காட்சி... நெஞ்சில் புகைப்பட நினைவலையாக (Photographic memmory) பதிந்து போயிருக்கின்றது......

'அண்ணாமலை' திரைப்படத்திலிருந்து ''வெற்றி நிச்சயம்'' என்கின்ற பாடலைத் தேர்ந்தெடுத்தோம்......

ஒலிபரப்பினார்கள்....

மீண்டும் ஒருமுறை வாழ்வில் மேடுபள்ளங்களில்..... தன்னம்பிக்கை, விடாமுயற்சி, துணிவு, கனிவு, அன்பு, நேர்மை, பணிவு, கருணை ஆகிய பண்புகளை ஒருசேரக் கடைபிடிக்க வேண்டும் என்கின்ற உணர்வுகளை இசை, காது வழியாக..... இதயத்தில் நட்டுவைத்து.... தாலாட்டியது.... இந்த நிகழ்வு குறித்து நிறைய மேடைகளில் எதிர்கால வி.ஐ.பி. சாதனையாளர்களோது கலந்துரையாடிப் பகிர்ந்து கொண்டோம்...

அதனைக் காற்றிலே கரைத்துவிடாமல் எழுத்துக்களில் உறையச் செய்யும் முயற்சியே இந்தப் புத்தகம்.......

''யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'

என்று திருமந்திரம் சொல்கின்றது...

படிக்கப் படிக்க இனித்த பாடங்கள்... படித்தாலே இனிக்கும் என்று பறைசாற்றச் செல்கின்றன...

திருமூலர் வாக்கிற்கிணங்க செயல்படுவோம்...

சின்னச் சின்ன செய்முறை நுட்பங்கள் (Practical technique) வழியே படிப்பதை இனிப்பாக்கி...... மகிழ்வாக்கி..... எதிர்கால உலகத்தை செழிப்பாக்குவோம்.... என்கின்ற

உற்சாகமான குறிக்கோளோடுதான் இப்புத்தகம் வழிந்தோடப் போகின்றது... வாருங்கள்... காட்டாறாய் ஊற்றெடுக்கும் நினைவலைகள் சுழன்றடிக்கும்.... ஞாபக ஓடையின் ஓடத்தில்... சிறு காட்சிக் கையளவு.... இனிப்பான நீரை அள்ளிப் பருகி... அதன் பின்னணித் தத்துவத்தை அறிந்து மகிழ்வோம்...

இந்தப் பிரபஞ்சத்தின் சிறிய மூலையிலே... சிறகசைத்த ஒரு சிறுபட்டாம் பூச்சியின் சலனத்தைப் போல... மெல்லிசாக அமைந்த சின்னச்சின்ன நடப்புக்களை அவ்வப்போது பகிர்ந்துகொண்டு அவற்றின் வழியே தோன்றிய சிந்தனைகளை ஆராய்வோம். அது போன்ற நிகழ்ச்சிகள் அனைவருக்கும் இருக்கலாம். வாழ்வில் நடந்திருக்கலாம்... அதனால் படிக்கத் தூண்டலாம்... அதுவே இப்புத்தகத்தின் இலக்காகும்.

வாருங்கள்... எல்லாரும் இந்நாட்டு மன்னர் - என்பதுபோல்...

நீங்கள் அனைவருமே வி.ஐ.பி. க்கள் தான் என்று நிரூபிப்போம்.

**இப்புத்தகத்தை எப்படி தொடங்கலாம்?**

உலகம் நிறைந்த நண்பர்களே வணக்கம். படிப்பது இனிக்குமா? என்று எடுத்தவுடன் கேள்வி கேட்டு! இது ஒரு நகைமுரண் என்று கருதும் அன்பர்களுக்கும் அன்பு கலந்த வணக்கம்.

படித்தாலே இனிப்பது இந்த புத்தகம் மட்டுமல்ல, உலகம் முழுதுமே என்பதை இந்தப் புத்தகம் முடிந்த பின்னர் முழுதாக ஒப்புக்கொள்ள உள்ள எல்லா நண்பர்களுக்கும் வரவேற்பு கலந்த வணக்கம்.

படிப்பு என்பது எதைக் குறிக்கிறது என்று தொடங்கினால் பொருந்தும் என்று கருதுகின்றோம். இப்புத்தகத்தில் குறிப்பாக பொருள் கொள்ளும் வண்ணம் சிலபல கருத்துக்களைத் தனித்துவமான பின்புலத்தோடு உணர்த்துவதாக உள்ளோம்.

எனவே பொதுவான பொருள் கொண்டு குழப்பமுற வேண்டாம். வாசக நண்பர்களே, எல்லா வாசகர்களையும் நண்பர்களாகப் பாவிக்கும் அவர்களோடு நட்புப் பாராட்டி; இன்றளவு உதவி புரியும் நோக்கில் இக்கட்டுரைப் புத்தகம் இயற்றப்பட்டுள்ளது.

ஆதலால் நண்பர்களே........

பள்ளி கல்லூரி மாணவர் மாணவியரிலிநிது மழலையர் வரை கற்கத் தொடங்கும் எல்லோரும் நண்பர்களில் அடக்கம்! “**சாகும் வரை தமிழ்ப் படித்துச் சாகவேண்டும்**” என்று சொன்ன ஈழத்துக் கவிஞர் சச்சிதானந்தனார் வாக்கின்படி தள்ளாத வயதானாலும் தமிழ்ப் படிக்கும் இப்புத்தகத்தை ஸ்பரிக்கும், நேசிக்கும் எல்லோரும் எம் நட்பே! இப்படி எல்லாத்

திசைகளிலும் ஏராள நண்பர்களுக்குப் பாரபட்சமின்றி பணிவான, பண்பான, வணக்கம் தெரிவிக்கின்றோம்.

முதனிலை பன்மையில் நாம் என்று குறிப்பிடக் காரணம் யாதெனில் படித்தாலே இனிக்கும் என்று சொல்கின்ற கருத்துக்கள் படித்து கொடுத்தவர்கள் பலபேர் ஆவார்கள்.

கற்றுக்கொடுத்த புத்தகங்கள் ஆயிரக்கணக்கு! கணினி, காணொலி, திரைப்படம், தினந்தோறும் செய்தித்தாள் என எண்ணற்ற ஊடகங்கள் அதன் தொழில்நுட்பக் கலைஞர்கள், வள்ளுவர், பாரதி முதல் ஷெல்லியும் ஷேக்ஸ்பியரும்...... கன்ப்பூஸ் பண்ணாத சீனத்து கன்பூசியஸில் இருந்து... இரஷ்ய போர்மூலம் வாழ்க்கைப் பாடம் படிக்க வைத்து... மகாத்மாவுக்கு... எளிமையைப் பரிசளித்த டால்ஸ்டாய் வரையில் பல பேரிடம் இருந்து படித்தெடுத்த; உலகம் பரிசளித்த சின்னச் சின்ன விந்தை விந்தைகளைப் படித்தால் இனிக்கும் சிந்தை விதைகளை நண்பர்கள் மனதில் நட்டுவித்து அது வளர்ந்து பலன்கொடுக்கும் காணக் கிடைக்காத காட்சியதனைக் கண்டுகளிக்க...

யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என மீன் எடுத்துக் கொடுக்காமல் மீன் பிடிக்கக் கற்றுக் கொடுக்கும் முயற்சிதனை இந்தப் புத்தகம் மூலம் மேற்கொண்டிருப்பதனால்தான் நாம் அனைவரும் இணைந்து... நாம் என்றே குறிப்பிடுவோம்!

சரி...

“இதில் படிப்பு என்று எதைக் குறிப்பிடுகின்றோம்” இக்கேள்விக்குப் பரவலாக நாம் கருதும் பள்ளி - கல்லூரிகளில் பாடங்கள் படிப்பித்துப் பரீட்சையிலே தேர்வு செய்யும் படிப்பை நினைக்கலாம் - அது ஒன்று.

வாழ்க்கைப் பாடத்தைப் படிப்பிப்பது பரந்த படிப்பு என விரித்துப் பொருள் கொள்வோமோ! அது இரண்டு.

ஆக மொத்தம் எங்கெங்கெல்லாம் ஏதாவதொன்றைக் கற்றுக் கொள்கிறோமோ” அதெல்லாமே படிப்பு என்று அகலமாகப் பொருள் கொள்வோம்.

நம் **பாவேந்தர் பாரதிதாசனார்** “எங்கும் பாரடா இப்புவி மக்களை.. பாரடா **உன்னுடன் பிறந்த பட்டாளம்...**” என்று அனைவரையும் உடன்பிறந்தோர் என்று அறிமுகப்படுத்தி, அறிவை விரிவு செய் அகண்டமாக்கு விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை! என்று இட்ட உத்தரவுக்கிணங்க மனதை விரிவு செய்து அறிவை விரியச் செய்து கருத்துக்களைப் புரிந்துகொள்ள வைக்கின்ற எல்லாமே படிப்புத்தான் என்று முடிவு செய்யத் தோன்றுகின்றது.

இப்படி ஒரு விசாலமான அளவுகோல் கொண்டு அளந்தோமேயானால் ஆயிரமாயிரம் வகையான, படிப்புகளை வரிசைப்படுத்தி.... அலைமோதுகிற வகைகளைப் பட்டியலிடலாம்.... கையில் சிக்கிய. கண்ணில் பட்ட எல்லாப் படிப்புகளையும் ஏன் காவலர் தேர்வுக்கு ஆளெடுப்பது போல அணிவகுத்து நிறுத்தி உயரத்தை அளந்து பார்த்துத் தனித்தன்மையைப் பிரமித்து நோக்கக் கூடாது? என்று தோன்றியது.

படிப்பது இனிப்பானது என்றால் நம்மில் சிலருக்கு அவர்களே இனிப்பானவர்கள் அதாவது **“சர்க்கரை நோய்”** உள்ளோர் என்பதால், இனிப்புச் சாப்பிடுவதே இல்லை அல்லது இனிப்பு என்றால் விரும்புவதில்லை என்று கூறிவிடுவார்கள். அவர்களுக்கும் உகந்த வகையில் உள்ள இனிப்பையும் ஒருங்கே கூட்டி உள்ளார்ந்த உவகை அளிக்கக் கூடிய, மனத்தித்திப்பு வழங்கக்கூடிய நிகழ்வு நாம் எண்ணும் படிப்பு என்று பொருள் கொள்ள வேண்டுகிறோம்.

**குறி வைத்து அடிங்க**

வாழ்வின் இலக்கு என்னவாக இருக்க வேண்டும்?

படிப்பதாகவும் இனிப்பதாகவும் இருக்க வேண்டும்? என்ற ஒரு வாக்கியத்தைப் பதிலாகக் கூறினால் அதைக் கேள்விக் குறியோடுதான் மேற்கண்டவாறு முடிக்க இயலும். நம்மில் நிறையப்பேர் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. பள்ளிப் பருவத்தில் ஆண்டு இறுதித் தேர்வு முடிந்த உடன் பழைய ஆண்டுப் புத்தகங்கள் மீது தன் கோபத்தைக் காட்டிய நண்பர்களை நாம் கண்டுள்ளோம்.

கால்நடை உதவி மருத்துவர் பணியில் சேருவதற்கான போட்டித் தேர்வு 2001-ஆம் ஆண்டு நடைபெற்றது. அதில் வெற்றி பெற்று பணிக்குச் சேர்த்தோம். நம் நண்பர்கள் ஆறு பேர், அந்தத் தேர்விற்காக பல ஆண்டுகள் படித்தோம், தயாரித்துக் கொண்டோம். கடைசி ஆறு மாதங்கள் மிகக் கடுமையான படிப்பு “**மல்டிபிள் சாய்ஸ்**” வகையிலான ஒரு மதிப்பெண் கேள்விகள் அடங்கிய இரண்டு தாள்களைக் கொண்ட தேர்வு. அதில் வெற்றி பெற்றோம். சங்கர், பாரி, கிரி, இராஜமாணிக்கம், சுரேஷ் ஆறு பேரும் ஒரே மகிழ்ச்சி.

பொதுவாக, தேர்வு முடிவுகள் வெளியாகும் நாட்களும் அதைக் கண்டவுடன் மகிழ்ச்சியில் உண்டாகும் உவகைப்பெருக்கும் நீண்ட நாட்களுக்கு மறக்க முடியாது. நண்பர்களே... உங்களின் வாழ்விலும் அதுபோன்ற தேர்வு வெற்றிகள் நிறைய நடைபெற வாழ்த்துக்கள். அத்தகைய மறக்க முடியாத ஒரு தருணத்தில் நண்பன் டாக்டர். இராஜமாணிக்கம் கூறினான்.

“அப்பாடா சாமி! போதுண்டா... படிப்பு... இப்போ ரிசல்ட் வந்தாச்சு... இனிமே.. குமுதம், ஆனந்தவிகடன், கூட படிக்கமாட்டேன்டா” என்று விளையாட்டாகக் கூறினான். எவ்வளவு உணர்ச்சி வசப்பட்டு இருக்கின்றான். அப்போது அவனிடம் “**படித்தாலே இனிக்கும்**” என்றால் அடிக்க வந்திருப்பான்.

இப்பொழுதும் பதினாறு வருடங்கள் உருண்டோடிய பிறகு திரும்பிப் பார்த்தான்... பரேய்லி ஐ.வி.ஆர்.ஐ. என்று சொல்லக்கூடிய உத்திரபிரதேசம் பரேய்லி என்ற இடத்தில் உள்ள இந்தியன் வெட்டரினறி ரிசர்ச் இன்ஸ்டிட்டியூட்டில் (IVRI) நாங்கள் படித்துக் கொண்டிருந்த அந்த 2000 - 2001 காலக் கட்டங்கள் மிக இனிமையாக நினைவு கூரத்தக்கவையே! அதி தீவிரமாக, ஒரு நாளைக்குப் பத்து பன்னிரண்டு மணி நேரத்திற்கும் அதிகமாகப் படிப்பில் செலவிட்ட அசதியின் களைப்பைப் போக்கவும், வெற்றிக் களிப்பின் தீவிரத்தின் மகிழ்ச்சியின் பிரவாகத்திலும் பிறந்த சொற்கள் அவை!

அதன்பிறகு Dr. இராஜமாணிக்கம்.... சொன்னது போலவே எதையும் படிக்காமல்தான் இருந்தானா?... என்று கேட்டால்....

அதற்கு இன்னொரு நிகழ்ச்சியை உதாரணமாகக் கூறிய பிறகு விடை கண்டுபிடிப்போம்... Dr. இராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் சேலம் மாவட்ட ஆட்சியராக 2004-இல் இருந்த சமயத்தில் பயிற்சிக்காக அவரிடம் சென்றிருந்தோம். இந்திய ஆட்சிப் பணித் தேர்வுக்குப் படிப்பதற்கு மிக அதிக நேரம் படிக்க வேண்டும் என்பது அனைவரும் அறிந்ததே! அவரைச் சந்தித்து அறிவுரை பெற்ற பொழுது அவர் கூறிய முக்கியமான கருத்து நம் மனதில் இருத்திக்கொண்டு செயல்பட வேண்டியது....

“நீங்கள் பணியில் சேர்ந்த பின்னர் படிப்பதைக் குறைத்துக் கொள்ளலாம் என்று நினைத்துவிடாதீர்கள், தேர்வுக்கு தயாரான காலகட்டத்தில் படித்ததைவிட அதிகமாகப் படிக்க வேண்டும். கோப்புகள், கோப்புகளின் பின்புலத் தகவல், கோப்பில் கையாளப்பட்டு உள்ள பொருட்கள் குறித்த பொதுவான தகவல்கள், கோப்புகளில் வழக்கு ஏதேனும் இருப்பின் அவற்றின் சட்டப் பின்னணி, முன்னுதாரணமாக மேற்கோள் காட்டப்பட்டிருந்தால் அதன் பொருத்தம்.... என்று படிப்பதற்கு நிறைய இருக்கின்றது. ஒவ்வொரு மாவட்டத்திலும்.... அதன் வரலாறு புவியியலில் தொடங்கி பல நிர்வாகத் தகவல்களை மனதில் இருத்தி செயல்படத் தொடர்ந்து படிப்பது மிகவும் அத்தியாவசியமானது!”

இப்படி படிப்பதைக் குறித்தும் அதன் தொடர்ச்சியைக் குறித்தும்.... போகப்போக அதிகரித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்கின்ற கருத்தைக் குறித்தும் நிறைய சிந்தனைகளைச் சிரமேற்கொண்டதன் விளைவு - இவற்றை நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்னும் பேராவல்.

ஏற்கெனவே கூறியதுபோல்....

ஒரு இடைக்கால இளைப்பாறுலுக்காகவே Dr. இராஜமாணிக்கம் அவ்வாறு கூறினாலும்... வாழ்வில் படித்து மகிழ்வதை, பல்வேறு தகவல்களைப் புதிதாகத் தெரிந்து மகிழ்வதை அவன் தொடர்ந்து செய்து வருகின்றான் என்பதை நாம் சொல்லித் தெரியவேண்டியதில்லை...

ஆகவே படித்தாலே இனிக்கும் என்பது பட்டறிவின் பயன்பாட்டால் பார்த்தறிந்த உண்மையே! அது முக்காலத்துக்கும் பொருந்தி வருகின்றது. பழங்காலத்தில் படித்திருந்தால்; நடப்புக் காலத்தில் நன்மதிப்புப் பெற்றுத் தரும். நிகழ்காலத்தில் படிக்கும் செய்திகள், நீடித்த மகிழ்ச்சியுடன் இனிக்கும்.

எதிர்காலத்தில் எதைப்படித்தாலும்... நிச்சயமாக மகிழ்ச்சியைத் தரும் என்பதே "படித்தாலே இனிக்கும்" தத்துவத்தின் உட்பொருளாகும்.

இந்தத் தத்துவம்தான் நம்மை வி.ஐ.பி. ஆக மாற்ற உள்ளது....

## 4. வெற்றி அருகில் தான்

- முனைவர் செ. கஸ்தூரி

**விடாதே** தொடர்ந்து செல் வெற்றி அருகில்தான். எத்தனை வருடம் வாழ்ந்தோம் என்பது காலண்டர் கணக்கு. எப்படி வாழ்ந்தோம் என்பதுதான் மனிதக்கணக்கு. எதிர்காலம் என்பது நம் கையில் இல்லை. நேற்று என்பது நினைவு. நாளை என்பது கனவு. இன்று என்பதுதான் நனவு. நிஜம், நிஜத்தில் வாழ்க்கையை மகிழ்வாய் அமைத்துக்கொள்ளாவிட்டால் எதிர்கால வாழ்வு கானல் நீராகிவிடும்.

வாழ்வு என்பது வெற்றியும், தோல்வியும் நிறைந்த மலர்க்கூடை. தோல்விகள் சறுக்கல்கள் மனதுக்குள் சங்கடமாகத்தான் இருக்கும். ஆனாலும் என்னால் இதைச் சமாளிக்க முடியும் என்று திட்டமிட்டால் அவற்றிலிருந்து விரைவாக வெளியில் வரலாம். அத்துடன் வாழ்க்கை வாழ்வதற்கே என்ற மன உறுதியிருந்தால் வெற்றி, வெற்றி எங்கு நோக்கிலும் வெற்றி என்று உள்ளம் குதுகலிக்கும்.

**"எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி**

**எங்கும் வெற்றி எதனினும் வெற்றி"**

என்று பாரதி பாடுவதை நினைவில் இருத்திக்கொள். வெற்றி அருகில்தான்.

**வெற்றி எளிதானதே**

வெற்றி பெறுவது மிகவும் எளிதானதே. என்ன செய்கிறாய் என்பதை அறிந்து செய். செய்வதை விரும்பிச் செய். செய்வதை நம்பிக்கையோடு செய். செல்லும் பாதை சரியாக இருந்தால் மெல்ல ஓடினாலும் வெற்றிதான். யார் முன்னேறிச் செல்கிறார்களோ அவர்களுக்கே இந்த உலகம் வழிதிறந்து விடுகிறது.

**"உன்னை அறிந்தால் - நீ உன்னை அறிந்தால்**

**உலகத்தில் போராடலாம் உயர்ந்தாலும் தாழ்ந்தாலும்**

**தலை வணங்காமல் நீ வாழலாம்''**

எனக் கண்ணதாசன் பாடிய பாடலைப் பாடிக்கொண்டேயிருங்கள். நம்முடைய திறமையை ஆற்றலை நாம் தெரிந்தும் அறிந்தும் கொள்ள வேண்டும். அப்போது தான் வாழ்க்கையில் வெற்றியைச் சுலபமாக எட்ட முடியும். திறமையை அறிந்தால் மட்டும் போதாது பாடுபடு, பக்குவப்படு, பயன்படு இந்த மூன்று சொற்களின் இறுதியும் உன்னை do ,,, do என்று தூண்டிக்கொண்டிருக்க வேண்டும். நீ உயர்ந்தவனாக மாறிவிடுவாய்.

கீழே விழாமல் இருப்பதில் பெருமை இல்லை விழுந்தபொழுதெல்லாம் எழுந்திருப்பதே பெருமையாகும். சாதனை படைத்தவர்கள் எல்லாம் ஒரே மூச்சில் வென்றவர்கள் அல்லர். விழுந்து விழுந்து எழுந்தவர்கள்தான். சாதிக்க வேண்டும் என்ற வெறியுடன் நம்மால் முடியும் என்று தினசரி இரண்டு முறையாவது உங்கள் மனதிற்குக் கட்டளை இடுங்கள் நிச்சயம் உங்களால் முடியும்.

**''யாருக்கில்லை போராட்டம் கண்ணில் என்ன நீரோட்டம்**
**ஒரு கனவு கண்டால் அதைத் தினம் முயன்றால்**
**ஒரு நாளில் நிஜமாகும்''**

தோல்வியைக் கண்டு துவண்டு விட வேண்டாம். தோல்விதான் நமக்கே நம்மை அடையாளம் காட்டுவதோடு நம்மை நாமே புரிந்து கொள்ள நமக்கு உதவி செய்கிறது. தோல்வியில் துவண்டு விடாமலும் வெற்றியில் கனத்து விடாமலும் இருப்பதற்கு மனதைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**தோல்வியே படிக்கல்**

எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லையே என்றதும் சோர்வடைந்து விடக்கூடாது. முடங்கிக் கிடந்தால் சிலந்தியும் உன்னைச் சிறைபிடிக்கும். உழைப்பையும் முயற்சியையும் தொடர் நிகழ்வுகளாகப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். முயற்சிக்கான பலன்கள் சில சமயங்களில் உடனே கிடைத்துவிடும். சில நேரங்களில் தாமதமாகலாம். அதற்கு பொறுமை மிக மிக அவசியம்.

**''உள்ளம் என்றும் எப்போதும் உடைந்து போகக்கூடாது**
**என்ன இந்த வாழ்க்கை என்ற எண்ணம் தோன்றக்கூடாது''**

தோல்வியே நம் வாழ்க்கையின் வெற்றிக்கான திருப்புமுனை ஆகும். தோல்வியைக்கண்டு துவண்டு விடக்கூடாது. தோல்விகளைப் படிக்கல்லாக அல்லது பாலமாக அமைத்து இடையூறுகளைக் கடந்து முன்னேற வேண்டும். நம்மால் முடியும் என்ற நம்பிக்கை நமக்கு வர வேண்டும்.

“முடியாது என்று சொல்வது மூடநம்பிக்கை
முடியுமா என்று கேட்பது அவநம்பிக்கை
முடியும் என்று சொல்வதே தன்னம்பிக்கை”

தன்னம்பிக்கை கொண்டவர்கள் தன் ஆற்றலை உணர்ந்தவர்களாகத் தைரியமாகச் செயலில் இறங்குவார்கள. முடியும் என்று நம்பும் மனிதனால்தான் வரலாறு படைக்க முடிகிறது. தயங்குபவர்களுக்கும் பயப்படுகிறவர்களுக்கும் யோசிப்பவர்களுக்கும் இந்த உலகில் எதுவும் சாத்தியமில்லை. துணிவும் முயற்சியும் தான் வெற்றியின் முதல்படி. மாபெரும் சபைதனில் நீ நடந்தால் உனக்கு மாலைகள் விழ வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

**அறிவே துணை**

அறிவு ஒன்றுதான் அச்சத்தை முறிக்கும் அரிய மருந்து எனவேதான் வள்ளுவரும் அறிவு அற்றம் காக்கும் கருவி என்கிறார். அறிவை வளர்த்துக் கொண்டால் அறியாமை அகன்றுவிடும். ஓய்வு நேரங்களில் புத்தகங்களை வாசித்துப் பழக வேண்டும். நிறைய படியுங்கள், நிறைய யோசியுங்கள். புத்தகங்களை நாம் மேலிருந்து கீழே வாசிக்கிறோம். புத்தகங்களோ நம்மைக் கீழிருந்து மேலே தூக்கி விடுகிறது. எனவே படிப்புத் தேவை. அதோடு உழைப்பும் தேவை. படிப்பால் உண்மை தெரியும் உலகமும் தெரியும். அறிவு ஜீவிகளுடன் பழகுங்கள். மற்றவர்களுடன் கலந்து உரையாடினால் உங்கள் அறிவு விருத்தியடையும். புதிய யோசனைகள் உங்களுக்குள்ளும் பளிச்சிடும், நீங்களும் மதிப்புடையவர்களாக மாற முடியும். ஒவ்வொரு நாளும் நம்மை நாமே புதுப்பித்துக்கொள்ள வேண்டும். செடியானது வளர்ந்து வளர்ந்து தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது. அதுபோல பயிற்சிக்கு உட்பட்ட மனிதர்களே முயற்சி எடுப்பதில் முந்திக் கொள்கிறார்கள். புதியவைகளைக் கற்றுக் கொள்வதில் முனைப்போடு இருப்பது அவசியம். இக்கட்டான சூழ்நிலையில் எல்லாம் முடிந்துவிட்டது என்று எண்ணி விரக்தி அடைந்துவிடாதீர்கள். சிலிர்த்து எழும் மனிதனே சிறப்புடன் வாழ்வான் என்று எண்ணுங்கள். சூழ்நிலைகளை மாற்றினாலே தன்னம்பிக்கை பிறக்கும். அது வெற்றியை நோக்கி நம்மை இட்டுச் செல்லும் வாழ்க்கையில் ஆயிரம் எண்ணங்கள் தோன்றலாம். அவை செயல் வடிவம் பெறும்போதுதான் எண்ணம் போல் வாழலாம். இமயம் போல் உயர்ந்து நிற்கலாம்.

**இனிமையான இளமை**

இளமை என்பது பெரிய பொக்கிஷம், இளமை இனியது, ஆற்றல் மிக்கது. ஆனால் இளமைக்கு மதிப்புக் கொடுக்காமல் வீணாக்கி விடுகிறோம். இளமையைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும். ‘இளமையில் கல்லாதது கல்வியும் அல்ல’ என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இளைஞர்களின் கையில்தான் இந்த நாடே இருக்கிறது. இளமையிலேயே கடமையைக் கண்ணியமாகச் செய்திட வேண்டும். இளமையை உதறிவிட்டால் அதுவும் நம்மை உதறிவிடும்.

மது இல்லாமலே வெறி கொள்ளச் செய்வது வாலிபம் என்பதை மறந்து விடக்கூடாது. வெந்ததைத் தின்று விதிவந்தால் சாவதற்கான வாழ்க்கை வாழாமல் அடுத்தவரின் நலனில் அக்கறையும் பிறர் நலப்பணியில் அர்ப்பணிப்பும் மானுடத்தின் மீது அன்பும் பரிவும் இரக்கமும் உடையராக வாழ்வோம்.

கவிஞர் மு. மேத்தா அவர்களின் கூற்றுப்படி "காத்திருக்கும் வரை நம் பெயர் காற்று என்றே இருக்கட்டும். புறப்பட்டுவிட்டால் புயல் என்று புரிய வைப்போம்" "காலம் பொன்போன்றது என்பது பழைமை மொழி காலம் உயிர் பொன்றது என்பதே புதுமொழி." உயிர்போனால் திரும்பாது காலமும் அப்படியே. ஆதலால் விழிப்புடன் திட்டமிட்டுச் செயல்பட வேண்டும். உற்சாகமாக இருப்பதுதான் வெற்றிகரமான வாழ்க்கைக்கு முதல் அறிகுறி. சோர்வு என்ற சொல்லின் முதல் எழுத்தை மாற்றினாலே போதும் பிறந்துவிடும் தீர்வு. ஈடுபாடில்லாத எந்தச்செயலும் சிறப்பாக இருக்காது. வசதி வரும்வரை அசதியை நினைக்காமல் அசந்து போரடிக்குதுப் போரடிக்குது என்று சொல்லாமல் முயற்சி என்ற போர் செய்து வெற்றி என்ற கனியை அடைந்திடு. கனிவு என்னும் காந்தம் உன்னிடமிருந்தால் இந்த உலகமே உன் இதயத்தில் ஒட்டிக்கொள்ளும். விடாதே தொடர்ந்து செல் வெற்றி அருகில் தான்.

## காலமறிதல்

**முனைவர் வி. பார்த்தீபன்**

"மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்பது ஔவையாரின் வாக்கு. பெறற்கரிய மானிடப் பிறவியினையடைந்த நாம் நம் வாழ்நாளில் சாதித்தவையைக் காட்டிலும் சாதிக்காமல் விட்டவைதான் அதிகம். நொடிகளாய், நிமிடங்களாய், மணிகளாய், நாட்களாய், மாதங்களாய், வருடங்களாய்க் காலம் கடந்துகொண்டே இருக்கிறது. காலத்தைச் செம்மையுறப் பயன்படுத்தி நாம் சாதிக்க வேண்டியவை ஏராளம், ஏராளம்.

காலம் மனிதனின் விலை மதிப்பற்ற சொத்து. அரிய ஆதாரம், அது யாவர்க்கும் சமமாகக் கிடைக்கப் பெற்ற அரும் பரிசு. உலகின் எப்பகுதியில் வாழினும், எத்தகையவராயினும் அவருக்கு இருபத்து நான்கு மணி நேரமே நாளொன்றுக்குக் கிடைக்கிறது. மிகப்பெரிய செல்வந்தர்கூட மேலும் ஒரு மணி நேரத்தைத் தனக்கெனக் கூடுதலாகப் பெற இயலாது. விஞ்ஞானிகளும், கணிப்பொறி வல்லுநர்களும் ஆயிரக்கணக்கான செயல்பாடுகளை நொடிப்பொழுதில் செய்யவல்லவர்களேயானாலும் அவர்களால் புதிதாக நொடிப்பொழுதொன்றை உருவாக்க இயலாது.

வால்டர் ஸ்காட் என்ற அறிஞர்,

**"காலத்தை திரும்பப் பெற இயலாது**
**அதைச் சேமிக்கவோ அல்லது**
**வாங்கவோ இயலாது,**
**நீங்கள் வாழ்வை நேசிப்பீராயின்**
**காலத்தை விரயமாக்காதீர், ஏனெனில்**
**வாழ்வு என்பது நேரத்தால் ஆக்கப்பட்டது."**

என்கிறார்.

வால்டர் என்ற பிரெஞ்சுத் தத்துவஞானி காலத்தின் இயல்பைக் கூறுமிடத்து "இவ்வுலகம் மிக நீளமானதும், மிகக்குறுகியதும், மிகவேகமானதும், அதிகம் பகுக்கப்படக் கூடியதும், மிகவும் புறக்கணிக்கப்படக் கூடுவதும் மிகவும் வருத்தப்பட வைக்கக்கூடுவதும் என ஒன்று உண்டென்றால் அது காலம் தான்" என்கிறார்.

ஓவியன் ஒருவன் ஒரு விநோதமான ஓவியம் ஒன்றை வரைந்து காட்சிக்கு வைத்திருந்தான். அதில் மனிதன் ஒருவனின் முன்தலையில் நீண்டு வளர்ந்திருந்த முடி அவன் முகத்தை மூடியிருக்க, பின்தலையோ வழுக்கையாக இருந்தது. கால்களிரண்டிலும் இறக்கைகள் இருந்தன. ஓவியத்தைக் கண்ணுற்ற மக்கள் புரியாது விதிர்த்து ஓவியனைக் கேட்டனர் "யாருடைய ஓவியம் இது" ஓவியன் பதிலுரைத்தான் "இது காலத்தின் ஓவியம்" வியப்புற்ற மக்கள் மேலும் வினவினர், ஐயா, ஏனிந்த மனிதனின் முகம் மறைக்கப்பட்டுள்ளது.

அதற்கு ஓவியன், "காலம் மக்களுக்கு முன்னால் வருகையில் யாரும் அதனை அடையாம் காண்பதில்லை. அதனாலேதான் அவ்வாறு சித்திரிக்கப்பட்டுள்ளது" என்றான்.

"முன்னால் முடியிருக்கவும் பின்னால் வழுக்கையாகவும் ஏன் வரைந்துள்ளீர்?" என மக்கள் வினவ ஓவியன் பதிலளித்தான் "காலம் வரும்போது அதனைப் பிடித்துக் கொள்ள ஏதுவாக மன்னால் முடிவரையப்பட்டுள்ளது. ஆனால் தவறவிட்டால் எத்தனை ஆயிரங்கள் செலவிட்டாலும் பிடிக்க இயலாது என்பதைக் குறிக்கவே பின்னால் வழுக்கையாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது" என்றான்.

மக்கள் இறுதியாக கேட்டனர், "காலிலே ஏன் இறக்கைகள் உள்ளன?"

ஓவியன் சொன்னான் "ஏனெனில் காலம் மிக வேகமாகக் கடந்து செல்லும் ஒருமுறை கடந்துவிட்டால் கடவுளரும் அதனை மீளப்பெற இயலாது."

காலத்தின் புதிர்த்தன்மை இதன்மூலம் விளங்குகிறதல்லவா? புகழுடன் செம்மாந்த வாழ்வு வாழ்ந்தோரின் வரலாறுகள் ஓர் உண்மையை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. அதுதான்

அவர்களது திட்டமிட்டு செயலாற்றும் திறன். தாங்கள் கொண்ட திட்டத்தைக் காலமறிந்து ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் முடிப்பதில் அவர்கள் வெற்றி பெற்றவர்களாக இருந்தனர். காலம் அறிதலும், நேரந் தவறாமையும் சாதனையாளர்களை உருவாக்கும் கருவிகளாம்.

**காலம் அறிதலின் அவசியம்**

நம் நடைமுறை வாழ்வில் காலம் அறிதல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் விவசாயம், அலுவலகம், வணிகம் என எப்பிரிவாயினும் காலமறிந்து செயல்படுதல் அவசியமாகும்.

"ஆடிப்பட்டம் தேடி விதை" என்றும் "பருவத்தே பயிர் செய்" என்றும் விவசாயத்தில் காலத்தின் அருமை வலியுறுத்தப்படுகிறது. பயிரின் நேர்த்தியும் காலமறிந்து ஆற்றும் செயல்பாடுகளால் அமைகிறது.

தொழில் மற்றும் வணிகத்தில் காலமறிந்த செயல்பாடு, நிறுவனங்கள் உயர வழி வகுக்கிறது. புதிய உத்திகளைப் பயன்படுத்துதல், அமைப்புகளில் மாற்றம் செய்தல், விலைகளில் மாறுபாடு செய்தல், புதிய துறைகளில் ஈடுபடல் இவை போன்ற பிற காரியங்களைக் காலமறிந்து செயல்பட்டால் வெற்றி உறுதிப்படுகிறது.

**"ஞாலங் கருதினுங் கைகூடும் காலங்**
**கருதி இடத்தாற் செயின்"**

என்பது வள்ளுவரின் வாக்கன்றோ?

குறிப்பாக அலுவலகத்தில் பணிபுரிவோர் தங்கள் மேலதிகாரிகளிடமோ அல்லது மேலதிகாரிகள் தங்களின் கீழ்ப்பணிபுரிவோரிடமோ ஏதேனும் காரியமாய் அணுகும் போது காலமறிந்து செயல்படல் நன்மை பயப்பதாகும். ஒவ்வாத சூழலில் ஒரு செயலை வலியுறுத்துவதோ அல்லது அதைப்பற்றி விவாதிப்பதோ எதிர்விளைவுகளையே ஏற்படுத்தும், தக்க தருணம் வரும்வரையில் காத்திருந்து உகந்த சூழலில் ஒரு காரியத்தை வலியுறுத்துவது மிகுந்த பயனளிக்கும் "உறுமீன் வரும்வரை வாடியிருக்கும் கொக்கின் நிலையும், கூம்பும் பருவத்துக் கொக்கின் நிலையும்" யாவரும் கைக்கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

**காலம் தாழ்த்தல்**

காலம் அறிதலுக்கும், காலம் தாழ்த்தலுக்கும் உள்ள வேறுபாட்டை நாம் உணர்தல் வேண்டும். தக்க காரணமின்றிச் செயலை ஒத்திவைத்தல் கேடுபயப்பதாகும். இதனால் கால விரயம் ஏற்படுவதோடு செயல்பாட்டின் தீவிரம் குறைந்து அச்செயல் தோல்வியடையவும் வாய்ப்பு ஏற்படுகிறது. இன்றே செய்ய இயல்வதை நாளைக்கென ஒத்திவைத்தல் ஆகாது.

நாளை நாளை எனப் படிப்பதை ஒத்திவைக்கும் மாணவன் தேர்வு நெருங்குகையில் பாடப்பளுவால் அவதியுறுவதும் தேர்வில் தோல்வியுறுவதும் உறுதி.

நண்பர் ஒருவர்க்குக் கடிதம் எழுதுவதாகட்டும் அல்லது தொலைபேசி மூலம் பிறருடன் தொடர்பு கொள்வதாகட்டும் அல்லது அலுவலகக் குறிப்பைத் தயார் செய்வதிலாகட்டும் நாம் காலம் தாழ்த்தலாகாது. சில செயல்களை காலத்தே ஆற்றாமையால் நகம்கொண்டு கிள்ளியெறியக் கூடியதைக் கோடரி கொண்டு நீக்கவேண்டிய நிலை வந்துவிடும்.

மேலும், காலத்தை ஈடு செய்தல் என்பதும் இயலாததாகும். உதாரணமாக "விமானம் முப்பது நிமிடங்கள் காலதாமதமாக டெல்லி வந்தடையும்" என்றும் "இந்த முப்பது நிமிடங்கள் மும்பையில் ஈடுகட்டப்படும்" என்றும் அறிவிப்பு வெளியாகும். உண்மையாதெனில் கடந்த காலம் கடந்ததுதான், அதை ஈடுசெய்வதென்பது யாராலும் இயலாது.

**காலம் தவறாமை**

இயற்கை நமக்கு அளிக்கும் போதனைகள் ஏராளம். சூரியனும், சந்திரனும் தங்கள் பணிகளில் தாமதிப்பதில்லை. இடைவிடா முறையான இயக்கத்தால் அவை இவ்வையகத்தை வாழ்விக்கின்றன.

யஜுர் வேதம் கூறுகிறது: ஓ மனிதனே!.. நீ வாழும் ஒவ்வொரு கணத்திலும் நன்மையே செய்ய விழைவாயாக. சோம்பியிராதே... எப்போதும் விழிப்பாயிரு. உன்னைச் சுற்றியுள்ள பொருட்கள் யாவும் தங்கள் எல்லைக்குள் இடைவிடாது இயங்கிக்கொண்டே உள்ளன.

காலம் விலைமதிப்பற்றது, சில கணங்கள் தாமதம் செய்வதால் நோயாளிக்கு உயிரிழப்பு ஏற்படுகிறது. ஒரு நிமிட தாமதத்தால் மாணவனுக்குத் தேர்வு எழுத அனுமதி மறுக்கப்படுகிறது. சில நிமிடங்கள் தாமதத்தால் பேருந்து அல்லது புகைவண்டியில் பயணிக்க இயலாமல் போய்விடுகிறது. நேரத்தை புறக்கணிப்பது நம்மை நாமே புறக்கணிப்பதற்கு சமம்.

இந்தியர்களாகிய நம்மிடம் காலத்தைப் பற்றிய விழிப்புணர்வு குறைந்து காணப்படுவதாலோ என்னவோ "இந்தியரின் காலந் தவறாமை" (Indian Punctuality) என்று நம்மைப் பிறநாட்டவர் கேலிபேசும் நிலை காணப்படுகிறது.

காலத்தை மதித்து வாழ்ந்து உயர்ந்தோர் வரலாற்றில் நிறைய பேருண்டு. மாவீரன் நெப்போலியன் காலந்தவறாமையைக் கைக்கொண்டவன். ஒருமுறை தளபதி ஒருவன் குறித்த நேரத்திற்குப் பத்து நிமிடங்கள் தாமதமாக அவனைச் சந்திக்க வந்தான். நெப்போலியன் அதற்கான காரணத்தை வினவியபோது தனது கடிகாரம் பத்து நிமிடங்கள் தாமதமாக இயங்குவதாகவும் அதுவே தனது கால தாமதத்திற்குக் காரணம் எனக்கூறினான். இதைக்கேட்ட

நெப்போலியன் ‘‘ஒன்று உன் கடிகாரத்தை மாற்று’’ ‘‘இன்றேல் நான் உன்னை மாற்ற வேண்டி வரும்’’ எனக் கடுமையாய் எச்சரித்தாகக் கூறுவர்.

மக்களில் பெரும்பான்மையோர் கடிகாரத்தை ஓர் அலங்கார ஆபரணமாகக் கருதுகிறார்களேயன்றி, காலந்தவறாது கடமையாற்றத் தூண்டும் கருவியாகக் கொள்ளவதில்லை. காந்தியடிகளின் காலந்தவறாமை அனைவரும் போற்றத்தக்கதாகும். இறுதிக் காலம்வரை அவர் இடுப்பில் அணிந்திருந்த கடிகாரம், காலம் சார்ந்த கடமைகளை அவருக்கு நினைவுபடுத்தும் கருவியாக விளங்கிற்று.

## நேர நிர்வாகம்

பெரும்பான்மையோரின் குறைபாடு யாதெனில் ‘‘போதிய நேரமில்லை’’ என்பதுதான். அறிஞர் பெர்னாட்ஷா, ‘‘காலத்தை மோசமாகப் பயன்படுத்துபவனே அது போதவில்லை எனக் குறை கூறுவான்’’ என்கிறார். காலத்தைச் சரிவர நிர்வகிப்பவன் தன் விதியின் எஜமானனாகிறான். நேரத்தைச் சரிவரப் பயன்படுத்துபவன்தான் இலட்சியங்களை எட்டுகிறான்.

‘‘நேர நிர்வாகம்’’ என்கிற திறன் ஒவ்வொருவரும் வளர்த்துக் கொள்ள வேண்டிய ஒன்றாகும். பீட்டர் ட்ரக்கர் என்ற மேலாண்மையியல் அறிஞர் ‘‘நேரம் என்பது அரிதான ஆதாரம். அதைச் சரிவர நிர்வகிக்கவில்லையெனில் வேறு எதையும் சரிவர நிர்வகிக்க இயலாது’’ என்கிறார்.

சான்றாக, நாம் அதிக நேரம் உறக்கத்திலோ அல்லது தொலைகட்சி பார்ப்பதிலோ செலவிடுகிறோமென்றால் அதைச் சிறிது குறைத்துக் கொள்ளலாம். புத்தகங்கள் படிப்பதில் அதிக நேரம் ஈடுபடலாம். பாடபுத்தகங்கள் மட்டுமின்றி உலக அறிவை விசாலமாக்கும் பல்துறை நூல்களைப் படிக்கலாம். இதனால் நமது ஆளுமைத் திறன் உயர்வதை உணரலாம். தொலைகாட்சிக்கு அடிமையாவதை விடுத்து அறிவார்ந்த சொற்பொழிவுகளைக் கேட்கலாம். சற்றே காற்றாட உலவி வரலாம். இச்செயல்கள் உடலுக்கும், மனதுக்கும் புத்துணர்ச்சி அளிக்க வல்லன.

அவசியமற்ற தொலைபேசி உரையாடல்களையும், தேவைக்கதிகமான பேச்சுக்களையும், வாதங்களையும் கைவிடுதல் அவசியம். பணியில் குறுக்கீடு செய்யும் நண்பர்களையும், உறவினர்களையும் அன்புடன் தவிர்க்கலாம். கவனத்துடன் கூடிய ஈடுபாடு யாரையும் அவர் துறையில் உயர்த்திவிடும். எடுத்துக் கொண்ட பணி யாதாயினும் நமக்கு நாமே காலக்கெடு விதித்துக்கொண்டு அக்கெடுவிற்குள் அப்பணிகளை முடிக்கமுயன்று அதில் வெற்றி பெறுவதும், நம்மைப் பிறரிடமிருந்து உயர்த்திக் காட்டும்.

நேரத்தைச் செம்மையுறப் பயன்படுத்தவேண்டிய நமது இலக்குகளை வகுத்துக்கொண்டு, அவற்றைக் குறுகிய கால மற்றும் நீண்ட கால இலக்குகளாகப் பகுத்துக்கொண்டு, செயலாற்ற வேண்டும். சான்றாக, ஆங்கிலச் சொற்களைக் கையாள்வதில் தேர்ச்சியுற வேண்டுமென்பதை ஒருவர் நீண்ட கால இலக்காகக் கொண்டிருந்தால், ஒவ்வொரு நாளும் இதற்கெனச் சிறிது நேரம் ஒதுக்கிச் செயல்படுதலைக் குறுகிய கால இலக்காக்கிக் கொள்ள வேண்டும். ஒவ்வொருநாளும் பத்து புதிய வார்த்தைகளை அகராதியிலிருந்தோ அல்லது வேறு ஏதும் நூல்களிலிருந்தோ தெரிவுசெய்து ஏடு ஒன்றில் பிழையின்றி எழுதி இச்சொற்களை மனதில் இருத்தி, ஒருங்கிணைத்து, பேசுவதிலோ அல்லது எழுதுவதிலோ பயன்படுத்தி வர ஆங்கிலச் சொற்களைக் கையாளும்திறன் காலப்போக்கில் கைவரப் பெறும். இதே உத்தியைப் பிற செயல்பாடுகளுக்கும் பின்பற்றலாம்.

முடிவுரையாக ஒவ்வொருவரும் குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை காலத் தணிக்கை செய்து கொள்வது அவசியமாகும். இன்னும் சொல்லப்போனால் ஒவ்வொரு இரவும் உறங்கப்போகும் முன் குறைந்தபட்சம் ஐந்து நிமிடங்களாவது அந்த நாள் எவ்விதம் கழிந்ததென்பதை ஆய்தல் நன்று. ஆய்ந்து, அடுத்து வரும் நாட்களில் எவ்வித மாறுதல்களை மேற்கொள்ளலாம் என முடிவு செய்து அந்நாட்களை மேலும் பயனுள்ளளவையாக்க முயலலாம்.

## உனக்குள் நீ

-ஏ.எஸ். சந்துரு குணசேகரன்.

ஒரு சமயம் விஜயநகரப் பேரரசுக்கு ஒரு ஞானி வந்தாராம். அவர் பல நல்ல அரிய கருத்துகள் கூறி அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தாராம். அவரின் திறமையையும், அறிவையும் கண்டு நாடே வியப்படைந்தது. கிருஷ்ணதேவராயரே அவரைப் பலவாறு பாராட்டிப் பரிசுகளைக் கொடுத்தாராம். ஆனால் அவரோ ஒருநாள் ஒரு பெரிய அதிர்ச்சியான கேள்வி ஒன்றைக் கேட்டார்.

அதாவது மூன்று மண்டை ஓடுகளை எடுத்துக் காட்டி, ''இதில் மிகவும் திறமைசாலி யார்'' எனக் கேட்டார். அதற்குப் பொருத்தமான பதிலை யார் சரியாகக் கூறுகிறார்களோ அவர்களுக்கு இதுநாள் வரையிலும் நான் வாங்கியுள்ள பரிசுப் பொருட்கள் அனைத்தையும் தருகிறேன். மேலும் சரியான பதிலைக் கூறுபவருக்கு இந்த உலகம் உயிருள்ள வரை நீங்காப் புகழ் அளித்துப் பெரிய ஒரு புத்திசாலியாகக் கருதும்'' என்றார்.

அரசவையில் ஒரே நிசப்தம் யாரும் வாயைத் திறக்கவில்லை. ஆனால் அரசரோ, எழுந்து வந்து கூடியிருந்த மந்திரியாரைக் கேட்டார். அவர்களுக்கும் தெரியாதது கண்டு கோபமடைந்தார். பின்னர் ஞானியிடம் இந்த கேள்விக்குப் பொருத்தமான மிகவும் சரியான

பதிலை நீங்கள் இன்னும் இரு தினங்களுக்குள் எதிர்பார்க்கலாம் என்று நம்பிக்கையுடன் கூறினார். இரண்டாம் நாள் அவர் யோசித்துக் கொண்டு இருக்கும்போது ஏன் நமது விகடகவியைக் கேட்டால் என்ன? என்று மனைவி அரசரிடம் சொன்னார். அவரைத்தான் நான் அரசவைக்கு வரக்கூடாது என்று சொல்லிப் பத்து நாட்கள் ஆகிறதே என்றார் மன்னர்.

“இதற்கு அவரைத் தவிர நல்ல பதிலை யாரும் கூறமாட்டார்கள். எனவே நீங்கள் அவர் இல்லத்திற்குச் சென்று நடந்ததைக் கூறி அழைத்து வாருங்கள்” என கூறினார்.

உடனே அரசர் புறப்பட்டுத் தெனாலிராமன் வீட்டை அடைந்தார். அரசரைக் கண்ட தெனாலிராமன் மாபெரும் மகிழ்ச்சி அடைந்தார்.

“அரசே தாங்கள் ஏன் இந்த அடியேனைச் சந்திக்க இவ்வளவு சிரமப்படவேண்டும். சொல்லி அனுப்பியிருந்தால் நானே வந்திருப்பேனே” எனக்கூற அரசர் “தெனாலிராமா நமது அரசுக்கு ஒரு பெரிய கௌரவப் பிரச்சினை வந்துள்ளது. அது தான் நானே உன்னைத் தேடி வந்துள்ளேன்” என்று கூறி வேதனைப்பட்டாராம்.

உடனே தெனாலிராமன் “என்னால்தான் இந்த நாட்டில் கௌரவப் பிரச்சினை தீர்த்து வைக்கமுடியும் என்று தாங்களே கருதி, அதன்பால் நம்பிக்கை வைத்து வீடு தேடி வந்துள்ளீர்கள். எனவே, தாங்கள் நிம்மதியாக அவைக்குத் திரும்புங்கள் கண்டிப்பாக நான் நாளை காலை வந்து உங்கள் பிரச்சினையைத் தீர்த்து வைப்பேன்” எனக் கூறி அனுப்பி வைத்தாராம்.

அடுத்த நாள் காலை அரசவையில் ஞானி, “அரசே தாங்கள் கூறியபடி இரண்டாம் நாள் வந்துவிட்டது. சொன்னபடி கேள்வியைச் சந்திக்கப்போகும் நபர் யார் என்று நான் தெரிந்துகொள்ளலாமா?” எனக் கேட்க, “ஓ தாராளமாக” எனக்கூறி தெனாலிராமனை அறிமுகப்படுத்தினார் அரசர். உடனே கேள்விகளைத் திரும்பவும் சொன்னார் ஞானி இந்த மூன்று மண்டை ஓடுகளில் யார் திறமைசாலியாக இருந்திருப்பார்கள் என்று கேட்டார்.

உடனே தெனாலிராமன் அந்த மூன்று மண்டை ஓடுகளையும் பார்த்தார். பின்னர் சிறிது நேரம் யோசித்துவிட்டு வளையக்கூடிய குச்சியை எடுத்துவரச் சொன்னார். ஒவ்வொரு மண்டை ஓட்டுக்குள்ளும் குச்சியைச் செலுத்திப் பார்த்தார். முதல் மண்டை ஓட்டைக் காட்டி இந்த மண்டை ஓட்டுக்குரியவர் வாழும்போது ஒரு அடிமுட்டாளாக இருந்திருப்பார். இரண்டாவது மண்டை ஓட்டுக்குரியவர் வாழும்போது அரைப் புத்திசாலியாக இருந்திருப்பார். மூன்றாவது மண்டை ஓட்டுக்குரியவர் அதிபுத்திசாலியாக இருந்திருப்பார்” எனக் கூறினார்.

ஞானி, எப்படி என்று விளக்கம் சொல் தெனாலிராமா என்றாராம். ஒரு மண்டை ஓட்டை எடுத்து அந்த வளையக்கூடிய குச்சியை ஒரு காது வழியாக விட்டாராம். அது மறுகாது வழியாக வந்தது. உடனே இவர் தனது வாழ்நாளில் கேட்பவை அனைத்தையும்

ஒருகாதில் வாங்கி மறு காதில் வெளியிட்டவர். எனவே இவர் மனதில் எதையும் பதித்துக் கொள்ளும் திறமை இல்லாதவர். எனவே இவர் முட்டாளாக வாழ்ந்திருப்பார், எனவும்.

இரண்டாவது மண்டை ஓட்டில் செலுத்திய குச்சி காது வழியாக வராமல் நேராக வாய்வழியாக வந்தது. இது சராசரியானது. அதாவது தான் வாழ்நாளில் கேட்டு அனுபவித்த அனைத்து விஷயங்களையும் வாய் வழியாக வெளியிடுவதன் மூலம் பிழைத்தவர்.

ஆனால் மூன்றாவது மண்டை ஓட்டுக் காதில் அந்தக் குச்சியை நுழைத்தால் அது மறு காது வழியாக வெளியேறாமல் நேரடியாக இதயத்திற்குள் செல்கிறது. எனவே இது புத்திசாலிமண்டை ஓடு. அதாவது இதுதான் வாழ்நாளில் காது வழியாக கேட்ட அனைத்து விஷயங்களையும், நிதானமாக இதயத்தில் பதித்து வைத்துக்கொண்டு அந்த விஷயத்தை வெளியிடத்தக்க தருணம். அதாவது சூழ்நிலை வரும்போது வெளிப்படுத்தி அனைவருக்கும் பயனுள்ள வகையில் வாழ்ந்திருப்பார் எனக் கூறினாராம்.

உடனே ஞானி வியந்துவிட்டாராம். இவன்தான் சரியான புத்திசாலி என்று பாராட்டிப் பரிசைக் கொடுத்து மன்னனுக்குத் தலை வணங்கிவிட்டுச் சென்றாராம்.

இங்கே நாம் பார்க்க வேண்டியது என்னவென்றால், அந்தக் கேள்விக்கு உண்டான பதிலை நான் சரியாகக் கூறிவிடுவேன் என்ற நம்பிக்கை எப்படி வந்தது? மன்னன் தன் வீட்டுக்கு வந்து கேள்வி என்னவென்று கூடக் கூறவில்லை. இருப்பினும், அவரால் எப்படி அவ்வளவு நம்பிக்கையுடன் கூற முடிந்தது. நான் நாளை காலை வந்து கௌரவத்தைக் காப்பாற்றுவேன் என்று கூற முடிந்தது.

காரணம் தன்னால் அனைத்தும் முடியும் என்ற எண்ணம் மேலும் யார் வீட்டிற்கும் விஜயம் செய்யாத மன்னர் வீடு தேடி வந்து “உன்னால்தான் முடியும்” என்று கூறிவிட்டுச் சென்ற மனநிலை அவரை வெகுநேரம் சிந்திக்க வைத்தது. அவருள் உள்ள அவரை (ஆத்மா) இயங்கச் செய்தது. மேலும் “உன்னால் முடியும்” என்று மன்னரே கருதிவிட்டார் என்ற கிளர்வு நிலை கொண்ட சிந்தனை இவை அனைத்தும், தெனாலிராமனுக்குத் “தன்னால் முடியும்” என்ற நம்பிக்கையை ஆழமாக விதைத்தன முடிவு வெற்றி.

நீங்கள் உங்களின் உறவினர் அல்லது நண்பனின் வீட்டிற்குத் திருவிழா அல்லது திருமணத்திற்கு ஒரு பஸ்ஸில் சென்று கொண்டிருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் பல்வேறு சிந்தனைகளோடு ரோட்ரோரங்களில் வேடிக்கை பார்த்துப் பயணித்துக் கொண்டு இருப்பீர்கள். நான் உங்களிடம் ஒன்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நீங்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டு போகும்போத சாலை ஓரங்களில் மலர் தரும் மரங்களையும் வழியில் நிற்கும் வானுயர்ந்த கட்டடங்களையும், பார்த்து விரிந்து காட்சி

அளிக்கும் பெரிய தொழிற்சாலைகள் மற்றும் உங்கள் வண்டியை முந்திச் செல்லும் கார், பைக், லாரி, ஜீப் வாகனங்களையும் கவனித்திருப்பீர்கள். இவை அனைத்தும் கண்டுபிடித்த பின் மனிதன் பயன்படுத்திக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் தோன்றியவை.

இங்கே நாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஒரு மனிதன் அதாவது ஆதிகால மனிதன். முதன்முதலில் மாட்டு வண்டியைப் பயன்படுத்திக்கொண்டிருந்த காலத்தில், குகைகளிலும், குடிசைகளிலும் வாழ்ந்துகொண்டிருந்த காலத்தில் மேலும் கிடைக்கின்ற பழம் மற்றும் உணவுகளைச் சாப்பிட்டுக் கொண்டிருந்த காலகட்டத்தில் மனிதன் தனது ஆறாவது அறிவான பகுத்தறிவைப் பயன்படுத்தாமல் இதுவே போதும் என்ற எண்ணத்தில் அவன் ஆசைப்படாமல் நம்பிக்கையை இழந்து வாழ்வை வழி நடத்தி இருந்திருந்தால் நாம் இப்படி உயர் ரக வாழ்க்கையில் “சுகத்தை” மட்டுமே மையமாகக் கொண்டு வாழ்க்கை நடத்தி அனுபவித்துக் கொண்டு இருக்க முடியுமா?

அதாவது நான் இங்கே கூறுவது என்னவென்றால் ஆதிகால மனிதன், மாட்டுவண்டியில் பயணித்துக்கொண்டிருந்த மனிதன் மாடுகள் இல்லாமலும் மழை மற்றும் வெயிலில் பாதிக்கப்படாமலும், வேகமாகப் போகக்கூடிய ஒரு வாகனம் இருந்தால் எப்படி இருக்கும் என ஒரு தனிப்பட்ட ஆதிகால மனிதன் சிந்தித்து நம்பிக்கையுடன் உழைத்தால்தான் இன்று நாம் இவ்வளவு விரைவாக ஓடக்கூடிய மோட்டார் வாகனங்களில் பயணம் செய்துகொண்டிருக்க முடிகிறது.

மேலும் குகைகளில் விலங்குகளோடு போராடிக்கொண்டும், மழை மற்றும் வெயிலில் பாதிக்கப்பட்டும், பூச்சி புழுக்களின் வேதனையாலும் அவதிப்பட்டான். ஆதிகால மனிதன் இன்று குளுகுளு காற்றுடன் பல அடுக்குமாடிக் கட்டடத்தில் விலங்குகளின் தாக்குதல்கள் இல்லாமல் கொசு மற்றும் பூச்சிகளின் தொல்லை இல்லாமல் நாம் தூங்கமுடியும் என்ற பகுத்தறிவான சிந்தனையில் உச்சநிலை நாகரிகத்தை அனுபவித்துக் கொண்டிருப்பதற்கு முயற்சியும் உழைப்புமே காரணம்.

கரடு முரடான பாதையில் பயணித்துக்கொண்டும் நடக்க சிரமப்பட்டுக்கொண்டும் இருந்த ஆதிகால மனிதன் நடக்கும் போது எந்தவித சிரமமுமின்றிப் பயணிக்கத்தக்க வகையில் சாலையோரங்களில் மரங்களும், குடிநீர் நிலையங்களும் இருந்தால் எப்படி இருக்கும்? என்று யோசித்த மனிதன் அதீத நம்பிக்கை வைத்து உழைத்ததால்தான் இன்று நாம் நாகரீக உச்சத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

“மனிதன் சிந்திக்கத் தெரிந்த இயந்திரம்” எந்த ஒரு இயந்திரத்தையும் புதியதாக வாங்கி அதை ஒரு வருடம் இயக்காமல் வைத்துவிட்டுத் திரும்ப எடுத்துப் பயன்படுத்தும்

போது அது சரியாக இயங்குமா? என்றால் அது கண்டிப்பாகச் சரியாக இயங்காது. காரணம் அதன் பாகங்கள் அனைத்தும் உலர்ந்து அதன் நிலையான தன்மையை இழந்திருக்கும். அதனை இயங்க நாம் சிரமப்பட வேண்டிய சூழ்நிலை இருக்கும்.

அதைப்போலத்தான் மனிதனின் மூளையும். மனிதன் சிந்திக்கத் தெரிந்த இயந்திரம். எனவே மனித உடலில் உள்ள உறுப்புகளின் இயக்கம் மற்றும் கட்டுப்பாடு இவற்றிற்கு தலைமைச் செயலகமாக விளங்குவது மூளை. எனவே நாம் மூளையைப் பயன்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். நாம் பயன்படுத்தத் தவறினால் அது இயந்திரத்தைப்போலச் செயலை இழக்கநேரிடும் என்று கூடச் சொல்லலாம்.

அதன் செயல் என்னவென்றால் சிந்திப்பது. எனவே தமது முன்னோர்களின் சிந்தனைகளிலும் அதன்பால் ஏற்பட்ட நம்பிக்கையிலும், நாம் கவனம் செலுத்தி நேசித்து, அனுபவித்து மகிழ்ச்சியாக இருக்க நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

மேலும் நாம் தொடர்ந்து சிந்தித்து நம்பிக்கையுடன் உழைத்தால் தான் இந்த உலகை நிரந்தரமாக நாகரிகச் சொர்க்கமாக மாற்றலாம். எனவே அந்த முயற்சி வேறு யாரிடமும் இல்லை, உங்களிடம்தான் உள்ளது. எனவே உனக்குள் இருக்கும் உன்னை ஆத்மாவை இயக்கு.

## நேர்வழியில் செல்லும் மனப்போக்கு

## (Positive attitude)

-பசுமைக்குமார்

மனம் ஒரு குரங்கு என்பார்கள் ஓரிடத்தில் நில்லாமல் கிளைக்குக் கிளை மட்டுமல்ல, மரத்துக்கு மரம் தாவக்கூடியது குரங்கு. அதுபோலவே ஓரிடத்தில் நிலைத்து நிற்காமல் இடம் மாறிக்கொண்டே இருக்கும் நமது மனத்தின் ஓட்டம். மன ஓட்டத்தை அப்படியே விட்டுவிட்டால் அது பயனற்ற பயணம் ஆகிவிடும். கட்டுப்பாடற்று கரைபுரண்டோடி கடலில் கலக்கும் காட்டாற்று வெள்ளமாகவும் நமது மனப்போக்கு இருந்துவிடக் கூடாது.

நமது மனப்போக்கு நேர்வழியிலும் செல்லலாம். எதிர்வழியிலும் செல்லலாம். அவற்றை எந்தத் திசை வழியில் செலுத்துவது என்பதை நாம் சரியாக முடிவு எடுக்க வேண்டும். மனம்போன போக்கில் போய்விடாமல் மனத்தின் செல்வழியைத் திருப்பி நேரான பாதைக்கு கொண்டுவர வேண்டும். இந்த மனப்போக்கு நல்ல அம்சங்களைக் கொண்டிருந்தால் வாழ்க்கையைப் பற்றிய தனது பார்வையிலும் நல்ல அம்சங்கள் மேலோங்கி இருக்கும்.

வாழ்க்கையைப் பற்றிய பார்வை ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக இருக்கும். அந்தப் பார்வையில் நல்ல அம்சங்கள் (Positive aspects) நிறைய இருக்க வேண்டும் என்பதே முக்கியமானது.

இப்படி நமது மனப்போக்கை நல்ல அம்சங்களைக் கொண்ட மனப்போக்காக மாற்றி அமைத்துக் கொள்ள முடியுமா? நமது மனப்போக்கின் ஆரோக்கிய வாழ்விற்கு ஊறு செய்யும் நோய்க்கூறுகளை அப்புறப்படுத்திவிட முடியுமா?

நமது மனப்போக்குகளை உருவாக்கக்கூடிய காரணிகள் பல இருக்கின்றன. நாம் பிறந்து வளர்ந்து வரும் காலங்களில் நமது மனப்போக்குகள் உருவெடுக்கின்றன. நமது மனப்போக்கைத் தீர்மானிக்கக்கூடிய முக்கியமான மூன்று காரணிகள் இருக்கின்றன.

1. சுற்றுச்சூழல் 2. அனுபவம் 3. கல்வி இம்மூன்று காரணிகளையும் சற்று விரிவாக அலசி ஆராயலாம்.

**சுற்றுச் சூழல்**: இதில் வீடு, பள்ளி, பணிசெய்யும் இடம், தகவல் தொடர்பு சாதனங்கள், பண்பாட்டுப் பின்னணி, மதப்பின்னணி, மரபு மற்றும் நம்பிக்கைகள், சமூகச் சூழல், அரசியல் சூழல் என பலவும் அடங்கியுள்ளன.

**வீடு**: வீட்டில் இருப்பவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான குண நலன்களையும், வாழ்க்கையைப் பற்றிய கண்ணோட்டங்களையும் கொண்டிருப்பர். அவை ஒருவரை ஒருவர் பாதிக்கும்.

அந்த வீட்டில் வளரும் ஒரு குழந்தையின் மனப் போக்கைத் தீர்மானிப்பதில் வீட்டுச் சூழல் முக்கியமானது. வளர்ந்து வருகின்ற அந்தக் குழந்தையின் மனத்தின் அன்றாடம் கண்ணில்படுகிற வாழ்க்கை நிகழ்வுகள் அல்லது எதிர் கொள்கின்ற வாழ்க்கை நிகழ்வுகள் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அந்தத் தாக்கம் நேர்மறையானதாகவும் இருக்கலாம் எதிர்மறையானதாகவும் இருக்கலாம்.

ஒரு விவசாயி தனது சின்னஞ்சிறு மகனிடம் நீ கூலி வேலைக்குப் போனாலும் உன் மூலம் கிடைக்கிற வருமானம் குடும்பத்துக்குப் பயன்படும் என்றும், நீ படித்துக் கிழித்துப் பெரிய கலெக்டர் ஆகப் போகிறாயா என்றும் நிறைய படிச்சவனுக்கே வேலை இல்லை. நீ வேலைக்குப் போய் எங்களைக் காப்பாற்றப் போகிறாயா? என்றும் அடிக்கடி கூறுகிறான்.

தந்தையின் இந்தக் கூற்றுகள் நிச்சயம் மகனைப் பாதிக்கும். கல்வி கற்றலின் மீது அவநம்பிக்கையை ஏற்படுத்தும். அதனால் கற்றல் மீதான ஆர்வம் குறைந்துவிடும். உடல் உழைப்பின் மூலம் வருமானத்தைத் தேடிக்கொள்ளலாம் என்ற எண்ணம் தோன்றிவிடும்.

படித்துப் பெரிய ஆளாக முடியாது என்று அடிக்கடி சுட்டிக்காட்டும் தந்தையின் கருத்து மகனைப் பாதித்தால் எவ்வளவு படித்தாலும் ஏதேனும் சாதாரண வேலைதான் கிடைக்கும் என்ற கருத்து மனத்தில் பதிந்துவிடலாம். அப்படி ஒரு வேலைக்குப் போய் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு பெற்றோரைக் காப்பாற்ற முடியாது என்ற கருத்து ஏற்பட்டுவிடலாம். இவை அந்தச் சிறுவனின் மனத்தில் எதிர்மறை பார்வையை ஏற்படுத்தும். வாழ்க்கை அவனுக்கு அச்சுறுத்தலான விஷயமாகிவிடும்.

அதே சமயம் "அப்பா சொல்வதையே நினைச்சுகிட்டு இருக்காதே, நீ படித்து முடித்தால் நல்ல வாழ்க்கையை அமைத்துக்கொள்ளலாம். படிப்பு இருந்தால் எப்படியாவது வேலை வாங்கிவிடலாம். வேலைக்கு நீ சென்றால் கிடைக்கிற வருமானத்தில் நாம் சிக்கனமாக வாழ்ந்து விடலாம்" என்று தன் மகனிடம் தன்னம்பிக்கை ஏற்படுத்தும் தாய் இருந்தால் அப்போது அந்த மகனின் மனநிலையில் நேர்மறையான அம்சங்கள் பூத்துக் குலுங்கும். வீட்டில் இருப்பவர்களின் மனப்போக்குகள் நடவடிக்கைகள் யாவும் அந்த வீட்டுச் சூழலில் வசிப்பவர்களிடம் ஓரளவு செல்வாக்கைச் செலுத்தும்.

**பள்ளிக்கூடம்**: ஒருவரது மனப்போக்கை உருவாக்கி வளர்ப்பதில் பள்ளிச்சூழலும் முக்கிய அம்சமாக திகழ்கிறது. பள்ளிக்கூடத்தில் ஒவ்வொரு மாணவனும் தன் வயதை ஒத்த மாணவர்கள் பலருடன் பழகும் சூழல் காணப்படுகிறது. ஒத்த வயதை உடையவர்களின் (Peer Group) எண்ணமும் செயலும் ஒருவர் மீது ஒருவர் தாக்கத்தை செலுத்தக்கூடியனவாய் இருக்கின்றன.

ஒத்த வயதுடைய மாணவர்களிடம் தீய பழக்கங்கள், தீய சிந்தனைகள் காணப்பட்டால் அவற்றின் பாதிப்பு அவர்களோடு தொடர்புடைய மாணவர்களிடமும் செல்வாக்குச் செலுத்தும். தவறு செய்தாலும் அது குறித்த வருத்தம் ஏதுமின்றி நடந்துகொள்வது எனப் பல எதிர்மறை குணநலன்கள் வயது ஒத்த குழுவினரைப் பாதிக்கக் கூடியவை.

அதே சமயம் படிப்பது, விளையாட்டில் சிறந்து விளங்குவது, தன்னம்பிக்கையுடன் செயல்படுவது, வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைய கனவு காண்பது என நல்ல அம்சங்கள் ஒத்த வயதினரிடம் காணப்பட்டால் அவை நேர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்திவிடும்.

வயது ஒத்த குழுவினர் ஒருவருக்கொருவர் கருத்துகளை, நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்வார்கள். எனவே இந்தச் சூழலும் ஒருவனது மனப்போக்கை உருவாக்குவதில் ஒரு காரணியாக விளங்குகிறது.

**பணிச்சூழல்:** ஒருவர் பணி செய்கின்ற இடத்தில் அவரது மனப்போக்கைப் பாதிக்கிற கருத்துகள், விமர்சனங்கள், நிகழ்வுகளை எதிர்கொள்ளும் சூழ்நிலை இருக்கும். ஒருவரது

மேலாளர் அல்லது மேற்பார்வையாளர் அவருக்கு ஆதரவாகவும் நடந்துகொள்ளலாம். எதிராகவும் நடந்துகொள்ளலாம். ஒருவரது பணியில் திருப்தி கொள்ளாமல் தொடர்ந்து குறை சொல்பவராக அவரது மேற்பார்வையாளரோ மேலாளரோ இருக்கலாம். ஒருவரைத் தட்டிக்கொடுத்து வேலை வாங்கும் சூழலும் இருக்கும். திட்டித்திட்டி வேலை வாங்கும் சூழலும் இருக்கும். பணியாளரின் திறமைக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கவும் செய்யும், கிடைக்காமலும் போகும். இவை யாவும் அந்தப் பணியாளரின் மனநிலையில் செல்வாக்குச் செலுத்தும். அந்தச் செல்வாக்கு நல்ல அம்சங்கள் கொண்டதாகவோ தீய அம்சங்கள் கொண்டதாகவோ இருக்கலாம். எப்படி இருந்தாலும் பணியாளரின் மனப்போக்கை உருவாக்குவதில் அவையும் காரணியாகத் திகழும்.

**ஊடகம்:** பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் இணைய தளம் போன்ற ஊடகங்கள் வெளியிடும் கருத்துகள் வாசகரை, நேயரை, பயன்படுத்துபவர்களைப் பாதிக்கும். அவர்களுக்கு வாழ்க்கை பற்றிய கண்ணோட்டங்களை ஏற்படுத்தும்.

வாழ்க்கை மேம்பாடடையும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தலாம். வாழ நினைத்தால் வாழலாம், வழியா இல்லை பூமியில் என்று தன்னம்பிக்கை தரலாம். துயரங்கள் சூழ்ந்த வாழ்க்கையில் நிம்மதிக்கு வழியே இல்லை என்ற கருத்தை விதைக்கலாம்.

ஊடகங்களில் ஒளிபரப்பப்படும் செய்திகள், காட்சிகள், நாடகங்கள் அவற்றின் நேயர்களுக்கு வாழ்க்கையைப் பற்றிய புரிதலைச் சொல்லிக் கொடுக்கின்றன. அவை கூட நேர்மறையாகவோ, எதிர்மறையாகவோ இருக்கலாம். எனவே வாழ்க்கையைப் பற்றிய மனப்போக்குகளை உருவாக்குவதில் அவை முக்கியப் பங்கு வகிக்கின்றன.

மதம், பண்பாடு, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் போன்றவை மனப்போக்கில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

மதப்பிடிப்பு கொண்டவர்களுக்கு மதம் சார்ந்த வாழ்க்கை கண்ணோட்டங்கள் உருப்பெறுகின்றன. மதக் கருத்துகள் ஒருவரது மனப்போக்கில் கலந்து நிற்கின்றன.

அவரவர் வாழும் பண்பாட்டுச் சூழலுக்கு ஏற்ப மனப் போக்குகளும் அமைகின்றன. பாரம்பரிய பழக்கவழக்கங்கள் ஒருவரது மனப்போக்கில் ஓரளவு செல்வாக்குச் செலுத்துகின்றன.

**சமூகச் சூழல்:** மனிதர்கள் சமூகமாகக் கூடி வாழும் இயல்புடையவர்கள். அவர்கள் விரும்பினாலும் சமுதாயத்துக்கு வெளியே வாழ முடியாது. மனிதனைச் சமூக விலங்கு என்று மார்க்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

சமூக விலங்குகளான மனிதர்கள் தாங்கள் கூடிவாழும் சமூகச் சூழ்நிலைகளின் தாக்கம் பெறுகிறார்கள்.

சமூகச் சூழலில் நல்ல அம்சங்களும், தீய அம்சங்களும் நிறைந்திருக்கின்றன. அநீதியும், அநீதி எதிர்ப்புச் சூழலும் காணப்படுகிறது. எண்ணற்ற சமூகக் கொடுமைகளும் அவற்றை எதிர்க்கும் போக்குகளும் நிலவுகின்றன. இவை யாவும் ஒருவரது வளர்ச்சிப் போக்கில் அவரது சிந்தனையில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

ஊரோடு ஒத்து போகும் மனப்பான்மையும் ஏற்படலாம். ஊரை எதிர்த்து நிற்கும் மனப்பான்மையும் ஒருவருக்கு ஏற்படலாம். சமூகச்சூழல் ஒருவர் மீது ஏற்படுத்தும் தாக்கத்திற்கு ஏற்ப அவை அமைகின்றன. சமூகச் சூழ்நிலையானது நேர்மறையான மனப்போக்கையும் ஏற்படுத்தலாம், எதிர்மறையான மனப்போக்கையும் ஏற்படுத்தலாம்.

**அரசியல் சூழல்:** நாட்டில் நிலவும் அரசியல் சூழல் ஒருவரது மனப்போக்கில் பாதிப்பு ஏற்படுத்தலாம். ஆதிக்கம் செலுத்தும் அரசியல் கட்சியின் அரசியல் பார்வை அரசியல் கோட்பாடு அவை எடுத்து முன் வைக்கும் அரசியல் கருத்துகள் ஒருவரது மனப்போக்கைத் தீர்மானிக்கும் காரணிகளில் ஒன்றாக அமைகிறது. அதே சமயம் ஆதிக்கம் செய்யும் அரசியல் கட்சிக்கு எதிராக நடைபெறும் அரசியலும் பிறர் மீது செல்வாக்குச் செலுத்தும் ஒட்டுமொத்த அரசியல் சூழல் தனக்குத் தொடர்பில்லாதது என்று நினைத்து எவரும் ஒதுங்கி கொள்ள முடியாது. அப்படி ஒதுங்கி இருக்க நினைத்தாலும் அரசியல் சூழலில் தாக்கம் அவர்மீது படியாமல் இருக்காது.

ஆக, வீடு, பள்ளி, பணியிடம், ஊடகம், மதக் கலாச்சராப் பின்னணி, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், சமூகச் சூழல், அரசியல் சூழல் உள்ளிட்ட சுற்றுச் சூழலானது ஒருவரது மனப்போக்கைத் தீர்மானிக்கும் காரணிகளில் ஒன்றாகும்.

தமது மனப்போக்கைத் தீர்மானிக்கின்ற இன்னொரு காரணி அனுபவம் (Experience). ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கையில் இனிப்பான மற்றும் கசப்பான அனுபவங்களைப் பெறுகின்றனர். அந்த அனுபவத்திற்கு ஏற்ப நமது நடத்தைப் பண்புகளும் மாறுபடுகின்றன. சக மனிதர்களிடம் நாம் பழகும்போது ஏற்படும் அனுபவங்கள் வாழ்க்கையில் நான் எதிர்கொள்ளும் நிகழ்வுகளுக்கு ஏற்ப நமது போக்குகளும் மாறுகின்றன. ஏனெனில் அனுபவங்களில் இருந்து படிப்பினைகள் கிடைக்கின்றன. அவை நம்மை வழிநடத்துவதால் மீண்டும் ஒரு கசப்பான அனுபவத்தைத் தவிர்க்கவே முயற்சி செய்வோம். இனிமையான அனுபவங்களை நாம் பெற்றிருந்தால் அதற்கேற்ப நமது நடத்தைப் பணியும் பளிச்சிடும்.

ஆக அனுபவங்கள் தரும் படிப்பினைகள் நமது மனப்போக்கைத் தீர்மானிக்கின்ற காரணிகளில் ஒன்றாக இருக்கின்றது. நமது மனப்போக்கை உருவாக்குவதில் மற்றொரு முக்கிய காரணியாகத் திகழ்வது கல்வி. முறைசார் மற்றும் முறைசாராக் கல்வி உட்பட

அதன் விரிவான அர்த்தத்தில் அறிவாற்றல் பெறுவதை இங்கே குறிப்பிட வேண்டும். இந்த அறிவாற்றல் நமது மனப்போக்கைத் தீர்மானிக்கும்.

**நேர்வழியிலான மனப்போக்கு தரும் நன்மைகள்**

- சமுதாயத்திற்குப் பயனுள்ள மனிதராக அவர் செயல்பட உதவும்.
- மனப் பதற்றங்களைக் குறைக்கும்.
- பணி செய்யும் இடத்தில் சக நண்பர்களோடும், ஊழியர்களோடும், முதலாளிகளோடும், வாடிக்கையாளரோடும் நல்லுறவு கொள்ள உதவி செய்யும் நேர்வழி மனப்போக்கு.
- உங்கள் மீதான நம்பகத்தன்மையை அதிகரித்தல்
- உங்களைச் சுற்றிக் காணப்படும் சூழ்நிலை உங்கள் செயல்பாட்டுக்கு இணக்கமாக இருக்கும்.
- ஒருவரது பண்பு நலனைச் செழுமைப்படுத்தும்.
- பிரச்சினைகளைத் தீர்க்க உதவும்.
- குழுவாகச் செயல்படத் துணை நிற்கும்.
- தனித் திறமையை உயர்த்தும்.
- உற்பத்தித் திறனைப் பெருக்கும்.
- இலாபத்தைத் தரும்
- நிறைய நண்பர்களைப் பெற்றுத் தரும்.
- குடும்பத்தில் நல்ல சூழல் நிலவத் துணை நிற்கும்
- நல்ல மனப்போக்குக் கொண்டவரிடம் திருப்தி உணர்வு இருக்கும்.

இன்னும் பல தன்மைகளைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

**எதிர்மறை மனப்போக்கு இருந்தால்...**

வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்றே அனைவரும் விரும்புகின்றனர். பல தடைகளை அரசியல், பொருளாதார, சமூக தனிமனித தடைகளைத் தாண்டி முன்னேற வேண்டியுள்ளது. ஆனால் ஒரு மனிதன் தனது முன்னேற்றத்துக்குத்தானே தடையாக இருந்துவிடக்கூடாது.

எதிர்மறையான மனப்போக்குக் கொண்டவர்களின் நட்பு வட்டம் மிகவும் சுருங்கிவிடும். வேலையில் இருந்தாலும் அவரது இயல்பே அவருக்குச் சிக்கலை உண்டாக்கிவிடும். அதனால் சொந்த வேலையைக் கூட காப்பாற்றிக்கொள்ள முடியாது. எந்தச் செயலிலும் திருப்தி உணர்வு ஏற்படாது. எல்லா விஷயங்களிலும் அதிருப்தி மேலோங்கி இருக்கும். மனக்கசப்புக்குக் குறைவே இருக்காது. ஏன் வாழ்கிறோம், எதற்காக வாழ்கிறோம் என்ற புரிதல் இன்றி வாழ்க்கை 'அர்த்தமற்றுக் கிடப்பதாக நினைப்பார்கள். இத்தகைய எதிர்மறை மனப்போக்குக் கொண்டவர்களுக்குத் திருமணமும் பிரச்சினையாகும். இதர உறவுகளிலும் சிக்கல் மிகுந்திருக்கும். இவர்கள் மனப்பதற்றம், மன அழுத்தத்திற்கு உள்ளாவதால் உடல் நலிவு ஏற்படும். இவர்கள் வீட்டிலிருந்தாலும் வெளியில் இருந்தாலும் வேலை செய்யும் இடத்தில் இருந்தாலும் எதிர்மறை சூழ்நிலையை உருவாக்கிவிடுவர்; பாதகமான சூழலை அவர்களே உருவாக்கிவிடுவார்கள். தான் வாழும் சமுதாயத்திற்கே அவர்கள் பாரமாகிவிடுவார்கள். அது மட்டுமன்றி தன்னைச் சுற்றி இருப்பவர்களிடமும் அடுத்த தலைமுறையினரிடமும் எதிர்மறைவான மனப்போக்குகளை, நடத்தைப் பண்புகளை உருவாக்கிவிடுவார்கள்.

எனவே எதிர்மறைவான மனப்போக்கை நம்மிடமிருந்து விரட்டி அடிக்க வேண்டும்.

**விரட்டி அடிப்பது சுலபமா?**

ஒரு செயல் அல்லது சிந்தனை நமக்குத் தீங்கு செய்யும் என்பதை நாமே உணர்ந்துகொண்டாலும் பிறர் சொல்ல அதைப் புரிந்து கொண்டாலும் அந்தச் செயலை அல்லது சிந்தனையை நாம் உடனடியாகக் கைவிடுவதில்லை. காரணம், நமது மனம் அதுவே தடையாக நிற்கிறது. குடிப்பது தீமை, புகை பிடிப்பது உடல்நடத்திற்குக் கேடு என்பது தெரிந்திருந்தும் தங்கள் மனநிலையை மாற்றிக் கொள்ளாதவர்களும் நம்மைச் சுற்றிலும் இருக்கிறார்கள்.

மாற்றத்தை நமது சிந்தனையிலும் செயலிலும் கொண்டு வருவது நன்மையைத் தரும் என்றால் நம்மை மாற்றிக்கொள்ளத் தயங்கக் கூடாது. நம்மை மாற்றிக்கொள்ளும் போது அது வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும்.

போதைக்கு அடிமையானவர்போல நமது மனநிலையில் காணப்படும் எதிர்மறைப் போக்குகளுக்கு நாம் அடிமையாகிவிடக்கூடாது. அப்படி அடிமையாகி விடுகிறவர்கள், அவ்வளவு சுலபமாக தங்கள் எதிர்மறை மனப்போக்கை விரட்டி அடிக்கமாட்டார்கள். எதிர்மறை மனப்போக்கு ஏற்படுத்தும் தீய விளைவுகளுடனேயே வாழத் தயாராகிவிடுவார்கள். எனவே எதிர்மறை மனப்போக்கை விரட்டி அடிக்க நாம் தயாராக வேண்டும். இது சாத்தியமா என்ற கேள்வி எழலாம். சாத்தியமே முயற்சியில் ஈடுபட்டால் நமது மனநிலையை நாம் மாற்றிக்கொள்ள முடியும்.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்ற பழமொழி உண்டு. ஆரம்ப ஆண்டுகளிலேயே குழந்தைகளிடம் நல்ல மனநிலையை உருவாக்க வேண்டும். நல்ல முறையில் அவர்கள் சிந்திக்கவும், செயல்படவும் நல்ல செயல்களையே எப்போதும் செய்து வரவும் கற்பிக்க வேண்டும். இல்லாவிட்டால் தும்பைவிட்டு வாலைப் பிடித்த கதையாகிவிடும். தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பார்கள். சிறுவயதிலேயே நேர்வழியிலான மனப்போக்கு மனநிலை குழந்தைகளிடம் உருப்பெற்றிட பெற்றோர் உதவிட வேண்டும்.

மனப்போக்கு நல்லவிதமாக இருக்க வேண்டும் என்ற ஆர்வம் முதலில் வரவேண்டும். நல்ல மனநிலையை உருவாக்குவதற்கான கோட்பாடுகள் பற்றியும் வழிமுறைகள் பற்றியும் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்.

நமது மனப்போக்குகளைத் தீர்மானிப்பதில் சுற்றுச்சூழல், அனுபவம், கல்வி ஆகியவை காரணம் என்றாலும் நமது மனப்போக்கு நேர்மறையாகவோ, எதிர்மறையாகவோ இருப்பதற்கு நாம்தான் பொறுப்பு. நமது தவறுகளை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். பிறர் மீது எதற்கெடுத்தாலும் குற்றம் சுமத்திக்கொண்டிருக்கக் கூடாது. நாம் யார், நமது பலம் என்ன? பலவீனம் என்ன என்பதையெல்லாம் யோசித்துப் பார்த்து நமது நடத்தைப் பண்புகளுக்கும், செயல்களுக்கும் நாம்தான் காரணம் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

எதிர்மறை மனப்போக்குக் கொண்டவர்கள் பெற்றோரை, ஆசிரியரை, நண்பர்களை, மனைவியை, குழந்தைகளைக் குற்றம் சொல்லிக்கொண்டிருப்பார்கள். அரசின்மீது குற்றம் சுமத்துவது கூட ஆக்கப்பூர்வமான *(Positive)* விமர்சனமாக இருக்க வேண்டும்.

நமது மனப்போக்கு எதிர்மறை மனப்போக்காக இருந்தாலும் அதன் செவ்வழியை மாற்றி நேர்வழியில் செலுத்த முடியும் என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். உங்கள் யோசனைகள் செயல்கள், நடத்தைப் பண்புகள் எதிர்காலக் கனவுகள் யாவும் ஆக்கப்பூர்வமானதாகவும் முன்னேற்றத்திற்கு இட்டுச் செல்வதாகவும் இருக்க வேண்டும்.

நேர்மையாக இருத்தல், உண்மையாக நடந்துகொள்ளுதல் நல்லவராக இருத்தல் ஆகியவை உங்கள் மனநிலையை நேர்வழியில் நடத்திச் செல்லும். நமது மனப்போக்கு நேர்வழியில் செல்ல சில வழிமுறைகளைச் செயல்படுத்த வேண்டும்.

**வாழ்க்கையின் சிறந்த அம்சங்களின் மீது கவனத்தைச் செலுத்துதல்**

ஒரு தனி மனிதர் அல்லது ஒரு சூழ்நிலையில் காணப்படும் நல்ல விஷயங்களை நமது கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு நபரிடமும் ஒவ்வொரு சூழலில் குற்றம் கண்டுபிடித்துக் கொண்டிராமல் நல்ல அம்சங்களைத் திரட்டுவதற்குத் தயாராக வேண்டும்.

நாம் நமது குழந்தைப் பருவத்திலிருந்தே நம்மீது உள்ள குற்றங்குறைகளை உணர்வதற்கு அவற்றைக் களைந்து நீக்குவதற்குப் பதிலாக பிறர்மீது குற்றம் காண்பதும், பிறர்மீது பழிபோடுவதும் நமது வழக்கமாகிவிட்டதால், பிள்ளைகள் பெரியவர்களாக வளர்ந்த பிறகும் பிறரிடம் காணப்படும் நல்ல அம்சங்களில் கவனம் செலுத்துவதை விட்டுவிட்டு, குறை காண்பதிலேயே பொழுதைச் செலவிடுவார்கள். எனவே இதிலிருந்து விடுபட்டு, ஒவ்வொரு தனிநபரிடமும் காணப்படும் நல்ல அம்சங்களை உள்வாங்கினால் ஒவ்வொரு சூழலிலும் தென்படும் நல்ல விஷயங்களை உள்வாங்கினால் வாழ்க்கையின் சிறந்த அம்சங்களின் மீது கவனத்தைச் செலுத்தும் மனப்போக்கு வளரும். அது நல்ல மனப்போக்கு அல்லது நேர்வழியிலான மனப்போக்காக வளர்ச்சி அடையும்.

இப்படி நல்ல அம்சங்களின் மீது நமது கவனத்தைச் செலுத்தும் போது, குறைகளைக் கவனிக்கத் தவறவும் கூடாது. கண்டுகொள்ளாமல் இருந்து விடவும் கூடாது என்பதை ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.

எதிர்மறை மனப்போக்குக் கொண்டவர்கள் எப்போதும் எதிர் தரப்பில் இருந்தபடி தங்கள் கருத்தைப் பேசிக் கொண்டிருப்பார்கள். எதிர்மறை அம்சங்களே அதில் மேலோங்கி இருக்கும். அடுத்தவர்களைத் திட்டுவது குறைகூறுவது என்பதே அவர்களது வாடிக்கையாக இருக்கும். யாரைப் பற்றிச் சொன்னாலும் அவர்கள் குறை கண்டுபிடித்து விடுவார்கள்; எந்தச் சூழ்நிலையை எதிர்கொள்ள வேண்டி இருந்தாலும் அந்தச் சூழலில் குறை கண்டுபிடிக்கத் தொடங்கி விடுவார்கள். இப்படிப்பட்ட மனப்போக்குக் கொண்டவர்களை நம் வீட்டிலும் காணலாம். நட்பு வட்டத்திலும் காணலாம். அலுவலகத்திலும் காணலாம். இவர்கள் எதிர்மறை விஷயங்களையே பிறரிடம் பரப்பிக் கொண்டிருப்பார்கள்.

இப்படி எதிர்மறை மனப்போக்குக் கொண்டவர்கள் அவநம்பிக்கை வாதிகளாய் (Pessimists) இருப்வாகள். இவர்கள் எப்போதும் தீமையே ஏற்படும் என்று எதிர்பாக்கும் சுபாவம் கொண்டவர்களாக இருப்பார்கள். நன்மையில் இவர்களுக்கு நம்பிக்கை இருக்காது. எல்லாமே கெட்டது என நினைக்கும் மனப்பான்மை இவர்களிடம் காணப்படும்.

தீமையையே எதிர்பார்க்கும் இவர்கள் எப்போதும் மகிழ்ச்சியற்றுக் காணப்படுவார்கள். நல்லதைக்கூட கெட்டதாக நினைத்துக் கொள்வார்கள். அடுத்தவர் மீது குற்றஞ் சுமத்தியே காலத்தைக் கழித்துவிடுவார்கள். ஒளியை நேசிக்கத் தெரியாத இவர்கள் மனம் இருளையே யாசிக்கும். வாழ்க்கைப் பாதை கோணல் மாணலாய் இருப்பதாகவே நினைப்பார்கள். தன் உடலுக்கு ஏதாவது நோய் எப்போது வேண்டுமானாலும் வந்துவிடக்கூடும் என எண்ணும் இந்த அவநம்பிக்கையாளர்கள் தங்கள் உடல் ஆரோக்கியமாய் இருந்தபோதிலும் அதைப் பற்றி மகிழ்ச்சி அடையமாட்டார்கள்.

அவர்கள் மோசமானதை எதிர்பார்ப்பது மட்டுமின்றி, எது நடந்தாலும் அதை மேலும் மோசமாக்கிவிடுவார்கள்.

தங்களுக்குக் கிடைத்த நன்மதிப்புகளைப் பாராட்டுகளைப் பற்றி எண்ணிப் பாராமல், தங்களுக்கு ஏற்பட்ட தொல்லைகளையே எப்போதும் நினைத்துக் கொண்டிருப்பார்கள்.

**நம்பிக்கைவாதிகள் (Optimist) நன்மையை எதிர்பார்ப்பவர்கள் எப்படி இருப்பார்கள்?**

- ♦ மன அமைதியை எவரும் சீர்குலைக்காத அளவுக்கு மன வலியை மிக்கவர்களாக இருப்பார்கள்.
- ♦ யாரைச் சந்தித்தாலும் ஆரோக்கியம், ஆனந்தம், ஐஸ்வர்யம் பற்றிப் பேசுவாரா்கள்.
- ♦ இவர்களது நண்பர்கள் தங்களிடம் உள்ள நல்ல அம்சத்தை உணர்வதற்குக் காரணமாய் இருப்பார்கள்.
- ♦ எந்த ஒரு விஷயத்திலும் உள்ள நல்ல அம்சமே அவர்களது கண்ணில் முதலில் தென்படும்.
- ♦ எந்தச் செயலாயினும் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்றும் செய்வன திருந்தச் செய் என்றும் நினைப்பார்கள்.
- ♦ பிறரது வெற்றி குறித்து அக மகிழ்ந்து போவார்கள் பொறாமைப்பட மாட்டார்கள்.
- ♦ கடந்த காலத் தவறுகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு எதிர்கால வெற்றிக்கான வழிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள்.
- ♦ இவர்களது பேச்சும் செயலும் பிறருக்கு மகிழ்ச்சி அளிக்கும்.
- ♦ பிறர்மீது குறை காணும் குணம் இருக்காது.

**இன்றே செய்க**

எந்த ஒரு வேலையைச் செய்வதாக இருந்தாலும் அதனை உடனடியாகச் செய்ய வேண்டும்; தள்ளிப் போடக்கூடாது. இப்படி தள்ளிப் போடுகிற குணம் பலரிடம் காணப்படுகிறது. இப்பொழுது தள்ளிப் போடுவது எதிர்மறையான மனப்போக்கு ஏற்பட வழி வகுக்கும்.

'இன்று செய்ய வேண்டிய பணியைக் கூட இப்போதே செய்வது நல்லது' என்பார் பழந்தமிழ் புலவர் கபிலர். ஒரு வேலையை ஆர்வமுடன் சுறுசுறுப்பாகச் செய்து முடிப்பதற்கான பயிற்சி வேண்டும். அரைகுறை வேலை பயனளிக்காது.

நல்ல மனநிலையை நேர்வழியிலான மனப்போக்கை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்றால் எந்த ஒரு காரியத்தையும் தள்ளிப் போடாமல், காலம் தாழ்த்தாமல் இப்போதே செய்திடும் பழக்கம் நமக்கு வரவேண்டும். இன்றைக்குச் செய்ய வேண்டிய வேலையை நாளைக்குத் தள்ளிவைக்கக்கூடாது.

**நன்றி கூறும் மனநிலை**

நன்றி காட்டுவது ஒரு நல்ல குணம். எவர் ஒருவர் உதவி செய்தாலும் அவருக்கு நன்றி கூறவேண்டும். பிறர் செய்த உதவியை மறவாதிருக்க வேண்டும்.

தனக்கு உதவி செய்தவருக்குத்தான் பதிலுதவி செய்ய வேண்டும் என்று எண்ணக்கூடாது. அதைப் பற்றிக் கவலைப்படாமல், பிறருக்கு உதவி செய்ய வேண்டும்.

நன்றி உடையவராய் இருப்பது (Thankful) ஒரு நேர்மறைப் போக்காகும். இந்த நேர்மறையான மனோபாவம் வளரும்போது எதிர்மறை மனப்போக்கு முனை முறிந்து போகும்.

**இடையறாது கற்றல் நன்று**

பள்ளி மற்றும் கல்லூரி போன்ற கல்வி நிலையங்களில் நாம் கல்வி கற்றாலும் கற்றலின் மூலம் அறிவை விரிவு செய்வது என்பது கல்விக்கூடங்களுக்கு வெளியிலும் நிகழ்கிறது.

நமது கற்றல் என்பது நல்ல அறநெறிப் பண்புகளை அறிந்து கொள்வதும் கடைப்பிடிப்பதும் ஆகும். கடைப்பிடித்து நடந்தால்தான் கற்றதன் பயன்கிடைக்கும். ஒவ்வொருவருக்கும் நேர்மை உணர்வும் கடமை உணர்வும் தேவை. அன்பு, பணிவு, கருணை, மன உறுதி, வீரம், பொறுப்புணர்வு ஆகிய யாவும் தேவை. சமூக மதிப்பீடுகளையும் அறநெறி மதிப்பீடுகளையும் அறிந்து நடக்கவேண்டும். மதிப்பீடுகளை அறிந்து கொள்ளாதவர் நற்பண்புகளின்பால் அக்கறை இல்லாதவர். எவ்வளவு கல்வி பயின்றிருந்தாலும் அவர் கற்றவர் ஆகமாட்டார்.

நமது மூளைக்குள் தகவல்களைத் திரட்டித் தருவதாக மட்டுமே கல்வி அமைந்துவிடக் கூடாது. மூளை என்ற மகத்தான, மாபெரும் கம்ப்யூட்டருக்குள் நல்ல பண்புகள், நல்ல மதிப்பீடுகள், நல்ல எண்ணங்கள் நிறைந்திருக்க வேண்டும். எனவே கற்றலின் மூலம் நல்ல பண்பாடுகளை வளர்த்துக்கொண்டால் நமது மனப்போக்கு நேர்வழியில் செல்லும். ஆக நேர்வழியிலான மனப்போக்கு நமக்கு ஏற்பட வேண்டுமானால் இடையறாது கற்பது நன்று.

விளையாட்டு வீரர்கள் தொடர்பயிற்சியின் மூலம் உடலை வலுப்படுத்திக்கொள்வதைப் போல, நாம் நம் மனத்தை வலிமையுள்ளதாகவும் நேர்வழி செல்லக்கூடியதாகவும் மாற்றிக்கொள்ளத் தொடர்ந்து பயிற்சி எடுத்துக்கொண்டால் நல்ல சிந்தனைகள், செயல்கள், நல்ல செயல்களில் ஈடுபட வேண்டும் என்ற மனநிலை ஏற்படும்.

**நேர்மறையான சுயமதிப்பை வளர்த்திடுக**

கைம்மாறு கருதாத உதவி செய்வதன் மூலம் இப்படி நேர்மறையான சுயமதிப்பை வளர்த்துக்கொள்ள முடியும். இந்த சுயமதிப்பு என்பது நம்மைப் பற்றிய நமது உணர்வாகும். நம்மைப் பற்றிய சுயமதிப்பு உயர்வாக இருக்க வேண்டும். நல்ல செயல்களைச் செய்யும்போது சுயமதிப்பு மிகுதியாகும். நமது நடத்தைப் பண்புக்கும் நமது மன உணர்வுக்கும் இணையான நேரடியான தொடர்பு இருக்கிறது. எனவே நேர்மறையான சுயமதிப்பை வளர்த்துக்கொள்வதன் மூலம் நமது மனநிலையை நேர்வழியில் செலுத்த வேண்டும்.

**எதிர்மறைச் செல்வாக்கை விரட்டி அடி**

நாம் யாரோடு பழுகுகிறோம் என்பதிலிருந்து நமது குணநலன்கள் எப்படிப்பட்டதாய் இருக்கும் என அறிந்துகொள்ள முடியும். அவ்வாறே எத்தகைய குணங்கள் கொண்டவர்களையெல்லாம் நாம் வேண்டாம் என்று புறக்கணிப்பதிலிருந்தும் நமது குணநலன்கள் தெரிய வரும்.

தீய குணநலன்கள் கொண்டவர்களை நமது நட்பு வளையத்துக்குள் அடி எடுத்து வைக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

கேளிக்கை விடுதிகளுக்குச் சென்று பொழுது போக்குபவர்கள், குடிகாரர்கள், குடிநோயாளிகள் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் போன்றவர்களின் உறவு கலவாமை வேண்டும். நமது நண்பர்களுக்கு அந்தப் பழக்கம் இருக்கலாம். அவர்களைத் திருத்தக்கூடிய மனவலிமை நமக்கு இருக்க வேண்டும். இல்லையென்றால் அந்த நண்பர்களிடமிருந்து விலகிவிட வேண்டும். இரண்டும் செய்யாதபோது பலவீனமான நமது மனம் தீய பழக்கவழக்கங்களுக்குள் தன்னைப் புதைத்துக் கொள்கிறது.

பெண்களை, குழந்தைகளை மனிதாபிமானமற்று, கேவலமாக நடத்துகிறவர்கள். அவர்களைத் துன்புறுத்துகிறவர்கள், பாலியல் வன்முறையைத் தூண்டுபவர்கள், அறநெறிப் பண்புகளை கேலி செய்பவர்கள், தனிநபர்களையும் குடும்பங்களைச் சமூகத்தை அழிக்கிற மனநிலை கொண்டவர்கள் போன்ற இவர்களது நட்பு கூடாநட்பாகும். இது உங்கள் நல்ல மனநிலையில் களங்கத்தை உண்டாக்கிவிடும். எனவே இவர்களது செல்வாக்கு உங்கள் மீது விழக்கூடாது. விழுகிற நிலைமை இருந்தால் எடுத்துத் தூர எறிகிற வலிமையான மனநிலை தேவை அப்போது நேர்மறையான வழியில் உங்கள் மனப்போக்கு அமையும்.

எதிர்மறையான மனப்போக்குகளை உருவாக்கும், ஆபாச இலக்கியங்கள், திரைப்படங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்காமல் புறக்கணிக்க வேண்டும்.

குடிப்பது, புகைபிடிப்பது, போதைப்பொருள் பயன்படுத்துவது போன்றவற்றின் மீது ஒரு ஈர்ப்பை ஏற்படுத்தும் ஊடகங்கள், கொலை, கொள்ளை, பாலியல் துன்புறுத்தல் ஆகியவற்றையும் சாதாரண மனநிலையில் பார்க்க வைத்து விடுகிறது. எதிர்மறை மனப்போக்குக் கொண்டவர்களால் குடும்ப அமைதி சீர்குலைகிறது. மணவிலக்குகள் அதிகரிக்கின்றன. குடும்பத்தில் சண்டை, சச்சரவு, குழப்பம் ஏற்படுகிறது.

எனவே இம்மாதிரி பல எதிர்மறை அம்சங்களின் செல்வாக்கு நம்மீது படாமல் இருக்க நாம் விழிப்புடன் இருக்க வேண்டும்.

நமது வாழ்க்கைக்குத் தேவையான, முன்னேற்றத்துக்கு வழிகாட்டுகிற விஷயங்களைக் கற்பதும், செயல்படுத்துவதும் அவசியம். அதன் மூலம் நல்ல மனநிலையை நாம் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

அன்றாடம் நற்சிந்தனைகள், நல்ல பழக்க வழக்கங்களில் ஈடுபாடு காட்டிவந்தால் நமது மனம் நல்ல விஷயங்களைச் சந்திக்கவும் செயல்படுத்தவும் தயாராகிவிடும். காலங்கடத்தாமல் நேர்வழிச் செல்லும் மனநிலைக்குத் தேவையான மேற்சொன்ன சில பயிற்சிகளை எடுத்துக் கொள்ளலாம்.

## இளைஞனே நீ பாதை மாறலாமா

முனைவர் கெ. செல்லதாய்

“காயமே (உடல்) இது பொய்யடா வெறும் காற்றடைத்த பையடா” என்பர். அத்தகு உடலினை வைத்துக் கொண்டு மனிதன் செய்யும் செயல்கள் அளவிட முடியாதது. நமது உடலில் உள்ள அசுத்தங்கள் வியர்வையாக வெளியேறுகின்றன. மனதில் இருக்கும் அசுத்தங்களான கோபம், எரிச்சல் போன்றவை நம்மை மாயவலைக்குள் சிக்க வைக்கிறது.

நல்ல எண்ணங்களை மறக்கடிக்கச் செய்கிறது. குழந்தையாக இருக்கும் பொழுது அதன் குறும்பு, தாய்க்கு மகிழ்வைத் தருகிறது. குழந்தைத்தனமான வளர்ச்சி நிலையிலிருந்து குறும்புத்தனமான நிலைக்கு மாறும்போது பிள்ளைகளின் செய்கை கண்டு தாய் பெருமை கொள்கிறாள்.

அப்படி வளரும் குழந்தை, குறிப்பிட்ட வயதுக்கு மேல் அவனுக்கு இளமைத் துடிப்புத் துளிர்விடுகின்றது. நிலைகுலைந்து போகின்றான். காற்றில் அலையும் காகிதம் போல சுதந்திரமாகச் சுற்றித் திரிகின்றான். பெற்றோரிடம் ஒன்றுவிடாமல் எல்லா விஷயங்களையும் பேசி வந்த மகன், இப்போது எதையும் பேச மறுக்கிறான். இல்லை மறைக்கின்றான், நிம்மதி இழக்கின்றான்.

அந்த வாலிபப் பருவம் அவனை வதைக்கின்றது. மனதை எங்கோ கொண்டு போய்ப் புதைக்கின்றது. புரியாத புது உலகத்தைக் காண்பதாக நினைக்கின்றான். அரும்பு மீசை, குறும்பு பார்வை, கேலிச்சிரிப்பு, கிண்டல் பேச்சு, இதுதான் வாழ்க்கை என்று துள்ளித்திரிகின்றான். பெற்றோர் இவனிடம் என்ன பேசுவது எனத் தயங்குகின்றனர்.

**நண்பன் என்னும் நட்பு**

சரியான வழிகாட்டுதல் இல்லாத போது, தன் சொந்த புத்தியை இழக்கின்றான். இளமையின் வனப்பில் தன்வயம் இழந்து தான்தோன்றித்தனமாக அலைய ஆரம்பிக்கின்றான். அப்படி ஆரம்பிக்கும் வாழ்க்கையில் முதலில் கிடைப்பது நண்பன் எனும் நட்பு. நட்பு வட்டம் சரியில்லாத பட்சத்தில் திக்குத் தெரியாது திசைமாறிய பறவையாக மாறிப் போகின்றான். கெட்ட பழக்கங்களால் குட்டிச்சுவராகிப் போகின்றது அவன் வாழ்க்கை. அந்த இளமைக்காலத்தில் வருவதுதான் ஒருதலைக்காதல். அது அவனை உருப்படாமல் ஆக்கிவிடுகின்றது. ஒருதலைக் காதல் என்பதைவிட இனக்கவர்ச்சி என்றே சொல்லலாம். இந்த ஒருதலைக் காதல் பெண்களின் உயிரை அல்லவா குடிக்கின்றது.

**பெண்ணின் நிலை**

காலங்காலமாக பெண்களின் நிலை என்ன? ராவணன் கவர்ந்து சென்றான் என்பதற்காக ராமனே சீதையின் கற்பில் சந்தேகம் கொண்டு தீயில் இறங்கச் செய்தான். சிரித்தாள் என்பதற்காகப் பலரும் கூடி இருக்கும் அவையில், மானபங்கப்படுத்தப்பட்டாள் திரவுபதி. கணவன் உயிரை மீட்பதற்காக எமனிடமே போராடியவள் சத்யவான் சாவித்திரி, தொழுநோயாளியான தன் கணவனை கூடையில் சுமந்து கொண்டு, அவன் விருப்பத்திற்காக விலைமாது வீட்டிற்குக் கொண்டு சென்றாள் நளாயினி.

கணவன் தவறு செய்த போது அதனைத் தட்டிக் கேட்காமல், பொருளையெல்லாம் இழந்த பின்பு, கணவனை கொலை செய்தார்கள் என்ற உடன் கொதித்து எழுகின்றாள் கண்ணகி. இறுதியாக மதுரையையே அழித்து விடுகின்றான். இன்னும் இதுபோல் எத்தனையோ பெண்கள், கணவனுக்காகவே வாழ்ந்ததாக வரலாறு கூறுகிறது. இவ்வாறு காலங்காலமாகப் பெண்ணை, கணவனுக்காகவே வாழச் செய்தது நம் சமுதாயம். இன்னும் அதே நிலைதான் என்றாலும், கல்வி கற்ற பெண்ணால் கடைத் தெருவிற்குக் கூடப் போய் வர முடியவில்லை. ஒருதலைக் காதல் இன்று பெண்களின் உயிருக்கே உலை வைக்கின்றது.

**ஒருதலைக் காதல்**

சங்க இலக்கியத்தில் தலைவியை விரும்பும் தலைவன், தன்னைத் தலைவி விரும்பவில்லையே? என்று அவளைக் கொல்லவில்லை. ஒரு பெண் மீது கொண்ட மிகுந்த

காதலால் அவன் என்ன செய்கிறான் தெரியுமா? பனங்கருக்கால் (பனைமட்டை, ஓரங்களில் கூர்மையாக முள் போன்றிருக்கும்) குதிரை செய்து, அக்குதிரை மீது ஏறி கையில் அவள் (காதலி) படத்தை வரைந்து வைத்துக் கொண்டு, தலைவி வீடு இருக்கும் முச்சந்தியில் போய் நிற்கிறான்.

பனங்கருக்கு அவனுடைய உடம்பைப் பதம் பார்க்கும். அவன் உடம்பிலிருந்து ரத்தம் வடியும். தன் காதலியைக் காண்பதற்கு அல்லது அவளை அடைவதற்கு தன்னை வருத்திக் கொண்டான். இதனைத் தான் சங்க இலக்கியம் ஒருதலைக் காதல் என்று கூறுகின்றது. இதனை மடலேறுதல் என்றும் கூறுகின்றது. தனக்குப் பிடித்த காதலி கிடைப்பதற்காகத் தன்னைத் தானே வருத்திக் கொண்டான்.

**உனக்கென்ன உரிமை**

ஆனால் இன்று..? எனக்குக் காதலி கிடைக்கவில்லை என்றால், யாருக்கும் கிடைக்கக் கூடாது என்று கொல்வதற்கு உனக்கென்ன உரிமை இருக்கின்றது. அவள் ஒன்றும் உன் சொத்து கிடையாது. இளைஞனே உன் உயிரை மாய்த்துக் கொள்ள உனக்கே உரிமை இல்லாத போது, முன்பின் தெரியாத ஒரு பெண்ணை நீ எப்படிக் கொலை செய்யலாம்.

ஆறறிவு படைத்த நாம் இந்த உலகத்தில் சாதிக்கப் பிறந்தவர்கள் சமுதாயத்தில் பெண்ணாகப் பிறப்பது பாவமா? காலங்காலமாகப் பெண்கள் கற்பழிக்கப்பட்டு. ஏமாற்றப்பட்டுச் சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர். இன்றையச் சூழலில், தனக்குக் கிடைக்காத பெண்ணைத் தைரியமாகக் கொலை செய்யுமளவிற்கு மனிதாபிமானம் செத்துப் போய்விட்டது.

**அன்பு இதயம்**

அன்பு கொண்ட இதயம் தொலைவில் இருந்தால் என்ன? அருகில் இருந்தால் என்ன? தொலையாமல் இருந்தால் சரி, அதனை நாம் தொலைத்து (கொன்று) விடக்கூடாது. வாழ்வின் தேவைகள் நம்பிக்கை, அது நம்மை வெளிச்சத்தை நோக்கி நகர வைக்கிறது. இளைஞர்களே முதலில் உங்கள் மீது நம்பிக்கை வையுங்கள். நம்பிக்கை இருந்தால் நதி மீதும் நடைபோடலாம்; வெம்பி விழாமல் விதியையும் வெல்லலாம். எம்பிக் குதித்து நிலவுக்கும் ஒரு முத்தம் கொடுக்கலாம். அன்பெனும் பிடிக்குள் அகப்பட்ட கரும்பாய் இருக்கப் பழகிக் கொள்.

எதிர்காலத்தில் இந்தியாவை வல்லரசாக்க நினைக்கும் இளைய சமுதாயமே! காதல் வைரசால் கலங்கிப் போகக் கூடாது. உங்கள் மனதில் இருக்கும் வக்கிரங்களைத் தூக்கித் தூர எறிந்துவிடுங்கள். காதல் எனும் துன்ப வலைக்குள் விழுந்து விடாது இன்பமாய் இருக்கப் பழகிக் கொள். வெறுமையான வாழ்க்கைப் பெருமை அடைய வேண்டுமென்றால், திறமையை வளர்த்துக் கொள்.

**உன்னை நேசிப்பவன்**

நீ நேசிப்பளை விட, உன்னை நேசிப்பவளே உன்மேல் உயிராக இருப்பாள். அதனால் உன் வாழ்க்கை உயர்வு பெறும். சங்க இலக்கியத் தலைவன் ஒருதலைக் காதலால் தன்னை வருத்திக் கொண்டானே தவிர, பெண்ணைத் துன்புறுத்தவில்லை. ஒரு நல்ல ஆண் மகன் பெண்ணைத் துன்புறுத்துவதை அவமானமாக நினைப்பான். தனது வீரத்திற்குச் சமமான வீரம் படைத்தவர் யாரோ? அவர்களிடம்தான் தன் வீரத்தைக் காட்டுவான்.

சீதையைக் கவர்ந்து சென்ற ராவணனுடன் ராமன் போர் செய்யும் போது, ராவணனின் ஒவ்வொரு ஆயதத்தையும் வீழ்த்தினான். இறுதியில் ஆயுதம் இல்லாது நிராயுதபாணியாக நிற்கும் ராவணனைப் பார்த்து 'நீ இன்று போய் நாளை (போருக்கு) வா' என்று அனுப்பி வைத்தான்.

கையில் ஆயுதமில்லாதவனைக் கொல்வது வீரத்துக்கு இழுக்கு என்ற நினைக்கும் வீரர்கள் பிறந்த பூமி, வீரத்தின் விளைநிலமானத் தமிழகத்தில் பிறந்த நாம், எதிர்ப்பே தெரிவிக்காத, யாரென்றே தெரியாத ஒரு பெண் மகவைக் கொன்றால், அது ஆண்களின் ஆண்மைக்கு (வீரம்) அழகல்ல. அழகை ஆராதிக்க வேண்டும். அதை அழிக்க நினைக்கக் கூடாது.

காதலிப்பவர்கள் எல்லோரும் ஒரு நாளில் வருந்துகின்றனர். எதற்கு என்றால்? சிலர் பிரிவதற்காக, சிலர் சேர்ந்ததற்காக அழுகின்றனர். இதுதான் வாழ்க்கை. உண்மையான அன்பு (காதல்) இருந்தால் உலகமே தலைகீழாகச் சுழன்றாலும் உன்னைவிட மாட்டாள். உன் மீது காதல் இல்லை என்றால் உலகமே மாறினாலும் உன்னைத் திரும்பிக் கூட பார்க்க மாட்டாள். அதுதான் பெண். உன்னை நினைக்காதவர்களை நினைத்து நினைத்து உன்னையே நீ இழந்துவிடாதே. ஆசைப்படும் மனம் கேட்பதையெல்லாம் நாம் நிறைவேற்றிவிடாமல் அறிவின் துணை கொண்டு ஆட்சி செய்ய வேண்டும். அப்போது தான் வாழ்க்கை சிறக்கும்.

## ஒத்துப்போங்கள்

**- சிவசூரியன் இ.ஆ.ப.**

எதிர்ப்பது எளிது; ஒத்துழைப்பது மிக மிக அரிது; என்பார் டாக்டர். மு. வரதராசனார். நமது வெற்றிக்கு அடுத்தவரின் ஒத்துழைப்பும் கட்டாயம் தேவையாகின்றது. மற்றவர்களின் ஒத்துழைப்பில்தான் நம்முடைய வெற்றி உறுதி செய்யப்பட்டுள்ளது. என்னதான் ஒருவருக்கு ஆற்றலும், அறிவும், திறமையும் இருந்தாலும், அவரே தனித்து நின்று செய்வதைவிட, குழுவாக இருந்து செய்வதில் சிறப்பும், வெற்றியும் எளிதாக அமைந்துவிட வாய்ப்புள்ளது.

**எளிதில் பெறும் வெற்றிகள்**

ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் கூடி ஆலோசிக்கும்போது, புதுப்புதுக் கருத்துக்கள் பூக்க வழி கிடைக்கின்றது.

கெட்டதை நீக்கி, நல்லதைத் தேர்வு செய்ய குழு முயற்சி வழி காட்டுகின்றது. பல நாள் அவதிப்பட்டுச் செய்ய வேண்டிய பணிகளை, இருவரோ அல்லது மூவரோ, சரியான திட்டத்தோடு செய்தார்கள் என்றால், சில நாட்களிலேயே அதனை முடித்துவிட முடியும்.

தனி மனிதராக இருக்கும் ஒருவர் தாட்டியம் பேசலாம். ஆனால், குழுவாக இணைந்து செயல்படும்போது குழுவிலுள்ள அனைவரின் ஒத்துழைப்போடு இணங்கிப் போவது அவசியமாகிறது.

அங்கும் தனித்தன்மை காட்டினால், குழுவின் செயல்பாடே, வெற்றியை இழக்கச் செய்துவிடும். தனிமரம் தோப்பாகாது. இரு கைகள் இணைந்தால்தான் ஓசை ஒழுப்ப முடியும். ஒன்றோடு ஒன்று இணையும் போது மூன்றாவது ஒன்று பிறக்கின்றது.

இவை எல்லாம் நல்லனவாய் அமைய வேண்டுமெனில் ஒருவரை ஒருவர் அனுசரித்து ஒத்துப்போக வேண்டியது மிக அவசியமாகின்றது. அப்படி இருக்க, ஒருவரை எதிர்ப்பதால், பகை வளரும், அதனால் பாதிப்பு நமக்குத்தான்.

**வெறுப்பை விரட்டியடியுங்கள்**

ஒருவர் மீது ஆத்திரப்பட்டு, கோபப்பட்டு, அவரை வெறுத்து ஒதுக்குதலை நாம் அடியோடு தவிர்க்க வேண்டும்.

நீங்கள் வாழ்க்கையில் நிம்மதியாக இருக்க வேண்டுமா? வெற்றி பெற வேண்டுமா? மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமா? அப்படியானால் மற்றவர்களுடன் ஒத்துப்போய்விடுங்கள்.

டாக்டர் எம்.ஆர். காப்மேயர் ‘வாழ்கையை அமைத்துக்கொள்ள சில சிந்தனைகள்’ என்ற தனது புத்தகத்தில்.

“வாழ்க்கைப் பாதையில் முன்னேற மற்றவர்களை வெறுத்து ஒதுக்குவதைத் தவிர்க்கக் கற்றுக்கொள்ளுங்கள்” என்றும் “இப்போது உங்களிடம் உள்ள அம்மாதிரி உணர்ச்சிகளிலிருந்து அடியோடு விடுபடுங்கள்” என்றும் எழுதியுள்ளார்.

சில சமயங்களில் அற்ப விசயங்களுக்காக மற்றவர்கள், உங்களைப்பற்றி என்ன குறைகள் சொன்னாலும் துடைத்தெறிந்துவிடுங்கள் அல்லது ப்பூ என்று ஊதிவிடுங்கள். அதைப் பொறுத்தவரையில் உங்கள் உணர்ச்சிகள் மரத்துப் போனதாகவே இருக்கட்டும்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் எப்படி சமாளிக்க வேண்டும் என்பதை கவிஞர் கண்ணதாசன் திரைப்படத்திற்காகப் பாடியதைப் படியுங்கள்.

**"உலகம் ஆயிரம் சொல்லட்டும்**
**உனக்கு நீதான் நீதிபதி**
**மனிதன் எதையோ பேசட்டும்**
**மனசைப் பார்த்துக்க நல்லபடி**
**கதை கட்ட ஒருவன் பிறந்துவிட்டால்**
**கண்ணகி வாழ்விலும் களங்கம் உண்டு"**

சிற்சில சூழ்நிலைகளில் சூடு சுரணையற்றவனாக ஆகிவிடுவதே மேல்.

நாம் ஒருவரை வெறுத்து ஒதுக்கும்போது அவர் எவ்விதமான பாதிப்புக்கும் ஆளாவதில்லை. ஆனால், நாம் மட்டும்தான் உணர்ச்சி வசப்பட்டு நமது ஆரோக்கியத்தைக் கெடுத்துக்கொள்கிறோம். அது நமக்குத் தேவைதானா? வெறுத்து ஒதுக்குவதால் விரோதிகள் பட்டியல்தான் நீளும்!. எதிரிகளால் நமது மகிழ்ச்சிதான் மங்கும்.

எவரையும் வெறுத்து ஒதுக்க வேண்டியதில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டால் மறந்துவிடுங்கள், அலட்சியப்படுத்துங்கள் அது இருவருக்குமே நல்லது. வெறுப்பு என்பது நீடித்து நடத்தும் தற்கொலைக்குச் சமம்.

**நல்லன எண்ணுங்கள்**

எண்ணங்கள் நல்லனவாக இருக்க வேண்டும். எண்ணங்களில் நஞ்சு கலந்துவிட்டால், விளைவுகள் விபரீதமாகிவிடும். மனித மனங்களில் நஞ்சு கலக்கப்படும்போது நல்ல எண்ணங்களைவிட வன்முறை எண்ணங்கள் மேலோங்கி நிற்கின்றன. அதனால் எரிச்சல், அவமானம், ஆத்திரம், கோபம், வெறுப்புணர்ச்சி இவற்றால் ஆட்கொள்ள வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்படுகிறோம்.

மனத்தை அழிக்கக்கூடிய விசயங்களில் வெறுப்பும் ஒன்று, வெறுப்பு உள்ளத்தை கோணலாக்கி, கொடிய செயல்களுக்கு வழிவகுக்கின்றது. சூழ்ச்சி, சதிவேலை, பிறருக்கு தீங்கிழைப்பது, தொல்லை தருவது மற்றும் பொறாமை போன்ற நாச வேலைகளுக்கு வழிவகுக்கின்றது வெறுப்பு.

அதிருப்தியுடன் இருக்கும் குழுவினர்களிடையே வெறுப்பினை ஆழமாக விதைக்க முடியும். வெற்றியின் பாதையை அடைத்துவிடும். இந்த வெறுப்பிற்கு நீங்கள் ஆளாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

நீங்கள் பிறரை வெறுப்பதையும், பிறர் உங்களை வெறுப்பதையும், தவிர்ப்பதற்கு உதவக்கூடிய மனோதத்துவ உத்திகளைக் கையாண்டு வெறுப்பினை விரட்டிவிடுங்கள்.

வெறுப்பை உங்கள் மனத்திலிருந்து விரட்டிவிட்டால், வாழ்க்கை எவ்வளவு ஆனந்தமாக இருக்கும்! வெறுப்புக்கு இடம் கொடுக்காதிருந்தால், வெறுப்பு உங்களை எப்படி அண்டும்?

வெறுப்புக்கு இனிமேல் இந்த வினாடி முதல் இடம் தரப்போவதில்லை என்று முடிவெடுங்கள், ஆணித்தரமாக நம்புங்கள் - தீவிரமாக நம்புங்கள் - தொடர்ந்து நம்புங்கள் - இதனை நிரந்தரத் தீர்மானமாக எண்ணுங்கள்.

யாரையும் இனி நீங்கள் வெறுக்கமாட்டீர்கள், எதையும் நீங்கள் வெறுக்கமாட்டீர்கள்.

எப்போது வெறுப்பு அகல்கிறதோ அப்போது உள்ளம் தூய்மையாக இருக்கும். நல்ல எண்ணம் நுழையும், நிம்மதி கிட்டும், மகிழ்ச்சி நிலைக்கும்.

**அனுசரித்தால் ஆனந்தம்**

அடுத்தவர்கள் உடன் இணைந்து செயல்படும்போது தான் வெற்றிகளை எட்ட முடியும். நாம் வெற்றி பெற வேண்டுமானால், மற்றவர்களின் தேவைக்கேற்ப நாம் அனுசரித்துக கொள்ளும்போது வெற்றி எளிதில் சாத்தியமாகிவிடுகின்றது.

அவர்களுடைய நம்பிக்கை, ஆசை, எண்ணம், ஆர்வம், உழைப்பு, திறமை ஆகியவைகளுக்கு நாம் அனுசரித்து நடக்கும்போது வெற்றி நம்முடையதாகிவிடுகின்றது.

அதற்காக அவர்களைத் திருப்பதிப்படுத்துவதற்காக ஜால்ரா போட வேண்டியதில்லை.

**வெற்றிக்குப் பாதை**

தம்முடைய ஆசைப்படி நடந்துகொள்வதைவிட, அவர்களுடைய ஆசைப்படி நடந்துகொண்டால் வெற்றி பெறுவது எளிது.

மற்றவர்களின் கவனம், ஆர்வம், நம்பிக்கை, ஆசைகள் என்னவென்று தெரிந்துகொள்ளுங்கள். அவற்றைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் அவரை அணுகுங்கள். உங்களுக்குள் பந்தம் ஏற்படும். அது வெற்றிக்குப் பாதை வகுக்கும்.

**தெய்வத்தன்மை**

உங்களுக்கும் மன்னிக்கும் மனோபாவம் உண்டு! கண்டு பிடியுங்கள். இந்த உலகில் நூறு விழுக்காடு நிறையுடையவர்கள் எவருமிலர்.

ஒவ்வொருவருக்கும் சிறு சிறு குறைபாடுகள் அவர்கள் அறியாவண்ணம் இருக்கும்.

அப்படி இருக்கும்போது ஏன் மன்னிக்கும் மனோபாவத்தை வளர்த்துக் கொள்ளக்கூடாது?

குற்றம் இழைப்பது மனிதத்தன்மை, மன்னிப்பது தெய்வத்தன்மை என்று போப் கூறும் உண்மையை நினைவில் வையுங்கள். மன்னிக்கத் தெரிந்த உள்ளம்தானே மாணிக்கக் கோவில். இந்த மன்னிக்கும் மனோபாவம் இருந்துவிட்டால், உங்களுக்கு எதிரிகள் ஏது? பகைவர்கள் ஏது?

ஆத்திரப்படுவதால் ஏற்படும் மனச்சுமையைத் தாங்குவது மிகவும் கடினம். நீங்கள் வெறுப்பை விலைகொடுத்து வாங்குவதால், இன்னும் அதிகச் சுமை.

இரக்கமும் அன்பும் மனச்சுமையைக் குறைக்கும் அருமருந்துகள்.

**பகை வேண்டாம்**

பகைவர்கள் என்று நமக்கு யாருமில்லை. நமக்குப் பகைவராக எவருக்கும் உரிமை இல்லை. அதற்கேற்ற திறமையும் தகுதியுமில்லை.

நாம்தான் நமது பகைவரை உருவாக்குகின்றோம். நமது கடுஞ்சொல்லால் அல்லது அவர் விருப்பத்தை நாம் நிறைவேற்றாததால் அல்லது அவருக்கு இணைந்து பேகாததால் அல்லது அவரது ஆசையைப் பூர்த்தி செய்யாததால் தான். ஒத்துப்போவது அல்லது இணைந்து போவதன் பகை வளராது.

கவிஞர் கண்ணதாசன் திரைப்படத்திற்காக எழுதியதைப் பாருங்கள்.

> **“பழகும் வகையில் பழகிப் பார்த்தால்**
> **பகைவன் கூட நண்பனே!**
> **பாசம் காட்டி ஆசை வைத்தால்**
> **மிருகம் கூட தெய்வமே!”**

மற்றவர்களுடன் மோதுவதன் மூலம் நீங்கள் வெற்றி ஏணியில் ஏறுவது இயலாது. பிறர் தூக்கிவிட்டால்தான் முடியும். பிறர் உங்களைத் தூக்கிவிட நீங்கள் அவருக்கு ஒத்துழையுங்கள்.

**புத்திசாலித்தனம்**

அகிம்சையின் மூலம் இந்திய நாட்டின் சுதந்திரத்தையே மகாத்மாவால் வாங்க முடிந்தபோது, ஆத்திரப்படாமல், கோபப்படாமல், மிரட்டாமல், குறைசொல்லாமல், பிறரது பகையையும், எதிர்ப்பையும் சம்பாதிக்காமல், பிறரைத் தாக்காமல், கடுஞ்சொல் சொல்லாமல் உங்களுடைய வாழ்க்கை லட்சியத்தை அடையமுடியும் என்பதை நம்பலாம்.

“ஒருவர் பொறை, இருவர் நட்பு” என்ற பழமொழியை நினைவில் கொள்ளுங்கள். ஒத்துப்போகும் தன்மை உங்களுக்கு வந்துவிடும். சரியான காரியம் உரிய நாளில் நடக்கவேண்டு மானால், மற்றவர்களோடு முரண்பட்டுப் பயனில்லை. ஒத்துப்போவதுதான் சரியான வழி.

சண்டை சச்சரவால் சாதிக்கப்போவது யாருமில்லை. அப்படி இருக்க, வேண்டுமென்றே ஏன் வம்பளந்து, பொன்னான நேரத்தை வீணடிக்க வேண்டும். மாற்ற முடியாதது என்று தெரிந்தவுடன் அதனை ஏற்றுக் கொள்வதுதானே புத்திசாலித்தனம்.

நீங்கள் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை வளர்த்துக் கொண்டால், மற்றவர்களும் விட்டுக்கொடுக்க முன்வருவார்கள். அதாவது உங்கள் கருத்துக்களோடு ஒத்துப்போகச் சம்மதிப்பார்கள். ஆகவே அதற்கு நீங்கள் முன்னோடியாக இருங்கள்.

**வீண்வாதம் குறையும்**

எதிர்ப்பதால் எவ்வித பயனும் இல்லை என்பது தெரிந்தவுடன் அந்த எதிர்ப்பினை வளர்த்துக் கொண்டிருப்பது அறிவுடைமை ஆகாது. அப்படிப்பட்ட சமயங்களில் நீங்கள் ஒத்துப் போய்விட்டால், மற்றவர்களின் அனுதாபமும், நட்பும் உங்களுக்குக் கிடைக்க வாய்ப்புள்ளது.

கணவன் - மனைவி உறவாக இருந்தாலும் சரி, மேலதிகாரி - ஊழியர் உறவாக இருந்தாலும் சரி, வண்டிகள் ஒப்பந்தக் கூட்டாளியாக இருந்தாலும் சரி, கருத்து மோதல்களின்போது, யாரேனும் ஒருவர் இறங்கி வந்து ஒத்துப்போவது நீண்ட வீண்வாதத்தைக் குறைத்துவிடும். சமாதானத்தை நிலவச் செய்யும்.

வீண் விவாதத்தை நிறுத்தி ஒத்துப்போய்விட்டால், ஆக்கப் பூர்வமான செயல்களில் ஈடுபடமுடியும்., அதன் விளைவுகள் பயனுள்ளதாக அமையும்.

**ஆளுமைத் திறமை உயர**

குடும்ப ஒற்றுமை குலையாமல் இருக்கவும், அலுவலர்களிடையே நிலவும் உராய்வுகளைத் தவிர்க்கவும், மற்றவர்களுடன் சுமுகமான உறவு நிலைப்படுத்தவும், உங்களது ஆளுமைத் திறத்தை உயர்த்திக் கொள்ளவும் மற்றவர்களுடன் அனுசரித்துப் போகவேண்டியுள்ளது.

**பலசாலிகள்**

பணிவு என்பது பயந்து போய்விடுவது அல்ல; அதனால் ஒத்துப் போகின்றவர்கள் கோழைகள் அல்ல. எதிர்க்க அறிவு தேவையில்லை, ஒத்துழைத்துப் போகத்தான் அறிவும், மனோபாவமும் தேவை.

ஆகவே எதிர்ப்பவர்களைவிட, ஒத்துப்போகின்றவர்களே பலசாலிகள்; வல்லவர்கள்.

அலகு 4

# மனோன்மணியம் சுந்தரனார் வாழ்வும் பணியும்

1. தமிழ்த்தாய் வாழ்த்து
2. படிப்பும் பணியும்
3. இறுதிக்காலம்
4. நாடகாசிரியர்
5. தழுவல் நாடகம்
6. முதற் கல்வெட்டும் திருவிதாங்கூர் வரலாறும்
7. சம்பந்தரின் காலம்
8. உரைநடையாளர்

# மனோன்மணியம் சுந்தரனார் வாழ்வும் பணியும்

## 1. தமிழ்த்தாய் வாழ்த்து

தொடக்கப்பள்ளி மாணவனிலிருந்து கல்லூரி மாணவன் வரை எல்லோரும் அறிந்த தமிழறிஞர்களின் பட்டியலில் மனோன்மணியம் சுந்தரனாருக்கும் இடம் உண்டு. இதற்கு மூன்று காரணங்கள் சொல்லலாம். ஒன்று கடந்த நூறு ஆண்டுகளாக கல்லூரி மாணவர்களின் தமிழ்ப் பாடதிட்டத்தில் மனோன்மணியம் நாடகம் இருந்தது. இரண்டு, மனோன்மணியம் நாடகத்தில் வரும் ‘நீராரும் கடலுடுத்த’ என்று தொடங்கும் பாடல் தமிழ்த்தாய் வாழ்த்தாக அரசு அறிவித்தது. நடைமுறையில் இருப்பது மூன்று, திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் சுந்தரனார் பெயரால் இருப்பது.

பாடத்திட்டத்தில் மனோன்மணியம் நாடகம் வெளிவந்த (1891) அடுத்த ஆண்டு திருவிதாங்கூர் கல்லூரி எப்.எ. வகுப்பு தமிழ்ப்பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட்டது. F.A. என்பது (Faculty of Arts) இன்றைய மெட்ஹிக்குலேசன் அல்லது மேல்நிலைப் பள்ளிப் படிப்புக்குச் சமமானது. அக்காலத்தில் திருவிதாங்கூரில் இருந்த கல்லூரிகள் சென்னைப் பல்கலைக்கழகத்தின் கீழே இருந்தன.

1892-ஆம் ஆண்டில் சென்னை பச்சையப்பன் கல்லூரி ஆசிரியர் ஒருவரின் முயற்சியில் சென்னைப் பல்கலைக்கழகம் கல்லூரிகளில் எப்.எ. வகுப்பில் பாடத்திட்டத்தில் வைக்கப்பட்டது. 1900-க்குப் பின் தாம்பரம் கிறிஸ்தவக் கல்லூரி சென்னை ராஜதானிக் கல்லூரி எனச் சிலக் கல்லூரிகளில் பி.ஏ. பி.எஸ்ஸி பாடதிட்டத்தில் இருந்தது.

தமிழகத்தில் சென்னைப் பல்கலைக்கழகத்திலிருந்து மதுரை காமராசர் பல்கலைக்கழகம் பிரிந்து தனியாக இயங்க ஆரம்பித்ததும் பி.ஏ. பி.எஸ்ஸி மாணவர்களின் பாடதிட்டதில் மனோன்மணியம் நாடகம் சேர்க்கப்பட வேண்டும் என்று பேரா. துரையரங்கனார் சிபாரிசு செய்திருக்கிறார். அப்போதைய மதுரைப் பல்கலைக்கழக துணைவேந்தர் தெ.பொ. மீனாட்சி சுந்தரம் ஆமோதித்திருக்கிறார்.

கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ளடக்கிய கல்லூரிகளை ஒருங்கிணைத்து ஒரு பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்ட போது (1990) சுந்தரனார் பெயரைச் சூட்டவேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. அதோடு அவரை அடையாளப்படுத்தும் மனோன்மணியம் நாடகத்தின் பெயரைச் சேர்ந்தே மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் எனப் பெயரிடப்பட்டது.

ம.சு. பல்கலை ஆரம்பித்த ஆண்டிலிருந்து தொடர்ந்து ஆறு ஆண்டுகள் மனோன்மணியம் பாடத்திட்டத்தில் இருந்தது. தமிழகம் மட்டுமல்ல கேரளம், கர்நாடகம், ஆந்திரம், தில்லி பல்கலைக் கழகங்களிலும் பாடத்திட்டத்திலிருந்தது.

**தமிழ்த்தாய் வாழ்த்து**

தமிழகத்தின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் மனோன்மணியம் நாடகத்தில் பாயிரம் பகுதியில் வருகிறது. தமிழ்த் தெய்வ வணக்கம் என்னும் தலைப்பில் வரும் இப்பாடல் 16 வரிகள் கொண்டது. முதலிரு பாடல்களும் ப.ஃறாழிசைக் கொச்சகக் கலிப்பாவால் ஆனவை. இவ்விருபாடல்களில் முதல் 8 வரிகளும், இரண்டாம் பாடலில் இறுதி வரியும் தமிழத்தாய் வாழ்த்துக்குத் தெரிவு செய்யப்பட்டன.

தமிழ்த்தாய் வாழ்த்து குறித்த அரசாணை 1970 நவம்பர் 21ஆம் தேதி பிறப்பிக்கப்பட்டது. இந்த ஆணை அரசுசார்ந்த எல்லா நிகழ்ச்சிகளிலும் இப்பாடலைப் பாடித் தொடங்க வேண்டும் என்றும் அறிவித்தது. இந்தப் பாடல் மோகன ராகத்தில் திஸ்ரம் தாளத்தில் பாடவேண்டும். ராக தாளம் மாறக்கூடாது என்றும் கூறப்பட்டது. இந்தப் பாடலுக்கு இசை அமைத்தவர் மெல்லிசை மன்னர் எம்.எஸ். விஸ்வநாதன் ஆவார்.

**பல்துறைத் செல்வர்**

தமிழகத்தில் பிற தமிழறிஞர்களிடமிருந்து சுந்தரனார் பல நிலைகளில் வேறுபட்டவர். இவர் படைப்பாளி, கல்வெட்டு ஆய்வாளர், இலக்கிய வரலாற்றாய்வாளர், அறிவியல் கட்டுரையாளர், ஆங்கிலத்திலும் எழுதியவர், சைவசித்தாந்தி, தத்துவப் பேராசிரியர், அரசு உயர் அதிகாரி எனப் பன்முகம் கொண்டவர்.

**ஆதாரங்கள்**

42 ஆண்டுகள் வாழ்ந்த (1855 - 1897) சுந்தரனாரைப் பற்றிய ஆதாரங்கள் பல அழிந்துவிட்டன. அவருக்கு உ.வே.சா. மறைமலையடிகள், விவேகானந்தர் எனப் பலர் எழுதிய கடிதங்கள் தொலைந்துவிட்டன. சுந்தரனாரின் உறவினர்கள், மாணவர்கள், நண்பர்கள், சகஆசிரியர்கள் கூறிய செய்திகளின் அடிப்படையில் அவரது வரலாறு எழுதப்பட்டது.

மனோன்மணியம் நாடகம் பாடத்திட்டத்தில் இருந்து ஆரம்ப காலத்தில் நூலின் ஒரு பகுதியாக சுந்தரனாரின் வரலாற்றை எழுத கே.என். சிவராஜ பிள்ளை என்னும் தமிழறிஞர் பெரும் முயற்சி எடுத்திருக்கிறார். இவர் சுந்தரனாரின் மாணவர்களான இராமாநுஜ அய்யங்கார், தேவராஜபிள்ளை ஆகிய இருவரிடமும் செய்திகள் சேகரித்து எழுதிய வரலாற்றுக் கட்டுரை 'பாடலகமனம்' (நாகர்கோவில்) என்னும் மாத இதழில் வந்திருக்கிறது.

திருவனந்தபுரம் வங்கி அதிகாரி பி. குமரேசபிள்ளை எண்பதுகளில் சேகரித்த செய்திகள் வழி பல்கலைச் செல்வர் சுந்தரனார் என்ற சிறுநூலை வெளியிட்டார் (1992) இதற்கு இவருக்கு முக்கிய ஆதாரமாக இருந்தது. நாஞ்சில் நாட்டு முதுபெரும் புலவர் செ. சதாசிவம் எழுதிய 'சேரநாட்டுத் தமிழ்ப் பெருமக்கள் வரலாறு' (1947) என்ற சிறுநூலில் உள்ள சுந்தரனாரைப் பற்றிய சிறுகட்டுரைதான் மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை என்ற ந. வேலுச்சாமியின் நூல் 2001இல் வந்தது. இது சாகித்ய அகதமி வெளியீடு. இந்த இரண்டு நூல்களும் முழுமையான வரலாற்று நூல்கள்.

பேரா. எஸ். வையாபுரிப்பிள்ளை வசந்தம் இதழில் எழுதிய சுந்தரனார் பற்றிய கட்டுரை தமிழ்ச்சுடர்மணிகள் தொகுப்பில் வந்திருக்கிறது (1968). இது தரமான கட்டுரை, திருவனந்தபுரம் சைவப்பிரகாச சபை நடத்திய கருத்தரங்குகளில் (1957, 1983, 1985, 1995, 2000) வெளியிடப்பட்ட மலர் சிறு கட்டுரைகளாக வந்துள்ளன.

வையாபுரிப்பிள்ளை திருவனந்தபுரம் நீதிமன்றத்தில் வழக்குரைஞராக இருந்தபோது மனோன்மணியத்துக்கு ஒரு செம்பதிப்பு கொண்டு வந்திருக்கிறார் இதில் கே.என். சிவராஜ பிள்ளை எழுதிய சுந்தரனாரின் வாழ்க்கைக் குறிப்பு கட்டுரை உள்ளது.

கேரளப் பல்கலைக்கழக தமிழ்த் துறையில் சமர்ப்பிக்கப்பட்ட சுந்தரனார் பற்றிய பிஎச்டி ஆய்வேடு (எம். ஷீலா (1997) தரமானது அபூர்வமான செய்திகளைத் திரட்டி ஆய்வு செய்யப்பட்ட ஆய்வேடு.

**தொலைந்த ஆதாரங்கள்**

தமிழகத்தில் பெரும் சாதனைகள் படைத்த உ.வே. சாவைப் போன்ற தமிழ்த் தொண்டர்களில் மிகச் சிலரே தங்களைப் பற்றிய ஆதார பூர்வமான செய்திகளை விட்டுச் சென்றிருக்கின்றனர். சுந்தரனார் உயிரோடு இருக்கும்போது அவருக்கு வந்த கடிதங்கள், கல்வெட்டுப் படிகள், ஓட்டுப் பிரதிகள், கையெழுத்துக் கதைப் பாடல்கள் எனப் பலவும் சேகரித்து வைத்திருந்தார். ஆனால் எல்லாம் தொலைந்து விட்டன அதற்கு காரணம் உண்டு.

இருபதாம் நூற்றாண்டில் இறுதிப்பகுதியில் ஒருநாள் திருவனந்தபுரத்தில் ஒரு திருமணவீட்டில் கேரளம் குருவாயூர் கல்லூரி பொருளாதாரப் பேராசிரியர் (ஓய்வு) சுந்தரம் அவர்களை இந்நூலாசிரியர் சந்தித்தார். அவர் சுந்தரனாரின் ஒரே மகன். பி.எஸ். நடராஜபிள்ளையின் இரண்டாவது புதல்வர் அவரிடம் நூலாசிரியர் சுந்தரனாருக்கு மறைமலையடிகள் முதலானோர் எழுதின கடிதங்கள் பற்றிக் கேட்டபோது அவர் அலுப்புடன் பேசினார்.

மறைமலையடிகள் எழுதின கடிதங்கள் மட்டுமல்ல விவேகானந்தர், உ.வே.சா. கணபதி ஆச்சாரியார், டாக்டர் ஹார்வி எனப் பலரின் கடிதங்களையும் வையாபுரிப்பிள்ளை பதிப்பித்த மனோன்மணியம் முதல் பிரதி எனப் பலவற்றையும் திருவிதாங்கூர் திவான் சி.பி. ராமசாமி அய்யரின் காலத்தில் போலீசார் அள்ளிக்கொண்டு சென்றதைக் கூறினார். அப்பா காங்கிரஸ்காரர், சமஸ்தானத்துக்கு எதிரி, திவானுக்கும் எதிரி, அதனால் போலீசாரின் சோதனை அடிக்கடி நடக்கும். எல்லாம் அழிந்தன என்று நூலாசிரியரிடம் அலுத்துக் கொண்டார். பலரிடம் இந்தப் பதிலைச் சொன்னதால் ஆர்வமின்றிப் பேசினார்.

ஆக எஞ்சிய சான்றுகள்தாம் சுந்தரனாரை அறிய உதவுகின்றன.

**பூர்வீகம்**

சுந்தரனார் தன் நாடகத்தின் ஆரம்பத்தில் அவையடக்கத்தில் "அடியேன் கடையேன்; அறியாத சிறியேன்; கொடுமையானக் குடியிருப்பு உடையேன்" என்று தன்னடக்கத்துடன் கூறுகிறார். இந்த வரிகளை ஆதாரமாகக் கொண்டு சுந்தரனாரின் பூர்வீகம் மலையாள நாடு என்று எழுதியவர்களும் உண்டு. ஆனால் கே.என். சிவராஜ பிள்ளை ஆரம்ப காலத்தில் எழுதிய கட்டுரை ஒன்றில் சுந்தரனாரின் பூர்வீகம் மதுரை என்கிறார்.

வையாபுரிபிள்ளையின் கூற்றுப்படி சுந்தரனாரின் பூர்வீகம் மதுரை. அங்கிருந்து களக்காடு வந்தபின் கேரளத்திற்கு குடிபெயர்ந்தனர். மதுரையிலிருந்து இவர்கள் குடிபெயர்ந்த காலம் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் ஆரம்பம் என்கிறார் சிவராஜபிள்ளை.

மதுரை நாயக்க ஆட்சியின் இறுதில் ராணி மீனாட்சியின் தற்கொலைக்குப்பின் நாட்டில் அரசியல் குழப்பம் ஏற்பட்டது. அப்போது சிறுவணிகர்கள், கலைஞர்கள் போன்றோர் மதுரைப் பகுதியைவிட்டுக் குடிபெயர வேண்டிய சூழல் வந்தது, அக்காலத்தில் களக்காட்டுப் பகுதி (பழைய திருநெல்வேலி மாவட்டம்) வேணாட்டு அரசர்களிடமிருந்தது, இதனால் சிலர் இங்கே குடியேறினர்.

இங்கிருந்து கேரளம் ஆலப்புழைக்கு குடிபெயர்ந்ததற்கும் சில அரசியல் காரணங்கள் உண்டு. வேணாட்டு அரசர் இராமவர்மாவிற்கு பின் ஆட்சிக்கு வந்த மார்த்தாண்டவர்மா திருவிதாங்கூர் ராஜியத்தை வடிவமைத்தார். அப்போது தமிழ்க் குடும்பங்கள் பல திருவிதாங்கூர் ராஜியத்தில் குடியேறின.

திருவிதாங்கூர் அரசரான கார்த்திகைத் திருநாள் ராமவர்மா காலத்தில் (1758-1798) ராஜா கேசவதாஸ் திவானாக இருந்தார். இவர் நாஞ்சில் நாட்டு கோட்டாறு பகுதியையும் சிறு துறைமுகமாக இருந்த ஆலப்புழையையும் வணிகத்தலமாக மாற்றினார்.

கேசவதாஸ், தமிழ்ப் பகுதியிலிருந்து திருவிதாங்கூருக்கு குடியேறும் நெசவுத் தொழிலாளருக்கும், சிறுதொழில் செய்பவர்களுக்கும் மான்யம் கொடுத்து குடியேற்றினார். இக்காலத்தில் களக்காடு கருங்குளம் போன்ற ஊர்களிலிருந்து சைவ வேளாளர்கள் திருவனந்தபுரம், நெடுமங்காடு, ஆலப்புழை, மாவேலிக்கரை, கொல்லம் எனப் பல ஊர்களில் குடியேறினர்.

திருவிதாங்கூரின் தலைநகரான பத்மனாபபுரத்திலிருந்து திருவனந்தபுரம் பெயர்ந்த போது வேளாளர் சிலரும் திருவனந்தபுரம், ஆலப்புழை, கொல்லம் போன்ற பகுதிகளில் குடிபெயர்ந்தனர்.

இப்படியாக களக்காட்டிலிருந்து ஆலப்புழைக்கு குடிபெயர்ந்ததன் தெக்கே குடும்பம், வடக்கேக் குடும்பம் என்றும் இரண்டு குடும்பங்களில் சுந்தரனாரின் பூர்வீக குடும்பமும் உண்டு. இவ்விரு குடும்பங்களில் தெக்கே குடும்பத்தினரான பெருமாள் பிள்ளை சிறுவணிகராக இருந்தார், இவர் தமிழ் அபிமானியும் கூட.

பெருமாள் பிள்ளையின் மகன் அர்ஜுனன் பிள்ளையும் துணிவணிகர், இவர் ஆலப்புழைக்கு வந்தாலும் களக்காடு பகுதிகளுக்கு வணிகத்திற்காகச் செல்வது உண்டு. அர்ஜுனன் பிள்ளையின் மூத்த மகன் பெருமாள் பிள்ளை. இவரும் துணிவணிகர் சொந்தமாய் பல வண்டிகள் வைத்து வணிகம் செய்திருக்கிறார்.

**சுந்தரனாரின் சிறப்பு:**

பெருமாள் பிள்ளையின் மனைவி மாடத்தி அம்மா. இவரும் திருவனந்தபுரத்திலிருந்து ஆலப்புழைக்குக் குடியேடிய குடும்பத்தினர். இவ்விருவருக்கும் மூத்தமகனாகப் பிறந்தவர் சுந்தர பிள்ளை.

பெருமாள் பிள்ளை தன் மகனுக்கு தன் அப்பா பெயரான அர்ஜுனன் என்னும் பெயரைச் சூடாததற்கு மரபு வழியான ஒரு காரணம் கூறுகின்றனர். பெருமாள் மாடத்தி தம்பதிகளுக்குத் திருமணமாகி பத்து ஆண்டுகள் குழந்தையில்லாமல் இருந்தனர். தங்களின் பூர்வீக ஊர்த் தெய்வமான மதுரை சுந்தரேசுவரரைத் துதித்தனர்.

இப்படியாக வேண்டுதல் நடந்ததால் மகனுக்கு சுந்தரம் என்று பெயரிட்டார். பெருமாள் பிள்ளை சுந்தரம் பிள்ளை மலையாள ஆண்டு 1030 பங்குனி 28 ஆம் தேதி பிறந்தார். இதற்கு நிகராக ஆங்கில ஆண்டு 1855 ஏப்ரல் மாதம் 5 ஆம் தேதி என்று கூறலாம்.

சுந்தரனார் பிறந்த வருஷத்தில் திருவிதாங்கூரின் அரசராக உத்திரம் திருநாள் என்ற அரசர் இருந்தார். இவர் காலத்தில்தான் திருவிதாங்கூரின் அடிமை முறை ஒழிந்தது. இவர் காலத்தில் அனந்தன் விக்டோரியா மார்த்தாண்டவர்மா சானல் (A V M Channel) வெட்டப்பட்டது. இதனால் ஆலப்புழையிலிருந்து தென் திருவிதாங்கூருக்கு நீர்வழிப் பயணம் செய்ய எளிதாயிற்று.

அப்போது ஆலப்புழையிலிருந்த பெருமாள்பிள்ளை இந்த நீர்வழிப் பாதைவழி கோட்டாறு வந்த சவுராஷ்டிரா இன மக்களிடமிருந்து பட்டுத்துணிகளை மொத்தாய் வாங்கிச் சென்றிருக்கிறார். இந்த வணிகத் தொடர்பு தமிழ் மொழியுடனான உறவையும் வளர்க்கப் பயன்பட்டிருக்கிறது. இதே காலங்களில் களக்காட்டில் தன் குடும்ப கோவிலான விநாயகர் கோவிலுக்கும் போயிருக்கிறார்.

**கேரளத்தில் தமிழ் படிப்பு**

சுந்தரனாரைப் பற்றி எழுதியவர்கள் எல்லோருமே அவர் சிறு வயதில் சைவப் பனுவல்களையும் சில நீதி நூற்களையும் படித்தார் என்கின்றனர். கொடும் மலையாள குடியிருப்பில் வாழ்ந்த சுந்தரனார் எப்படித் தமிழ் படித்தார் என்பதை இன்றைய சூழலில் கற்பனை செய்ய முடியாது. அன்றைய நிலை வேறு.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் திருவிதாங்கூர் அரசு தமிழ் மொழியைக் கற்பிப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டியது. இதற்கு ஆவணச்சான்று உண்டு. திருவிதாங்கூர் மகாராணி கவுரி பார்வதிபாய் தன் மகன் சுவாதித்திருநாள் மன்னருக்கு அனுப்பிய கடிதம் பின்வருமாறு:

இந்த ஆவணம், "திருவிதாங்கூரில் தமிழ் படிக்க வசதி செய்து கொடுக்க வேண்டும் என்பதையும், பள்ளிகளுக்குத் தாசில்தாரும், சம்பிரதிக்காரர் என்ற அதிகாரியும் தமிழ் படிப்பவர்கள் எத்தனைபேர்? அவர்களின் பாடங்கள் நன்றாக நடக்கிறதா, முடிந்து விட்டதா" என்பதைப் பற்றி எல்லாம் விசாரித்து அறிக்கை தயாரிக்க வேண்டும் என்ற செய்தியையும் கூறுகிறது. இதுபோன்று வேறு சான்றுகள் உண்டு. 19-ஆம் நூற்றாண்டில் திருவிதாங்கூரில் தமிழ் கற்பிக்கப்பட்டதன் வரலாறு இது. இருபதாம் நூற்றாண்டின் நிலை இன்னும் மோசமாகிவிட்டது. 21-ஆம் நூற்றாண்டில் முழுதும் அரசியலாகிவிட்டது. தமிழ் வெறுப்பு வெளிப்படையாகிவிட்டது.

பெ.சு. வாழ்ந்த நூற்றாண்டில் திருவிதாங்கூரில் மலையாளக் கவிஞர்களும், இலக்கணவாதிகளும் தமிழிலிருந்து மலையாளம் வந்தது என்று கூறிக்கொள்வதில் தயக்கம் காட்டவில்லை. தமிழ் மொழியிலிருந்துதான் மலையாள மொழி உருவானது என்ற கருத்தைக் கால்டுவெல், குண்டர்ட் போன்றவர்கள் கூறிய போது கேரளத்து அறிஞர்கள் அதை ஒத்துக்கொண்டனர். பேராசிரியர் இளம்குளம் குஞ்சன்பிள்ளை இக்கருத்தை விரிவாக ஆராய்ந்திருக்கிறார். இவர் "கி.பி. 8-ஆம் நூற்றாண்டுவரை கேரளத்தின் செய்யுள் மொழியும் பேச்சு வழக்கு மொழியும் தமிழாகத்தான் இருந்தது." என்கிறார்.

கேரளத்து படைப்பாளிகள் சிலப்பதிகாரம், பதிற்றுப்பத்து சங்கப்பாடல்களில் சில ஆகியவற்றைத் தங்கள் மண்ணின் கவிதைகளாகவே உரிமை கொண்டாடுகின்றனர். குலசேகர

ஆழ்வார், சேரமான் பெருமாள் நாயனார், புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர், வேணாட்டடிகள் எனக் கேரளத் தமிழ்ப் படைப்பாளிகளின் பட்டியல் நீளமாக உள்ளது.

**இரண்டு இலக்கண நூற்கள்**

மலையாள மொழியின் இலக்கண நூல்களில் லீலாதிலகம், கேரள பாணினீயம் இரண்டும் முக்கியமானவை. லீலாதிலகம் 14-ஆம் நூற்றாண்டினது. இந்த நூலைப் பதிப்பித்த இளம்குளம் குஞ்சம்பிள்ளை "லீலா திலக ஆசிரியர் தொல்காப்பியம் வீரச்சோழியம், சேந்தன் திவாகரம் படித்தவர். தொல்காப்பிய உரை ஆசிரியர்களான தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர் ஆகியோரை நுட்பமாகப் படித்தவர். அவர்களின் மேல் விருப்பமுடையவர்'' என்கிறார்.

இன்னொரு இலக்கண நூல் கேரள பாணினீயம், இதன் ஆசிரியர் ராஜ ராஜ வர்மா திருவிதாங்கூர் அரச குடும்பத்தினர், (1868-1918) கேரளம் சங்னாச்சேரி ஊரினர். இவர் திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில் படித்த போது சுந்தரனார் ஆசிரியராக இருந்தார்.

கேரள வர்மா தன் இலக்கண நூலை 1895ல் வெளியிட்டார் என்றாலும் அதை 80-க்களின் இறுதியில் எழுத ஆரம்பித்துவிட்டார். இக்கால கட்டத்தில் வர்மா சுந்தரனாருடன் தொடர்ந்து உரையாடி இருக்கிறார். இந்த பாணினீயத்தில் உள்ள நீண்ட முகவுரையைப் படித்து ஆலோசனை சொன்னவர்களில் சுந்தரனாரும் ஒருவர்.

கேரளவர்மா தன் நூலின் முகவுரையில் கொடுந்தமிழ்மொழி திராவிடமாகிய இமயமலையிலிருந்து பாய்ந்த சமஸ்கிருத யமுனையுடன் கலந்து மலையாள மொழியாயிற்று. ஆரிய திராவிடக் கலப்பு சாயலில் ஆறு விழுவதைப் போன்றது என்றெல்லாம் உவமானங்களுடன் கூறி தமிழிலிருந்து மலையாளம் பிறந்தது என்கிறார்.

கேரளவர்மாவின் இந்தக் கருத்து சுந்தரனார் ஆராய்ந்து கண்ட முடிவு. இதனால் தான் அவர்தன் நாடக நூலில் பாயிரத்தில் "கன்னடமும் களித்தெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும் உன் உதிரத்து உதித்து எழுந்து ஒன்றுபல ஆயிடினும்'' என்கிறார்.

கேரளவர்மா தமிழ் நன்கு அறிந்தவர். சுந்தரனாரிடம் அவர் உரையாடுவதற்கென்றே கல்லூரிக்குப் போவாராம். சுந்தரனாரிடம் பெரும் மதிப்பு வைத்திருந்தவர்களில் இவரும் ஒருவர்.

## 2. படிப்பும் பணியும்

பெ.சு. காலத்தில் கொடும் மலையாளக் குடியிருப்பான ஆலப்புழையில் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் இருந்தன. திருவிதாங்கூர் அரசு தமிழர்களின் நலன்பற்றி அக்கரைக் கொண்டிருந்த காலம். பெ.சு. தன் தொடக்கப்படிப்பைத் திண்ணைப் பள்ளிக் கூடங்களிலே

படித்தார். பின் ஆலப்புழையில் ஆங்கில வெர்ணாக்குலர் பள்ளியில் படித்தார். இங்கு பத்தாம் வகுப்பில் முதல் மாணவனாகத் தேறினார். இதற்காக மாதந்தோறும் எட்டு ரூபாய் அரசு உதவித் தொகை பெற்றார். இதை பி.ஏ. படிப்பு முடிவது வரை பெற்றார்.

1871-இல் மெட்ரிக்குலேசன் படிப்பு; 1873-இல் எப்.எ. படிப்பு; இதில் வரலாறும், தத்துவமும் படித்தார். தொடர்ந்து மகாராஜா கல்லூரியில் தத்துவத்தைப் பாடமாக எடுத்து பி.எ. பட்டம் பெற்றார். பி.ஏ. யில் முதல் வகுப்பில் தேறினார். அப்போது திருவனந்தபுரம் கல்லூரி சென்னைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இருந்தது. 1876இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதல் நிலையில் தேறிய நான்கு மாணவர்களில் பெ.சுவும் ஒருவர்.

இக்காலத்தில் பெ.சு.வுக்கு ஆசிரியராக இருந்தவர்கள் பென்சிலி சேசையா, மாதவன் பிள்ளை, பண்டித சாமிநாத பிள்ளை ஆகியோர் முதல்வர் டாக்டர் ராஸ் துரை. திருவிதாங்கூர் திவான் மாதவராயரின் மகன் பெ.சு.வின் வகுப்புத் தோழன். 1880-இல் பெ.சு. தத்துவத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார். இதற்காகத் தன்னைத் தயார் செய்து கொள்ள சென்னையில் தங்கினார்.

1882-85 ஆம் ஆண்டுகளில் பெ.சு சட்டம் படித்தார். ஏதோ காரணத்தால் பட்டம் பெறவில்லை. பெ.சு படித்த கல்லூரி அவரது வாழ்வில் கலந்தது. படிப்பு, பணி எல்லாம் அங்குதான்.

திருவனந்தபுரம் பாளையத்தில் இருக்கும் இப்போதைய பல்கலைக்கழக கல்லூரிதான் பழைய மகாராஜா கல்லூரி. இதற்கு என்றும் ஒரு பாரம்பரியம் உண்டு. சுவாதித்திருநாள் என்ற திருவிதாங்கூர் அரசர் 1836-இல் ஆரம்பித்த His Highness the Rajas Free School பள்ளிதான், 1866-இல் மகாராஜா கல்லூரியாக மாறியது. இது ஆரம்பித்த காலகட்டத்தில் 500 மாணவர்கள் படித்தனர். திருவிதாங்கூரின் திவானாக இருந்தவரும் திருவிதாங்கூர் வரலாற்றை எழுதியவருமான நாகம் அய்யா இக்கல்லூரியில் படித்தார். இங்கே புதிய கட்டங்கள் கட்டப்பட்டபோது தான் பெ.சு கல்லூரியில் சேர்ந்தார். அப்போதே தமிழ், சமஸ்கிருதம், மலையாளம் என மூன்று மொழிகளும் கற்பிக்கப்பட்டன.’

## தமிழ் படிப்பு

ஆலப்புழையில் பிறந்து திருவனந்தபுரத்தில் வாழ்ந்த பெ.சு தமிழ் இலக்கியங்களை யாரிடம் படித்தார்? யாப்பை யாரிடம் கற்றுக் கொண்டார்? அந்த அளவு தமிழ் அறிவு எப்படி வந்தது? என்பது புரியாத புதிர். இது குறித்த ஆதாரபூர்வமான செய்திகள் குறைவாகக் காணப்படுகின்றன. தன் சமகால தமிழ் பதிப்பாளர்களில் உ.வே.சா. சி.வை. தாமோதரன்பிள்ளை, முகவை ராமாநுஜக் கவிராயர், திருத்தணிகை விசாகப்பெருமாள் கவிராயர் எனத் தமிழ்

இலக்கியங்களை அச்சேற்றிய சிலருடன் உரையாடியிருக்கிறார். சிலரிடம் கடிதத் தொடர்பு கொண்டிருந்தார். இதனால்தான் “தமிழே உன் புகழை எந்த பழம் நூற்களைப் புதுக்கியும் தொண்டு புரிந்தனர்’’ என்கிறார். பெ.சு தமிழ் படித்தற்குரிய பின்னணி திருவனந்தபுரத்தில் இருந்தது. இதை அறிவது அவசியம்.

கேரளத்து மறுமலர்ச்சியாளரான ஸ்ரீ நாராயணகுரு மலையாளத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர். ஆனால் தமிழை அறிந்தவர்; தேவார திருவாசகம் படித்தவர்; இதன் பின்னணியில் தமிழில் சில பாடல்கள் எழுதியவர். திருக்குறளில் சில பாடல்களை மலையாளத்தில் மொழிபெயர்த்தவர்.

நாராயணகுருவின் வாழ்வு நிகழ்ச்சிகளைப் பதிவு செய்த ஒருவர் “குரு வாழ்ந்த காலத்தில் தென் கேரளத்தில் தமிழ் படிப்பதற்குரிய சூழ்நிலை இருந்தது. திருவனந்தபுரம் ஆரியசாலையில் தமிழ் புத்தகக்கடை ஒன்று செயல்பட்டது. இது பகுதி நேரக்கடை இக்கடையை நடத்தியவர் வேறு தொழிலும் செய்தார். மாலையில் கடை திறப்பார். தென் கேரளத் தமிழர்களை நம்பியே இக்கடை இருந்தது. இக்கடைக்கு நாராயணகுரு வருவார். அங்கே பக்தி இலக்கியங்கள் மட்டுமல்ல, இலக்கண இலக்கியங்களும் இருந்தன’’ என்கிறார். (ஸ்ரீகுருதேவர் நூற்றாண்டு மலர் - பாபநாசம். 1954).

நாராயணகுருவின் சமகாலத்தவரான பெ.சு இக்கடையில் புத்தகம் வாங்கியிருக்கிறார். இக்கடைக்கு வந்த தமிழ் அபிமானிகளுடன் தொடர்பு கொண்டிருக்கிறார். பெ.சு தமிழராகப் பிறந்தவர்; பூர்வீகம் பாண்டி நாடு; சைவ வேளாளர் பரம்பரையினர்; வீட்டில் தமிழ்தான் பேசினார்; தமிழ்ப் பண்பாட்டை மறக்காத குடும்பத்தினர்.

பெ.சு ஆலப்புழையில் இருந்தபோது தந்தையிடமும், பிற உறவினர்களிடமும் சைவப்பனுவல்களைப் பாடம் கேட்டிருக்கிறார். திருவனந்தபுரத்தில் உறவினர் வீட்டிலிருந்து படித்தபோது தமிழ் தொடர்பு அதிகரித்தது. நாகப்பட்டினம் நாராயணசாமிப் பிள்ளையிடம் இலக்கணம் கற்றிருக்கிறார்.

பெ.சு திருநெல்வேலி ம.தி.தா. இந்துப்பள்ளியின் தலைமைப் பொறுப்பில் இருந்தபோது (1877-78) தமிழை, முறையாக கற்றிருக்கிறார். அப்போது ஸ்ரீகோடகநல்லூர் சுவாமிகளிடம் சித்தாந்த சாத்திரங்களை கற்றார். அதோடு பெ.சு சுயமாகவே தமிழ் இலக்கியங்களைப் படித்திருக்கிறார். திருவனந்தபுரம் கல்லூரியில் பணியாற்றியபோது கல்லூரித் தமிழ்த்துறைக்குப் புத்தகங்களை வாங்கியிருக்கிறார்.

**கல்விப்பணி**

42 ஆண்டுகள் வாழ்ந்த பெ.சு 17 ஆண்டுகள் கல்லூரிகளிலும், ஓராண்டு பள்ளியிலும், மூன்று ஆண்டுகள் அரசுத்துறையிலும் ஆக 21 ஆண்டுகள் பணி செய்தவர். இக்காலத்தில் முழுநேர ஆய்வாளராகவும் இருந்தார். 1876-இல் மகாராஜா கல்லூரியில் பி.ஏ. முடித்த வருஷமே பயிற்றுநர் ஆனார். மாணவர்களுக்கு வரலாறும் தத்துவமும் எடுத்தார். அப்போது இப்பணியில் சேர இவரது ஆசிரியர் ராஸ் உதவியிருக்கிறார்.

திருநெல்வேலி ம.தி.தா இந்துப்பள்ளியில் ஆசிரியர் தேவை என வந்தபோது சென்னை மாகாணக் கல்வித்துறை தலைவராக இருந்த டாக்டர் டங்கன் என்பவர் பெ.சு. வை சிபாரிசு செய்தார். பெ.சு திருநெல்வேலி ம.தி.தா. இந்துப்பள்ளியில் ஓராண்டு பணிபுரிந்தார். இக்காலத்தில் இப்பள்ளியில் F.A. கொண்டுவர முயற்சி செய்தார்.

இக்காலத்தில் திருவனந்தபுரம் மாகாராஜா கல்லூரியில் தத்துவத்துறை பேராசிரியராக இருந்த டாக்டர் ராபர்ட் ஹார்வி (Dr. Rober Harvey) என்பவர் தன் சொந்த தேசமான இங்கிலாந்துக்குச் செல்ல விரும்பினார். இவர் தன்னுடைய இடத்தில் ஆசிரியராக அமருவதற்கு பெ.சு தகுதியானவர் என நினைத்தார். திருவிதாங்கூர் அரசிடம் சிபாரிசு செய்தார். அதனால் பெ.சு திருநெல்வேலியை விட்டு திருவனந்தபுரம் வந்தார். அங்கு 1878 முதல் 1882 வரை தத்துவத் துறையில் ஆசிரியராக இருந்தார்.

திருவிதாங்கூர் சமஸ்தான அரசராக இருந்த விசாகம் திருநாள், பெ.சு வை அரசுப்பணிக்கு அழைத்தார். பெ.சு.வை Commissiones of separate Revenue (பிறவகை சிரஸ்தார்) என்ற பதவியில் இருத்தினார் (1882 - 1885). இது அரசு நிர்வாகம் தொடர்பானது அறிவுசார் விஷயங்களுக்கோ இலக்கியங்களுக்கோ தொடர்பற்றது.

திருவிதாங்கூரில் அப்போது வருவாய்த் துறையும் அறநிலைத் துறையும் ஒன்றாக இரந்தது. அதனால் நிர்வாகம் தொடர்பாக தென் திருவிதாங்கூர் கோயில்களுக்குச் சென்றிருக்கிறார். கோவில் கல்வெட்டுகள், ஆவணங்களை பரிசோதித்திருக்கிறார். 1885-இல் இப்பதவியைத் தானாக விட்டு விலகினார். அதற்கு ஒரு காரணம் இருந்தது.

திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில் தத்துவத்துறை பேராசிரியராகவும், தலைவராகவும் இருந்த டாக்டர் ஹார்வி தன் பணியை விட்டு தாய்நாடு செல்ல விரும்பினார். அவர் தன் இடத்தில் பெ.சு.வை நியமிக்க நினைத்தார். பெ.சு.வும் இசைந்தார். இதனால் 1885இல் மறுபடியும் மகாராஜா கல்லூரிப் பேராசிரியர் ஆனார். தன் இறுதிக்காலம் வரை (1897) இப்பதவியில் இருந்தார்.

## தோற்றம்

பெ.சு.வின் உறவினர்களும் கே.என. சிவராஜபிள்ளையும் அவரது மாணவர்களும் கூறிய செய்திகளின் அடிப்படையில் வையாபுரிப்பிள்ளை பெ.சு. வின் தோற்றத்தை பின்வருமாறு வர்ணிக்கிறார்.

'பெ.சு. நடுத்தர உயரம்; சற்றே ஸ்தூல சரீரம்; மாநிறம்; அபூர்வ சோபையோடு வசீகரமாய் அமைந்த முகம்; அறிவொளியும் அன்பும் மிளிர்ந்து அமர்ந்து நோக்கும் கண்கள்; புன்னகை தவழும் இதழ்கள்; இனிமையும் அழகும் நகைச்சுவையும் ததும்பும் பேச்சு" என்கிறார்.

பெ.சு.வின் புகைப்படங்கள் மிகக்குறைவு. அவர், கல்லூரியில் பணிபுரிந்தபோது எடுக்கப்பட்ட அபூர்வமான படங்களில் சில பெ.சு.வின் மகன் நடராஜபிள்ளையின் வீட்டிலிருந்தன. சமஸ்தான போலீசார் அள்ளிச்சென்ற ஆவணங்களுடன் அந்தப் படங்களும் சென்றன. கிடைத்த படங்களின் அடிப்படையில் வரையப்பட்ட எண்ணெய்சாய ஓவியம் திருவனந்தபுரம் பல்கலைக்கழகக் கல்லூரியில் உள்ளது. இப்போது கவனிப்பாரற்றுக் கிடக்கிறது'.

## அரசரின் உதவி

சுந்தரனார் பிறந்த காலத்தில் திருவிதாங்கூரின் அரசராக இருந்தவர். உத்திரம் திருநாள் ஆவார். இவரை அடுத்து வந்த ஆயில்யம் திருநாள் (1860 - 1880), விசாகம் திருநாள் (1880 - 1885) ஸ்ரீமூலம் திருநாள் (1885 - 1924) ஆகிய அரசர்களின் காலத்தில் பெ.சு. வாழ்ந்திருக்கிறார்.

இந்த அரசர்களில் ஆயில்யம் திருநாள் தென் கேரளத்தில் தமிழ் படிப்பவர்களுக்கு உதவ முன்வந்தவர் விசாகம் திருநாள். தமிழ் பயிற்றுவித்த பள்ளிகளின் மான்யத்தை உயர்த்தியவர். திருவிதாங்கூர் மன்னர்களில் விசாகம் திருநாளிடம் பெ.சுவுக்கு நெருங்கிய தொடர்பு உண்டு. அரசர் பெ.சுவுக்குத் தேவையான புத்தகங்களை வெளிநாடுகளிலிருந்து தருவித்துக் கொடுத்திருக்கிறார். பெ.சு.வை அரசு உயர் பதவியில் இருத்தியவரும் (1882 - 1885) இந்த அரசரே.

ஆயில்யம் திருநாளுக்கும், சுந்தரனாருக்கும் இருந்த தொடர்பை குஞ்சுராமன் என்ற மலையாள அறிஞர் எழுதியதை திருவனந்தபுரத்திலிருந்து வெளிவந்த வஞ்சி நாடு பத்திரிகை மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளது.

சுந்தரனார் மிக அரிய நூற்களை விலைகூடிய நூற்களை ஆயில்யம் திருநாள் அரசரின் உதவியுடன் பெற்றிருக்கிறார். ஆங்கில நூற்களை லண்டனிலிருந்து தருவித்துக் கொடுக்க அரசர் உத்தரவிட்டிருக்கிறார். இறையியல், தத்துவம், தர்க்கம் தொடர்பாக உலகளாவிய

அளவில் வந்த ஆங்கில நூற்களை படிப்பதற்குரிய சூழ்நிலையை அரசர் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார். இவரது வாழ்க்கை வரலாற்றை எழுதியவர்கள் ‘இவர் ஆழ்ந்த படிப்பாளி, இதற்குக் காரணமான அரசர் இருவருமே உயர்ந்தவர்கள் என்கிறார்.

திருவிதாங்கூர் அரசர்களில் நீண்ட ஆண்டுகள் (1885 - 1925) ஆட்சி செய்த ஸ்ரீமூலம் திருநாள் அரசருடன் சுந்தரனாருக்கு நெருங்கிய தொடர்பு உண்டு. திருவனந்தபுரம் கிழக்கே கோட்டையில் உள்ள அரசரைக் காண அடிக்கடி சென்றிருக்கிறார். நாளடைவில் இது நெருக்கத்தை உருவாக்கி அரசருக்கு ஆலோசனை வழங்கும் அளவுக்குச் சென்றது.

ஒருமுறை சுந்தரனார், தனக்கு திருமணமாகி 14 ஆண்டுகள் கழித்து ஆண்குழந்தை பிறந்த செய்தியைக் கூறியிருக்கிறார். இது கேட்டு மகிழ்ந்த அரசர் தன் உண்டுகாட்டியை (எவலர்) அழைத்து குழந்தையின் ஜாகத்தை கணித்து அறிந்து வருமாறு ஏவினார். உண்டுகாட்டி கேட்டுவந்து சொன்ன செய்தி அரசருக்கு திருப்தி தரவில்லை.

அரசர் அரண்மனை ஜோதிடர் எஸ். தாணுபிள்ளையிடம் குழந்தையின் எதிர்காலத்தைக் கணிக்கும்படி சொன்னார். அவரும் கணித்தார். அரசர் சுந்தரம்பிள்ளையை அழைத்து அவரிடம் ஜாதகக் கணிப்புக் குறிப்பை கொடுத்தார். சுந்தரனார் அதைப் படித்து திகைத்தார். “இந்த ஜாதகன் மாளிகையில் வாழ்வான்; எல்லா ஐஸ்வர்யங்களும் பெறுவான்; உயர்ந்த பதவியை வகிப்பான், ஆயுள்காலம் 75-க்கு மேல், ஆனால் இறுதிக்காலத்தில் வறுமையில் வாழ்வான்” இந்தக் குறிப்பை மீண்டும் படித்த சுந்தரனார் அரசரைப் பார்த்தார்.

“அரசே எனக்கு இப்போது இருக்கும் சொத்துக்கள் தலைமுறைக்குப் போதும், ஆனால் இந்தக் கணிப்புக்கு என்ன பதில் என்று தெரியவில்லை” என்றார். அரசர் “நாம் அதற்கு வேறு வழி செய்யலாம். உமது சொத்துகள் போனாலும் உம் மகன் வாழ அடுத்தூண் வழங்கப்படும். இது அவன் உயிர் இருக்கும் வரை உதவும்” என்றார்.

அரசரிடம் ஜோதிடர் சொன்னது நடந்தது. சுந்தரனாரின் மகன் நடராஜபிள்ளை தன் இறுதிக்காலத்தில் ஓலை வீட்டில் இருந்தார் அவரது வறுமை காலத்தில் அடுத்தூண் தொகை உதவியது.

**சைவப் பிரகாச சபை**

திருவனந்தபுரத்தில் 18,19 நூற்றாண்டுகளில் திருநெல்வேலி மாவட்டத்தின் தென் பகுதியிலிருந்தும், நாஞ்சில் நாட்டிலிருந்தும் தமிழ் மக்கள் பெருமளவு குறியேறினர். இவர்களில் மிகப் பெரும்பாலோர் சைவ மரபு உடையவர்கள். சுந்தரனார் குடும்பமும் இதில் விதிவிலக்கல்ல.

சுந்தரனார் பணி நிமித்தம் திருவனந்தபுரத்தில் குடியேறியபோது தனிக்கூட்டங்களில் சைவம் பற்றிப் பேசியிருக்கிறார். அப்போது திருவிதாங்கூர் அரசு தமிழ் பேசிய மக்களுக்காக "பொதுமக்கள் சொற்பொழிவு சங்கம்" என்ற அமைப்பை நிறுவியிருந்தது. திருவனந்தபுரம் சாலையில் இது செயல்பட்டது. இங்கு சுந்தரனார் பலமுறை பேசியிருக்கிறார். இச்சங்கத்தின் தலைவராயும் இருந்திருக்கிறார்.

இப்படியாக நடந்த ஒரு கூட்டத்தில் சைவசித்தாந்தத்தையும் தமிழையும் பேணி அறிவுறுத்துவதற்காக ஒரு சபை உருவாக்கலாம் என்ற திட்டம் வந்தது.

சுந்தரனாரின் ஆலோசனையின்படி வலிய மேலெழுத்து திரவியம் பிள்ளை இதைச் செயலாற்ற வந்தார். இவர் திருவிதாங்கூர் அரசில் தலைமைக் கணக்கராக இருந்தார். இவரது மகன் இசைப்புலவர் டி. லட்சுமண பிள்ளை, இவரும் திருவிதாங்கூர் அரசில் தலைமை தணிக்கை அதிகாரியாக இருந்தவர். இன்னொருவர் சுப்பிரமணிய பிள்ளை இவரது மகன் உண்டியக் கடை கணபதிப்பிள்ளை என்பவர்.

இப்படியாகச் சிலரின் முயற்சியால் உருவான சைவப் பிரகாச சபை நிர்வாகம் நடத்த கட்டிடம் வாங்க சுந்தரனார் பெரும் அளவில் உதவினார். அப்போதே ரூ. 500 அன்பளிப்பு கொடுத்தார். 1985-இல் நிறுவப்பட்ட இச்சபையின் கட்டிடம் இப்போதும் உள்ளது. இந்த சபையில் கே.என். சிவராஜபிள்ளை, எஸ். வையாபுரிப்பிள்ளை, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை என்னும் தமிழறிஞர்கள் உறுப்பினராய் இருந்து தமிழ் வளர்த்திருக்கிறார்கள். 1885இல் ஆரம்பிக்கப்பட்ட இச்சபை இன்று புதிய பொலிவுடன் சிறப்பாய் செயல்படுகிறது.

மகாகவி சுப்பிரமணிய பாரதி ஒருமுறை (1919) திருவனந்தபுரத்திற்கு உறவினரின் திருமணத்திற்காகச் சென்ற போது இச்சபைக்குத் தற்செயலாகச் சென்றிருக்கிறார். அங்கு வையாபுரிப்பிள்ளையும் வேறு அறிஞர்களும் இருந்திருக்கிறார்கள். பாரதி தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். ஊழிக்கூத்துப் பாடல் ஒன்றையும் பாடியிருக்கிறார். இது குறித்து வையாபுரிப்பிள்ளை ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்.

## 3. இறுதிக்காலம்

### குருபக்தி

பெ.சு தன் வாழ்வில் மிகவும் மதித்தவர்களின் பட்டியலில் கோடக நல்லூர் சுந்தர சுவாமிகளும்; பேராசிரியர் ஹார்வியும் முக்கியமானவர்கள். பெ.சு தன் ஆசிரியரும், தன் கல்விப்பணிக்கு வழிகாட்டியவருமான ஹார்வியைப் பெரிதும் மதித்தார். தான் குடியிருந்த இடத்திற்கு ஹார்விபுரம் எனப் பெயரிட்டார். மனோன்மணியம் என்ற தன் நாடகநூலை

ஹார்விக்கே சமர்ப்பணம் செய்தார். ஹார்வியின் எண்ணெய்சாய ஓவியம் பெ.சு.வின் வீட்டில் இருந்ததாம். நண்பர்களும், உறவினர்களும் வீட்டிற்கு வரும்போது, அந்தப் படத்தைக் காட்டி ஹார்வியின் பெருமையைச் சொல்லுவாராம்.

பெ.சு மிகவும் மதித்த இன்னொருவர் கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள். இவரைத் தன் ஞானகுருவாக பே.சு. ஏற்றுக்கொண்டார். சுந்தரசுவாமிகள் அரிமணம் என்ற ஊரில் தங்கி இருந்தபோது மகா சந்நிதானம், மகா வாக்கியச் சுருக்கம், வேதாகமம், சம்பிரதாயப் பிரகரணம், மனோ நாசமார்க்கம் ஆகிய நூற்களை இயற்றினார். பெ.சு இந்த நூற்கள் எல்லாவற்றையும் ஒரே தொகுப்பாக (நிஜானந்த விலாசம்) வெளியிட்டுள்ளார்.

**எழுதியவை**

பேராசிரியர் சுந்தரனார் 42 வயது வரைதான் வாழ்ந்தார். 22 வயதில் எழுத ஆரம்பித்தார்; இதன்பின் 20 வருடங்கள் வாழ்ந்திருக்கிறார். இக்காலங்களில் இவர் எழுதியவை மிகக் குறைவுதான். இவர் தமிழில் எழுதியனவையாக மனோன்மணியம் நாடகம் உட்பட பிற கட்டுரைகள் எல்லாம் சேர்த்து 300 முதல் 320 பக்கங்கள் அளவில் வருகின்றன. ஆக 20 ஆண்டுகளில் இவர் எழுதியவை 650 பக்கங்களே இன்னும் தேடினால் 100 பக்கங்கள் வரலாம் ஒருவகையில் இந்த அளவு குறைவுதான்.

சுந்தரனாரின் முதல் நூல் சிவகாமியின் சரிதம் 1879-இல் திருநெல்வேலியிலிருந்து வெளிவந்தது. இதன் இரண்டாம் பதிப்பு 1889-இல் வந்தது. சிவகாமியின் சரிதம் மனோன்மணியம் நாடகத்தின் ஒரு பகுதியாகச் சேர்க்கப்பட்ட பின்பு இந்நூல் தனியாக வெளிவரவில்லை. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்ட பதிப்பில் கொ.சி. இராமலிங்கத் தம்புரானின் பதிப்பில் உரை உண்டு.

நூற்தொகை விளக்கம் என்ற இவரது நூலின் முதல் பதிப்பு 1888-இல் வந்தது. சுந்தனார் மனோன்மணியம் நாடகத்தை 1885 அளவில் எழுத ஆரம்பித்து விட்டாலும் 1891-இல் தான் அச்சில் வந்தது. இது சென்னை ரிப்பன் அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டது. இவை தவிர 1885 முதல் 1896-க்குள் சில கட்டுரைகளும் கவிதைகளும் எழுதியிருக்கிறார்.

ஆங்கிலத்தில் இவர் எழுதிய கட்டுரைகள் சென்னை தாம்பரம் கிறித்தவக் கல்லூரி மலரில் வந்தன. இவை 1889-1896-க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டவை. இவற்றில் The Age of Thirugnanasambhandha என்ற கட்டுரை 1895-இல் நூல் வடிவில் வந்தது. இவர் காலத்தில் வந்த ஆங்கில நூல் இது ஒன்றுதான். இவர் இறந்த பின்னர் The Ten Tamil Idyils, Some Early Sovereigns of Travancore, Miscellaneous Travancore Inscription ஆகிய மூன்று நூற்களும் வெளிவந்தன.

அறிஞர்கள் தொடர்பு

மயிலை சீனி வேங்கடசாமி, பெ.சு. வைத் தமிழின் தலைசிறந்த அறிஞர் எனப் பாராட்டுவார். பெ.சு. பிறப்பதற்கு 43 ஆண்டுகளுக்கு முன்பு திருக்குறள் அச்சில் வந்தது; 15 ஆண்டுகளுக்கு முன்பு பரிமேலழகர் உரை வந்தது. இக்காலத்தில் கொடும் மலையாளக் குடியிருப்பில் இருந்த இவர் இவற்றைப் படித்தார். மேலும் இவர் 30 ஆண்டுகள் வாழ்ந்திருந்தால் தமிழ் மொழி வரலாறு நாட்டு வரலாறு குறித்து நல்ல நூற்கள் எழுதியிருப்பார் என்கிறார் (மயிலை சீனிவேங்கடசாமி பகுதி - 1991).

பெ.சு. வாழ்ந்த காலகட்டத்துத் தமிழறிஞர்கள் அவரை அறிந்திருக்கின்றனர். பெ.சு இவர்களை அறிந்திருக்கிறார்; அவர்களின் நூற்களைப் படித்திருக்கிறார். கால்டுவெல் (1814 - 1891), ஜி.யூ. போப் (1820-1903) ஆறுமுக நாவலர் (1823 - 1879) வேத நாயகம் பிள்ளை (1826 - 1869), கிருஷ்ணபிள்ளை (1827 - 1900), பூண்டி அரங்கநாத மறைமலையடிகள் (1876 - 1950) எனப் பலருடன் நேரடியாகவும் நூற்கள் வழியும் தொடர்பு கொண்டிருக்கிறார்.

சுந்தரனார் உவேசாவுடன் நல்ல உறவு வைத்திருந்ததால் ஒருமுறை நேரடியாகச் சந்தித்திருக்கிறார். இது பற்றிய தகவல் உவேசாவின் என் சரித்திரத்தில் உள்ளது. மனோன்மணியம் நாடகம் வெளியான சமயம் சென்னைப் பல்கலை எப்.எ வகுப்பில் பாடத்திட்டத்தில் இருந்தது. பாடம் நடத்தியவர்களில் உவேசாவும் ஒருவர். அவர் பாடம் நடத்தும்போது அந்த நாடகத்தின் சில பிழைகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இந்த விஷயத்தைச் சுந்தரனார் அறிந்தார். இது பற்றி உவேசாவுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் வேறு விஷயங்களை எல்லாம் எழுதிவிட்டு திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில் தமிழாசிரியர் வேலை காலியாக இருக்கிறது. இந்த வேலைக்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம். 65 ரூபாய் சம்பளம், பின் படிப்படியாகக் கூடும். என்னும் செய்தியும் இருந்தது. இதுபற்றி உவேசா என் சரித்திரம் நூலில் கூறுவது பின்வருமாறு (1950 ப 1017).

“அக்காலத்தில் சுந்தரம்பிள்ளை இயற்றிய மனோன்மணியம் நாடகத்தின் சில பகுதிகள் காலேஜ் வகுப்புகளுக்குப் பாடமாக இருந்தன. அவற்றை தான் பாடம் சொல்லிவரும்போது பாராட்ட வேண்டிய இடத்தில் பாராட்டிவிட்டு பிழையாகத் தோன்றிய சிலவற்றைப் பிள்ளைகளுக்கு எடுத்துச் சொன்னேன். இவ்விஷயத்தை யார் மூலமாகவோ அறிந்த சுந்தரம்பிள்ளை அக்குற்றங்கள் இன்னவென என்று தெரிவிக்கும்படி எனக்குக் கடிதம் எழுதினார். நான் அங்கங்கே கண்டவற்றைத் தொகுத்து எழுதி அனுப்பவே அவர் உசிதமான திருத்தங்களை ஏற்றுக்கொண்டு தன் நன்றியைத் தெரிவித்தார். அது முதல் அடிக்கடி அவர் எனக்குக் கடிதங்கள் எழுவார்” என்கிறார்.

உ_வேசா

கிறித்தவக் கம்பர் என ராபி சேதுப்பிள்ளை பாராட்டும் எச்.எ. கிருஷ்ணபிள்ளை (1827 - 1890) சுந்தரனாரின் நண்பர் இவர் திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில் மூன்று ஆண்டுகள் தமிழாசிரியராக இருந்திருக்கிறார் (1887 - 1890). இவர் குடும்பத்துடன் திருவனந்தபுரம் ஜகதியில் தங்குவதற்குரிய ஏற்பாடுகளை சுந்தரனார் செய்திருக்கிறார். அடிக்கடி சுந்தரனாரைச் சந்தித்து உரையாடியிருக்கிறார்.

இவர் திருவனந்தபுரம் கல்லூரியில் சேர்ந்தபோது இரட்சண்ய யாத்திரீகம் காவியத்தின் பெரும்பகுதியை எழுதி முடித்துவிட்டார். ஏற்கெனவே இக்காப்பியத்தின் சில பாடல்கள் நற்போதகம் என்ற மாத இதழில் வந்திருக்கின்றன (1878). இதன்பிறகு முழுக்காப்பியத்தையும் இயற்றினார். இக்காவியத்தின் பெரும்பாலான பாடல்கள் திருவனந்தபுரத்தில் எழுதப்பட்டன. சுந்தரனாரிடமும் காட்டப்பட்டன. முழுகாவியமும் 1899-இல் அச்சானது. இதன் முதல்பதிப்பை சுந்தரனாருக்கு அனுப்பினார். அவர் மகாராஜா கல்லூரிக்கு அதை அன்பளிப்பாகக் கொடுத்திருக்கிறார்.

சுந்தரனாருக்கும், மறைமலையடிகளுக்கும் உள்ள உறவு நெருக்கமானது. மறைமலையடிகள் (1876 - 1950) சுந்தரனாரைவிட 21 வயது இளையவர். ஆனால் சுந்தரனார் மறைமலையடிகளை நண்பனாக நடத்தியிருக்கிறார். மறைமலையடிகள் வரலாற்றை எழுதிய மறை திருநாவுக்கரசு இவர்களின் நட்பை விரிவாக எழுதியிருக்கிறார். மறைமலையடிகளின் சிந்தனைக் கட்டுரைகள் என்ற நூலிலும் சுந்தரனாரைச் சந்தித்த நிகழ்வைச் சுருக்கமாகத் தருகிறார்.

சுந்தரனாரின் இளமைக்கால ஆசிரியர்களில் ஒருவர் நாராயண சாமிப்பிள்ளை. இவர் நாகப்பட்டிணத்துக்காரர். திருவனந்தபுரத்தில் புத்தகக்கடை நடத்தியிருக்கிறார். வேதாசலம் என்றும் மறைமலையடிகளும் இவரிடம் பயின்றார். மனோன்மணியம் நாடகம் வெளியான காலத்தில் வேதாசலம், சுந்தரனாருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதில் மனோன்மணியத்தைத் தானும், நாராயண பிள்ளையும், படித்ததாகவும் அத்தகு நாடகம் தமிழுக்கு பெருமை சேர்க்கும் என்று எழுதியிருக்கிறார்.

சுந்தரனார் வேதாசலத்தின் பாடல் வடிவிலான கடிதத்தைப் படித்து புளகாங்கித மடைந்தாராம், இதை மறைமலையடிகளுக்கு எழுதிய கடிதத்தில் வெளிப்டுத்தியிருக்கிறார். மேலும் மறைமலையடிகளையும் நாராயண பிள்ளையையும் திருவனந்தபுரத்திற்கு அழைத்திருக்கிறார்.

மறைமலையடிகள், தன் ஆசிரியர் நாராயணபிள்ளையுடன் திருநெல்வேலி சென்று செங்கோட்டைவழி திருவனந்தபுரம் சென்றிருக்கிறார். இது நடந்தது 1895-இல். சுந்தரனார் வேதாசலத்தை முதிய படிப்பாளி என்று நினைத்திருந்தார். ஆனால் இருபது வயது இளைஞர் தம்மைப் பார்க்க வந்தவர் என அறிந்து அதிசயப்பட்டிருக்கிறார். கொஞ்நாள் சுந்தரனாரின் விருந்தினராக திருவனந்தபுரத்தில் இருந்தார் மறைமலையடிகள்.

மறுபடியும் அடுத்த ஆண்டு (1897) மறைமலையடிகள் சுந்தரனாரின் வீட்டிற்கு தனியாகச் சென்றிருக்கிறார். அப்போது மார்த்தாண்டன் தம்பி என்பவர் நடத்திய ஆங்கிலவழிப் பள்ளிக்கூடத்தில் மறைமலையடிகளுக்கு வேலை வாங்கிக் கொடுத்திருக்கிறார். மூன்று மாதம் வேலை பார்த்திருக்கிறார் மறைமலையார். இக்காலத்தில் திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில் தமிழ் மாணவர்களிடையே நாடகத் தமிழ் என்னும் தலைப்பில் பேசினார். அப்போது மறைமலையடிகளுக்கு 20 வயதுதான். அவர் தன் பேச்சினிடையே மனோன்மணியம் நாடகத்தை பாராட்டிப் பேசினார். நற்சான்றிதழ் ஒன்றும் கொடுத்தார். மறைமலையடிகள் பிற்காலத்தில் தாம்பரம் கிறித்தவக் கல்லூரியில் ஆசிரியராக செல்லுவதற்குச் சுந்தரனாரின் பாராட்டுக் கடிதம் உதவியிருக்கிறது.

திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் தலைமைத் தணிக்கை அதிகாரியாகப் பணியாற்றியவர் லட்சுமணபிள்ளை, இவர் கர்நாடக சங்கீதம் முறையாகக் கற்றவர்; தமிழறிஞர்; மொழிபெயர்ப்பாளர்; படைப்பாளி; ரவீந்திரநாத் தாகூரைச் சந்தித்து தமிழிசைப் பாடல்களை பண்ணுடன பாடிக்காட்டியவர்.

இத்தனை சிறப்புடைய இவர் திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில் பயின்றபோது சுந்தரனார் ஆசிரியராக இருந்தார் (1884). அப்போது இருவருக்கும் ஒரு நெருக்கம் இருந்தது. லட்சுமணபிள்ளை சென்னையில் தணிக்கைப் படிப்பு படித்துவிட்டு திருவனந்தபுரம் தலைமைச் செயலகத்தில் வேலை பார்த்த போதுதான் மனோன்மணியம் நாடகம் வெளியானது.

திருவனந்தபுரம் சைவப் பிரகாச சபை உறுப்பினர்களின் ஏற்பாட்டில் மனோன்மணியம் நாடக விமர்சனக் கூட்டத்தில் லட்சுமணபிள்ளையும் பேசியிருக்கிறார். குருசாமிப்பிள்ளை என்பவர் தலைமை தாங்கினார். இவர் டானியல் டீபோவை மொழிபெயர்த்தவர், சுந்தரனாரின் காலத்திற்குப்பின் மனோன்மணியம் உரைநடை நாடகத்தை வெளியிட்டிருக்கிறார்.

லட்சுமணபிள்ளை சுந்தரனாரின் இறுதிக்காலம் வரை தொடர்பு வைத்திருந்தார். சுந்தரனார் இறந்தபோது லட்சுமணபிள்ளை இரங்கல்பா படித்திருக்கிறார்.

சுவாமி விவேகானந்தர் மைசூருக்கு வந்துவிட்டு திருவிதாங்கூர் சமஸ்தானம் வழி கன்னியாகுமரிக்குப் போனார். திருவனந்தபுரத்தில் விவேகானந்தர் இருந்தபோது (1892)

சுந்தரனார் அவரைச் சந்தித்து உரையாடினார். இருவரும் அத்வைதம் சைவசித்தாந்தம் குறித்து விவாதித்திருக்கின்றனர். இது பற்றிய செய்திகளை லட்சுமணபிள்ளை வழி கேட்ட குமரேசன் என்பவர் “பல்கலைச் செல்வர் சுந்தரரும் பிள்ளை” என்ற கட்டுரையில் பதிவு செய்திருக்கிறார்.

### பெருமையும் பாராட்டும்

சுந்தரனார் தன் சமகாலத்தமிழ் அறிஞர்கள் எல்லோரையும் விட பாராட்டும் விருதும் பெற்றிருக்கிறார், இதற்கு முக்கியமான காரணம் இவரது ஆராய்ச்சியும் ஆங்கில மொழிப் புலமையும் என்று சொல்ல முடியும்.

சென்னைப் பல்கலைக்கழகம் இவரது கால ஆராய்ச்சி உழைப்பிற்கா பல்கலைக்கழக உயர்கலைக்கழக உறுப்பினர் (Fllow of Madras University) என்னும் சிறப்பு தகுதியை வழங்கியது. அதோடு பல்கலைக் கழகத் தேர்வாணைக் குழுவில் தமிழ் வரலாறு தத்துவம் ஆகிய துறைகளின் உறுப்பினராகவும் நிமித்தது.

சுந்தரனாரின் கால ஆராய்ச்சியைப் பாராட்டி Royal Asialic Society of Great Britain and ireland என்ற அமைப்பு MRAS என்னும் அங்கீகாரத்தை வழங்கியது (Member of Royal Asialic Society of Great Britain and Ireland) இன்னொரு அமைப்பு M.R.H.S. என்னும் அங்கீகாரத்தைக் கொடுத்தது ((Member of Royal Historical Society of Great Britain and Ireland): இப்படியான இந்தப் பெருமையைப் பெற சிபாரிசு செய்தவர் சென்னை கவர்னர் என்பது குறிப்பிடத்தக்கது.

சுந்தரனாரின் திறமையை அறிந்த ஜெர்மனி பல்கலைக்கழகம் ஒன்று (Nottingham University) இவர் ஆறு மாதம் ஜெர்மனியில் தங்கி இந்திய வரலாறு குறித்து ஆராய்ச்சி செய்தால் பிஎச.டி. பட்டம் தருவராக அழைப்பு விடுத்தது. ஜெர்மனிக்கு வந்து செல்லவும் தங்கவும் செலவைப் பல்கலைக்கழமே ஏற்பதாக கடிதம் எழுதியது. இது 1996-இல், ஆனால் சுந்தரனாரின் உடல்நிலை பயணம் செல்வதற்கு ஏற்றதாக இல்லை. அதனால் மறுத்துவிட்டார்.

சென்னை மாகாண ஆளுநர் சர்.எம்.இ. கிராண்ட் டப் (Sir. M.E. Grant Dubb) இவரது சிறப்பைக் குறிப்பிடும்படியான சூழ்நிலை வந்தது. அப்போது கேரளத்து அரசரையும், சுந்தரனாரையும் ஒரே நிலையில் வைத்துப் பேசினாராம்.

### திருமணம்

சுந்தரனார் 22 வயதில் திருமணம் செய்து கொண்டார். அது அந்தக்கால வழக்கம். மனைவி சிவகாமி, சுந்தரனாரின் மாமனார் சுடலை முத்துப்பிள்ளை அறநிலையத்துறையில் சம்ருதி என்ற பதவி வகித்தவர். இதனால் இவர் சம்ருதிப் பிள்ளை என்றே அழைக்கப்பட்டார்.

திருமணமான வருஷமே சுந்தரனாரின் அம்மா இறந்துவிட்டார். சுந்தரனாருக்கு திருமணமாகி 13 ஆண்டுகள் கழித்து ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு நடராஜன் எனப் பெயரிட்டார். மனோன்மணியம் நாடகத்தில் வரும் முக்கிய கதாபாத்திரம் நடராஜன்.

சுந்தரனாரின் குடும்பத்தினர் எல்லோருக்கும் மனோன்மணியம் நாடகக் கதாபாத்திரங்களில் விடப்படும் நிலை இன்றும் தொடருகிறது.

**இறுதிக்காலம்**

சுந்தரனார், தமிழ் இலக்கிய வரலாறு என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில் எழுதத் திட்டமிட்டிருந்தார். யாழ்பாணம் சைமன் காசிச்செட்டி என்பவரின் தமிழ் புளூட்டார்ச் (Tamil Plutarch) என்ற ஆங்கில நூலின் (1859) பிரதியை யாழ்பாணத் தமிழ் அறிஞர் பொன்னம்பலம் வழி சுந்தரனார் பெற்றிருக்கிறார். இந்நூல் பண்டைத் தமிழ்ப் புலவர்களின் வரலாற்றைப் பட்டியல் இடுவது.

தமிழ் புளூட்டார்ச் வெளி வந்த காலத்தில் பல தமிழ் நூற்கள் அச்சில் வரவில்லை. சைமன் ஏட்டுவழி நூற்களின் பட்டியலை சேகரித்தார். இந்நூல் சுந்தரனாருக்கு உந்துதலைத் தந்தது. விரிவான இலக்கிய வரலாறு ஒன்றை எழுதத் திட்டமிட்டிருக்கிறார். இதற்கான தயாரிப்பை தொடங்கி யாழ்பாணத்திலிருந்து நூற்களைத் தருவித்திருக்கிறார்.

இந்த நிலையில் அவர் உடல்நிலை மோசமானது. அவருக்கு ஓய்வு வேண்டும்: உதகமண்டலத்துக்குப் போகலாம் என்றார் அரண்மனை மருத்துவர், சுந்தரனாரும் புறப்பட்டார். நீண்ட பயணத்துக்கு உடல் ஒத்துழைப்பு கொடுக்கவில்லை. ஏற்கெனவே உடலை ஒட்டிக்கொண்டிருந்த சர்க்கரை வியாதியின் பாதிப்பு நெருங்கியது.

சுந்தரனார், தென்காசி அருகே உள்ள சிலந்தி ஊர் உறவினர் ஒருவரின் உதவியுடன் குற்றாலத்தில் ஓய்வெடுக்கச் சென்றார். அங்கே உடல் சற்று தேறிய போதுதான் பிளவை நோய் வந்தது. அதனால் திருவனந்தபுரத்திற்குச் சென்றார். அங்கே அரசு மருத்துவமனையில் சிகிச்சை செய்து கொண்டார். அப்போதைய அரசர் ஸ்ரீமூலம் திருநாள் சுந்தரனாரைத் தனியே கவனிக்க ஒரு அதிகாரியை நியமித்தாராம். நோய் அவரைவிடவில்லை 1897 ஏப்ரல் 25 ஆம் நாள் இவ்வுலகை நீத்தார்.

**ஒரே மகன்**

சுந்தரனார் இறக்கும் போது அவரது ஒரே மகன் நடராஜனுக்கு ஆறு வயதுதான். சுந்தரனார் திருவனந்தபுரம் பேரூர்கடை மசூதியில் ஒரு பங்களாவில் வாழ்ந்தார். நூறு ஏக்கர் பரப்புள்ள பெரிய தோட்டத்தின் நடுவே அவரது பங்களா இருந்தது. சுந்தரனார் தன் வீட்டிற்கு

தன் பேராசிரியர் ராபர்ட் ஹார்வியின் பெயரை சூட்டியிருந்தார். அவரது வீடு ஹார்வி மாளிகை என்று அடையாளம் கூறப்பட்டது.

சுந்தரனாரின் மகன் நடராஜன் இந்த ஹார்வி மாளிகையில் தான் பிறந்தார். இந்த மாளிகையும், தோட்டத்தையும் மறைமலையடிகள் வியந்து எழுதியதை மறைதிருநாவுக்கரசு குறிப்பிடுகிறார். இப்படியான மாளிகையில் பிறந்த நடராஜன் தன் கடைசி காலத்தில் ஓலைக் குடிசையில் வாழ்ந்து மறைந்தார்.

பி.எஸ். நடராஜபிள்ளை என்ற பெயர் திருவனந்தபுரம் அரசியல்வாதிகளிடம் பிரபலமான பெயர் (1891 - 1966). இவர் வழக்குரைஞர், பொருளாதார நிபுணர், அரசியல்வாதி, தமிழபிமானி, இவர் திருவிதாங்கூர் ஸ்ரீமூலம் அசம்பிளியில் 25 வயதில் உறுப்பினர் ஆனார். வஞ்சி கேசரி 'Popular opinion' என்னும் பத்திரிகைகளின் ஆசிரியர், திருவிதாங்கூர் தமிழ்ச்சங்கச் செயலர், திருவிதாங்கூர் ஸ்டேட் காங்கிரஸ் கட்சிச் செயலர்.

பி.எஸ். நடராஜபிள்ளை காங்கிரஸ் சார்பிலும், பொதுவுடைமை கட்சி துணையுடனும் சட்டசபை உறுப்பினராக இருந்தார். 1962-இல் பாராளுமன்ற உறுப்பினர் ஆனார்.

சித்திரை திருநாள் என்ற அரசர் காலத்தில் (1931-1949) திவானாக இருந்த சி.பி. ராமசாமி அய்யரை எதிர்த்தார். விமர்சித்துப் பேசினார் என்னும் காரணத்துக்காக தன் தந்தையின் சொத்துக்களை இழந்தார். ஹார்வி மாளிகையும் தோட்டமும் இவரிடமிருந்து பிடுங்கப்பட்டன நேர்மையான இந்த மனிதர் கடைசில் ஓலைவீட்டில் இருந்தார்.

பி.எஸ். நடராஜபிள்ளை அரசியல் விளக்கம் என்ற நூலை எழுதியிருக்கிறார். சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் வெளியிட்டிருக்கிறது. சுந்தரனாரின் "Early Sovereigns of Travancore" என்ற நூலின் பதிப்பாசிரியர் இவரே.

## 4. நாடகாசிரியர்

தமிழ் நாடகம் பற்றி எழுதிய முந்தைய கால விமர்சனங்களும் தற்கால ஆய்வாளர்களும் "தமிழ் நாடகம் பொதுவாகப் பலவீனமாகவே இருந்தது. தமிழின் இலக்கியச் செறிவுடன் இதை ஒப்பிட முடியாது" என்கின்றனர். தமிழில் நாடகங்கள் இருந்தன என்று கூறப்பட்டாலும் அது விவாதத்திற்கு உரியதாகவே இருந்தது. கி.பி. 17-ஆம் நூற்றாண்டில்தான் எழுத்து வடிவ நாடகங்கள் கிடைக்க ஆரம்பித்தன.

பண்டைய இலக்கிய இலக்கண உரையாசிரியர்களான அரும்பத உரையாசிரியர், அடியார்க்கு நல்லார், பேராசிரியர், இளம்பூரணர் போன்றோரும் யாப்பிலக்கண உரையாசிரியர்களும் வேறு சிலரும் பரதம், அகத்தியம், பரத சேனாதிபயம், மதிவாணன் நாடகத்தமிழ் என்னும்

நூற்களைக் குறிப்பிடுவர். கூத்தநூல், குணநூல், சயந்தம், செயிற்றியம் எனச் சில நூற்களிலிருந்து சூத்திரங்களை எடுத்தாளுகின்றனர். உரையாசிரியர்கள் குறிப்பிடும் நாடகங்களும், நாடக இலக்கண நூற்களும் கிடைக்கவில்லை. நாடக நூற்கள் இருந்தால் தானே நாடக இலக்கண நூற்கள் தோன்றியிருக்க முடியும் என்னும் விதாதத்தின்படி தமிழ் நாடகம் பழமையானது என்று கூறுகின்றனர்.

சிலப்பதிகாரத்தை முதல் தமிழ் நாடகமாகக் கருதுவது மரபு. இதில் நாடகத்துக்குரிய உத்திகள் உள்ளன; பிற்காலத்தில் உருவான நாடகத்தன்மையுள்ள சிற்றிலக்கிய வடிவங்களுக்கு (எ.கா. குறவஞ்சி, குறம், பள்ளு) சிலப்பதிகாரம் முன்னோடி என்பது பழைய கருத்து.

நாயக்கர், மராட்டியர் காலத்தில் எழுதப்பட்ட சிற்றிலக்கியங்களில் சில (பள்ளு, குறவஞ்சி, குறம், நொண்டி, நாடகம்) நடிக்கவும் பட்டன. ஆந்திரர், மராட்டியர் செல்வாக்கால் நாடக வடிவங்கள் சில தமிழகத்திற்கு வந்தன (எ.கா. பாகவத மேளா, யட்சகானம்). இதே கால கட்டத்தில் வட தமிழகத்தில் தெருக்கூத்து கலை முழு மூச்சுடன் நடந்தது.

**19-ஆம் நூற்றாண்டில் நாடகம்**

19-ஆம் நூற்றாண்டு தமிழகத்தில் புராணங்களை மையமாகக் கொண்ட நாடகங்கள் நிறையவே தோன்றின. இக்காலத்தில் ஆங்கிலம் அறிந்தவர்களும் நாடகம் எழுத வந்தனர். இந்த நாடகங்கள் தெருக்கூத்தின் சாயலுடையவையும் கூட. இக்காலகட்டத்தில் குறிப்பிட்ட சிலர் தமிழ் நாடகத்தை இலக்கிய அந்தஸ்துக்குக் கொண்டுவர முயற்சி செய்தனர்.

மராட்டியரான கோவிந்தசாமி ராவ் மணிமேகலை நாடகக் கம்பெனி வழி புஷ்பவல்லி போன்ற சில நாடகங்களை மேடையில் ஏற்றினர். சங்கரதாஸ் சுவாமிகள் (1867 - 1922) முறையாகத் தமிழ் படித்தவர். சமரச சன்மார்க்க சபை வழி நாடகத்தை நடத்தினார் இவர் 40 நாடகங்களை எழுதினார்.

கந்தசாமி முதலியார் சமூக சீர்திருத்த நாடகங்கள் சில எழுதினார். சம்பந்த முதலியார் தமிழ் நாடக மரபை முறைப்படுத்தியவர். காசி விசுவநாத முதலியாரின் ‘தாசில்தார் நாடகம்’ அரசு அதிகாரிகளின் போலித்தனத்தைக் காட்டுவது. தமிழ், தெலுங்கு கலப்புடையது. இவர் டம்பாச்சாரி என்ற நாடகத்தை மேடை ஏற்றினார். இது மிகப் பெரிய நாடகம் இக்காலகட்டத்தில் பல நாடகங்கள் அச்சில் வந்தன. இவற்றில் வசனம் குறைவு பழைய நாடக அமைப்பைத் தவிர்த்துவிட்டு மேல்நாட்டு நாடகத்தன்மையின் பின்னணியில் சில நாடகங்கள் இக்காலத்தில் வந்தன’. தமிழகத்தில் 19-ஆம் நூற்றாண்டில் 327 நாடகங்கள் வெளிவந்துள்ளன. இந்த நாடகங்களை இயற்றியவர்களில் ஈழத்தமிழர்களும் உண்டு.

இக்காலங்களில் பெரும்பாலும் புராண இதிகாசம் ஆகியவற்றை மட்டுமல்ல. பாரதம் ராமாயணம் தொடர்பாகக் கற்பனையாக உருவாக்கப்பட்ட கதை நாடகங்களும் அச்சில் வந்தன (மயில் ராவணன் கூத்து). இந்து சமயம் தொடர்பானவை மட்டுமல்ல இசுலாமிய கிறித்தவ நாடகங்களும் அச்சேறின. இப்ராகிம் இயற்றிய அப்பாசு நாடகம் ஞான சவுந்தரி நாடகம், எஸ்தாக்கியார் நாடகம், தேவசகாயம் பிள்ளை, வாசகப்பா போன்றன உதாரணங்கள்.

19-ஆம் நூற்றாண்டின் நாடக உருவாக்கத்தில் குறிப்பிடத்தக்க ஒருவர் பரிசுமாற்கலைஞர். இவர் ரூபாவதி கலாவதி என்னும் இரண்டு நாடகங்களை இயற்றியுள்ளார். இவர் இயற்றிய 'நாடகவியல்' என்ற நூல் நாடக இலக்கணத்தைக் கூறுவது. சமஸ்கிருத மொழியில் அமைந்த நாடகங்களையும் நாடக இலக்கணங்களையும் உள்வாங்கிக்கொண்டு உருவாக்கப்பட்ட நூல்.

திருவனந்தபுரம், அந்தகாலத்தில் தமிழிற்கும் தமிழனுக்கும் இடம் கொடுப்பதில் தயக்கம் காட்டவில்லை. 1882-இல் அங்கு 'ஆரியமாலா நாடகம்' (காத்தவராயன் கதை) நடந்தபோது பிரபலமாய் பேசப்பட்டது. தமிழ் நாடக மேடை நடிகர்களில் முன்னோடியான டி.கே. சண்முகத்தின் சொந்த ஊர் திருவனந்தபுரம் தான். அவர் தன் பழைய அனுபவத்தை விரிவாகக் கூறியிருக்கிறார். கல்யாண ராமய்யர், ராமுடு, சாமி அய்யர் போன்றோர் சில தமிழ் நாடகங்களைத் திருவனந்தபுரத்தில் அரங்கேற்றி இருக்கின்றனர்.

கேரள நாகடக் கலைஞரும் பயிற்றுநருமான ஜி. சங்கரப்பிள்ளை ஒருமுறை எழுத்தாளர் சுந்தரராமசாமி வீட்டில் நடந்த 'காகங்கள்' கூட்டத்தில் பேசும்போது தமிழ் நாடகம் கேரளத்தில் பாதித்த போக்கை விரிவாகப் பேசினார் (1982). "19 ஆம் நூற்றாண்டில் தமிழ் நாடகத்தின் ஜோடனை நடிகர்களின் பளபளப்பான உடைகள், ஆபரணங்கள் மிகை உணர்ச்சி நடிப்பு எல்லாம் கேரளத்து மக்களைக் கவர்ந்திருக்கின்றன. இதன் பிரதிபலிப்பு மலையாள நாடகத்திலும் உண்டு. பேரா. சுந்தரனாரும் இப்பின்னணியால் பாதிக்கப்பட்டிருக்கலாம்" என்றார்.

இந்த நாடகங்களில் சாவித்திரி நாடகம், சகாரம் நாடகம், அரிச்சந்திர நாடகம், கோவலன் சரித்திரம், நல்லதங்காள் கதை, கண்ணகி சரித்திரம், வள்ளி திருமணம் ஆகிய நாடகங்கள் திருவனந்தபுரம், பாறசாலை, பாலக்காடு மாவட்டம் கொளிஞ்சாம் பாறை ஆகிய இடங்களிலிருந்து வெளிவந்திருக்கின்றன.

தமிழகத்திலும், கேரளத்திலும் வழக்கில் இருந்த நாடகங்களைச் சுந்தரம்பிள்ளை அறிந்திருக்கிறார். இவர் சிலவற்றை திருவனந்தபுரம் பல்கலைக்கழக கல்லூரிக்கு அன்பளிப்பாகக் கொடுத்திருக்கிறார். அறுபதுகளில் கூட இந்த நாடகங்கள் இக்கல்லூரி தமிழ்த்துறை நூலகத்தில் இருந்ததை இங்கே பணிபுரிந்த பேரா. சி. ஜேசுதாசன் அவர்கள் சொல்லி இருக்கிறார்.

தமிழகத்தில் மதுரையை மையமாகக் கொண்டிருந்த நாடக சபாக்கள் நாகர்கோவிலில் நாடகம் நடத்திவிட்டு திருவனந்தபுரத்தில் நடந்துச் செல்வது வழக்கமாயிருந்திருக்கிறது. டி.கே. சண்முகம் அவரது நாடக வாழ்க்கை என்ற நூலில் இது பற்றிக் குறிப்பிடுகிறார்.

மதுரை நாடக சபாக்களின் நாடகங்கள் தென் கேரள நாடக சபைகளைப் பெரிதும் பாதித்திருக்கின்றன. குறிப்பாக சிரியன் கிறுத்தவர்கள் தொடர்பான நிகழ்த்து கலைகளையும், சவுட்டு நாடகங்களையும் பாதித்திருக்கின்றன. இந்தப் பின்னணியில் மனோன்மணியம் நாடகத்தைப் பார்க்க வேண்டும்.

**மனோன்மணியம் நாடகச் சுருக்கம்**

மனோன்மணியம் நாடகம் முதல் பதிப்பில் (1891) பே.சு. கொடுத்திருக்கும் கதைச்சுருக்கத்தின் அடிப்படையில் இது அமைந்துள்ளது. அவரின் பழைய நடை வடமொழிக் கலப்புடையது. இன்றைய நடைக்கேற்ப மாற்றப்பட்டு இச்சுருக்கம் அமைந்துள்ளது. நாடகக் கதை பின் வருமாறு.

தமிழ்மொழி உலகமொழிகளுக்குச் சமமாக வைத்து எண்ணப்படுவது இது பழமையான மொழி இலக்கண இலக்கியங்கள் நிறைந்தது. இத்தகு மொழியைப் பாராட்டிப் படிப்பவரின் எண்ணிக்கை குறைந்து கொண்டு வருகிறது. இந்த மொழியின் இலக்கியங்களை அறியாமல் பாதுகாத்த திரு. சி.வை. தாமோதரன் பிள்ளை, திரு. உ.வே. சாமிநாத அய்யர் ஆகிய இருவரையும் வணங்குகிறேன்.

கல்வி, கேள்வி, அறிவு முதலியவற்றால் சிறியவனாகிய நான் மனோன்மணியம் என்னும் நாடகத்தைப் படைத்திருக்கிறேன். ராமர் பாலங்கட்ட அணில் செய்த உதவி போன்று தமிழ்மொழிக்கு அளித்த நன்கொடை இந்த நாடகம் வடமொழி, ஆங்கிலம் ஆகிய இருமொழிகளின் நாடக வழக்கைப் பின்பற்றியது. மனோன்மணியம் இதனால் உரையாடல்களைக் கோவைப்படுத்தியே நாடகக் கதையை அறியவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு காலத்தில் ஜீவகன் என்னும் பாண்டிய மன்னன் இருந்தான். அவன் பளிங்கு போன்ற மனமுடையவன் அவனுடைய அமைச்சன் குடிலன்; தன்னலமுடையவன், சூழ்ச்சியில் வல்லவன் இவன் அரசனை வசப்படுத்தித் தன் கைக்குள் போட்டுக்கொண்டான். தன் எண்ணம் நிறைவேற வேண்டுமென்றால் மதுரையிலிருந்து திருநெல்வேலிக்குத் தலைநகரை மாற்ற வேண்டும் என நினைத்ததால் அரசனிடம் நயமாய் பேசி தன் எண்ணத்தை நிறைவேற்றினான். திருநெல்வேலியில் அரண்மனையும் கோட்டையும் கட்டிக்கொண்டான்.

ஜீவகனின் குலகுரு சுந்தர முனிவர் குடிலனை அறிந்தவர். அதனால் அரசனின் நலன் கருதி நெல்லைக் கோட்டைக்கு அருகில் ஆசிரமம் அமைத்துத் தங்கினார் நாடகம் இந்த இடத்திலிருந்து ஆரம்பமாகிறது.

ஜீவகன் தான் புதிதாகக் கட்டின கோட்டையைக் காண சுந்தர முனிவரை அழைத்தான். அவர் அரண்மனை, கோட்டை என எல்லாவற்றையும் பார்வையிடுகிறார். அரசனைப் பார்த்து ‘‘இவை சாசுவதமல்ல’’ எனக் குறிப்பால் உணர்த்துகிறார். ஜீவகன் அதைப் புரிந்து கொள்ளவில்லை. முனிவர் உன் குடும்பத்திற்கும் கோட்டைக்கும் ஷேமம் வேண்டி பூஜை செய்ய ஒரு அறை வேண்டும் எனக் கேட்கிறார். மன்னன் ஒரு அறையின் திறவுகோலை அவரிடம் கொடுக்கிறான். அதைப் பெற்றுக்கொண்ட சுந்தரர் ஆசிரமம் செல்கிறார்.

ஜீவகனின் ஒரே மகள் மனோன்மணி. சிறு வயதில் தாயை இழந்தவள். தன் மகளின் நலம் கருதி ஜீவகன் மறுமணம் செய்யவில்லை. பதினாறு வயதுப் பிராயம் உடைய மனோன்மணி குழந்தை உள்ளம் கொண்டவள். உலகப்பற்றின்றி இருந்தாள். மனோன்மணியின் தோழி வாணி நல்ல இசை ஞானம் உடையவள். எதையும் தெளிந்தபின் நம்புகின்றவள், அல்லாதவற்றை நீக்கி விடுவாள். வாணி நடராஜன் என்பவனைக் காதலிக்கிறாள்.

வாணியின் தந்தை சகடனும் தாயும் பண ஆசை பிடித்தவர்கள். அதனால் குடிலனின் மகன் பலதேவனைத் தன் மகளுக்கு மணமுடித்து வைக்க நினைக்கின்றனர். வாணி விரும்பும் நடராசனைப் பற்றி தவறான செய்தியை அரசனிடம் கூறுகிறான் சகடன். இதனால் வாணி பெருந்துன்பம் அடைகிறாள். இந்த நேரத்தில் மனோன்மணி வாணிக்கு ஆறுதல் கூறுகிறாள்.

ஒரு நாள் இரவு முனிவர் கோட்டைக்கு வருகிறார். அதே நாளில் மனோன்மணி ஒரு கனவு காணுகிறாள். கனவில் சேர நாட்டரசன் புருஷோத்தமன் வருகிறான். அவனது அழகு முகம் அவளை மயக்குகிறது. அவளுக்குச் சுரம் வருகிறது இச்செய்தி அறிந்த அரசன் அந்தப்புரம் செல்கிறான். மனோன்மணிக்கு வந்த சுரம் இன்னதெனத் தெரியாமல் மயங்குகிறான்; பரிதவிக்கிறான் அப்போது சுந்தரர் ‘இது காமசுரம் கவலை விடுக’ என்கிறார்.

முனிவர் அவளின் நிலையைக் குறிப்பால் உணர்த்துகிறார். அவளது உடல்நிலை மாற்றத்திற்கு அவளது பருவ நிலையே காரணம்; அவளுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்கிறார். அதுவே இப்போது தேவையானது சேரநாட்டில் புருஷோத்தமன் என்ற அரசன் இருக்கிறான் அவனே மனோன்மணிக்குத் தகுந்த மணவாளன் சேரனைக் கண்டு மணம்பேசிவர ஒருவனை அனுப்பு; அதற்கு தகுதியானவன் நடராஜன் என்கிறார்.

ஜீவகனுக்கு நடராஜனைப் பற்றி உயர்வான எண்ணம் இல்லை. வாணியின் தந்தை சகடன், நடராஜனைப் பற்றிக் கூறியதை முழுதும் நம்பினான் ஜீவகன். அதனால் குடிலனிடம்

ஆலோசனை கேட்கிறான். தன்னலமுடைய குடிலன் வீரனும் புத்திசாலியுமான புருஷோத்தமன் பாண்டிநாட்டுக்கு மருமகனாக வந்தால் தன் திட்டத்தைக் கெடுத்துவிடுவான் என்பதை ஊகித்தான். அதனால் மனோன்மணியைத் தன் மகன் பலதேவனுக்கு மணம் செய்து வைக்கத் தீர்மானித்தான். நடராஜனைத் தூது அனுப்பினால் காரியத்தைச் சாதித்து விடுவான் என்பது பலதேவனுக்குத் தெரியும்.

குடிலன் சுந்தரரின் திட்டத்தைச் சூழ்ச்சியால் வெல்ல யோசனை செய்தான் ஜீவகனிடம் தந்திரமாகப் பேசினான். "பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டிற்கு மணம் பேசச் செல்லுவது இழிவானது, அது தம் வழக்கமல்ல, புருஷோத்தமனின் மனதை முதலில் அறிய வேண்டும். பிறகு கல்யாண நாள் குறிக்கலாம்" என்றான். ஜீவகனும் அதை முழுதும் நம்பி பலதேவனைத் தூதனுப்ப இசைகிறான்.

சேரமன்னனும் ஒரு கனவு கண்டான் கனவில் மனோன்மணி வந்தாள். அவளின் அழகும் அமைதியான வசீகர முகமும் சேரனை நிலைகுலைய வைத்தது. அவளை மறக்கமுடியவில்லை, போர் வந்தால் கவலையை மறக்க முடியும். யாருடன் மோதுவது என்று யோசித்துக் கொண்டிருக்கும்போது பலதேவன் தூதுவனாக வந்தான்.

பலதேவன் சேரனின் உணர்வைத் தூண்டும் விதத்தில் பேசினான். நாஞ்சில் நாடு பாண்டியருக்கு உரிமை உடையது; அதற்கு அந்நாட்டில் பண்பாடும் மொழியும் சான்று என்றான். சேரனின் கோபத்தைக் தூண்டிவிட்டான் பலதேவன் சேரன் தன் படையுடன் பாண்டி நாட்டுக்கு வந்தான்.

சேரனுக்கும், பாண்டியனுக்கும் போர் நடந்தது. பலதேவன் போர் செய்து கொண்டிருந்தபோது பாண்டிய வீரனே அவனைத் தாக்கினான். பலதேவன் அந்த வீரனின் தங்கையை ஏமாற்றிக் கெடுத்தவன். அதற்குப் பழிவாங்க அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டான். பாண்டிய வீரர்கள் போர் தர்மப்படி அவனைக் கொன்றுவிட்டனர். இந்த நிலையில் சேரநாட்டு வீரர்கள் ஜீவகனைச் சூழ்ந்து கொண்டனர். இதைக் கோட்டை மதிலின் மேல் நின்ற நாராயணன் கவனித்தான். உடனே வந்து ஜீவகனைக் காப்பாற்றினான்.

நாராயணன், நடராஜனின் நண்பன். குடிலனின் சூதுகள் அறிந்தவன், அரசன் இவனை நிந்தித்தாலும் அரசனைக் காப்பாற்ற மதுரையிலிருந்து நெல்லை வந்தவன். குடிலனுக்கு நாராயணனைத் தெரியும். நாராயணன் எப்படியும் ஜீவகனைக் காப்பாற்றிவிடுவான் என்று ஊகித்த குடிலன் நாராயணனைக் கோட்டைப் பகுதியில் காவலிருக்கும்படி ஏற்பாடு செய்தான். என்றாலும் நாராயணன் குதிரைப் படையுடன் வந்து ஜீவகனைக் காப்பாற்றினான்.

ஜீவகனுக்குத் தான் போரில் தோற்றது மனதை வருந்தியது. தன்னை மாய்த்துக் கொள்ள முயன்றான். நாராயணன் அவனிடம் நயமாகப் பேசினான்; மனோன்மணியை நினைவுபடுத்தினான் ஜீவகன் தற்கொலை எண்ணத்தை விடுவித்தான். இந்த நேரத்தில் சேரனின் தூதன் வந்தான், போரில் தோற்றதற்கு அறிகுறியாக ஒரு குடம் தாமிரபரணி நீரும் வேப்பந்தாரும் கொடுப்பதாக இருந்தால் போர் இன்றுடன் முடிந்துவிடும்; இல்லையென்றால் நாளையும் தொடரும் என்றான்.

ஜீவகன் தூதனின் பேச்சைக் கேட்டு ஆவேசமடைந்தான் அடுத்தநாள் போர் செய்ய இணங்கினான். பின்னர் தன் கோட்டையின் பாதுகாப்பைப் பார்க்கச் சென்றான். கோட்டை சிதலமடைந்து அழிந்திருப்பதைக் கண்டான். இத்தனை அழிவிற்குக் காரணம் என்ன என்று ஜீவகன் கேட்டான். குடிலன் நாராயணன் மேல் உள்ள பழியைத் தீர்த்துக் கொள்ள சாதுர்யமாய்ப் பேசினான். "நாராயணனைக் கோட்டை காவலுக்கு விட்டிருந்தேன். அதனால் பலதேவன் மேல் கோபங்கொண்டு ஒரு வீரனை ஏவி அவனைப் பழிவாங்கினான்; உங்களைப் பாதுகாப்பது போல நடித்தான்" என்றான். அரசன் நாராயணனைக் கழுவிலேற்ற உத்தரவிட்டான். ஆனால் அது நிறைவேறுமுன் சுந்தர முனிவர் வந்துவிட்டார்.

சுந்தரர் தான் வந்த காரணத்தைச் சொன்னார். தான் ரகசியமாய் அமைந்திருக்கும் சுரங்கம்வழி மனோன்மணியைக் காப்பாற்ற உத்தேசித்திருப்பதாகக் கூறினானர். அரசன் முதலில் மறுத்தாலும் பின்னர் இணங்கினான் என்றாலும் அரசன் குருவின் பேச்சை நம்பாமல் சுந்தரரின் உபாயத்தை குடிலனிடம் சொன்னான். குடிலன் அது தனக்குச் சாதகமாக இருப்பதை ஊகித்தான். "ஆனால் கன்னியான மனோன்மணியை அனுப்ப வேண்டாம்; பலதேவர்க்கு மணமுடித்துவிட்டு அனுப்புவோம்" என்றான். அரசனுக்கு வேறு வழியில்லை இணங்கினான்.

குடிலனுக்குச் சுந்தர முனிவர் அமைத்த சுரங்கத்தைக் கண்டறிய ஆசை வந்தது. அந்த வழி பகைவர் பாசறைக்குச் செல்வதைக் கண்டுபிடித்தான். சுரங்கம்வழி செல்லும்போது குடிலன் திகைத்தான் "என் மகன் என்னை இப்போதே எதிர்க்கிறான்; மனோன்மணியுடன் அவனது திருமணம் நடந்தாலும் எதிர்காலம் எப்படியாகுமோ? அதனால் பகைவருக்கு இந்த வழியைக் காட்ட வேண்டும், அதற்குக் கூலியாகப் பாண்டி நாட்டைக் கேட்க வேண்டும். சேரன் அதற்கு இணங்கவில்லை என்றால் திரும்பிவிடலாம் ஒன்றும் நஷ்டமில்லை" என்று நினைத்துக் கொண்டான்.

குடிலன் சேரனைக் கண்டு தன் எண்ணத்தைச் சொன்னான். 'சுத்த வீரானாகிய சேரன் "வீரமே உயிராக உடைய வஞ்சி வேந்தருக்கு வெற்றியன்று விருப்பு சேரன் வெற்றியைத் திருடமாட்டான்" என்றான். குடிலனுக்கு விலங்கு பூட்டி சுரங்கத்திற்கு வழிகாட்டச் சொன்னான்.

இது இப்படி இருக்க ஜீவகன் குடிலனின் யோசனைப்படி மனோன்மணி பலதேவன் திருமணத்தை நடத்தத் தீர்மானித்தான். பிரதானிகளைக் கூட்டினான். இரவிலேயே திருமணத்தை முடித்துவிடவேண்டும், அடுத்த நாள் போரிட வேண்டும். சுந்தரமுனிவர் வந்துவிட்டார். மனோன்மணி, பலதேவனை மணக்க முதலில் மறுத்தாள்; அரசனின் நிலைகண்டு பின் இணங்கினாள், என்றாலும் இரண்டு நிபந்தனைகள் விதித்தாள் ஒன்று நடராஜன் வாணி திருமணம் நடக்கவேண்டும். இரண்டு நாராயணனைச் சிறையிலிருந்து விடுவிக்க வேண்டும் ஜீவகன் இரண்டிற்கும் இணங்கினான்.

நடுநிசியானது நாராயணன் திருமண ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருந்தான். குடிலன் மட்டும் வரவில்லை. ஜீவகன் வாணியிடம் பாடு என்றான் அவள் பாடினாள்,

**நீர்நிலையின் முதலையின் வாய்**
**நிலைகுலைந்த ஒருகலிமுன்**
**ஓர் முறையுன் பெயர்விளிக்க**
**உதவியைவந் தென உரைப்பர்**
**ஆர்துயர் அளக்கர் வீழும்**
**அறிவிலியான் அழைப்பதற்குள்**
**பேர்தெரியேன் ஆயிற்றும்**
**பிறரிடலநின் பெருந்தகையோ**

எனப் பாடினாள்.

குடிலன் விலங்குடன் சுரங்கவழி செல்ல புருஷோத்தமனும் மெய்க்காப்பாளர்களும் சென்றனர். முடிவில் ஒரு திரையைக் கண்டனர். திரைக்கப்பால் மணமகள் மனோன்மணி மாலையுடன் நிற்கிறாள். மணமகன் பலதேவனும் நின்றான் திரையை விலக்கிவிட்டுச் சேரன் வெளியே வந்தான். கண்டாள் மனோன்மணி மணமாலையை அவன் கழுத்தில் அணிவிக்கிறாள். அவன் தோளில் சாய்கிறாள். குடிலனின் சூழ்ச்சி வெளிப்படுகிறது நாடகம் நன்மையில் முடிகிறது.

## 5. தழுவல் நாடகம்

பெ.சு. மனோன்மணியம் நாடகத்தைத் திட்டமிட்டே எழுதியிருக்கிறார். இவர் எம்.ஏ. தத்துவம் படிப்பதற்காக தயாரிப்பிற்காகச் சென்னையில் தங்கியிருந்தபோது இந்த எண்ணம் வந்திருக்கிறது. அப்போது சென்னையில் ராமாயணத்தில் சாதி பற்றிப் பேசியபோது தன் நாடக உருவாக்கம் பற்றிச் சொல்லியிருக்கிறார். அன்று அவர் பேசிய கூட்டத்தில் இருந்த வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார் இது குறித்து எழுதியிருக்கிறார்.

பெ.சு. தாம் வாழ்ந்த காலத்தில் லண்டனில் வெளியான புத்தகங்களைத் திருவிதாங்கூர் அரசனின் உதவியுடன் தருவித்துப் படித்திருக்கிறார். அவரது ஆழ்ந்த படிப்பு திவான், திவான் பேஷ்கார் போன்ற உயர் பதவியில் இருந்தவர்களுடன் நட்புக்கொள்ள வைத்திருக்கிறது. 1866-இல் வெளியான Lord Litten எழுதிய The Lost Tales of miletus (மிலிதாசின் மறைந்த கதைகள்) என்ற நூலை 1879-இல் தருவித்திருக்கிறார். இக்காலகட்டத்தில் மகாராஜா கல்லூரி தத்துவத்துறையில் பேராசிரியராக இருந்தார். லிட்டன் பிரபுவின் மிலிதாசின் மறைந்த கதைகள் தொகுப்பில் உள்ள The Secret Way (இரகசிய வழி) என்ற கதை பெ.சு.வைக் கவர்ந்திருக்கிறது. மனோன்மணியம் நாடகத்தின் மூலக்கதை இதுதான்.

கள்ளங்கபடில்லாத அரசன் மார்ட்டின் (ஜீவகன்) அவன் மகள் ஆர்ச்சியோப் (மனோன்மணி) அரசனின் அமைச்சன் சியூதெஸ் (குடிலன்) அரசனின் குரு தெட்டியாஸ் (சுந்தர முனிவர்) இன்னொரு அரசன் சாரியாரீஸ் (புருஷோத்தமன்) என்னும் பாத்திரங்களின் பின்னணி அமைச்சனின் சூழ்ச்சி முனிவர் ரகசிய அறை அமைத்தல்; அமைச்சன் அதைக் கண்டுபிடித்துப் பகைவர்களுக்குக் கூறல்; இறுதியில் எல்லாம் நன்மையாய் முடிதல் என்பது மூலக்கதைக் கரு.

சுந்தரனார் தன் நாடகத்துக்கு மூலமாகக் கொண்ட The Secret Way நூலை எழுதிய லிட்டன் பிரபு 1803-இல் பிறந்து 1873-இல் மறைந்தவர். இங்கிலாந்து தேசத்தவர். இவரது தந்தை ஜெனரல் புல்லவர், தாய் எலிசபெத் லிட்டன் இவரது முழுப்பெயர் Edward George Earle Bulwer Lytton என்பது ஆகும்.

லிட்டன் சிறுவயதில் தந்தையை இழந்தவர். தாயின் அரவணைப்பில் படித்தார். 20 வயதில் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் உயர்கல்விப் படிப்பு படித்தவர். சிறுவயதில் கவிதை நாடகம் என எழுதியவர். அரசியலில் ஈடுபாடுண்டு 11 ஆண்டுகள் லண்டன் பார்லிமென்றில் அங்கத்தினராய் இருந்தார்.

லிட்டன் பிரபு 28 உரைநடை நூற்களையும், 10 கவிதைத் தொகுப்புகளையும் 6 நாடக நூற்களையும் எழுதி உள்ளார். இவர் எழுதிய நூற்களில் உலகப்புகழ் பெற்ற நாவல் “பாம்புநகரத்தின் இறுதி நாட்கள்” (The Last days of Pompeii) என்பதாகும்.

மனோன்மணியத்தில் வரும் பலதேவன், சகடன், வாணி, நடராசன், நாராயணன், திட்டாபரர், கருணாகரர் போன்றோர் மூலக்கதையில் இல்லாத கதாபாத்திரங்கள். இவை பெ.சு. உருவாக்கியனவை, மூல ஆசிரியர் லிட்டன் பிரபுவுடன் பெ.சு. ஒத்துப் போகிறார். இருவரும் மெய்யியல் சமூக ஒழுக்கம் ஆகியவற்றில் ஈடுபாடுடையவர்கள்; நம்பிக்கையுடையவர்கள், இவை இருவரின் கலைவடிவங்களில் வெளிப்படுகின்றன. மனோன்மணியம் நாடகத்தின் இடையில் வரும் சிவகாமியின் சரிதமும் தழுவலே.

**மனோன்மணியம் பதிப்பு**

சுந்தரனார் திருநெல்வேலியில் இருந்தபோதுதான் மனோன்மணியத்தின் ஒரு பகுதியான சிவசாமியின் சரிதத்தை எழுதி பிரசுரித்தார். திருவனந்தபுரத்தில் இருந்தபோது முழு நாடகத்தையும் எழுதி முடித்தார். பின் மூன்று வருடங்கள் கழித்துத்தான் அச்சுக்கு கொண்டு வந்திருக்கிறார். 1991-இல் அது வெளிவந்து 1893-இல் சென்னைப் பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் வந்தது. 1986 வரை பல்வேறு பல்கலைகழகங்களின் பாடத்திட்டத்தில் இருந்தது. ஏறத்தாழ 93 வருடங்களில் சுமார் 116க்கு மேல் பதிப்புகள் வந்துள்ளன. இவை மாணவர் பதிப்புகளே.

பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை நீதிமன்ற வழக்குரைஞராக இருந்தபோது (1922) மனோன்மணியத்திற்குச் செம்பதிப்பு கொண்டு வந்தார். இது முறையான இரண்டாம் பதிப்பு. ஆராய்ச்சிப் பதிப்பு; இப்பதிப்பில் கே.என். சிவராஜ் பிள்ளையின் ஆங்கில முகவுரை பெ.சுவின் வரலாறு ஆகியன உள்ளன.

வையாபுரிப்பிள்ளை தன் பதிப்பில் - கே.என். சிவராஜபிள்ளையவர்களால் நூலாசிரியரின் (பெ.சு) ஜீவித சரித்திரம் ஒன்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இதனையே இப்பதிப்பில் சேர்த்துக்கொள்ள எண்ணி அனுமதி பெற்றிருந்தேன். இதன் கையெழுத்துப் பிரதி மலையாள பாஷையில் மொழிபெயர்த்தற் பொருட்டு (அம்பலப்புழை எக்சைஸ் இன்ஸ்பெக்டர்) வித்துவான் கிருஷ்ணபிள்ளையவர்களிடம் கொடுக்கப்பட்டிருந்தது. எனது பதிப்பிற்கு உபகாரமாகும்படி தம்மிடத்திருக்கும் பிரதியைச் சீக்கிரம் எனக்கு அனுப்புவதாகக் கிருஷ்ணபிள்ளையவாகள் நேரில் உறுதி சொல்லியிருந்தார்கள். ஆனால் கடைசி வரை அப்பிரதி கிடைக்கவில்லை. பின்னர் வேறொரு முன்னுரை எழுதித்தர வேண்டுமென்று ஸ்ரீசிவராஜ பிள்ளையவர்களைக் கேட்டுக் கொண்டேன். பல்வேறு முயற்சிகளால் சாவகாசம் சிறிதுமில்லாத நிலையிலும் நான் விரும்பியபடி ஆராய்ச்சியுரையொன்று மனமுவந்து எழுதியளித்தார்கள். இவர்களது மாறாத அன்பிற்கு நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்'' என்று கூறுகிறார். (தமிழாய்வு எண் 9 சென்னைப் பல்கலைக்கழகம் 1979 பக் 6,7).

வையாபுரிப்பிள்ளையின் பதிப்பில் உரைக்குறிப்பு, லிட்டன் பிரபுவின் இரகசியவழிக் கதைப்பாடல்கள், மனோன்மணியம் பற்றிய கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் கட்டுரை ஆகியன இருந்தன. கவிமணி இப்பதிப்பிற்கு மிகவும் உதவியிருக்கிறார்; இவர் அப்போது திருவனந்தபுரம் மகளிர் கல்லூரியில் ஆசிரியராக இருந்தார்.

கவிமணி மனோன்மணியம் பற்றிய எழுதிய கட்டுரை திராவிடன் இதழில் (11.03.1922) வந்தது. இக்கட்டுரையில் சுந்தரம் பிள்ளை முதல்முதல் வெளியிட்டபோது ஸ்ரீமான் பி.ஆ.

ராஜம் அய்யர், ஸ்ரீமான், கே.ஜி சேஷா அய்யர் முதலிய கல்வியாளர் மனோன்மணிய நாடகத்தைப் பாராட்டியுள்ளனர்.

சர்வ கலாசாலையார் அதன் பகுதிகளையும் பலமுறை எப்.எ. பரீஷைக்கு பாடப் புஸ்தகமாகவும் அங்கீகரித்தனாலேயும் அதன் மதிப்பை யாவரும் எளிதில் அறிந்து கொள்ளக் கூடும். மேல்நாட்டு அறிவாளர் கொள்கைகள் பற்பலவற்றை தமது மக்கள் ஏற்றுக்கொள்ளுமாறு பக்குவப்படுத்தித் தருவதில் இவரைப் போல் திறமைவாய்ந்தவர்கள் மிகச் சிலரே உள்ளனர்" என்று கூறுகிறார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

மனோன்மணியம் நாடகம் முதல் பதிப்பிற்கும் (1891) இரண்டாம் பதிப்பிற்கும் (1922) இடைப்பட்ட 29 ஆண்டுகளில் இரண்டு பதிப்புகள் வந்திருக்கின்றன. இப்பதிப்புகளை வெளியிட்டவர் சென்னை ராஜதானி கல்லூரிப் பேராசிரியர் ஒருவர் இவை மாணவர் பதிப்பாக இருந்தாலும் ஆராய்ச்சிப் பதிப்பும் கூட.

இப்பதிப்புகளில் அந்தக் கால கட்டத்தில் அறிஞர்கள் இந்நாடகத்துக்கு எழுதிய விமர்சனங்கள் சேர்க்கப்பட்டிருந்தன. இவ்விரு பதிப்புகளும் பேரா. சுந்தரனாரின் பேரன் பேரா. சுந்தரம் அவர்களிடம் இருந்தன. சுந்தரனாரின் மகன் பி.எஸ். நடராஜபிள்ளை இறந்த பிறகு அவரது குடும்பத்தினர் வீடு மாறியபோதும் சுந்தரனாரின் பல நூற்கள் காணாமல் போயின; பலரால் எடுத்துச் செல்லப்பட்டன.

மனோன்மணியம் நாடகம் வெளிவந்த காலத்தில் டாக்டர் ஜி.யூ. போப், பூண்டி அரங்கநாத முதலியார், பி.ஆர். ராஜம் அய்யர், கே.ஜி. சேஷா அய்யர் போன்றோர் ஆங்கிலத்திலும் தமிழிலும் விமர்சித்து எழுதினார்கள். இந்த விமர்சனங்கள் 1891-1895 ஆம் ஆண்டுகளுக்குள் வந்திருக்கலாம்.

இக்காலத்தில் எப்.எ. படிப்பு பாடத்திட்டத்தில் மனோன்மணியம் இருந்தது. இந்த மாணவர் பதிப்பில்கூட சேஷா அய்யரின் விமர்சனம் சேர்க்கப்பட்டிருந்தது. இந்தப் பதிப்புகளும், சென்னை பல்கலைக்கழகம் சுந்தரனாரின் மகனுக்கு அனுமதி வேண்டிய கடிதங்களும் கூட நாற்பதுகளின் ஆரம்பத்தில் இருந்தன. சுந்தரனாரின் மகன் நடராஜபிள்ளை திருவிதாங்கூர் திவான் சி.பி. ராமசாமி அய்யரை எதிர்த்தார் என்னும் காரணம் காட்டி நடராஜபிள்ளையின் வீட்டிலிருந்து பல ஆவணயங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அவற்றில் மனோன்மணியம் நாடகம் தொடர்பான விமர்சனங்களும் அடங்கும்.

**அமைப்பு**

தெருக்கூத்தின் இன்னொரு வடிவமாக இருந்த நாடகத்தைக் காப்பியத்தன்மைக்கு ஏற்றும் முயற்சி பெ.சு.வுக்கு முந்திய காலத்தில் ஆரம்பித்துவிட்டது. பெ.சு.வின் சமகாலத்தில்

வாழ்ந்த வேணுகோபாலாச்சாரியார் என்பவர் சேக்ஸ்பியரின் 'வெனிஷ் வர்த்தகன்' என்னும் நாடகத்தை கவிதை நடையில் வெளியிட்டார் 1876). இந்நூலின் முன்னுரையில் "கவிதை நாடகம் தமிழில் மிகக் குறைவு; நான் இந்நாடகத்தைத் தொடர்நிலைச் செய்யுளாகத் தந்திருக்கிறேன். இது இசையும் கலந்த நடை" என்றார்.

வேணுகோபாலாச்சாரியாரின் நாடகத்தின் மொழிநடை கடினமாக இருந்தது. ஆகவே இது வெளிவந்த காலத்தில் பரவலாக பேசப்படவில்லை. இந்நாடகம் வெளிவந்து 14 ஆண்டுகள் கழித்து வந்த மனோன்மணியம். அதன் எளிமை, விறுவிறுப்பு; அமைப்பு ஆகியவற்றிற்காகப் படிக்கப்பட்டது. மனோன்மணியம் ஆங்கில சமஸ்கிருத நாடக இலக்கணங்களைப் பின்பற்றியது.

இந்த நாடகம் ஐந்து அங்கங்களைக் (Act) கொண்டது. முதல் அங்கம் 5 களங்கள் (Scene) இரண்டாவது 3 களங்கள் மூன்றாவது 4 களங்கள் நான்காவது 5 களங்கள் ஐந்தாவது 3 களங்கள் என 20 களங்கள் கொண்டது. பாயிரம் உட்பட 4502 வரிகள் உடையது.

நாடகத்தின் ஐந்து அங்கங்களை முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தல் என்பது மரபு இந்த மரபை பெ.சு.வும் விட்டுவிடவில்லை. கதை நகர்வு அப்படியே செல்கிறது. பெ.சு. ஆங்கிலம், மலையாள மொழி வழி காவ்யாதர்சத்தைப் படித்திருக்கிறார். பெ.சு.வின் சமகால மலையாள அறிஞரான இராஜராஜவர்மாவை அறிந்திருக்கிறார். தமிழிலிருந்துதான் மலையாளம் கிளைத்தது என்பதில் இருவரும் ஒத்த கருத்துடையவர்கள்.

மனோன்மணியம், வாழ்த்து, வணக்கம், வருபொருள் உரைத்தல் என்னும் மரபின்படி தொடங்குகிறது. மனோன்மணி தன்னேரில்லாத தலைவி, புருடோத்தமன் தலைவன். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருள் உடைத்தாய் வருவது இந்த நாடகம்.

கவிதை வடிவில் உள்ள இந்த நாடகத்தைப் பாத்திரங்களே நகர்த்துகின்றன. இதனால் இவர்களின் உரையாடல் வழி நடந்த நிகழ்ச்சிகளை ஊகித்துத்தான் கதையைப் புரிய முடியும். இது படிப்பதற்கு மட்டுமே உரியது என்பதன் காரணம் இதுவே. இந்த நாடக அமைப்பைக் குலைக்காமல் அப்படியே மேடை ஏற்றினால் பார்வையாளர் புரிவது சிரமமாகிவிடும்.

இந்த நாடகத்தின் விறுவிறுப்பையும் அமைப்பையும் குலைக்கும் காட்சிகளாக சிவகாமியின் சரிதம், நிஷ்டாபரர் கருணாகரத் தத்துவ விவாதம், குடிலனின் நாஞ்சில் நாட்டு வர்ணனை நடராசனின் இயற்கை வர்ணனை ஆகியவற்றை கூறலாம்.

சிவகாமியின் சரிதம் தனிகதை நிகழ்ச்சி நிஷ்டாபரர் கருணாகரர் உரையாடல் நாடகத்தில் மூன்றாம் அங்கம் நான்காம் களத்தில் வருகிறது. சேரநாட்டு அரசன் பாண்டி நாட்டின்மீது படையெடுத்து வந்தபோது இந்த உரையாடல் நிகழ்ச்சி வரகிறது. 254 வரிகள் கொண்ட

இப்பகுதி முழுதும் வேதாந்தம் பற்றிய விவாதம் நாடகத்தைப் படிக்கும் வாசகனுக்கு அலுப்புதரும் பகுதி நாடகம் வெளிவந்தபோது சைவசித்தாந்திகளைத் தவிர மற்றவர்களால் விமர்சிக்கப்பட்ட பகுதி.

குடிலனின் நாஞ்சில் நாட்டு வர்ணனை இரண்டாம் அங்கம் முதல் களத்தில் வருகிறது. குடிலனும் ஜீவகனும் உரையாடும்போது சேரனின் நாட்டைப் பற்றிய பேச்சு வருகிறது. அப்போது குடிலன் நாஞ்சில் நாடு நமக்கு உரியது இப்போது வஞ்சிநாட்டின் ஒரு பகுதியாக உள்ளது என்கிறான். 107 வரிகள் கொண்ட இந்த வர்ணனை நீண்ட உரையாடல் பகுதி பழம் இலக்கியங்களின் செல்வாக்குடையது. குறிப்பாக சங்கப்பாடல்களின் பாதிப்பு இதில் உண்டு.

நடராஜனின் இயற்கை வர்ணனை நாடகத்தின் மூன்றாம் அங்கம் இரண்டாம் களத்தில் வருகிறது. இது தனிமொழி. மாலையில் ஊரின் ஒருபுறம் நடராஜன் உலாவிக்கொண்டிருந்த பொழுது இயற்கையைக் கண்டு பிரமித்துப் பேசும் பேச்சு புல், நாங்கூழ், புழு என ஒவ்வொன்றையும் வருணிக்கும் பகுதி. 107 வரிகள் கொண்ட இப்பகுதியும் நாடகப் போக்கிற்கு தொல்லை தருவது என்றே விமர்சகர்கள் கூறினர்.

மனோன்மணியம் முதல் பதிப்பு ஆங்கில முகவுரையில், மூலக்கையெழுத்து படிவத்தில் இருந்த சில பகுதிகளை விரிவஞ்சி விட்டுவிட்டதாக பெ.சு. கூறுகிறார். வையாபுரிப்பிள்ளை இந்நூலைப் பதிப்பிக்க எடுத்துக்கொண்ட போது, மூலக்கையெழுத்தில் விடுபட்ட பகுதிகளை பெ.சு.வின் மகன் நடராஜபிள்ளையிடமிருந்து பெற்றிருக்கிறார். அப்பகுதிகளைச் சேர்த்தால் மனோன்மணியம் நாடகத்தின் கதைப்போக்கு குலையும் என்பதால் அப்பகுதிகளை வையாபுரிப்பிள்ளையும் தவிர்த்திருக்கிறார். இப்பதிப்பிற்கு உதவிபுரிந்த கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை இது குறித்து சிறு குறிப்பு எழுதியுள்ளார்.

**சிவகாமியின் சரிதம்**

கனவில் வந்த நாயகனை மறக்க முடியாமல் அலமற்று நிற்கும் மனோன்மணி உறக்கம் வராமல் தவிக்கிறாள். வாணிக்கும் இதே நிலை அப்போது மனோன்மணி வாணியிடம் "யாமுடன் தேக்கிய இசையில் செப்பு ஒரு சரிதம்" என்கிறாள். வாணி வீணையை மீட்டிப் பாடுகிறாள். இந்நிகழ்ச்சி மூன்றாம் அங்கம் மூன்றாம் களத்தில் வருகிறது.

சிவகாமியின் சரிதம் 50 பாடல்களைக் கொண்டது (பி.இ.எண் 5 பார்க்க), குறள்வெண் செந்துறை யாப்பு வடிவிலானது. தன்னளவில் முழுக்கதையாகவும் நூலளவில் துணைக்கதையாகவும் அமைந்தது. இதுவும் ஒரு தழுவல் கதை.

ஆங்கில கவிஞர் Goldsmith எழுதிய The vicar of wakefield என்ற நூலில்வரும் Edwin an Angoline அல்லது The Hermit என்னும் கதைப்பாடலின் தழுவலே சிவகாமியின்

சரிதம். மூலக்கதை 750 பாடல்களை கொண்டது. பெ.சு. திருநெல்வேலியில் இந்து பள்ளியொன்றில் பணிபுரிந்த போது சிவகாமி சரிதப் பாடல்களைச் சிறு நூலாக வெளியிட்டார் (1869). மனோன்மணியம் நாடகம் எழுதி முடித்த பின்னர் சிவகாமியின் சரிதத்தை நாடகத்தின் ஒரு பகுதியாகச் சேர்த்துக் கொண்டார்.

சிவகாமியின் சரிதம் நாடகத்தில் இணைத்திருப்பது நாடகத்திற்குத் தொய்வைக் கொடுக்கிறது என்று கூறினாலும் நாடகத்தைக் காப்பியத் தன்மைக்கு உயர்த்தியுள்ளது. இப்பகுதியே. மகாபாரதத்திற்கு நளன் கதை, கம்பராமாயணத்திற்கு இரணிய வதைப் படலம், சிலப்பதிகாரத்தில் வேட்டுவவரி என்பது போல்.

இக்கதை இங்கே அமைந்துள்ளது ஆணவத்தால் காதலனை ஒதுக்கிய பெண் ஒருத்தி தன்னை உணர்ந்து காதலனைத் தேடிச் செல்வதாக அமைந்தது இக்கதை. மனோன்மணி புருஷோத்தமனின் காதல் வெற்றிபெறும் என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறது. மனோன்மணியம் இரண்டாம் பதிப்பு முகவுரையில் கே.என். சிவராஜபிள்ளை (1922) "இப்பகுதி அழகாக ஒளி படைத்த வைரம்" என்கிறார்.

சிவகாமியின் சரிதம் முதல் பதிப்பில் (1889)

**நானோ சிவகாமி சரிதம் செப்புவனென்று**
**ஏனோ தடுமாற்றம் என்னெஞ்சே - மானோய்நீர்**
**போதகமே செய்யுமுக்கட் போதகமே தம்போதகப்**
**போதகவே வீற்றிருக்கும் போது**

என்றும் காப்புப் பாடல் உள்ளது. மேலும் சிவகாமியின் சரிதக் கதைச் சுருக்கமும் இதில் உள்ளது. இவை எல்லாம் மனோன்மணியம் நாடக நூலில் சேர்க்கப்படவில்லை. சிவகாமியின் சரிதம் கதைப் பகுதியை மட்டும் நாடகத்திலும் சேர்த்துக் கொண்டனர். இக்கதை வருமாறு.

காவிரிப்பூம்பட்டிணத்தில் வணிக குல பெண்ணொருத்திக்கு மூன்று மக்கள் இருந்தனர். இரண்டு பெண்கள், ஆண் ஒருவன், இவர்களில் ஒரு பெண்ணுக்கு குழந்தை இல்லை. இன்னொரு பெண்ணுக்கு சிவகாமி என்னும் மகள் இருந்தாள். ஆணுக்கு சிதம்பரம் என்ற மகன் இருந்தான்.

சிவகாமியும், சிதம்பரமும் சிறுவயதில் ஒன்றாக விளையாடினர்; படித்தனர்; உண்டனர். இந்த நெருக்கம் காதலாக மாறியது. சிதம்பரம் சிவகாமியே தன் உயிர் என நினைத்தான். சிவகாமியின் சித்தி தனக்குக் குழந்தை இல்லாததால் தன் சொத்துக்களை எல்லாம் சிவகாமிக்குக் கொடுத்தாள்.

செல்வம் நிரம்பப் பெற்ற சிவகாமி ஆணவம் தலைக்கேற சிதம்பரத்தை மதியாமல் இருந்தாள். சிதம்பரம் தன் உணர்வை குறிப்பால் அவளுக்கு உணர்த்தினான். அவளோ அவனை உதாசீனம் செய்தாள். அவன் மனம் வெறுத்தான். அவனை மட்டுமல்ல உலகையே வெறுத்துக் காட்டுக்குச் சென்றாள். முதிய துறவியைப்போல் உருமாறி காட்டில் மறைந்து வாழ்ந்தான்.

சிவகாமியின் செல்வத்திற்காக அவளைத் தேடி வந்தனர் பலர்; அவளை மணம் செய்ய வாக்களித்தனர். அவர்களின் பேச்சில் அன்பு இல்லை எனக் கண்டு கொண்டாள். தன்னிடம் உண்மையான அன்பு செலுத்திய சிதம்பரத்தைத் தேட ஆரம்பித்தாள். தோழிகளின் உதவியை நாடினாள். அவன் வருவான் என நம்பினாள். அவன் வரவில்லை.

சிவகாமி நானே அவனைத் தேடிப்போவேன் என முடிவு செய்தாள். ஆண்வேடம் பூண்டாள், வீட்டைவிட்டு வெளியேறினாள். "அவனைக் கண்டு பிடிப்பேன் இல்லையெனில் உயிர் விடுவேன் எனச் சபதம் செய்தாள்.

தீர்த்தக் கரைகளுக்கும் குருக்கள் வாழும் மடங்களுக்கும் தத்துவ விவாதம் நிகழும் மன்றங்களுக்கும் யோகியர் வாழும் இடங்களுக்கும் சென்றாள். சிதம்பரத்தை காணவில்லை. நடந்து நடந்து களைத்தாள். இருள் கவியும் வேளை ஒரு காட்டில் மவுனமாக இருந்த முனிவன் ஒருவனைச் சந்தித்தாள்.

சிவகாமி அந்த முனிவரிடம் இளைப்பாற இடம் கேட்டாள். அந்த முனிவன் ஆண்வேடத்திலிருந்த அவளை பெண் என அறியாமல் இரவு என்னுடன் தங்கி காலையில் போ என்றான். முனிவன் தனக்கென ஒரு இடத்தைத் தேர்ந்தான். விறகை மூட்டி நெருப்பு வைத்தான். குளிர் காய்வோம்; பழங்களை உண்டு இளைப்பாறு மகனே என்றார் அந்த முதிய துறவி.

அந்த இளைஞன் கூச்சத்துடனும், சோகத்துடனும் இருப்பதைப் பார்த்து "மகனே இளமையில் ஏன் இத்துன்பம், பொருளை இழந்தாயா? நண்பர் இகழ்ந்தனரோ? காதலித்த பெண் கைவிட்டாளா? ஏன்? என்ன நடந்தது? கவலைவிடு" என்றார்.

அந்த இளைஞன் தன் உணர்ச்சியை கட்டுப்படுத்த முடியாமல் பேச ஆரம்பித்தான். அவனது வேடம் கலைந்தது. தலைமுடி கட்டவிழ்ந்தது; பெண் அடையாளம் தெரிந்தது. இளைஞன் இளம் பெண்ணாக நின்றான். முனிவர் அமைதியாகப் பார்த்தார். அந்தப் பெண் தன் வரலாற்றை சொல்ல ஆரம்பித்தாள்.

அவளது வரலாற்றைக் கேட்கக் கேட்க முனிவனின் முகம் மாறியது. பெருகி வரும் கண்ணீரைத் துடைத்தான். அவளுக்குத் தெரியாமல் முகத்தை மறைத்தான். அவள்

பேசிப்பேசி மனம் நொந்து, இனி தான் உயிரை இந்தத் தீயில் மாய்ப்பேன் என்று சொல்லிவிட்டு எரியும் நெருப்பில் குதிக்க ஆரம்பித்தாள்.

அந்த முனிவர் உடனே எழுந்து நின்றார். “சிவகாமி நான் உனது சிதம்பரனே” என்றார். முதுமைக் கோலத்தை நீக்கினார், அவளைத் தழுவிக்கொண்டார்.

சிவகாமிக்குச் செல்வம் வந்ததும் மாயை கண்ணை மறித்தது. ஆணவம் வந்தது. அதனால் புறக்கணிப்பு, இறைவனை விட்டு பிரிக்கும் பாவம் இது. ஆனால் சிதம்பரம் புறம் திரிந்தாலும் மறைந்த தோற்றத்துடன் நடந்தாலும் ஆன்மா (சிவகாமி) பரமான்மாவைக் கண்டு பிடித்தது. இத்தத்துவம் இதில் பேசப்படுகிறது.

யாப்பு

ஆசிரியப்பா, வாசகரின் புரிதல், பாத்திர உரையாடலக்கு ஏற்ப உணர்த்த வசதியானது. நூலாசிரியர் இப்பாவகையை அதிகம் பயன்படுத்துகிறார். மேலும் நேரிசை வெண்பா, ஒத்தாழிசை கலிப்பா, ஆசிரிய விருத்தம், கலி விருத்தம், கலித்தாழிசை, கலித்துறை, கலிவெண்பா, குறள் வெண்செந்துறை, வஞ்சிப்பா, வஞ்சித்தாழிசை, வஞ்சி விருத்தம் ஆகியனவும் வருகின்றன.

இந்நாடகத்தில் நாடக உரையாடல் குறுகியோ நீண்டோ வருகிறது. கருத்தின் நிலைக்கேற்ற ஓசை, வஞ்சி நாட்டுப் படைகள் பாண்டி நாட்டுக்குப் படையெடுத்து வரும்போது பாணர் பாடும் பாடல் வஞ்சித்தாழிசையில் அமைந்துள்ளது. (அங். 3 களம் 2) ஜீவகன் போருக்குச் செல்ல வேண்டிய அவசியத்தை மன்னிட்டுப் பேசும் விரிவுரை முக்கியமான பகுதி (அங் 4 களம் 1) இப்படிப் பல கூறலாம்.

தனிமொழி

ஒரு கதாபாத்திரத்தின் அடிமனத்தில் மறைந்திருக்கும் இயல்புகளை வெளிப்படுத்த உரையாடலை விடத் தனிமொழியே பெரிதும் துணை செய்யும். தனிமொழியாக ஒரு பாத்திரதம் பேசுவது அடுத்தவர் கேட்க உரக்கப் பேசுவது அல்ல. இது உரையாடல் அல்ல தனியே தன் எண்ணத்தை திட்டத்தை துக்கத்தை, மகிழ்வை வெளிப்படுத்துவது என்ற அளவில் இதைப் பார்க்க வேண்டும்.

நாடகத்தில் தனிமொழி என்பது புறக்கூத்து (Aside Speech) முன்னிலை கூற்று (Open Speech) வான் கூற்று (Voice from heave) என மூன்று நிலைகளில் இருக்கும். இவை கவிதை நாடகத்திற்கே உரியவை.

தனிமொழி (Soliloquy and aside) கதைப்போக்கை அறிய உதவும். மனோன்மணியம் நாடகத்தில் குடிலனின் தனிமொழி வழியே அவனது குணச்சித்திரம், சூழ்ச்சி வெளிப்படுகிறது.

இத் தனிமொழிப் பகுதிகள் இல்லை என்றால் கதை தொய்வு பட்டிருக்கும். நடராஜனின் தனிமொழி அழகியல் கூறுகள் கொண்டது. இவனது தனிமொழி சிறு அலுப்பைக் கொடுத்தாலும் நாடகத்திற்குச் கவித்துவத்தைக் கொடுக்கிறது. நாராயணன், புருடோத்தமன், பலதேவன் போன்றோரின் தனிமொழிகள் கதைப்போக்கிற்குப் பெரிதும் உதவுகின்றன.

கரு - பாத்திரம் - சிறப்பு

மனோன்மணியம் நாடகம் வெளிவந்த காலத்தில் கமலாம்பாள் சரித்திரம் நாவல் ஆசிரியர் ராஜம் அய்யர் சென்னை கிறிஸ்தவக் கல்லூரி இதழில் இந்த நாடகத்தை விமர்சித்து ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதில் “பண்டித வர்க்கத்தினரையும் ஒருபால் தழுவி முற்போக்காளர்களை ஒருபால் தழுவி இந்த அரிய நாடகம் இயற்றப்பட்டது. இது நடிப்பதற்கென்று கருதப்படவில்லை. கற்று அனுபவிப்பதற்கு” என்கிறார். (எஸ். வையாபுரிப்பிள்ளை 1968 ப. 294)

வையாபுரிப்பிள்ளையின் காலத்திலேயே இந்த நாடகம் படிப்பதற்குரியது என்று மதிப்பீடு வந்துவிட்டது. பே.சு.வின் நாடகம் வெளிவருவதற்கு சுமார் 40 ஆண்டுகளுக்குமுன் வந்த நாடகங்களில் சில, பலமுறை மேடை ஏறினாலும், கல்வித்துறையிலும் தீவிர விமர்சகர்களிடமும் பேசப்பட்டது மனோன்மணியம் நாடகமே.

பெ.சு. தமக்கு முன்மாதிரியாக சேக்ஸ்பியர் போன்றோர்களைக் கொண்டிருக்கிறார். சேக்ஸ்பியர் நாடகங்களில் வரும் “சிக்கல் முறுகலும் நெகிழ்ச்சித் திறம் உத்தியை” பெ.சு.வும் கையாளுகிறார். நாடக நிகழ்ச்சி ஒரு திசை நோக்கிச் செல்லும்போது ஒரு சக்தி இடையில் வந்து குழப்பத்தை உண்டாக்க ஆரம்பிக்கும். அப்போது நாடகம் நகரும், இதே உத்தியை மனோன்மணியம் நாடகத்தில் வரும் இரண்டு பெண்களின் திருமணத்தடை நிகழ்ச்சி வழி புலப்படுத்துகிறார். இரண்டும் நாடகத்தை நகரவைப்பன.

மனோன்மணியம் நாடகத்தில் 44 கதாபாத்திரங்கள் வருகின்றன. இவற்றில் பெயர் சூட்டப்படுபவை 14 ஆகும் பிற 34 பாத்திரங்களில் ஜீவகன், மனோன்மணி, குடிலன், சுந்தரமுனிவர், நடராஜன், நாராயணன் ஆகியோர் குறிப்பிடத்தகுந்தவர்கள் இவர்களே கதைகளை நடத்திச் செல்கின்றனர் இந்த பாத்திரங்களும் தனிப்பேச்சு வழியே கதையை புரிய வைக்கின்றனர். மனோன்மணியம் மொத்த வரிகளில் 1/8 பங்கு தனிமொழியாக வருகிறது.

மனோன்மணியம் நாடகம் தத்துவார்த்தமான நாடகம் என்பதை பெ.சு. முகவுரையில் கூறுகிறார். பெ.சு. தத்துவத்துறை பேராசிரியர் சைவசித்தாந்தம் படித்தனர்; கோடகநல்லூர் சுவாமிகளிடம் தீட்சை பெற்றவர்; விவேகானந்தரிடம் விவாதித்தவர், பெ.சு. எழுதிய ஆய்வுக் கட்டுரைகள் தவிர்த்த பிற எல்லாமே தத்துவச்சாயல் உடையவை. கட்டுரைகள் தவிர்த்த பிற

எல்லாமே தத்துவச்சாயல் உடையவை. மனோன்மணியம் நாடகப் பாத்திரங்கள் எல்லாம் தத்துவப் பின்னணியைக் கொண்டவை. அப்படி உருவகமாகக் கொள்ளும் பாத்திரங்களையே இந்நாடகத்தில் பெ.சு. படைத்திருக்கிறார்.

அப்படியான கதாபாத்திரங்களும் உருவகங்களும் கீழ்வருமாறு

ஜீவகன் - சார்போதகமான ஜீவாத்மா

குடிலன் - மாயாசக்தி

மனோன்மணியம் - அந்த தத்துவம்

வாணி - புத்தி தத்துவம்

நடராஜன் - ஞான தாதாவான உபாசன மூர்த்தி

புருடோத்தமன் - ஞானாசிரியர்

மதுரை நகரம் - ஜீவாத்மா உதிக்தெடுக்கும் மூலத்தானம்

நெல்லை நகரம் கோட்டை - மாயகாரியமான அன்ன மயமாகி பஞ்ச கோசத்தால் அமைந்த சரீரம்

மனோன்மணியம் சபை - பரோட்சஞானம்

புருடோத்தமன் கனவு - ஈஸ்வர அருளின் ஸ்பரணம்

கருங்கை - பாபவிமோசன பந்தா

இந்த உருவக விளக்கத்தை சுந்தரனார் முதல் பதிப்பில் கூறுகிறார்.

குடிலனின் தன்னலத்திற்கும் சுந்தரமுனிவரின் அறத்திற்கும் போராட்டம் இறுதியில் அறம் வெற்றியடைகிறது. ஊழின்வழி முடிவு வருகிறது. நாடகம் காப்பிய மரபுடையது, உவமை, உருவகம், பிறிது மொழிதல் அணி தற்குறிப்பேற்ற அணி, உயர்வு நவிழ்ச்சியணி போன்ற போன்ற அணிகள் விரவி நின்று கற்பனை வளத்தைப் பெருக்குகிறது.

நாடகப் பாத்திரங்களின் நீண்ட உரையாடலும், கருத்து விளக்கமும் பார்ப்பதற்கு மட்டுமல்ல படிப்பதற்கும் அலுப்பூட்டும். இந்தப் பொதுவான குறை மனோன்மணியம் நாடகத்திலும் உண்டு. ஆனால் இதன் மொழி நடையும், அலுப்பூட்டாத கதை கூறும் தன்மையும் நாடகப் படிப்புக்குத் துணை செய்கின்றன. கதைப் போக்கில் ஓரிடத்தில் மட்டும் சிறு தவறு உண்டு.

நாடகத்தின் நான்கான் அங்கம் நான்காம் களம் (வரிஇ 278) சேவகன் குடிலனிடம் மன்னன் அழைத்த செய்தியை அறிவித்து விட்டு விடைபெறுகிறான். ஐந்தாம் களத்தில் (வரி

206) ஜீவகன் குடிலனை அழைக்க ஏவுவதாகக் கூறப்படுகிறது. மயிலை சீனிவேங்கடசாமி எனச் சிலரின் பதிப்புகளில் இத்தவறு இல்லை.

சுந்தர முனிவரின் தவ வலிமையே ஜீவகனையும், மனோன்மணியையும் காப்பாற்றுகிறது. மனோன்மணியின் கனவில் சேரன் வரும்படியும் சேரனின் கனவில் மனோன்மணி வரும்படியும் தன் மன ஆற்றலால் செய்தவர் சுந்தரர். இக்கனவில் வெற்றியே குடிலனை வீழ்த்தும் என்பதை அவர் அறிவார். அவர் அறத்தின் படி வாழ்பவர் குருவைச் சரணடைதல் என்பதன் தத்துவம் இந்நாடகம்.

பாரதியின் முன்னோர்களின் பட்டியலில் கோபாலகிருஷ்ண பாரதி அண்ணாமலை ரெட்டியார். இராமலிங்க வள்ளலார், பரிதிமாற் கலைஞர் ஆகியோருடன் பெ.சு. வையும் கூறுகிறார் கைலாசபதி கதை கூறும் போக்கு கவிதையில் எளிமை, பதச்சேர்க்கை போன்றவை பெ.சுவின் சிறப்பு பாரதிக்கு இவை முன்னுதாரணமாக இருந்திருக்கலாம்.

**தமிழ்படிப்பும் வழக்காறுகளும்**

மனோன்மணியத்தில் பழம் இலக்கியங்களின் பாதிப்பு உண்டு திருக்குறள் நேரடியாக வருகிறது. பழம் தமிழ் இலக்கியங்களைப் பாராட்டும் பாடல் மனோன்மணியம் நாடகத்தில் உண்டு ‘‘பத்துப் பாட்டில் மனம் பற்றியவர் பிற நூற்களைப் பற்றமாட்டார்’’ என்கிறார் பெ.சு. (மனோன்மணியம் தமிழ் தெய்ய வணக்கம்)

பே.சு. 1891க்கு முன்பே பழந்தமிழ் இலக்கிய இலக்கணங்களை முறையாகப் படித்திருக்கிறார். பெ.சு.வின் காலகட்டத்தில் இந்த நிகழ்வு அதிசயமானது 19 ஆம் நூற்றாண்டில் தமிழ்ப் புலவர்கள் தலபுராணங்கள் யமகம் திரிபு அந்தாதிகளையே பெரிதும் படித்து வந்தனர். சங்கப் பாடல்கள், சிலப்பதிகாரம், திருக்குறள் போன்றவற்றை அறிந்தவர்கள் மிகக் குறைவு என்பது பதிவு செய்யப்பட்டிருக்கிறது, முக்கியமாய் உ.வே.சா. இதை வெளிப்படையாக கூறுகிறார்.

கும்பகோணம் முன்சீபாக இருந்த சேலம் இராமசாமி முதலியார் என்பவர் உ.வே.சா.வைச் சந்திக்கப் போயிருக்கிறார் (21.10.1880) முதலியார் அய்யரிடம் ‘‘என்ன படித்திருக்கிறீர்கள்’’ என்று கேட்டார். அய்யர் பதில் சொன்னார். அது நீண்ட பட்டியல் முதலியார் ‘‘சிந்தாமணி, சிலப்பதிகாரம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூற்களைப் படிக்கவில்லையா’’ என்றார். உ.வே.சா. பதில் பேசவில்லை. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு உ.வே.சா. பதில் பேசவில்லை. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு உ.வே.சா. சங்க இலக்கியங்களையும், இரட்டைக் காப்பியங்களையும் தேட ஆரம்பித்தார்.

சிலப்பதிகாரத்தை உ.வே.சா. தேடிச் சென்ற போது மரபுக்கவிஞர் ஒருவர் சிலப்பதிகாரமா? அப்படி இருக்காதே, சிலப்பதிகாரம் என்றல்லவா இருக்கவேண்டும் என்றாராம். இது 19ஆம்

நூற்றாண்டு நிலை இந்த காலகட்டத்தில் கொடும் மலையாளக் குடியிருப்பில் உள்ள தத்துவப் பேராசிரியர் தமிழ் இலக்கியங்களைப் படித்திருக்கிறார் என்பது முக்கியமான விஷயம்.

பெ.சு.வும் 1880-90-க்குள் பத்துப்பாட்டு, திருக்குறள், சிலப்பதிகாரம் போன்ற நூல்களைப் படித்திருக்கிறார். பெ.சு.வுக்கு திருநெல்வேலி நாஞ்சில் நாடு, சென்னை தொடர்பு இதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். இதனால்தான் இந்த நூற்களைப் பதிப்பித்த உ.வே.சா. பேரில் பெரும் மதிப்புடன் பாராட்டினார் பெ.சு.

இந்தியாவின் பழம் புராணங்களையும் தமிழகத்தின் மரபுவழி புராணங்களையும் வழக்காறுகளையும் பெ.சு. அறிந்திருக்கிறார். இவற்றைத் தகுந்த இடங்களில் மேற்கோளாகக் காட்டுகிறார். பெ.சு. திருக்குறளை நன்கு கற்றவர் அந்நூலை 26 இடங்களுக்கு மேல் கையாளுகிறார்.

**மேடை ஏறுதல்**

மனோன்மணியம் அச்சில் வந்தபோதே பெ.சு. அதை மேடையிலேற்ற ஆசைப் பட்டிருக்கிறார். தன்னிலும் 18 வயது இளையவரான பம்மல் சம்மந்த முதலியாரிடம் "மனோன்மணியம் நாடகத்தை மேடையில் ஏற்ற முடியுமா? இந்நாடகத்தில் வரும் சிவகாமியின் சரிதம், நிஷ்டாபரர் கருணாகரர் உரையாடல் உட்பட நான்கு பகுதிகளை நீக்கிவிடலாம்" என்று எழுதியிருக்கிறார். அவர் தயக்கத்துடன் மறுத்துவிட்டு "நடிப்பிற்குரிய நாடகம் வேறு படிப்பதற்குரிய நாடகம் வேறு மனோன்மணியம் படிப்பதற்குரியது" என்று எழுதினார்.

பெ.சு.வின் காலத்திற்குப் பிறகு சண்முகசுந்தர முதலியார் மனோன்மணியத்தை நடிப்பதற்குரிய நாடகமாக மாற்றி மேடை ஏற்றியிருக்கிறார். திருவனந்தபுரம், குருசாமிப் பிள்ளை என்பவது மனோன்மணியத்தை மேடை நாடகமாக மாற்றி அச்சில் கொண்டு வந்தார் (1920). இதன் சில பகுதிகள் அவ்வப்போது பள்ளி, கல்லூரிகளில் நடிக்கப்பட்டன. இந்த குருசாமிப் பிள்ளை, ராபின்சன் குருசோ நாவலை தமிழில் சுருக்கமாய் வெளியிட்டவர்.

மனோன்மணியம் திரைப்படமாகவும் வந்திருக்கிறது (1942). இது சேலம் மாடர்ன் தியேட்டர் தயாரிப்பு டி.ஆர். சுந்தரம் இயக்கம் எம்.எல். டாண்டன் திரைக்கதை எழுதினார். கிருஷ்ணன் கோவில் (நாகர்கோவில் வி. மகாதேவன் இசையமைத்திருக்கிறார். அவருக்கு இது முதல் படம். இத்திரைப்படத்தில் டி.ஆர். ராஜகுமாரி மனோன்மணியாகவும், பி.யூ. சின்னப்பா புருஷோத்தமனாகவும் டி.எஸ். பாலையா குடிலனாகவும் நடித்தனர். பாலையா சிறந்த வில்லன் என அப்போது பாராட்டப்பட்டார். டி.ஆர். ராஜகுமாரி மனோன்மணியாக மாறிவிட்டாள் என விளம்பரப்படுத்தப்பட்டது. இப்படம் சென்னையில் 70 நாட்கள் ஓடியது. திருவனந்தபுரத்தில் 50 நாட்கள் ஓடியது. இப்படத்தைப் பார்த்த பெ.சு.வின் மகன் பி.எஸ்.

நடராஜபிள்ளை "என் தந்தையின் மூலக்கதையைக் கெடுக்கவில்லை நான் குடும்பத்துடன் மூன்றுமுறை இப்படத்தைப் பார்த்தேன்." என்றார்.

## 6. முதற்கல்வெட்டும் திருவிதாங்கூர் வரலாறும்

பேராசிரியர் சுந்தரனார் பிறவகை சிரஸ்தாராக இருந்தபோது தெக்கன் திருவிதாங்கூரில் (இன்றைய கன்னியாகுமரி மாவட்டம்) அரசாங்க காரியமாகப் பலமுறை வந்திருக்கிறார். இக்காலத்தில் திருவிதாங்கூரில் தொல்லியல்துறை ஆரம்பிக்கப்படவில்லை. ஆனால் தனிப்பட்ட சிலர் இத்துறையில் ஆர்வம் காட்டினர் சுந்தரம் பிள்ளை பி.ஏ. எம்.ஏ. படித்தபோது துணைப்பாடமாக வரலாறு படித்திருக்கிறார். இயல்பாகவே இவருக்கிருந்த வரலாற்றாய்வுக்குப் படிப்புப் பின்னணியும் ஒரு காரணம்.

பெ.சு. வாழ்ந்த காலகட்டத்தில் திருவனந்தபுரம் கலை, இசை, ஆராய்ச்சிக்கு முதலிடம் கொடுத்தது. பிரிட்டீஷ் ஆளுநர்களும், அவர்களின் கீழ் பணிபுரிந்தவர்களில் சிலரும் இலக்கியம், ஆராய்ச்சியில் நாட்டமுடையவர்களாய் இருந்தனர். இருபதாம் நூற்றாண்டு ஆரம்பத்தில் திருவனந்தபுரத்தில் ஆராய்ச்சியாளர்கள் பலர் வாழ்ந்தனர். கேரள சொசைட்டி என்ற அமைப்பு அப்போது இயங்கியது. அதில் நடந்த கூட்டங்களில் படிக்கப்பட்ட கட்டுரைகள் (Kerala Society Papers) என்னும் தலைப்பில் வெளியிடப்பட்டன. இந்தப் பின்னணி உருவாக பெ.சு.வும் ஒரு காரணம்.

**ஆய்வின் ஆரம்பம்**

பெ.சு. ஆராய்ச்சிக்கு அறிவியல் ரீதியான பார்வை அவசியம் என்பதை ஆங்கிலப் படிப்பின் வழி உணர்ந்திருந்தார். மேலை, கீழை நாட்டு தத்துவத்தைப் புரிவதற்குக்கூட இது தேவை என்பதை அவர் அறிந்திருந்தார். இதற்காக திருவிதாங்கூர் அரசின் உதவியுடன் ஒரு அமைப்பை நிறுவி அதில் சொற்பொழிவாற்றினார். வேறு சிலரும் இவ்வமைப்பில் பேசினார். Classification of Science என்ற தலைப்பில் (தத்துவத்தில் அறிவியலின் பாகுபாடு) ஒருமுறை பேசியது இவருக்கென்ற கூட்டத்தை உருவாக்கியது. பின்னர் இந்த விஷயங்கள் 'நூற்றொகை விளக்கம்' என்ற தலைப்பில் நூலாக வந்தது.

பெ.சு.வின் இந்த அமைப்பில்தான் சுவாமி விவேகானந்தரும் பேசினார். அவருடன் சைவசித்தாந்தம் குறித்து விவாதம் நடந்தது அப்போது தான்.

இந்தக் காலகட்டத்தில் கோவில் கல்வெட்டுகளைப் படி எடுத்து ஆராய்வது என்ற முயற்சியிலும் பெ.சு. ஈடுபட்டிருக்கிறார். இதற்கான பயிற்சியை அவர் எப்போது பெற்றார்.

கல்வெட்டுக்குரிய வட்டெழுத்து கற்றது யாரிடம் என்னும் செய்திகள் பற்றி விளக்கமாய் தெரியவில்லை. அரசு காரியமாக திருவட்டாறு ஊர் கோயிலுக்கு வந்தபோது இவ்வூரிலிருந்தும் கோவிலிருந்தும் பழைய தலபுராணம், வேறு ஆவணங்களை பே.சு. எடுத்துச் சென்றிருக்கிறார்.

தென்னிந்தியாவில் சென்னையை மையமாகக் கொண்டு தொல்லியல் துறை உருவாகிவிட்டது இதற்கும் ஒரு பின்னணி உண்டு.

கிழக்கிந்திய அதிகாரியாக இருந்த அலெக்சாண்டர் கன்னிங்காம் என்பவர் இந்தியாவின் தொன்மையான சின்னங்களைப் பாதுகாப்பதற்குத் தொல்லியல்துறை ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்தை 1848-இல் முன்வைத்தார். கிழக்கிந்தியக் கம்பெனி அவரது கருத்தை லண்டனுக்கு அனுப்பியபோது அது நிராகரிக்கப்பட்டது. இது நடந்து 14 ஆண்டுகள் கழித்து (1862) ஆர்கியாலஜிக்கல் சர்வேயர் என்ற பதவி ஏற்படுத்தப்பட்டது. அதற்கு ஒரு அதிகாரியை பிரிட்டீஷ் கவர்னர் நியமித்தார். பின் இந்த அதிகாரி வேறு துறைக்கு மாற்றப்பட்டார். இதன்பின் இந்த இலாகா செயலற்று இருந்தது.

இதன்பிறகு எட்டு ஆண்டுகள் கழித்து (1870) தொல்லியல் துறை உயிரூட்டப்பட்டது. இப்போது அலெக்சாண்டர் கன்னிங்காம் இத்துறைக்குத் தலைமை ஏற்றார். தென்னிந்தியாவில் இத்துறை செயல்பட்ட போது (1874) சென்னை மையமாக இருந்தது. பின் நான்கு ஆண்டுகளில் (1878) இந்தியத் தொல்லியல் சட்டம் உருவாக்கப்பட்டது. 1885-இல் தென்னிந்திய கல்வெட்டுத்துறையின் தலைவராக இருந்த டாக்டர். இ. ஹால்சர் தென்னிந்தியச் சாசனங்கள் (1890) இந்தியச் சாசனங்களின் தொகுப்புகளைக் கொண்டு வந்தார்.

தென்னிந்தியச் சாசனத் தொகுப்புகள் வரும் முன்பே பெ.சு. இத்துறையில் ஈடுபாடு காட்டினார். சிரஸ்தார் (Commissioner of Separate revenue) என்னும் பதவியில் (1812 - 85) மூன்று ஆண்டுகள் இருந்தபோது தொல்லியல் துறையிலும் ஆர்வம் காட்டினார்.

திருவிதாங்கூரின் தொல்லியல் இயக்குநராக டி.எ. கோபிநாதராவ் நியமிக்கப்பட்டபோது (1902) அவர் பெ.சுவின் கையெழுத்துப் பிரதிகளிலிருந்து கல்வெட்டுகளைப் பெற்றிருக்கிறார். பெ.சு.வுக்கு இக்காலத்தில் பண்டித கணேசபிள்ளை என்பவர் உதவியாளராக இருந்தார்.

திருவிதாங்கூரில் தொல்லியல் துறையில் கோபிநாதராவ் சேர்ந்தபோது அவருக்கு 30 வயது தான். ராவ், கல்வெட்டு துறையில் ஏற்கெனவே பயிற்சி பெற்றவர் கோபிநாதராவ். (1872 - 1872) மராத்திய பிராமணர் ஸ்ரீரங்கம் அருகே உள்ள துறையூர் என்ற ஊரினர். வேதியல் படித்துவிட்டு முதுகலை வரலாற்றுக்குப் போனார். திருவிதாங்கூர் கல்வெட்டுகளை ஆராய்ந்த இவர் Travancore Archaeological Series Vol. 1,2,3 ஆகியவற்றைப் பதிப்பித்தவர்

(1908). இந்த மூன்று தொகுதிகளிலும் உள்ள கல்வெட்டுகளில் சிலவற்றின் அடிக்குறிப்புகளில் சுந்தரனாருக்கு நன்றி கூறுகிறார்.

### முதற் கல்வெட்டு

சுந்தரனார் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் பிறவகை சிராஸ்தார் (Commissioner of separate revenue) என்னும் பதவியில் இருந்த சமயம் (1882 - 1885) தென்திருவிதாங்கூரின் சில ஊர்களுக்கு அலுவல் நிமித்தம் வருவார். கல்லூரியில் அவர் தத்துவம் படித்தாலும் வரலாற்றை ஒரு பாடமாகப் படித்திருந்தார். அவருக்குக் கல்வெட்டுத் துறையில் ஆர்வம் உண்டு. இந்தியாவின் தொல்லியல் சட்டம் உருவான (1878) காலகட்டம் அது.

இக்காலத்தில் திருவிதாங்கூரில் தொல்லியல்துறை தனியாகச் செயல்படவில்லை. சுந்தரனார் தனிப்பட்ட விருப்பம் காரணமாக கல்வெட்டுகளைப் படி எடுத்துப் பதிவு செய்திருக்கிறார். அவர் பணிபுரிந்த வருவாய்த்துறையின் செல்வாக்கு அவரது தேடலுக்கு உதவியது.

சுந்தரனார் கல்வெட்டுகளைப் படி எடுப்பதற்கு தமக்கு உதவியாகப் பண்டித கணேசபிள்ளை என்பவரை வைத்திருந்தார். கணேசபிள்ளை வருவாய்த்துறையில் எழுத்தாளராகப் பணிபுரிந்தார். இவர் கல்வெட்டு படி எடுப்பதில் பயிற்சி உடையவர், யாழ்ப்பாணத்துக்காரர். நாஞ்சில் நாட்டு தேரூரில் அவரது மனைவி இருந்தார். அதனால் தேரூருக்கு அடிக்கடி வருவார்.

பண்டித கணேசபிள்ளையின் மைத்துனர் கல்வெட்டுகள் காணப்பட்ட இடங்களை அத்தானுக்கு அடையாளம் காட்டுவார். அப்படியாக அவர் ஆரல்வாய்மொழி கரைக்கோட்டையில் கண்டுபிடித்த கல்வெட்டை கணேசபிள்ளையிடம் சொன்னார். அவர் அதை மைபூசி தாளில் படி எடுத்து சுந்தரம் பிள்ளையிடம் கொடுத்தார்.

ஆரல்வாய்மொழி ஊர் திருவிதாங்கூர் எல்லையில் உள்ளது. இங்கு கோட்டை வாசலும் சவுக்கையும் (Cheque Post) உண்டு. இந்த இடத்தில் உள்ள கோட்டை மதில் சுவரின் ஒரு பகுதியில் தான் கரைக்கோட்டை எனப்படும் இடம். இங்குதான் கணேசபிள்ளை கண்டுபிடித்த கல்வெட்டு இருந்தது.

இந்தக் கல்வெட்டு இப்போது பத்மநாபபுரம் (கல்குளம் வட்டம்) அரண்மனை அருங்காட்சியகத்தில் உள்ளது. சுந்தரம் பிள்ளை இந்த கல்வெட்டைப் படித்து ஆராய்ந்து எழுதியிருக்கிறார். இதுபற்றி தம் தகவல்களை எழுதி வைத்திருந்தார். இதை அரசு அறிக்கையில் வருவாய்த்துறை சிறு குறிப்பாக வெளிவந்தது.

திருவிதாங்கூர் தொல்லியல் துறை இயக்குநராக இருந்த பி.எ. கோபிநாதராவ் இக்கல்வெட்டை 1902-இல் மறுபடியும் படி எடுத்த 1908-இல் வெளியிட்டார். (Travancore Archaeological Series No. 1 Trivandrum. 1908 P 227). இந்த கல்வெட்டை முதலில் கண்டுபிடித்தவர் சுந்தரம் பிள்ளை என்பதையும் நன்றியுடன் குறிக்கிறார் கோபிநாதராவ்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கிடைத்துள்ள மொத்தம் 801 கல்வெட்டுகளிலும் மிகப்பழமையானது. ஆரல்வாய்மொழிக் கரைக் கோட்டையின் கல்வெட்டுதான். இது 17 வரிகளைக் கொண்டது. வட்டெழுத்து வடிவில் அமைந்தது மொழி தமிழ்.

தனிக்கல்லில் உள்ள இந்தக் கல்வெட்டின் மேல்பகுதியில் வில் ஏந்திய நேர்முகப் பார்வை கொண்ட வீரரின் புடைப்புச் சிற்பம் உள்ளது. இந்தத் தனிக்கல் 60 செ.மி. அகலமும் கொண்டது. இதில் 18 கோடுகள் வரையப்பட்டு 17 வரிகளில் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. கல்வெட்டு வசனங்களைச் சுற்றி எல்லைக்கோடு உண்டு.

இந்தக் கல்வெட்டு பற்றி சிறு கட்டுரை எழுதிய பி.கே. ஜோசப் (Kerala Society Papers Series 3 1930 ப. 146) பேராசிரியர் சுந்தரனாரைப் புகழ்கிறார். இக்கல்வெட்டில் "பண்டை தமிழ் போர் வீரன் போர்க்களத்தில் ஆடை அணிந்த விதம் பற்றியதற்குச் சான்று இது; இந்த வீரன் லங்கோடு என்ற ஆடையை மட்டும் அணிந்திருக்கிறான். அவன் காதில் பெரிய துவாரம் இருக்கிறது. அப்போது ஆண்களுக்குக் காது குத்தும் பழக்கம் இருந்திருக்கலாம்" என்கிறார்.

பாண்டியனின் படைத்தளபதிகளுள் ஒருவனான இரணகீர்த்தி என்பவன் சேரர் படையுடன் போரிட்டு மரணமடைந்த செய்தியை இக்கல்வெட்டு கூறுகிறது. சேரனின் படை கரைக்கோட்டையை அழிக்க விழிஞ்ஞத்திலிருந்து புறப்பட்டு வந்தபோது இப்போர் நடந்தது.

இரணகீர்த்தியை "பாண்டிய அரசனின் பெருமாள் அடிகளுள் அன்பு மீக்கொண்டவன்" என இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. ஒரு வகையில் பிற்காலச் சோழர்கால வேளக்காரப் படை வீரனைப் போன்றவன் இவன் என்று கூறலாம். பெருமாள் அடிகள் என்பது மன்னவனுக்கு வேண்டியவர்களின் உயர்ந்த தானம் உடையவன் என்றும் கொள்ளுகின்றனர்.

இந்தக் கல்வெட்டு ஒன்றை உள்ளிட்டுச் சேவகர்களின் துணையுடன் பகைவரை எதிர்த்ததாகவும் சேரனின் படை கரைக்கோட்டையை (ஆரல்வாய்மொழி) அழிந்ததாகவும் இதில் வீரர்கள் பலர் மாண்டதாகவும் குறிப்பிடுகிறது. அதோடு உள்ளீட்டுச் சேவர்களின் மேல் அம்பு பாய்ந்ததையும் இதில் தொழுவூர் கூற்றம் பெருமூர் பாதிக்கப்பட்டதையும் குறிப்பிடுகிறது.

சென்னை அருங்காட்சியகத்தில் உள்ள மாறஞ்சடையனின் திருபரங்குன்ற கல்வெட்டைப் போன்று கரைக்கோட்டை கல்வெட்டு காணப்படுகிறது என்கிறார். எனவே ஆரல்வாய்மொழி கரைக்கோட்டை கல்வெட்டும் கி.பி. 8ஆம் நூற்றாண்டு என முடிவு செய்கிறார்.

இக்கல்வெட்டில் வரும் வழக்க என்பதற்குத் தடுமாறுதல் மாறுபாடு என்று பொருள் கொள்ளுகின்றனர். சேரனின் படை விழிஞ்ஞத்திலிருந்து புறப்பட்டபோது ஏதோ காரணத்தில் ஏற்பட்ட தடுமாற்றத்தை இது குறிப்பதாகக் கொள்ளலாம் என்கிறார் கோபிநாதராவ். இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் விழிஞ்ஞம் என்ற ஊர் திருவனந்தபுரம் அருகே உள்ளது. கடற்கரை கிராமம் தொழுவூர் இன்றைய திருநெல்வேலி மாவட்டத்தின் தென் பகுதியில் உள்ள ஊர்.

**பிற ஆய்வுகள்**

சுந்தரர் மனோன்மணியம் நாடகத்துக்காக மறுபடியும் மறுபடியும் நினைக்கப்பட்டாலும் அவரது ஆராய்ச்சிக் கட்டுரைகள் நிலை பேறானவை. அவரது முடிவுகளில் சில சான்றுகளால் தகர்க்க முடியாதவை. அவரது ஆராய்ச்சிக் கட்டுரைகள் எல்லாம் ஆங்கிலத்திலேயே உள்ளன. அவற்றிற்கு மொழிபெயர்ப்பும் வரவில்லை. ஆங்கில நூற்களில் எல்லாமே அச்சிலும் இல்லை.

சுந்தரனாரின் ஆய்வுகளில் பெரும்பாலான தமிழ் இலக்கியங்களின் காலம் பற்றிக் கூறுபவை, கம்பராமாயணத்தின் மூலப்பிரதியின் அடிப்படையில் தமிழ் சாதிபற்றி ஆராய்ந்திருக்கிறார். இது பற்றிய அவரது கையெழுத்துப் பிரதியை வெள்ளக்கால் சுப்ரமணிய முதலியாரிடம் கொடுத்திருக்கிறார். தன் கருத்தை முதலியாரிடம் விவாதித்திருக்கிறார். முதலியார் சுந்தரனாரின் எழுத்து பேச்சு அடிப்படையில் தென்னிந்திய வரலாறு என்ற கட்டுரை எழுதியிருக்கிறார்.

சுந்தரனார் ஆங்கிலத்தில் எழுதிய ஆய்வுக் கட்டுரைகள்.

எல்லாமே நூல் வடிவில் வந்துள்ளன.

**திருவிதாங்கூரின் வரலாறு**

திருவிதாங்கூரின் ஆரம்பகால வரலாறு (Some early sovereigns of Travancore) என்ற நூல் பெ.சு. எழுதிய நூற்களில் ஆழமானது, நுட்பமானது. இவர் சிறந்த வரலாற்றாசிரியர் கல்வெட்டாய்வாளர் என்பதற்குச் சரியான சான்று இந்த நூல். இது திட்டமிட்டு எழுதப்பட்டது அல்ல.

திருவனந்தபுரத்தில் 1894 மார்ச் 24 முதல் 31 ஆம் தேதிவரை எட்டு நாட்களிலும், ஏப்ரல் 7 ஆம் தேதியிலும், ஆய்வாளர்கள், பேராசிரியர்கள், அரசு உயர் அதிகாரிகள், மலையாள அறிஞர்கள் முன்னிலையில் பேசிய பேச்சே இந்த நூல். பெ.சு. பேசிய பேச்சை வெளியிட வேண்டும் என்ற அக்கூட்டத்தில் முடிவு செய்தனர். இதே காலகட்டத்தில் நூல் வந்தது (1884 ஜூன்). பெ.சு. அதற்கு ஒரு முகவுரையும் எழுதியிருந்தார். முகவுரையில் அக்கால அரசர் ஸ்ரீமூலம் திருநாளுக்கும், புத்தகம் வெளிவர உதவிய தன் நண்பர் கே.ஜி. சேஷையருக்கும் நன்றி தெரிவித்திருக்கிறார்.

கே.ஜி. சேஷையர் திருவனந்தபுரத்தில் நீதிபதியாக இருந்தவர் தமிழ் அபிமானி 1920 - 1930க்களில் வையாபுரிப்பிள்ளை கவிமணி லட்சுமணபிள்ளை ஆகியோருடன் தமிழ் இலக்கியம் தமிழக வரலாறு குறித்து உரையாடியவர். தமிழ் இலக்கியங்களை திருவனந்தபுரம் மலையாள அறிஞர்களிடம் கொண்டு சென்றவர். இவரது இளவயதில் சுந்தரனாருடன் நட்புகொண்டிருந்தார்.

திருவிதாங்கூரின் வரலாறு என்ற நூலை மறுபடியும் வெளியிட வேண்டும் என திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் வேண்டுகோளுக்காக சுந்தரனாரின் மகன் பி.எஸ். நடராஜ பிள்ளை அந்நூலைப் பதிப்பிக்கத் தானே முன்வந்தார். பெரும் உழைப்புடன் 1943 ஆகஸ்ட் 14ல் இந்த நூல் வெளிவந்தது.

நடராஜபிள்ளையின் பதிப்பில் பெ.சுவின் முகவுரை திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரி வரலாற்றுத்துறை தலைவர் கே.வி. ரங்கசாமி அய்யங்காரின் அணிந்துரை, நடராஜபிள்ளையின் குறிப்புரை ஆகியன இருந்தன. இந்நூலில் நான்கு அதிகாரங்களும் பின்னிணைப்பும் இருந்தன.

பின்னிணைப்பில் திருவிதாங்கூர் மன்னர்களின் பண்டைய வரலாறு, மலையாள ஆண்டு நான்காம் ஐந்தாம் நூற்றாண்டுகளில் பண்டைய திருவிதாங்கூர் வரலாறு, மலையாள ஆண்டு ஆறாம் நூற்றாண்டில் பண்டைய திருவிதாங்கூர் வரலாறு திருவிதாங்கூரின் பிற கல்வெட்டுகள் ஆகிய செய்திகள் உள்ளன.

ராபர்ட்ஹார்வியின் விமர்சனம், பெ.சு. பற்றி ராபர்ட் ஹார்வி எழுதிய வாழ்க்கைக் குறிப்பு சில கல்வெட்டுகள் ஆகியனவும் உள்ளன. வட்டெழுத்து கல்வெட்டுகள் தமிழ்மொழி எழுத்தில் தொகுக்கப்பட்டுள்ன. சில ஆங்கில மொழிபெயர்ப்புடன் உள்ளன. 164 பக்கங்கள் கொண்ட இந்நூலின் மூன்றாம் பதிப்பு வந்துவிட்டது. பெ.சு. தன் முதல் பதிப்பை ஸ்ரீ ராமவர்மா மூலம் திருநாளுக்குச் சமர்ப்பணம் செய்திருக்கிறார். (மலையாள ஆண்டு 1069) பின் வந்த இரு பதிப்புகளிலும் இச் சமர்ப்பண வரிகள் உள்ளன.

திருவிதாங்கூரின் பழைய வரலாற்றை அறிவியல் பூர்வமாக எழுதிய ஆரம்பகால அறிஞர் பெ.சு. என்பது திருவிதாங்கூர் வரலாற்றை எழுதிய நாகம் அய்யாவின் கருத்து

டாக்கடர் கே.கே. பிள்ளையும், இந்த நூலை சிறந்த ஆய்வு நூல் என்று நாஞ்சில் நாட்டு வரலாறு குறித்து சென்னை பல்கலைகழகத்தில் பேசிய போது குறிப்பிட்டார்.

திருவிதாங்கூர் வரலாற்றை முதலில் எழுதிய பாச்சமுத்து கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம் ஊரில் 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் சோதிடர், ஓவியர், ஆயுர்வேத மருத்துவர், மலையாளம், சமஸ்கிருதப் பண்டிதர். இவரது திருவிதாங்கூர் வரலாறு மலையாளத்தில் எழுதப்பட்டது (1958). இந்த நூலின் பிரதியைத் தேடி சுசீந்திரத்திற்கு வந்திருக்கிறார் சுந்தரனார்.

பிறவகை சிரஸ்தாராக இருந்தபோது நாஞ்சில் நாட்டுக் கோவில்களில் கல்வெட்டுகளையும், ஊர்ப்புறங்களில் உள்ள எட்டுப் பிரதிகளையும் தேடிய போதுதான் பாச்சமுத்துவின் மகன் சர்மாவை சந்தித்தார். சர்மாவும் வைத்தியர் இவரது 80 விழா மலரில் சுந்தரனாரைச் சந்தித்த நிகழ்ச்சி கூறப்படுகிறது.

நாகம் அய்யாவின் திருவிதாங்கூர் ஸ்டேட் மேனுவல் ஆங்கிலத்தில் அமைந்தது (1903). 1943-இல் வெளிவந்த ஸ்டேட் மானுவல் 6 தொகுதிகள் கொண்டது. இது ஆங்கில நூல் இவை தவிர ஸ்ரீதரமேனன், கே.வி. கிருஷ்ணயயர் எனச் சிலர் ஆங்கிலத்திலும் பலர் மலையாளத்திலும் திருவிதாங்கூர் வரலாற்றை எழுதியுள்ளார். ஆரம்பகாலத்தில் தமிழிலும் மூன்று நூற்கள் வந்தன. இவை எல்லாமே திருவிதாங்கூர் கல்வெட்டுகளும் செப்பேடுகளும், ஆவணங்களும் சேகரிக்கப்பட்டு அச்சில் வந்தபின்பு எழுதப்பட்டவை. தொல்லியல்துறை முழுவதுமாய் செயல்பட்ட காலத்தில் வந்தவை.

திருவிதாங்கூர் வரலாறு குழப்பமுடையது ஆரம்பகாலத்தில் இந்த நாடு சேரநாட்டின் ஒரு பகுதியாக இருந்தது. சங்க காலத்திலிருந்தே இப்பகுதியை ஆய் மன்னர்கள் ஆண்டனர். இவர்களில் கி.பி. 9ஆம் நூற்றாண்டுவரை ஆண்ட ஆய் மன்னர்களைப் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன.

ஆரம்பகாலப் பாண்டியர்கள், பிற்காலச் சோழர்களும் கூட திருவிதாங்கூர் நாட்டின் ஒரு பகுதியில் செல்வாக்குப் பெற்றிருந்தனர். கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் வேணாட்டவர்கள் சுதந்திரம் பெற்றனர்.

அப்போது இந்த அரசு கீழப்பேரூர் குடும்பம் எனப்பட்டது. இதே காலகட்டத்தில் ஆய் வம்சம் திருபாப்பூர் குடும்பம் ஆனது இதன் இன்னொரு பிரிவு சிறைவாய் குடும்பத்துடன் கலந்தது இவர்களே பிற்காலத்தில் வேணாட்டர் ஆயினர்.

வேணாட்டு அரசர்களின் பட்டியலும் ஆண்ட காலமும் கேரள வரலாற்றாசிரியர்களிடையே தொடர்ந்து குழப்பத்தை ஏற்படுத்தி வந்திருக்கிறது. வேணாட்டு அரசர்களின் முதல் அரசன்

அய்யன் அடிகள் என்பவனாக இருக்கலாம் என ஊகிக்கின்றனர். இதிலிருந்து கடைசி அரசனான இராமவர்மா (1721 - 1729) வரை பல அரசர்களின் பெயர்கள் கிடைக்கின்றன. வேணாட்டின் அரசின் இறுதிகாலத்தில் திருவிதாங்கூர் அரசு உருவானது இது 1729 முதல் 1949 வரை 220 ஆண்டுகள் செயல்பட்டது. இக்காலத்தில் 12 பேர்கள் ஆண்டனர்.

நீண்ட வரலாறு கொண்ட வேணாட்டு அரசர்களைப்பற்றி ஆரம்பகால வரலாற்றாசிரியர்கள் எழுதிய குழப்பத்தைத் தீர்க்கவே பெ.சு. திருவிதாங்கூர் வரலாற்று ஆராய்ச்சியில் இறங்கினார். இவர் அச்சில் வராத கல்வெட்டுகளின் அடிப்படையில் இந்த வரலாற்றை எழுதினார்.

"திருவிதாங்கூர் பண்டைய வரலாறு" என்ற நூலின் முதல் கட்டுரையில் தன் நோக்கத்தை வெளிப்படையாகக் கூறுகிறார். பெ.சு. வேணாட்டு மன்னர்களின் வரலாற்றைக் கல்வெட்டுகள் வழி ஆராய்ந்து வரையறை செய்வதும் அறிவியல் பூர்வமாய் இந்த ஆய்வைச் செய்வதும்தான் தன் நோக்கம் என்றும் கூறுகிறார்.

பெ.சு.வுக்கு முன் மலையாளத்தில் எழுதியவர்கள் கொக்க சந்தேசம், கேரள மகாத்மியம், கேரளோப்பந்தி என்ற நூற்களைப் பெரிதும் நம்பியே எழுதினர். அதோடு இந்த வரலாற்றாசிரியர்களில் பலர் பண்டைய தமிழகப் பண்பாட்டின் சின்னங்களின் தொடர்ச்சியே கேரள வரலாறு என்பதை அறிவுப் பூர்வமாகக் கூறவில்லை.

திருவிதாங்கூர் வரலாற்றில் ஆரியப் பண்பாடும் ஆரியருக்கு முற்பட்ட திராவிடப் பண்பாடும் இணைந்திருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார் பெ.சு. திருவிதாங்கூர் மொழி பற்றிய அவரது கருத்தையும் பே.சு. இந்நூலில் கூறுகிறார். கன்னியாகுமரி முதல் பறவூர் வரை பயணிக்கும் ஒருவன் இங்குள்ள மொழியின் பண்பாட்டையும் சமயம், வாழ்வுநிலை, பண்பாடு போன்றவற்றையும் தானே உணருவான். இந்த உணர்வில் பழைய திராவிட மரபைக் காணமுடியும். அதோடு திருவிதாங்கூரில் அண்மைக்காலமாக ஏற்பட்ட மாற்றங்கள், பழம் மரபை முழுவதுமாக கபளீகரம் செய்துவரும் நிலை போன்றவற்றை உணர முடியும் என்கிறார். இது 19-ஆம் நூற்றாண்டில் பெ.சு. நோக்கி அறிந்தது.

வரலாற்றாசிரியராக மட்டுமன்றி சமூக நோக்கிலும் அவர் வேணாட்டைப் பார்த்திருக்கிறார். ஒரு நாட்டின் வரலாற்று ஆதாரம். வாழ்வின் பண்பாட்டுக் கூறுகள் தொன்மையைப் பேணும் நிலை ஆகியன விடுபட்டுப்போக வாய்ப்புண்டு. எனவே வரலாற்றைக் கல்வெட்டுகள் ஆவணங்கள் அடிப்படையில் எழுத காலந்தாழ்த்தக்கூடாது என்கிறார் பெ.சு.

இந்நூலின் முதல் கட்டுரை கி.பி. 12, 13 ஆம் நூற்றாண்டுகளில் ஆண்ட திருவிதாங்கூர் அரசர்களைப் பற்றியது. இது முக்கியமான விரிவான கட்டுரை கொல்லம் என்பது மலையாள ஆண்டைக் குறிப்பது. இது குறித்தும் பெ.சு. தன் கருத்தைக் கூறுகிறார்.

18-ஆம் நூறாண்டில் கேரளத்திற்கு வந்த டச்சுக்காரர் ஒருவர்தான் கொல்லம் ஆண்டு பற்றி முதலில் கூறுகிறார். சேரமான பெருமாள் தன் நாட்டை அடுத்த வாரிசிடம் ஒப்படைத்துவிட்டு பந்தனாயினி கொல்லத்திலிருந்து காசிக்குச் சென்ற ஆண்டின் தொடக்கமே கொல்லம் என்றார் ஒரு டச்சுப் பயணி.

புக்காளன் என்ற வெளிநாட்டுப் பயணி கி.பி. 1178-இல் கொல்லம் ஆண்டு தொடங்குகிறது என்பார். லோகன், வேணாட்டு அரசு உருவானதன் நினைவு கொல்லம் ஆண்டு என்பார். கேரளோப்பத்தி என்னும் மலையாள நூல் ஆதிசங்கரருடன் இதைத் தொடர்புபடுத்தும் கொல்லம் நகரம் உருவானதிலிருந்து இவ்வருஷம் தோன்றியது என்பது ஒரு கருத்து சங்குண்ணி மேனன் என்ற வரலாற்றாசிரியர் கலி 3936-இல் உதய மார்த்தாண் வர்மா என்பவர் கொல்லம் நகரில் சோதிட நிபுணர்களை அழைத்து ஆலோசித்து இந்த வருஷத்தைக் கொண்டு வந்தார் என்கிறார்.

கேரளத்து வரலாற்று அறிஞர்களில் கொல்லம் ஆண்டு பற்றி முதலில் ஆராய்ந்தவர் பெ.சு.தான். இது குறித்து வந்த முந்தைய கருத்துக்களை பெ.சு. மறுக்கிறார். முக்கியமாக இது பரசுராமனுடன் தொடர்புடையது; இது சுழற்சியாண்டு; திருவிதாங்கூரில் மட்டும் வழக்கில் இருந்த ஆண்டு; இஸ்லாமுக்கு மாறிய சேர அரசனுடன் தொடர்புடையது; கேரளத்துச் சிவன் கோயில்களின் தோற்றத்திற்குத் தொடர்பானது என்னும் கருத்துக்களை ஒவ்வொன்றாக மறுக்கிறார் பெ.சு.

புக்கன் கி.பி. 1178-ஆம் ஆண்டில் கொல்லம் தொடங்குகிறது என்று கூறுவது தவறான முடிவு அதற்கு முற்பட்ட காலத்து கொல்லம் ஆண்டுக் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. கேரளத்தில் மட்டுமல்ல தென் தமிழ் மாவட்டங்களிலும் கல்வெட்டுகளில் கொல்லம் ஆண்டு குறிப்பிடப்படுகிறது. அதோடு திருநெல்வேலி மாவட்டக் கல்வெட்டு ஒன்று கார்த்திகையில் கொல்லம் ஆண்டு தொடங்குவதாகக் கூறும். எனவே முந்தைய கருத்து தவறு எனத் தெரிகிறது. ஒரு சிவன் கோவில் தொடர்பாக கொல்லம் ஆண்டு தொடங்குகிறது என்பதை பெ.சு. மறுக்கிறார். மலபாரில் சொல்லும்படியான சிவன் கோவில்கள் இல்லை. இருப்பதிலும் உள்ள கல்வெட்டுகளில் இது பற்றிய குறிப்புகள் இல்லை. சேர அரசர் இசுலாமுக்குச் சென்றது கற்பனைக் கதை இதைக் கொல்லம் ஆண்டுடன் இணைப்பது பொருத்தமல்ல என்கிறார் பெ.சு.

வானவியல் காரணங்களால் கொல்லம் வருஷம் உருவானது என்பது பெ.சு.வின் கருத்து குறிப்பாக வால்நட்சத்திரம் தோன்றிய ஆண்டை இதனுடன் இணைக்கிறார். வட இந்திய சப்தரிஷி வருஷம் தொடர்ச்சியாகவும் இது இருக்கலாம் என்பது பெ.சுவின் ஊகம். கொல்லம் ஆண்டிலிருந்து 825-ஐக் கூட்டினால் கி.பி. ஆண்டு கிடைக்கும் கொல்லம் வருஷம் குறித்த விரிவான ஆய்வை மலையாளப் பேராசிரியர் இளங்குளம் குஞ்சம்பிள்ளை செய்திருக்கிறார்.

(Studies in Kerala History, Trivandrum 1970) இதில் பெ.சு.வின் கருத்தை மறுக்கிறார். கேரள அறிஞர்கள் இளங்குளத்தின் கருத்தை ஒத்துக்கொள்கின்றனர்.

இந்நூலின் இரண்டாம் கட்டுரை கொல்லம் 4,5 ஆம் நூற்றாண்டு (கி.பி. 13,14ஆம் நூற்.) திருவிதாங்கூர் வரலாறு என்ற தலைப்பில் அமைந்தது. இது 15 கல்வெட்டுகளின் அடிப்படையில் அமைந்தது.

வேணாட்டு வரலாற்றில் கி.பி. 12, 13- ஆம் நூற்றாண்டுகள் குழப்பமானவை பெ.சு காலத்திலும் சமகாலத்திலும் தொடாது விட்ட பக்கங்கள் பெ.சு.வே இக்கால அரசர்களின் பட்டியலைச் சரியாகத் தருகிறார்.

வீர கேரளவர்மா 1126 - 11 - 44

வீர ரவிவர்மா கி.பி. 1161 - 1167

வீர உதைய மார்த்தாண்டவர்மா கி.பி. 1177

ஆதித்யவர்மா கி.பி. 1190

வீர ராமவர்மா கி.பி. 1196

வீர ராம கேரள வர்மா கி.பி 1209 - 1214

வீர ரவி கேரள வர்மா கி.பி 1235

வீர பத்ம நாப மார்த்தாண்டன் கி.பி. 1252

இரண்டாம் உதைய மார்த்தாண்டர் கி.பி. 1306

இந்தப் பட்டியலை அண்மைக்கால கேரள வரலாற்றாசிரியர்கள் பெருமளவில் ஒத்துக்கொள்கின்றனர். திருவிதாங்கூர், தொல்லியல்துறை வெளியிட்ட முழுத்தொகுப்புகளின் (1910 - 30, 9 பகுதிகள்) அடிப்படையில் நடந்த ஆராய்ச்சி முடிவில் பெ.சு.வின் கருத்துகள் மறுக்கப்படவில்லை.

தொல்பொருள் துறையினர் கி.பி. 12,13-ஆம் நூற்றாண்டுகளில் ஆண்ட பத்து வேணாட்டு மன்னர்களை அடையாளம் கண்டுள்ளனர். இந்த மன்னர்களின் பட்டியலில் இரண்டு பேர் பற்றிய கருத்து முரண்பாடுடையது. கி.பி. 1252-இல் வாழ்ந்த வீரமார்த்தாண்டன் என்பவனை பெ.சு. குறிப்பிடுகிறார். தொல்லியல் துறையினர் இரவி உதைய மார்த்தாண்டவர்மா என்று இவனைக் குறிப்பிடுகின்றனர். இப்படிச் சில மாறுபாடு தவிர பெ.சு. கூறும் பிறவற்றை ஒத்துக்கொள்கின்றனர்.

தொல்பொருள்துறை ஆய்வாளர்களான கோபிநாத ராவ், கே.பி. சுப்பிரமணிய அய்யர், ராமநாத அய்யர், வாசுதேவப் பொதுவல் போன்றோர்கள் வேணாட்டு மன்னர்களின் பட்டியலைத் தயாரிக்க பெ.சுவின் இக்கட்டுரை பெரிதும் பயன்பட்டது. இந்தக் கட்டுரையில் குறிப்பிடப்படும் கல்வெட்டுகளை பெ.சு. நேரடியாகவும் பண்டித கணேச பிள்ளை வழியும் பிரதி செய்திருக்கிறார்.

பெ.சு. கண்டுபிடித்த கல்வெட்டுகள் முக்கியமானவை. நாகர்கோவில் ஒழுகினசேரி சோழபுரம் சிவன் கோவில் கல்வெட்டு வீரகேரளவர்மன்; கி.பி. 1127; இக்கல்வெட்டை T.A.S. Vol. IV p 17 பதிப்பித்துள்ளனர் 1924).

திருவல்லம் (திருவனந்தபுரம் மாவட்டம்) வட்டெழுத்து பழைய தமிழ், மலையாள மொழி; வீரகேரளவர்மன் (கி.பி. 1224) இதை T.A.S. Vol. IV p 40 பதிப்பித்துள்ளனர் (1908).

புரவசேரி நாகர்கோவில் ஸ்ரீவல்லபதேவன் (கி.பி. 1160); இங்கு இன்னொரு கல்வெட்டும் உண்டு. T.A.S. Vol. IV p 2 (1930) இவ்விரு கல்வெட்டுகளையும் பண்டித கணேசப்பிள்ளையின் துணையுடன் பெ.சு. பிரதி செய்திருக்கிறார் (பேரா. வ.அய். சுப்பிரமணியம் தனி நாட்குறிப்பு செய்தி)

வீர ரவிவர்மன் கி.பி. 1166 பற்றிய கல்வெட்டு செய்தியில் பெ.சு மேற்கோள் காட்டப்படுகிறார் (T.A.S. Vol. IV p 27)

வீர உதைய மார்த்தாண்டவர்மா (கி.பி. 1178) பற்றிய கல்வெட்டு செய்தியில் கே.வி. சுப்பிரமணிய அய்யர் பெ.சு.வை மேற்கோள் காட்டுகிறார். (T.A.S. Vol. IV p 27) இதுபோல் T.A.S. Vol. III p 46 லும் பெ.சு. நன்றியுடன் குறிக்கப்படுகிறார்.

கொல்லம் 6-ஆம் நூற்றாண்டு (கி.பி. 15-ஆம் நூற்) வேணாட்டு அரசர்களைப் பற்றிய மூன்றாம் கட்டுரை சிறியது. இரண்டு கல்வெட்டுகளின் அடிப்படையில் ஆதித்திய வர்மா, வீரகேரள மார்த்தாண்டவர்மா என்னும் இரு அரசர்களைப் பற்றி எழுதப்பட்டது. இந்தக் கல்வெட்டுகள் திருவனந்தபுரத்திலிருந்தும், பத்மநாபபுரத்திலிருந்தும் கிடைத்தவை கொல்லம் ஆண்டு பற்றிய செய்தியும் இக்கட்டுரையில் வருகிறது.

பெ.சுவின் திருவிதாங்கூர் பண்டைய அரசர்கள் வரலாறு நூலின் கடைசிக் கட்டுரை “miscellaneous Travancore Inscriptions” என்பது 18 கல்வெட்டுகள் உள்ளன. இவற்றில் 3 கல்வெட்டுகள் ஆங்கிலத்தில் மூலப்படிவத்தின் படிவடிவப் பெயர்ப்பும், ஆங்கில விளக்கமும் உண்டு. 14 கல்வெட்டுகள் தமிழ் எழுத்து வடிவில் அமைந்தவை. இவற்றில் 9 கல்வெட்டுகளின் மூலம் வட்டெழுத்து வடிவம். பிற பழைய தமிழ் எனக் குறிப்பிடுகிறார். ஒன்று மலையாளக் கல்வெட்டு 1894க்கு முன் பிரதி செய்யப்பட்ட இக்கல்வெட்டுகளைத் திருவிதாங்கூர் தொல்லியல்

துறையினர் அப்படியே பயன்படுத்தியுள்ளனர். இக்கல்வெட்டுகளில் சில Indian Antiquary இதழில் வெளியாகி உள்ளன.

**சம்பந்தரின் காலம்**

சுந்தரனாரின் மொத்த ஆராய்ச்சியில் முதலிடம் வகிப்பது சம்பந்தர் காலம் பற்றியது எனத் துணிந்து கூறமுடியும். 19-ஆம் நூற்றாண்டுத் தமிழ் அறிஞர்களின் கண்ணைத் திறந்து விட்ட தமிழ் இலக்கிய நூற்கள் பலவற்றின் காலத்தைக் கணிக்க வழிகாட்டியாக நின்றது சம்பந்தரின் கால ஆராய்ச்சி.

பெ.சுவின் சம்பந்தர் கால ஆராய்ச்சிக் கட்டுரை வருவதற்கு முன்பு, பழம் இலக்கியநூற்கள் பற்றிய கால வரையறை வெறும் ஊகங்கள், விருப்புகள், வெறுப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் தான் கணிக்கப்பட்டது. ஐரோப்பிய தமிழறிஞர்கள் தமிழ் இலக்கியங்களின் காலங்களைப் பிற்காலத்தில் தள்ளுவதில் குறிப்பாக இருந்தனர். அவர்களின் இந்த ஆர்வம் ஆராய்ச்சி அறிவின்பால் பட்டதல்ல.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் சென்னைப் பல்கலைக்கழகம், ராஜதானி கல்லூரிவழி பட்டம் பெற்றவர்களும், ஆங்கிலம் அறிந்த தமிழறிஞர்களும் ஆய்வுத்துறைக்கு வந்தது தமிழிற்குப் பெரும் நன்மையைக் கொடுத்து. இக்காலகட்டத்தில் பரிதிமாற் கலைஞர், கனகசபை பிள்ளை, செல்வக் கேசவராய முதலியார், சி.வை. தாமோதரன்பிள்ளை, பவானந்தம் பிள்ளை, ந. கதிரேச பிள்ளை என்பவர்களின் வரிசையில் மூத்த ஆய்வாளராக பெ.சு.வும் வருகிறார். இவர் சமூகவியல் அணுகுமுறை (Sociological approach) மூலப்படிவ அணுகுமுறை (Achetypal Approach) என்னும் இருமுறைகளில் கால ஆராய்ச்சி செய்தவர். இந்த அணுகுமுறை பெ.சு.வுக்கு உரியது.

ஒரு இலக்கியத்தின் காலத்தை வரையறை செய்யும்போது அதைப் படைத்தவனின் சமூகச் சூழல். அவன் வாழ்ந்த காலத்து சமூக வரலாறு, அரசியல் வரலாறு ஆகியவற்றையும் கணக்கில் எடுத்துக் கொண்டு ஆராய்வது அந்த இலக்கியத்தின் காலத்தைத் துல்லியமாகக் காட்ட உதவும் என்னும் உண்மையை பெ.சு. புரிந்திருந்தார். இந்த அடிப்படையில் சம்பந்தரின் காலத்தை அணுகியிருக்கிறார். தமிழ் இலக்கிய கால வரலாற்றில் மைல் கல் இந்த ஆராய்ச்சி எனக் கூறுவது இதனால்தான்.

ஞானசம்பந்தரைப் பற்றிய பெ.சு.வின் கட்டுரை (The age of Thirugnana Sambandha a question of south Indian Archaeology) சென்னை கிருஸ்தவக் கல்லூரி மலரில் இரண்டு ஆண்டுகளாக வந்தது. (1891 - 1892) பின்னர் இக்கட்டுரை Some mile stone in the History of Tamil Literature or the age of Thirugnana Sambandha என்னும் தலைப்பில் பெ.சு.வின்

காலத்தில் நூல் வடிவில் வந்தது (1895). அப்போது வெளிவந்த இந்தச் சிறுநூல் 65 பக்கம் இருந்தது. இதில் பெ.சு.வின் 2 பக்க முகவுரை உண்டு. இந்நூலை பெ.சு. தென்னிந்தியக் கல்வெட்டாய்வாளர் டாக்டர். சி. ஹல்ஸெச்சிற்குச் சமர்ப்பணம் செய்திருக்கிறார்.

இந்நூலின் இரண்டாம் பதிப்பு திருச்சி பி.எ. கழகம் வழி வந்தது (10.01.1909) இப்பதிப்பில் பதிப்பாளரின் முகவுரை, நீதிபதி கே.ஜி. சேஷையர் எழுதிய பெ.சு.வின் வாழ்க்கைக் குறிப்பு இந்திய அரசு தொல்லியல் துறை ஆய்வாளரான ராய் பகதூர் விஇ வெங்கய்யாவின் அணிந்துரை ஆகியவற்றுடன் 79 பக்கங்களில் வந்தது. இதன் மூன்றாம் பதிப்பு 1986-இல் வந்தது (பயோனீர் புத்தக சர்வீஸஸ், சென்னை).

வெங்கையா தன் அணிந்துரையில் “சென்னை அரசு தலைமைச் செயலர் ஜீவரத்தினம் என்பவர் பெ.சு.வின் நூலுக்கு அணிந்துரை எழுதக் கேட்டர். எனக்கு இது பெருமை என்றே கருதினேன். பிற தமிழ் இலக்கியங்களின் காலங்களை வரையறை செய்ய சம்பந்தர் கால ஆராய்ச்சி உதவும்” என்று அணிந்துரையில் குறிப்பிடுகிறார்.

சம்பந்தரைப் பற்றிய ஆராய்ச்சி நூல் முக்கியமானது. இதுபற்றி ஆரம்பகாலத்தில் தமிழ் இலக்கிய வரலாறு எழுதிய கா.சு. பிள்ளை “மனோண்மணியம் சுந்தரனார், இக்கால தமிழ் ஆராய்ச்சிக்கு அடிப்படை இட்டவர். தமிழும் தமிழரும் ஆகிய வகுப்பு முறையுள் படாத தனிப்பெருமை உடைமையை நிலைநாட்டி தமிழ் புலவர்களின் கண்ணைத் திறந்தவர். தமிழாராய்ச்சி குறைபாடுடைய ஐரோப்பிய ஆரியப்புலவருடைய தவறான கொள்ளைகளை எதிர்த்து தமிழ் வரலாற்றின் உண்மையை விளக்கும் பொருட்டு இவர் இயற்றிய நூல் திருஞானசம்பந்தர் காலம் பற்றிய கட்டுரை” என்கிறார். (தமிழிலக்கிய வரலாறு 2009 பக். 276).

பம்மல் சம்பந்த முதலியாரும் இந்நூலின் ஆய்வுச் சிறப்பை “தமிழ் ஆராய்ச்சி யாளர்களுக்கு மிகவும் பயன்பட்டு வருகிறது” என்கிறார். வையாபுரிப்பிள்ளை “இந்த ஆராய்ச்சியுரையிலே கண்ட முடிவுகள் பிற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சில சாதனங்களால் உறுதியடைந்தன. இன்றுவரை இந்த நூல் இலக்கிய வரலாற்றாராய்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கி வருவது” என்றார்.

சம்பந்தரின் காலம் பற்றி பெ.சு. ஆராய்வதற்கு அவருக்கு முந்திய கால ஆராய்ச்சியாளர்களில் ஐரோப்பியரின் தவறான ஆய்வு முடிவுகளே காரணமாக இருந்தன. இந்தக் காரணங்களை அவர் மேற்கோள் காட்டிச் செல்லுகிறார். பெ.சு. வாழ்ந்த காலத்தில் தேவார மூவர்களைப் பற்றிய விவாதம் வந்துவிட்டது. திருவனந்தபுரம் நீதிபதி கே.ஜீ. சேஷா

அய்யர், “மாணிக்கவாசகர் கி.பி. 4-ஆம் நூற்றாண்டினர்” என்றார். தொல்லியல் அறிஞர் வெங்கய்யா 9-ஆம் நூற்றாண்டு என்றார்.

கால்டுவெல்லின் ஆய்வுமுடிவு அப்போதே தமிழறிஞர்களைத் திகைக்க வைத்தது. அவன் “கூன்பாண்டியனின் காலத்தவர் சம்பந்தர்; கூன்பாண்டியனின் இயற்பெயர் சுந்தர பாண்டியன் இவனைச் செந்தில் பெண்டி என மார்க்கோபோலோ குறிப்பிடுவான். சுந்தர பாண்டியன் 1292-இல் ஆட்சி செய்தவன்; எனவே சம்பந்தரின் காலம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு” என்கிறார். கால்டுவெல் பிற்காலப் பாண்டியர் காலத்தில் பாண்டி நாட்டுக்கு வந்த வாசாப் கூறும் சுந்தர் பெண்டிர் (கிபி. 1293) கூன்பாண்டியனே என டெய்லர், நெல்சன், லோவந்தல் போன்றோரும் முடிவு செய்தனர்.

ஐரோப்பியரின் கருத்துக்கு எதிரான குரல் அப்போதே வந்தது தமிழைப் பின்னுக்குத் தள்ளுவதில் ஆர்வம் காடடிய ஐரோப்பியர்களின் வேகத்தை ஒத்த தமிழறிஞர்கள் சிலர் தமிழை மிகவும் முற்பட்ட காலத்தது என்று கூறத் தொடங்கினர். சி.வை. தாமோதரன் பிள்ளை கூன்பாண்டியன் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டவன்; அதனால் சம்பந்தர் காலமும் இதுவே என்றார்.

“தமிழ் புளூடார்ச்” என்னும் ஆங்கில நூலை எழுதிய சைமன் காசிச் செட்டியார் சுந்தரம் கி.பி. 4-ஆம் நூற்றாண்டினர்; இருவருக்கும் முற்பட்டவர் சம்பந்தர் என்பார். இலங்கை சைமன் காசி பெ.சு.வுக்கு முற்பட்ட தமிழறிஞர். இலங்கை பி.குமாரசாமி, சிலப்பதிகாரத்தில் சமகாலத்தவனாகிய கஜபாகுவுக்கு முற்பட்டு வாழ்ந்தவர் சம்பந்தர் என்பார்.

இப்படியாக உள்ள முந்தைய ஆய்வாளர்களின் கருத்துக்களை பெ.சு. எளிதாக மறுக்கிறார். தன் கருத்தை நிறுவுகிறார். இது அவருடைய ஆய்வு நெறிமுறை பிற்காலத்தில் வையாபுரிப் பிள்ளையும் இம் முறையைக் கையாண்டார். சம்பந்தர் கூன்பாண்டியன் காலத்தில் வாழ்ந்தவர் என்பதில் பெ.சு.வுக்கு மறுப்பில்லை. இந்த மையத்தை வைத்தே மொத்த ஆராய்ச்சிகளையும் அவர் செய்திருக்கிறார். ஆனால் கூன்பாண்டியன் யார் என்பதில்தான் அவரது முரண்பாடு.

கூன்பாண்டியன் உறையூர், தஞ்சை போன்ற இடங்களை அழித்தவன். இவனது மனைவி கரிகால் சோழனின் தமக்கை மங்கையர்க்கரசி என்ற நெல்சனின் கருத்தை லாவகமாக மறுக்கிறார். பெ.சு. மூவர் தேவார காலத்தில் தஞ்சை நகரம் இல்லை. சுந்தரர் கூறும் தஞ்சை நாகப்பட்டணத்துக்கு அருகில் உள்ள ஊரே. இது பேச்சு வழக்கில் பொத்தை தஞ்சை என அழைக்கப்பட்டது. பிற்கால சோழர்களின் தலைநகரமான தஞ்சை கருவூர்

தேவரின் திருவிசைப் பாடலில்தான் முதலில் தயாரிக்கப்படுகிறது. எனவே நெல்சன் கூற்று தவறு என்கிறார் பெ.சு. இதை விரிவாகவே விளக்குகிறார்.

கூன் பாண்டியனின் பெயர் சமஸ்கிருதத்தில் உருமாறியபோது குழப்பம் ஏற்பட்டது. கூன்பாண்டியன் கும்ஜ பாண்டியன் நின்ற சீர் நெடுமாறன் - சுந்தரன்; மங்கையர்க்கரசி - வனிதேஸ்வி, குலச்சிறையார், குலபத்தனா என மாறி அழைக்கப்பட்டதை சுந்தரனார் கூறுகிறார் அடைந்துள்ளது. இதுவும் கூன்பாண்டியன் சுந்தரபாண்டியன் பெயர் குழப்பத்துக்குக் காரணம் டாக்டர் லோவேந்தல் மதுரையிலும், திருநெல்வேலியிலும் கிடைத்த நாணயங்களின் அடிப்படையில் பாண்டியர்களின் பொதுப் பெயர்களில் சுந்தரர் என்பதும் ஒன்று என்பதைச் சான்றாகக் கொண்டு சுந்தரபாண்டியனும் கூன்பாண்டியனும் நின்ற சீர் நெடுமாறனும் ஒன்று என்கிறார். இதைக் காண காரியங்களுடன் பெ.சு. மறுக்கிறார்.

இலங்கை குமாரசாமி சிலப்பதிகாரம் திருவிளையாடல் புராணம் இரண்டிலும் வரும் கதைகளின் அடிப்படையில் சம்பந்தர் கி.பி. 2ஆம் நூற்றாண்டு எனக் கூறியதை பெ.சு. மறுக்கிறார். புராணக்கதைகள் மரபுவழி வருபவை இவற்றை அறிவியல் பூர்வமான காரணமாகக் கொள்ளுவதற்கு வேறு வரலாற்றுச் சான்றுகளையும் ஒப்பிட்டுபட பார்க்க வேண்டும். சிலப்பதிகார கயவாகு கூன்பாண்டியனின் சமகாலத்தவர் என்பது தவறானது எனவே கி.பி. 2-ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர் சம்பந்தர் என்கிறார் பெ.சு..

சங்ககாலத்தினர் சம்பந்தர் என்று கூறும் சி.வை. தாமோதரன் பிள்ளையின் கருத்தை விரிவாகவே மறுக்கிறார் பெ.சு. சம்பந்தர் உருவாக்கிய மதுரை மடம் - கால வரிசையின்படி 1500 ஆண்டுகளுக்கு இடைப்பட்டது. மதுரை மடம் வரலாறு அதற்கு முன் செல்லவில்லை. இதுபோல் வேறு சில காரணங்களும் கூறுகிறார். எனவே சிவைதாவின் கருத்து தவறு என்கிறார். இப்படியாக முந்தைய கருத்துக்களை மறுக்கும் பெ.சு. தன் கருத்தையும் முன்வைக்கிறார்.

சம்பந்தர் கோச்செங்கண் சோழன் என்ற மன்னனைக் குறிப்பிடுகிறார். இவன் பதினெண்கீழ்க்கணக்கு நூற்களில் ஒன்றான களவழி நாற்பதின் தலைவன், இவன் கும்பகோணத்தின் அருகே வைகல் என்ற இடத்தில் ஒரு சிவன் கோவில் கட்டியிருக்கிறான். இக்கோவிலையும் சம்பந்தர் குறிப்பிடுகிறார்.

சோழ அரசர்கள் சிதறுண்ட காலம் கோச்செங்கண் காலம். தேவாரப் பாடல்கள் இக்காலத்தில் பாடப்பட்டன. பெரிய புராணம் குறிப்பிடும் சிறுதொண்டரே பரஞ்சோதி. இவர் சாளுக்கிய அரசர் இரண்டாம் புலிகேசியை வென்றவர் (கி.பி.642) சிறு தொண்டரின் வேண்டுகோள்படியே சம்பந்தர் செங்கோட்டான்குடி பதிகத்தை பாடினார். சம்பந்தர் இக்கோவிலைப்

பாடியது கி.பி. 640 - 649 ஆண்டுகளில் என்பதற்குக் கல்வெட்டுச் சான்று உண்டு. எனவே சம்பந்தர் 7- ஆம் நூற்றாண்டினர்.

பெ.சு. சம்பந்தர் காலத்தை நிறுவ ஆதிசங்கரரைப் பெரிதும் துணை கொள்கிறார். ஆதி சங்கரர் தன் சிவானந்தலகரியில் சுந்தரர், சிறுதொண்டர், சண்டேஸ்வரர், கண்ணப்பர் ஆகியோரைக் குறிக்கிறார். இவர்கள் சம்பந்தரின் சமகாலத்தவர்கள். சங்கரர் சம்பந்தரைத் திராவிடச் சிசு என அழைக்கிறார்; சம்பந்தர் ஞானப்பால் குடித்ததை மேற்கோள் காட்டுகிறார். கி.பி. 7-ஆம் நூற்றாண்டு மத்தவிலாசப் பிரகசனத்தில் சம்பந்தரைப் பற்றிய குறிப்பு வருகிறது. எனவே சம்பந்தர் கி.பி. 7 -ஆம் நூற்றாண்டு எனக் கூறலாம் என்பது பெ.சு.வின் முடிவான கருத்து.

**நம்பியாண்டான் நம்பி**

பெ.சு.வும், வெங்கையாவும் இணைந்து எழுதிய The Date of Nambi Andra Nambi என்ற சிறிய கட்டுரை சென்னை கிறிஸ்தவக் கல்லூரி மலரில் வந்தது (1896 - 1897). பன்னிரு திருமுறைகளைத் தொகுத்த நம்பிகளின் காலமும் சிக்கலானது. நம்பியின் காலத்தைக் கணிப்பதால் சைவத்திருமுறைகளின் காலத்தையும் அறிய முடியும். ஆதலால் இந்தக் கட்டுரையை எழுதியிருக்கிறார். பெ.சு.வின் கருத்துப்படி முதல் ராஜராஜனின் காலமே நம்பியாண்டாரின் காலம் பெ.சு. இதற்கு “தத்தா நமரே காண்” என்ற வாசகத்தை சான்றாக்குகிறார்.

**பத்துப்பாட்டு**

பத்துப்பாட்டு பற்றி பெ.சு. எழுதிய 23 பக்கக் கட்டுரை முதலில் சென்னை கிருஸ்தவக் கல்லூரி மலரில் (1890-92) வந்தது. இது உ.வே.சா. வெளியிட்ட பத்துப்பாட்டு பதிப்பைப் பின்பற்றியது. இது எழுதப்பட்டு 18 ஆண்டுகள் கழித்து The Tamilian Antiquary ஆய்வேடு இக்கட்டுரையை வெளியிட்டது (1909). அப்போது கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, கே.என். சிவராஜபிள்ளை இருவரும் திருவனந்தபுரத்தில் இருந்தனர். பெ.சு.வின் கட்டுரைகளை மறுபடியும் பதிப்பிக்கும் முயற்சியை கே.என். சிவராஜபிள்ளை ஈடுபட்டார்.

பத்துப்பாட்டு பற்றிய இக்கட்டுரை பெ.சு. நூற்றாண்டு விழா மலரிலும் வந்தது (1957 ஜூன்). இந்த மலர் வெளிவர பெ.சு.வின் மகன் பி.எஸ். நடராஜபிள்ளை மிகவும் உதவியிருக்கிறார். இதே கட்டுரையை Asian Educational Service நிறுவனம் 1986இல் சிறுநூலாக வெளியிட்டது.

மனோன்மணியம் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலில் “பத்துப்பாட்டு ஆதி மனம் பற்றுவரோ எத்துணையும் பொருட்கு இசையும் இலக்கணம் இல் கற்பனையே” என்பார் பெ.சு. ஆங்கிலக் கட்டுரையில் சாராம்சமே இதுதான். பத்துப்பாட்டை வாழ்க்கை ஓவியம்

## 8. உரைநடையாளர்

சுந்தரனாார் எழுதிய ஒரே உரைநடை நூல் “சாத்திர சங்கிரகம் என்னும் நூற்தொகை விளக்கம்” என்பது. கட்டுரைகள் புஷ்பங்களும் அவற்றின் தொழில்களும், மரங்களின் வளர்ச்சி, சீவராசிகளில் இலக்கணம் ஆகிய மூன்றும் இவை தவிர உ.வெ.சா, மறைமலையடிகள், வெ.சு. முதலியார், எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை ஆகியோருக்கு எழுதிய கடிதங்களும் உள்ளன. இவற்றில் நூற்தொகை விளக்கம் மட்டும் அச்சில் வந்துள்ளது.

உரைநடை நூல், கட்டுரைகள் தவிர கவிதைகள் சிலவும் ஆங்கிலக் கட்டுரைகளும் உள்ளன. இவையும் நூல் வடிவில் வரவில்லை.

**நூற்றொகை விளக்கம்**

நூற்தொகை விளக்கம் நூலின் முதல் பதிப்பு 1888 மே மாதம் வந்தது. இதே நூலின் இரண்டாம் பதிப்பை சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம் வெளியிட்டது. 95, பக்கங்கள் கொண்ட இந்நூல் சங்கேதமொழி (கலைச்சொல்லாக்கம் உண்டு.) முதல் பதிப்பில் நூலாசிரியரின் ஒருபக்க ஆங்கில முகவுரையும் தமிழ் முகவுரையும் உண்டு இதில் “தற்கால நிலைமைக்கேற்ப சாஸ்திரங்களை எத்தனை வகுப்பாய் வகுக்கலாம் என்பதும் அவற்றின் முக்கிய முறைமையையும் விஷயம் என்ன என்பதையும் வகை வகையாக எடுத்து விளக்குவதே நூற்றொகை விளக்கம் ஆகும்” என்கிறார்.

நூற்தொகை விளக்கம் என்ற இந்த நூல், திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில் நடந்த சிறப்புக்கூட்டத்தில் பேசிய பேச்சின் சுருக்கமே. இதில் தெய்வ வணக்கம் என்னும் தலைப்பில் ஒரு சூத்திரமும், நூல்பகுதியில் 38 நூற்பாக்களும், முகவுரையாக ஒரு சூத்திரமும் ஆக 40 சூத்திரங்கள் உள்ளன. இந்தச் சூத்திரங்களுக்கு நூலாசிரியரே விரிவான விளக்கம் எழுதியுள்ளார். இந்த விளக்கத்தில் 21 தமிழ், சமஸ்கிருத நூற்கள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. இவற்றின் பட்டியலும் உள்ளது.

ஒரு நூல் எப்படி அமைந்திருக்க வேண்டும்; உரைநடை வடிவம் எத்தகைய பிரிவுகளை உடையது என்பவற்றை இந்நூல் விளக்குகிறது. பெ.சு. வின் கணிப்பின்படி படைப்பாளியோ, ஆராய்ச்சியாளரோ கட்டுரையாசிரியரோ ஒரு நூலைப் பேரறிவு, சிற்றறிவு, புலனறிவு என்னும் மூன்று அறிவுகளின் அடிப்படையில் உருவாக்குகிறான். பேரறிவு என்பது பரம்பொருள் அல்லது கடவுள் தொடர்பானது. எனவே ஒருநூல் இறையுணர்வு அறிவு, இயல்பான அறிவு, அனுபவங்களின் அறிவு ஆகியவற்றின் தொடர்பாக வெளிப்படுகிறது. இந்த அடிப்படையில் பாகுபாடு செய்கிறார்.

நூல் என்பதை “அறிவினை உணர்த்தும் கருவிநூல் என்ப” என முதல் சூத்திரம் கூறும் நூல் அறிய வேண்டியதை அறிவிக்கும் கருவி என பொருள்படும்.

நூலின் பலன் அறிவுதான் ஆயினும் அறம், பொருள், இன்பம், வீடு மற்றும் பழைய வழக்கை மறந்து விடுதல் கூடாது. நூலைப் படித்தவுடன் கிடைப்பது அறிவு. அந்த அறிவை முறைப்படி செலுத்தினால் அறம் முதலான நான்கை அடையலாம். ஆகவே நூலுக்கு சாத்திரம் என்ற சமஸ்கிருத பெயரைக் கூறுவதில் தடையில்லை. சாசனம், சம்ஸனம் என்னும் இரண்டு அடிகளும் பொருத்தம் உடையவை. ஆதலால் வழக்கத்தில் உள்ள வேதம், சாஸ்திரம், புராணம் என்னும் சிறப்பான பொருளை நீக்கி எதையாவது ஒழுங்குபடுத்தி அறிவிப்பது என்னும் பொது அர்த்தத்தை தருவது என்பதால் சாத்திரமும் நூலும் ஒரே பொருடையனவாம்.

**சில கவிதைகள்**

பெ.சு. எழுதிய கவிதைகள் ஒரு நற்றாயின் புலம்பல், பொதுப்பள்ளி எழுச்சி, அன்பின் அகநிலை, கணபதி ஆச்சாரியாருக்கு எழுதிய மடல் ஆகியன. ஒரு நற்றாயின் புலம்பல் மகளின் இழப்பின்போது தாயின் துக்கத்தைக் காட்டுவதாக அமைந்தது. ஒரு சிறு நிகழ்வை பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்டது. பழைய புராணத்திலிருந்து எடுக்கப்பட்ட தொன்மம் இது 24 பாடல்கள் கொண்டது.

சூடாமணி என்ற பெண் அன்பானவள், அழகானவள், இலக்குமி போன்ற சாயலை உடையவள்; சீதையைப் பெற்ற ஜனகன்கூட இவளைக்கண்டு பொறாமை கொள்வான். இவள் இனிமையாகப் பாடுவாள். இசைக்கருவியை மீட்டுவாள்; ஓவியம் வரைவாள்; இவளுக்குத் திருமணம் வந்தது. மணநாள் அன்று அவள் இறந்துவிட்டாள். தாயோ அழுது புலம்புகிறாள், மகளின் இறப்பைத் தாங்க முடியாமல் புலம்புகிறாள். நான் உனக்கு என்ன செய்தேன், மாயமாய் மறைந்துவிட்டாயே எனத் தவித்தபோது சூடாமணி வானிலே தோன்றி “உம் துயர் தீரும்; கவலை விடுக; நடப்பது நடக்கும்” என்கிறாள்.

இக்கவிதைகள்; இறைவனைத் துயிலெழுப்பும் பாங்கில் அமைந்தவை. தத்துவார்த்தமாய் பாடப்பட்டவை. பரம்பொருளே அறியாமைத் துயிலிலிருந்து எழுந்துவிட்டோம்; இந்நிலை நிலைக்க அருள் செய்வாய் என்ற பாணியில் அமைந்தவை. இவை முதலில் விவேக சிந்தாமணியிலும் பின் செந்தமிழ்ச் செல்வியிலும் வந்தன.

**அன்பின் அகநிலை**

அன்பின் அகநிலை அல்லது தர்ம சிந்தனை என்னும் தலைப்பு பத்துப்பாடல்களை கொண்டது. ஜநாநந்தினி மாத இதழில் (1891 மார்ச்) வந்தன. பின் விவேக சிந்தாமணியிலும்

(1895) செந்தமிழ்ச் செல்வியிலும் (1989) வந்தன. பிறரின் குறைகளைக் காண்பது நல்லதல்ல. பிறரிடம் நல்ல பண்பைக் காண வேண்டும். பிறரிடம் அன்பு வேண்டும்; இவை இல்லை என்றால் திறமை இருந்து பலனில்லை என்னும் பொருள்களை உணர்த்துவன விவிலியத்தின் புனித பவுல் கூறும் கருத்துகள் அடிப்படையில் எழுதப்பட்டவை இப்பாடல்கள் என்னும் குறிப்பு உள்ளது.

**கவிதை மடல்**

பெ.சு. நாஞ்சில் நாட்டுப் புலவர் கணபதி ஆச்சாரியாருக்கு எழுதிய 44 வரிகள் கொண்ட மடல் ஒன்று, பாடலகமணம் என்ற இதழில் (1899) வெளியாகியிருக்கிறது. கணபதியை நேரில் பார்க்க முடியாமல் போனது பற்றிய ஆதங்கத்தை இம்மடல் தெரிவிக்கிறது.

**மூன்று கட்டுரைகள்**

பெ.சு. எழுதியதான மூன்று அறிவியல் கட்டுரைகளை அடையாளம் கண்டிருக்கிறார். ஷீலா என்ற மாணவி (பி.எச்.டி) ஆய்வேடு கேரளப் பல்கலைக்கழகம் (1997); அவை சீவராசிகளின் இலக்கணமும் பிரிவும், மரங்களின் வளர்ச்சி, புஷ்பங்களும் அவற்றின் தொழிலும் ஆகியன.

உயிரினங்களான தாவரங்கள் பற்றிய அறிவியல்பூர்வமான இக்கட்டுரைகள் மூன்றும் ஒன்றின் தொடர்ச்சி எனலாம். இக்கட்டுரைகளுக்கு வரைபடங்கள் உண்டு. "இக்கட்டுரைகள் தொடர்பான யாரேனும் சந்தேகம் கேட்டால் பதில் கூறுவேன்" என்ற குறிப்பும் உண்டு.

**சில கடிதங்கள்**

பெ.சு. தாம் வாழ்ந்த காலத்தில் பலருக்கு கடிதங்கள் எழுதியுள்ளார். உ.வே.சா. மறைமலைடியகள், எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை, சேஷா அய்யர், வெங்கய்யா, வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார் எனப் பலருடன் இவருக்குத் தொடர்பு இருந்தது. இவர்களுக்கு எழுதிய கடிதங்களில் உ.வே.சாவுக்கு எழுதியது முக்கியமானது.

**ஆங்கில கட்டுரைகள்**

பெ.சு. ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரைகளான Hobbes, The Father of English Ethics, Bentham The Juristic moralist (பேந்தம் நெறியியயல் தன்மையுடையான்) A Scene from A Tamil Play (தமிழ் நாடகத்தின் ஒரு காட்சி) H.T. Wills ஆகிய கட்டுரைகள் நூல் வடிவில் வரவில்லை.

**தத்துவப் படிப்பு**

பெ.சு. இளங்கலை முதுகலை இரண்டிலும் தத்துவம், வரலாறு என்னும் துறைகளைப் படித்தவர். வரலாறு, தத்துவம் இரண்டையும் மாணவர்களுக்கு நடத்தியவர். கல்வியாளர்

என்ற எல்லையைத் தாண்டிய தேடல் உடையவர். பெ.சு. அத்வைதம் பற்றி எழுதினாலும் சைவ சித்தாந்தத்தில் ஈடுபாடுடையவர். விவேகானந்தருடன் பெ.சு. விவாதித்தபோது சைவ சித்தாந்தத்தையே வலியுறுத்தினார். ஒரு வகையில் மேலை நாட்டு தத்துவம் சைவத்தோடு ஒருங்கிணைந்து செல்வது என்ற குரலை ஒலித்தவர்களில் ஒருவர்.

திருநெல்வேலியில் பள்ளியில் பணியாற்றியபோது சோடக நல்லூர் சுந்தர சுவாமிகளுடன் ஏற்பட்ட தொடர்பால் சித்தாந்த பாடல் கேட்டிருக்கிறார்.

பெ.சு. ஐரோப்பிய இந்திய தத்துவம் பற்றி விரிவாக எழுதத் திட்டமிட்டிருந்தார். ஆனால் அற்ப ஆயுளில் மறைந்துவிட்டார். என்றாலும் மனோன்மணியம் நாடகத்திலும் நூற்தொகை விளக்கத்திலும் தன் கொள்கைகளைப் கூறியிருக்கிறார்.

மனோன்மணியம் நாடக முகவுரையில் "இந்த நாடகம் இல்லறம், துறவறம், பக்தி, ஞானம், வீடுபேறு என்னும் வாழ்க்கைத் தத்துவங்களை கொண்டது" என்கிறார்.

**தமிழ் உணர்வு**

கொடும் மலையாளக் குடியிருப்பில் பிறந்து வாழ்ந்த பெ.சு.வின் தமிழ்மொழி மீதான உறவு மனோன்மணியத்தில் வெளிப்படையாகவே காட்டப்பட்டுள்ளது. தனிப்பட்ட முறையில் திருவிதாங்கூர் அரசர்களிடம் மரியாதையும் நல் உறவும் கொண்டிருந்தவர் பெ.சு. அதனால் பலனும் அடைந்தவர். ஆனால் தமிழை என்றுமே விட்டுக்கொடுக்காதவர். தமிழின் மக்களாகவே தெலுங்கு, மலையாளம், கன்னட மொழிகளைக் கொள்ளுகிறார்.

பெ.சு.வின் தமிழ் உணர்வு மனோன்மணியம் நாடகத்தில் வெளிப்படையாகவே வெளிப்படுத்தப்படுகிறது. நாடகத்தின் தொடக்கத்தில் வரும் தமிழ்த் தெய்வ வணக்கம் 19ஆம் நூற்றாண்டு நாடகங்களில் காணப்படாத பகுதி 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் சமஸ்கிருத மொழியில் வெறி கொண்டிருந்த காலகட்டம், அப்போது "ஆரியம் போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையா உன் "சீரிளமை" என்கிறார்.

மொழிவாரி மாநில எண்ணம் உருவாகும் முன்பே நாஞ்சில்நாடு தமிழர்க்குரியது என்று குரல் கொடுத்தவர் பெ.சு. கேரளத்திலிருந்து தென் திருவிதாங்கூர் பகுதி (இன்றைய கன்னியாகுமரி மாவட்டம்) பிரிய வேண்டும் என்ற போராட்டத்தை திருவிதாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் நடத்தியபோது தங்களின் பிரச்சாரக் கூட்டத்தில் மனோன்மணிய நாடக வரிகளை கவிமணி, ஜீவா, ம.பொ.சி போன்றோர் ஆவேசமாக கூறினார்கள்.

அலகு 5

# இலக்கிய வரலாறு

1. பன்னிரு திருமுறைகள்
2. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்
3. சமண இலக்கியங்கள்
4. பௌத்த இலக்கியங்கள்
5. கிறிஸ்தவ இலக்கியங்கள்
6. இஸ்லாமிய இலக்கியங்கள்
7. அறநூல் பெயர்கள் மட்டும்

   (பதினெண்கீழ்க்கணக்கில்)

# இலக்கிய வரலாறு

## சைவ இலக்கியங்கள்

திருமுறைகள் பன்னிரண்டும் சாத்திர நூல்கள் பதினான்கும் கந்த புராணம், திருவிளையாடல் புராணம் முதலிய நூல்களும் சைவசமய, இலக்கியங்கள் எனப்படும். சிவபிரானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் சைவம் ஆகும்.

நம்பியாண்டார் நம்பி என்னும் அறிஞர் தம் காலத்துச் சோழப் பேரரசன் இராசராசன் அல்லது ஆதித்தன் உதவியுடன் முதல் 11 சைவத்திருமுறைகளையும் வகுத்தனர். சேக்கிழாரது பெரிய புராணம் 12ஆம் திருமுறையாகச் சேர்த்து கொள்ளப்பட்டது.

## பன்னிரு திருமுறைகள்

| | | |
|---|---|---|
| முதன் மூன்று திருமுறைகள் | - | திருஞானசம்பந்தர் தேவாரம் |
| 4.5,6 ஆகிய திருமுறைகள் | - | திருநாவுக்கரசர் தேவாரம் |
| ஏழாம் திருமுறை | - | சுந்தரர் தேவாரம் |
| எட்டாந் திருமுறை | - | மாணிக்கவாசகரின் திருவாசகம், திருக்கோவையார் |
| ஒன்பதாம் திருமுறை | - | திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பது பேர் பாடல்கள் |
| பத்தாம் திருமுறை | - | திருமூலர் திருமந்திரம் |
| பதினொராந்திருமுறை | - | திருவாலவாயுடையார் முதலிய 12 பேர் பாடல்கள் |
| பன்னிரண்டாம் திருமுறை | - | பெரியபுராணம் |

### திருஞானசம்பந்தர்

இறைவனை அடையும் நெறியில் சற்புத்திர மார்க்கத்தில் (மகன்மை நெறியில்) பெருமை கண்டவர் திருஞானசம்பந்தர். சீர்காழியில் தோன்றியவர் தம் மூன்றாவது வயதிலேயே உமையம்மையால் ஞானப்பால் ஊட்டப்பெற்று.

**'தோடுடைய செவியன் விடையேறிழர் தூவெண் மதிசூடி**
**காடுடைய சுடலைப் பொடிபூசி என் உள்ளங்கவர் கள்வன்'**

என்று பாடினார் என அவர் வாழ்க்கை வரலாற்றில் குறிக்கப் பெற்றுள்ளது. திருநாவுக்கரசர் பால் அன்பும் மதிப்பும் கொண்டு அவரது சமகாலத்தில் வாழ்ந்தவர். மதுரையில்

கூன்பாண்டியனைச் சைவனாக்கியதும், அனல்வாதம், புனல்வாதம் நிகழ்த்திச் சமணரை வென்றதும் இவர் வாழ்வில் குறிப்பிடத் தக்க நிகழ்ச்சிகளாகும். 16 ஆண்டு காலமே வாழ்ந்தார் ஆளுடைய பிள்ளையார்.

'நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞானசம்பந்தர்' 16,000 தேவாரப்பாடல்கள் இயற்றினாராயினும் இன்று கிடைப்பன 38 பதிகங்கள். 4213 பாடல்கள் இவை முதல் மூன்று திருமுறைகளாக அமைக்கப்பட்டுள்ளன. இயற்கை வனப்பும், தெய்வ வனப்பும், இசைச் செறிவும் ஒன்று கலந்த இசைப்பாடல்கள் இவருடையவை. இவர் பாடல்களில் உள்ள இயற்கைச் செல்வத்துக்கு திருவையாற்றுப்பதிகம் சான்றாகும்.

தமிழிசைக்குத் தனிப்பெரும் கொடை நல்கிய ஞானசம்பந்தர் சிவ தலங்கள் தோறும் அன்பர்கள் புடைசூழச் சென்று இசைபாடி வழிபட்டார். பக்தி மரபில் இயக்கமாகச் செயல்பட்டார் அடியவர் மனக்குறை நீங்கவும், உடற்பிணி அகலவும் மந்திரத் தமிழ்ச் சொற்களைக் கொண்டு திருமுறை பாடி உய்வித்தார்.

பெண்மையை வெறுத்து உண்மையை மறுத்து தன்னை வருத்தித் தவம்செய்து மேலுலக வீடு நோக்கி வாடும் மனிதருக்கு இம்மண்ணிலேயே விண்காட்டி வாழ்வின் நிலையுணர்த்தி திருஞானசம்பந்தர் பாடும் தேவாரம்.

**'மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்; வைகலும்**
**எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை**
**கண்ணில் நல்ல.்.துறும் கழுமல வளநகர்**
**பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே'**

என்று உமையொருபாகனைச் சான்றாக்கி ஒலிக்கிறது.

**திருநாவுக்கரசர்**

சைவ நாயன்மார்களில் சிறந்தவரான இவர் பல்லவ மன்னன் மகேந்தரவர்மன் காலத்தவர் (கி.பி.600-630) 'மருள் நீக்கியார்' என்ற பெயருடைய இவர் சமண சமயத்திலே இருந்து தருமசேனராகிப் பின்னர் சைவ சமயம் சார்ந்து நாவுக்கரசர் என்று அசரீரியால் அழைக்கப்பட்டவர். பல்லவனையும் சைவனாக்கினார் எண்ணற்ற சோதனைகளுக்குட்பட்ட இவர் தமக்கையார் திலகவதியாரால்தான் சைவநெறி உற்றார். பதிகள்தோறும் சென்று அருட்பதிகங்கள் பாடி உழவாரப் படை ஏந்தித் தொண்டு புரிந்தார். 81 வயது வரை வாழ்ந்தார். சம்பந்தரால் 'அப்பர்' என அழைத்துச் சிறப்பிக்கப்பட்டார். தாண்டக வேந்தர், சொற்கோ, வாகீசர் எனப் புகழப் பெற்றவர்.

இவர் பாடியதாகக் கூறப்படும் 49,000 பாடல்களில் 312 பதிகங்கள், 3066 பாடல்கள் தான் நமக்குக் கிடைக்கின்றன. பன்னிரு திருமுறைகளில் 4,5,6 திருமுறைகளாக இவை அமைக்கப்பட்டுள்ளன. இவரது தேவாரப் பாடல்களைப் பயிலும் போது,

**'இடையறாப் பேரன்பும் மழைவாரும்**
**இணைவிழியும் உழவா ரத்தின்**
**படையறாத் திருக்கரமும் சிவபெருமான்**
**திருவடிக்கே பதித்த நெஞ்சம்**
**நடையறாப் பெருந்துறவும்'**

கொண்ட திருநாவுக்கரசர் வாழ்வு நம் கண்முன் பொலியும் மகேந்திரவர்மன் இவரைச் சிறைப்பிடிக்கத் தன் காலவரை அனுப்பியபோது,

**'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்'**

என்று தம் நெஞ்சுறுதியை நிலைநாட்டினார்.

ஈசன் திருவடி துன்பத்தை

**'மாசில் வீணையும் மாலை மதியமும்**
**வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்**
**மூசுவண்டறை பொய்கையும் போன்றதே**
**ஈசன்எந்தை இணையடி நீழலே'**

என்ற பாடலில் அழகாகப் பேசுகின்றார். "இறைவனது கடமை என்னைக் காப்பது என் கடமை தொண்டு புரிவது" என்பதுதான் அப்பரின் வாழ்வுத்தத்துவம்

**'தன்கடன் அடியே னையும் தாங்குதல்**
**என்கடன் பணி செய்து கிடப்பதே'**

இறைவனிடம் திருநடம் காணும் பேறு பெற்றால் மனிதப்பிறவி இன்பமானதென்று நாவரசர் பாடும் பாடல் நெஞ்சில் என்றும் இனிப்பது.

**'குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்**
**பனித்த சடையும் பவளமும்போல் மேனியிற் பால்வெண்ணீறும்**
**இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப் பெற்றால்**
**மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே'**

தொண்டு நெறியாம் தூயநெறி கடைப்பிடித்து ஒழுகிய தாண்டக வேந்தர், ஏழாம் நூற்றாண்டில் சர்வாதிகாரத்தை எதிர்த்து இசைத்தமிழ் முழக்கிய போராளி, போலிச்சடங்குகளும் பொய்ம்மைச் சாத்திரங்களும் நிரம்பிக் குலமென்றும் கோத்திரமென்றும் மனிதர்களைக் கூறு போட்ட காலத்தில்

**'சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்**
**கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர்**
**பாத்திரம் சிவமென்று பணிதிரேல்**
**மாத்திரைக்குள் அருளுமாற் பேறாரோ'**

என்று புரட்சிக்குரல் கொடுத்தவர்.

ஒப்பிலாத் தமிழில் பாடிப்பரவி ஒப்புரவுமிக்க சைவசமயத்தை உருவாக்க அரும்பாடுபட்ட அப்பர் விடுதலைப் போராட்ட வேள்வியில் பாடல்கள் புனைந்த பாரதியாருக்கு முன்னோடி.

**சுந்தரர்**

நம்பியாரூரான சுந்தரர் சகமார்க்கத்தில் (தோழமை நெறியில்) இறைவனை வழிபட்டவர். தம்பிரான் தோழர், வன்றொண்டர் என அடியார்களால் அழைக்கப்படுகின்றார். கி.பி. 9ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த இவர் பரவைநாச்சியார்பால் சிவபெருமானையே தூதுவிட்ட பெருமைக்குரியவர். இவரது தேவாரப்பாக்களில் சொந்த வாழ்க்கைச் செய்திகள் பல உள்ளன.

இவர் பாடிய 3800 பாடல்களில் 100 பதிகங்கள் 1026 பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன. அவை ஏழாம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளன. இவர் பதிகங்களில் மாற்றுமதத்தினைப் புண்படுமாறு கண்டிக்கும் மனப்பாங்கு இல்லை. சுந்தரரது 'திருத்தொண்டத்தொகை' சைவ அடியார்களின் பெயர்களைக் கூறி,

**இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்**
**இளையான்தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்'**

என்று வழிபாடு செய்கின்றது. இப்பதிகம்தான் பிற்காலத்தில் சேக்கிழார் பெரியபுராணம் இயற்றுதற்குப் பேருதவி புரிந்தது.

அடியார்களின் பெருமையைப் பலபடப் புகழந்து பாடுகின்றார்.

**'நல்லிசை ஞான சம்பந்தனும் நாவினுக்கரசரும் பாடிய**
**நற்றமிழ் மாலை'**
**'நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞானசம்பந்தன்'**

எனப் புகழ் பரவுகின்றார்.

‘பண்ணிடைத் தமிழொப்பாய்
பழத்தினில் சுவையொப்பாய்
கண்ணிடை மணியொப்பாய்
கடுவிருட் சுடரொப்பாய்’

என ஆண்டவன் அங்கிங்கெனாதபடி பரந்த அற்புதத்தை மொழிகின்றார்.

இறையும் மனிதமும் தோழமை பேணி நடத்திய நாடகம் சுந்தரர் வாழ்வு, கிடைத்த பலனோ ‘சுந்தரத் தமிழமுது’

**‘ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய**
**தோழனுமாய் யான்செய்யும் துரிசுகளுக்கு உடனாகி**
**மாமழை ஒண்கண் பரவையைத்தந் தாண்டானை மதியில்லா**
**ஏழையேன் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே’**

என்று தோழமை தந்த ஆரூரனைப் பிரிந்த துயரம் ததும்பப் பாடும் சுந்தரர்

‘பொன்னும் மெய்பொருளும் தருவானைப்
போகமும் திருவும் புனர்ப்பானைப்
பின்னை என் பிழையைப் பொறுப்பானைப்
பிழையெல்லாம் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையன் என்றறி யொண்ணா
எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயற் பழனத்தணி
ஆரூரானை மறக்கலும் ஆமே’

என நினைந்து நினைந்து உருகுகிறார். இறைவனைத் தோழமையாக்கிய இனிய தமிழ் சுந்தரச் செந்தமிழ்.

### மாணிக்க வாசகர்

தென்பாண்டி நாட்டில் தோன்றிய பாண்டியனது அமைச்சராய் இருந்தவர். இவர் வாழ்வில் நரிகளைப் பரியாக்கி, வைகை பெருகிவரப் பிட்டுக்கு மண் சுமந்து, பிரம்படி பட்ட இறையவன் விளையாட்டுக்கள் இடம் பெற்றன. இவரது காலம் கி.பி. 3-ஆம் நூற்றாண்டு என மறைமலையடிகளும் கா.சு. பிள்ளையும் கூறுவர். 9-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி எனப் பெரும்பான்மையோர் கருதுவர் ஞானநெறி நின்ற சீலர் இவர்.

பண் சுமந்த தன் பாடலுக்காக, மதுரை மாநகரில் மண் சுமந்த கடவுளின் மாட்சியை

**‘பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்**
**பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்**
**விண்சுமந்த கீர்த்தி வியன் மண்டலத் தீசன்**
**கண் சுமந்த நெற்றிக் கடவுள் கலி மதுரை**
**மண் சுமந்த கூலிகொண்டு அக் கோலால் மொத்துண்டு**
**புண் சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்’**

என்று திருவம்மானையில் பாடுகிறார்.

ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் திருவாசகம் இவரது படைப்பாகும். நெஞ்சக் கனகல் நெகிழ்ந்துருகுமாறு அமைந்த செஞ்சொற்கவிதை திருவாசகம். இவரது கருத்து “இறைவனை எண்ணி அகங்குழைந்து அழுதால் போதும்’ என்பது திருவாசக சாரம்.

**“யானே பொய்; என் நெஞ்சம் பொய்; என் அன்பும் பொய்;**
**ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே”**

அழாதபோதும் பிள்ளையை நினைந்து பாலூட்டும் தாய் ஒத்த பேரன்பினன் இறைவன் என்பதை

‘பால்நினைந்து **ஊட்டும் தாயினும் சாலப்**
பரிந்து நீ பாவியே **னுடைய**
**ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி**
**உவப்பிலா ஆனந்தம் ஆய**
**தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த**
**செல்லமே! சிவபெருமானே!**
**யான்உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்**
**எங்கெழுந் தருளுவது இனியே’**

இந்த வகையில் உயிரை உருக்கும் தன்மை இருப்பதால்தான் ‘**திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்’** என்று பழமொழி எழுந்தது. சிவப்பிரகாசர் ‘**கருங்கல் மனமும் கரைந்துக் கண்கள் தொடுமணற் கேணியில் சுரந்து நீர்பாய’** என்று திருவாசகம் பயின்றால் விளையும் அனுபவத்தை வரைந்தார் வள்ளலார் சுவாமிகளோ.

‘வான் கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருபஞ் சாற்றினிலே

**தேன் கலந்து பால்கலந்து செழுங்கனித்தஞ் சுவை கலந்து**

**ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே"**

எனத் தான்கலந்து மெய்மறந்து சத்தியத்தை எடுத்துரைத்தார்.

டாக்டர் ஜி.யு. போப் இதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். கடவுளைத் தொட்டுக்காட்டும் அற்புதத்தை இந்நூலில் காணலாம்.

"வான்பழித்து இம்மண் புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல்" என ஈசனை ஏத்துகின்றார்.

**'மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்துன் விரையார் கழற்கொன்**

**கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி யுள்ளம்**

**பொய்தான் தவிர்த்துன்னைப் போற்றி சயசய போற்றி என்னும்**

**கைதான் நெகிழ விடேன் உடையாய் என்னைக் கண்டு கொள்ளே'**

என்று உருகும் உருக்கமே திருவாசகப் பாடல்களின் உயிரோட்டம்.

திருவாசகம் 8-ஆம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளது. இவரது மற்றொரு நூலான திருக்கோவையார் அகப்பொருள் தழுவிய சிறந்தநூல் ஆகும்.

இறைவனை ஞானகுருவாகக் கொண்டு சன்மார்க்க நெறிநின்ற மணிவாசகர் (திருவாதவூரர்) பெரியோர்களால் 'அழுது அடியடைந்த அன்பர்' எனப்போற்றப்படுகின்றார்.

## ஒன்பதாம் திருமுறை

### ஒன்பதின்மர்

ஒன்பதாம் திருமுறை ஒன்பது சைவஅடியார்களின் பாடல்களைக் கொண்டது.

### 1. திருமாளிகைத் தேவர்

கருவூர்த்தேவரும் இவரும் ஒருசாலைமாணாக்கர் போகமுனிவர்தம் மாணாக்கர் இவர் பாடிய பதிகங்கள் நான்கு பாடல்கள் 45 ஆகும்.

### 2. சேந்தனார்

பட்டினத்தடிகள் காலத்தவர். திருப்பல்லாண்டு பாடியவர் 4 பதிகங்கள் 47 பாடல்கள் இவர் பாடியவை

**பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்**

**பாற்கடல் ஈந்த பிரான்**

மாலுக்குச் சக்கரம் அன்றுஅருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

3. கருவூர்த் தேவர்

கொங்கு நாட்டிலுள்ள கருவூரைச் சார்ந்தவர் காலம் கி.பி. 9-10ஆம் நூற்றாண்டினர். இவர் பாடியவை பத்துப்பதிகங்கள் ஆகும்.

4. பூந்துருத்தி காடவநம்பி

திருப்பூந்துருத்தியைச் சார்ந்தவர் கி.பி. 11ஆம் நூற்றாண்டினர் திருவாரூப்பதிகம். கோயில் முத்துமணிமாலை ஆகிய இரு பதிகங்கள் இவர் அருளியவை. சாளரப்பண் என்னும் புதிய பண்ணை இசைத்த பெருமைக்குரியவர்.

5. கண்டராதித்தர்

சோழ மன்னர் குலத்தவர் முதல் பராந்தக சோழனின் மகனான இவர்தம் துணைவியார் செம்பியன்மாதேவி என்பர். 10-ஆம் நூற்றாண்டினர் ‘கோயில் மின்னாருருவம்’ என்னும் பதிகம் இவர் பாடியது.

6. வேணாட்டடிகள்

அரச குலத்தைச் சார்ந்த துறவி என்பர். திருவிதாங்கூருக்கு அருகில் உள்ள வேணாட்டைச் சார்ந்த துறவி என்பதால் இப்பெயர் பெற்றிருத்தல் கூடும். இவர் பாடியது ஒரு பதிகம்.

7. திருவாலியமுதனார்

வைணவகுலத்தில் பிறந்து சைவசமயம் தழுவியவர். சோழநாட்டைச் சார்ந்த திருவாலி என்பது இவர் ஊர். மயிலை மறைவல வாலி எனத் தம்மை சுட்டும் இவர் பாடியவை 4 பதிகங்கள் 42 பாடல்கள் ஆகும். இவர்தம் பாடலில் சுந்தரர் குறிப்பிடப்பெறுகிறார்.

8. புருடோத்தமநம்பி

திருவாலிய முதனார் போன்றே இவரும் வைணவர் பின்னர் சைவர் இவர் பாடியவை இரு பதிகங்கள்.

9. சேதிராயர்

சேதி நாட்டை ஆண்ட குறுநில மன்னர் திருக்கோவலூர்ப் பகுதியை ஒட்டி அமைந்தது சேதிநன்னாடு. தில்லைத் திருப்பதியை பற்றி இவர் ஒரு பதிகம் பாடியுள்ளார்.

பக்திசுவைக்காக படிக்கத்தக்கது ஒன்பதாம் திருமுறை.

## பத்தாம் திருமுறை

### திருமூலர்

பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்தை நல்கியவர் திருமூலர். தமிழ் நாட்டில் விளங்கிய 'வித்தகச்சித்தர் கணத்'தைச் சார்ந்தவர். திருமூலர், அணிமா, மகிமா முதலிய எண்வகைச் சிந்திகளும் வல்லவர் யோகியரான இவர் சாத்தனூரில் மூலன் என்ற இடையன் மாள, பசுக்களின் துயரம் நீங்குமாறு அவனுடலில் புகுந்தனர் என்பர். இவர் காலம் மிகப்பழமை வாய்ந்ததாக கருதப்படுகின்றது.

இவரது 'திருமந்திரம்' சைவசித்தாந்தத் தத்துவத்தின் சாரம் கனிந்த 3000 பாடல்கள் உடையது. **'மூலன் உரைத்த மூவாயிரம் தமிழ்'** என்று இந்நூல் சிறப்பிக்கப்படுகின்றது.

**என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய் மாறே'**

என்பது மூவர் வாக்கு ஆண்டுக்கொரு பாட்டாக 3000 ஆண்டுகளில் இயற்றப்பட்டது என்பது கதை ஒன்பது தந்திரங்களாக இந்நூல் பிரிக்கப்பட்டுள்ளது.

அருமையான கருத்துச்செல்வம் நிரம்பியது இந்நூல்.

**'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'**
**'ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்'**
**'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே'**
**'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'**

முதலிய புகழ்மிகு தொடர்கள் திருமந்திரத்தில் இடம் பெற்றுள்ளன.

**'ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்**
**பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டு**
**சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு**
**நீரினில் மூழ்கி நினைப்பொழிதோர்களே'**

யாக்கை நிலையாமை பற்றி கூறும் மேற்சுட்டிய பாடல் மிகப்புகழ் பெற்றது.

வழுதலை, பாகல் பூசணி, வாழை என்று காய்களின் வர்க்கத்தைப் பாடுபொருளாக்கியப் பாடியதுபோல் தோன்றும் பின்வரும் பாடல் எளிதில் பொருள் விளங்காதனவாய்க் குருமுகமாய்ப் பொருள் காண வேண்டியதாய் அமைகின்றது.

**வழுதலை வித்திடப் பாகல் முளைத்தது**
**புழுதியை தோண்டினேன் பூசணி பூத்தது**
**தொழுது கொண்டோடினார் தோட்டக்குடிகள்**
**முழுதும் பழுத்தது வாழைக் கனியே'**

வழுதலைவித்து - யோகப் பயிற்சி: பாகல் - வைராக்கியம் - புழுதி: தோண்டுதல் - தத்துவ ஆராய்ச்சி பூசணி - சிவம்: தோட்டக்குடிகள் - இந்திரியாதி விடயங்கள் (அஞ்ஞனம்) வாழைக்கனி ஆன்மலாபம் (முக்தி).

படிக்க வேடிக்கயையானது ஆனால் கருத்தாழம் மிக்கது இதுபோல் பல பாடல்கள் உள்ளன.

அன்புடைமையை எடுத்து வற்புறுத்துங்கால் இறைவனே அன்பு வடிவாக இருந்தலைக் காட்டுகின்றார்.

**'அன்பு சிவம் இரண்டென்பர் அறிகிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே'**

பதினெண் சித்தர்களுள் ஒருவராகக் கருதப்படும் திருமூலர் யோகம், தாந்திரிகம் ஆகிய நெறிகளின்ஊடே, தத்துவப் பாடல்களைத் தந்திருக்கிறார்.

## பதினோராம் திருமுறை

### பன்னிருவர்

இத்திருமுறையில் பன்னிரண்டு அருளாளர்கள் பாடிய 40 பாடல்கள் உள்ளன. திருவாலவயுடையார், காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள்நாயனார், நக்கீர தேவநாயனார், கல்லாட தேவநாயனார், கபிலதேவநாயனார், பரணதேவநாயனார், இளம்பெருமான் அடிகள், அதிராவடிகள், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி இவர்களில் திருவாலவாயுடையார் சிவபிரான் என்று சைவர் நம்புவர், மற்ற அடியார்களில் குறிப்பிடத்தக்கவர் சிலரே.

**காரைக்காலம்மையார்**

காரைக்கால் அம்மையார் என்ற பெண் தொண்டர் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், மூத்த திருப்பதிகம், திருவிரட்டை மணி மாலை, அற்புதத் திருவந்தாதி பாடியுள்ளார். இவருடைய பாடல்களில் உள்ளுணர்வின் எழுச்சியும் உரையாடல் பாங்கும் அமைந்திருப்பதைக் காணலாம்.

**'அன்றும் உன் திருவுருவம் காணாதே ஆட்டம்**
**இன்றும் உன் திருவுருவம் காண்கிலன் - என்றும்**
**எவ்வுருவோ நின்றுஎவரும் என்பார்கட்டு என்னுரைக்கேன்**
**எவ்வுருவோ நின்னுருவம் எமக்கு'**

கி.பி. 3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். சங்க கால ஔவையாருக்குப் பின்னர் தமிழ்க்கவிதை இயலுக்கு அடுத்த தளத்தை உருவாக்கியவர். இறைவனாலேயே அம்மை என்று அழைக்கப்பட்ட பெருமைக்குரியவர்.

**சேரமான் பெருமாள் நாயனார்**

சேரமான் பெருமாள் நாயனா சுந்தரர் நண்பர் பொன்வண்ணத் தந்தாதி திருவாரூர் மும்மணிக்கோவை திருக்கைலாயஞான உலாப் பாடியுள்ளார். தமிழில் எழுந்த முதல் உலா நூல் இதுவே.

**நக்கீரர்**

நக்கீரர் பெயரால் 10 நூல்கள் உள்ளன. மிகச்சிறப்பு வாய்ந்தது திருமருகாற்றுப்படை.

**பட்டினத்துப் பிள்ளையார்**

சிறந்த சைவப்பெரியரான பட்டினத்துப் பிள்ளையார் கோயில் நான்மணிமாலை, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி திருஒற்றியூர் ஒருபாஒருபது ஆகிய 5 நூல்கள் பாடியுள்ளார்.

**நம்பியாண்டார் நம்பி**

திருமுறைகள் தொகுத்த நம்பி 10 நூல்கள் பாடியுள்ளார் அவற்றில் திருத்தொண்டர் திருவந்தாதி சிறப்பானது.

## பன்னிரண்டாம் திருமுறை

**பெரியபுராணம்**

பன்னிரண்டாம் திருமுறையாக விளக்குவது சேக்கிழார் அருளிச் செய்த பெரிய புராணம். அகச்செருக்கும் புறச்செருக்கும் அழிந்து, உலக உயிர்களின்பாலும் இறைவன்பாலும் அன்பினில்

கசிந்து உருகி, தன்னலம் ஒழிந்து, பொதுநலத்திற்காகப் பணி செய்து கிடத்தலையே வாழ்வாகக் கொண்டவர்கள் தொண்டர்கள். இவர்களே யாவரினும் பெரியோர். இத்தகைய பெரியோர்களது வரலாற்றைக் கூறுதலால், இந்நூல் பெரியபுராணம் என்றும் மாக்கதை என்றும் திருத்தொண்டர் புராணம் என்னும் பேசப்படுகிறது.

சேக்கிழார் இந்நூற்கு இட்ட பெயர்கள் மாக்கதை, திருத்தொண்டர்புராணம் என்பன ஆகும். திருத்தொண்டர்கள் சமநோக்கம் உடைய மெய்யறிவாளர்கள், அன்புமயமானவர்கள்; இறைவனையும் அவனது தொண்டர்களையும் பணிந்து வணங்கி அவர்களுக்குத் தொண்டு புரிதற்காகவே பிறப்பெடுத்திருப்பதாக் கருதி, அதனை நடைமுறைப்படுத்தியவர்கள் இதனை,

**'கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்**
**ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்**
**கூடும் அன்பினில் கும்பிட லேஅன்றி**
**வீடும் வேண்டா விறலின் விளங்கினார்'** (திருக்சுட்டச்சிறப்பு, 8)

என்று சேக்கிழார் பாடுகிறார்.

பெரியபுராணம் இரு காண்டங்களை உடையது. முதற் காண்டத்தில் ஐந்தும் இரண்டாம் காண்டத்தில் எட்டுமாகப் பதின்மூன்று சருக்கங்கள் இதில் உள்ளன. 4,286 விருத்தப்பாக்கள் கொண்ட இந்நூல் 'உலகெல்லாம்' என்ற தொடரையே தொடக்கமாகவும் முடிவாகவம் கொண்டுள்ளது. இதில் (தனியடியார்கள் 63, தொகையடியார்கள் 9 பேரின்) 72 கதைகள் புராணம் என்னும் பெயரில் விவரிக்கப்பட்டுள்ளன. இவற்றைக் குறிக்கும் நோக்கில் முதல் பாடலில் 72 எழுத்துக்கள் (63 உயிர்மெய் + 9 மெய்) முதல் உள்ளன.

**காப்பியத்தலைவர் சுந்தரர்**

சிவனடியார்களின் செயற்கரிய அருஞ்செயல்களை விவரிப்பதனால் இந்நூல் பல துண்டுக்கதைகளின் தொகுப்புக்களாகக் காணப்படுகிறது. எனினும் இதனை ஒரு பெருங்காப்பியத்தின் சிறப்புக்கள் யாவும் நிரம்பப்பெற்றது என்று அறிஞர்கள் கருதுகின்றனர். சுந்தரமூர்த்திநாயனார் காப்பியத் தலைவர் அவர் சங்கிலியார், பரவையார் என்னும் இருவரை மணக்கிறார்.

'சைவமுதல் திருத்தொண்டர் தம்பிரான் தோழனார் நம்பி' என்று பெரியபுராணம் சுந்தரமூர்த்தி நாயனாரைக் குறிப்பிடுகிறது. பல சிவனடியார்களின் வாலாற்றோடு சுந்தரரது வரலாறு பின்னிப்பிணைந்து காணப்படுகிறது. கைலாயத்திலிருந்து வெளியேறிச் சோழ நாட்டில் பிறந்து வாழ்ந்து மீண்டும் கைலாயம் சேர்தல் வரையிலான சுந்தரரது முழு வாழ்க்கையும் பேசப்படுகிறது.

## 2. நாலாயிரத் திவ்ய பிரபந்தம்

'அன்பின் வழியது உயிர்நிலை' என்பது வள்ளுவர் வாக்கு அன்பின் வழியது இறைநிலை என்று நிலைநாட்ட எழுந்தது பக்தி இயக்கம்.

தமிழகம் கண்ட பக்தி இயக்கத்தின் இரு முகங்கள் சைவமும், வைணவமும் இவற்றுள் ஆழ்வார்களின் அருளிச் செயல்களினூடாகவும் ஆச்சாரியர்களின் தத்துவ தரிசனங்களினூடாகவும் பெருகிய அன்பின் பெருவெள்ளம் வைணவம்.

திருமால் வழிபாடு சங்க இலக்கியங்களில் சிறப்பித்துப் பேசப்பட்டாலும் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் முதவாழ்வார்களுள் ஒருவராகிய பூதத்தாழ்வாரின் பொங்கு தமிழ்க் குரலால் ஓங்கிச் செழித்தது வைணவம் சைவசமய ஆச்சாரியர்களைப்போல வைணவ சமயத்தின் வாழ்வுக்கு காரணமானவர்கள் பன்னிரண்டு ஆழ்வார்கள் ஆவர். தலங்கள்தோறும் சென்று மாலைப்பாடி மங்களாசாசனம் செய்து மகிழ்ந்தவர்கள் ஆழ்வார்கள். இவர்கள் பாடிய இன்னிசைப் பாடல்களின் தொகுப்பே 'நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்' வைணவ ஆழ்வார்களின் பாடல்களைத் தொகுத்த அந்த பெருமை நாதமுனிகள் என்பாருக்கு உரியது.

### ஆழ்வார்கள்

ஆழ்வார்கள் என்ற சொல் 'திருமாலின் அன்பிலும் அருளிலும் ஆழ்கின்றவர்கள்' என்ற பொருளில் வழங்குகின்றது. பக்தியிலக்கியத்தில் இறைவனுக்கும் உயிருக்கும் இடையே இருக்கும் உறவைப் பல பரிமாணங்களில் நுகர்ந்தவர்கள் ஆழ்வார்கள்.

### முதல் ஆழ்வார்கள்

பேயாழ்வார், பூதத்தாழ்வார், பொய்கையாழ்வார் மூவரையும் முதலாழ்வார்கள் என்பர். பேயாழ்வார் மயிலாப்பூரிலும், பூதத்தாழ்வார் மல்லையிலும், பொய்கையாழ்வார், காஞ்சிபுரத்திலும் பிறந்தவர்கள். கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முந்தி இருந்தவர்கள் என்பர். இவர்களது பாடல்கள் முதல் மூன்று திருவந்ததாதிகளாக வகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு திருவந்தாதியும் அந்தாதி இலக்கணம் அமைந்த 100 வெண்பாக்கள் கொண்டது.

### பொய்கையாழ்வார்

ஆழ்வார்களால் முதன்முதலாக மங்களாசாசனம் செய்யப்பட்ட தலம் திருக்கோவலூர்.

**'நீயும் திருமகளும் நின்றாயால் குன்றெடுத்துப்**
**பாயும் பனிமறைந்த பண்பாளா - வாசல்**
**கடைகழியா உள்புகாக் காமர்பூங்கோவல்**
**இடைகழியே பற்றி இனி'**

என்று பாடி மங்களாசாசனம் செய்தவர் முதலாழ்வார்களுள் ஒருவரான பொய்கையாழ்வார். நின்றும், இருந்தும், கிடந்தும் இடர்கெடச் செய்த திருமாலை

**'வேங்கடமும், விண்ணகரும், வெ.·.காவும் அ.·.காத**
**பூங்கிடங்கின் நீள்கோவல் பொன்னகரும் நான்குஇடத்தும்**
**நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தானே**
**என்றால் கெடுமாம் இடது'**

என்று பாடுகிறார்.

பொய்கையார் அந்தாதி

**'வையந் தகளியா வார்கடலே நெய்யாக**
**வெய்ய கதிரோன் விளக்காகச் - செய்ய**
**சுடராழி யான்அடிக்கே சூட்டினேன் சொல்மாலை**
**இடராழி நீங்குக என்று'**

என்று பாட்டுடன் தொடங்குகிறது.

**பூதத்தாழ்வார்**

பூதத்தாழ்வாரால் அருளிச் செய்யப்பட்டது இரண்டாம் திருவந்தாதி நாலாயிரத் திவ்யப்பிரபந்தத்தில் 'இயற்பா' எனும் தலைப்பில் நாதமுனிகளால் தொகுக்கப்பட்ட இது 100 வெண்பாக்களால் ஆனது. இவரது பாடல்கள், நாராயணனே அடைதற்குரிய உயர் பரம்பொருள் உயர் பரம்பொருள்' என்பதை உணர்த்துகிறது.

பூதத்தார் இயற்றிய இரண்டாம் திருவந்தாதி நூல்.

**'அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக**
**இன்புருகு சிந்தை இடுதிரியா - நண்புருகி**
**ஞானச் சுடர்விளக்கை ஏற்றினேன் நாரணற்கு**
**ஞானத் தமிழ்புரிந்த நான்'**

என்ற பாட்டுடன் தொடங்குகிறது.

எங்கும் நிறைந்த இறைவனை எப்படிக் காண வேண்டும் என்று வழி கூறுகிறார் பூதத்தாழ்வார்.

**'அறிவு என்னும் தாள்கொளுவி ஐம்புலனும் தம்மில்**
**செறிவு என்னும் திண்கதவம் செம்மி - மறைஎன்று**
**நன்குஓதி நன்குஉணர்வார் காண்பரே, நாள்தோறும்**
**பைங்கோத வண்ணன் படி'**

என்பது அவர்தம் பாசுரம்.

**பேயாழ்வார்**

பேயாழ்வார் பாடிய மூன்றாம் திருவந்தாதி.

**'திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்**
**அருக்கன் அணிநிறமும் கண்டேன் - செருக்கிளரும்**
**பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்**
**எண்ணாழி வண்ணன்பால் இன்று'**

என்ற பாட்டுடன் தொடங்குகின்றது.

**திருமழிசையாழ்வார்**

இவர் திருமழிசை என்ற ஊரினர். சமணசமயத்துப் பல்லவ மன்னன் தன் அன்புக்குரிய சீடன் கணிகண்ணனை இகழ்ந்தமையால் வெருண்டு தன்னோடு அவர் ஊர் (திருவெ.ஃகா) திருமாலையும் 'மணிவண்ணா நீயுமுன்றன் பைந்நாகப்பாய் சுருட்டிக்கொள்' என்று கட்டளையிட்டு வெளியேறச் செய்தார் என்பர். இவர் திருச்சந்த விருத்தமும் நான்முகன் திருஅந்தாதியும் பாடியுள்ளார். திருச்சந்த விருத்தம் தத்துவ மணிகள் நிரம்பியது இதன் முதல் பாடலைக் காணலாம்.

**'பூதிலாய ஐந்துமாய் புனற்கண் நின்ற நான்குமாய்**
**தீதிலாய மூன்றுமாய் சிறந்த காலிரண் டுமாய்**
**மீதிலாய தொன்றுமாகி வேறுவேறு தன்மையால்**
**நீதிலாய வண்ணம் நின்னை யார்நினைக்க வல்லரே?'**

இவரது நான்முகன் திருவந்தாதி திருமாலே முழுமுதற் கடவுள் என்றும் சிவனும் நான்முகனும் அவர்க்கு அடிமைப்பட்ட தெய்வங்கள் என்றும் கடுமையாகப் பேசுகின்றது.

**'நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனும்**
**தான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான்**
**யான்முகமாய்**
**அந்தாதி மேலிட்டு அறிவித்தேன் ஆழ்பொருளை**
**சிந்தாமல் கொண்மின் நீர் தேர்ந்து'**

என்பது இவர்தம் பாசுரம்.

**திருப்பாணாழ்வார்**

உறையூர்ப்பாணர் சேரியில் பிறந்து உலகளந்தான் பேரருளால் உய்ந்தவர். அந்தணராகிய உலோகசாரங்கள் சாதி வெறியால் வீசிய கல் திருப்பாணர் சிரத்தில் உதிரம் பாய்ச்சியது.

திருவரங்கப் பெருமான் நெற்றியிலும் இதனால் இரத்தம் சொரிந்தது என்பது வரலாறு. சாதிவேறுபாடின்றி, தாழ்த்தப்பட்ட குலத்தைச் சேர்ந்தவருக்கும் பெருமை சேர்க்குமாறு அமைந்தது இக்கதை. இவர் பாடிய பத்துப் பாசுரங்கள் 'அமலனாதி பிரான்' என்ற பாடலில் தொடங்குவன ஆகும்.

**'அமலனாதிபிரா னடியார்க் கென்னை யாட்படுத்த**
**விமலன் விண்ணவர்கோன் விரையார்பொழில் வேங்கடவன்**
**நிலமன் நின்மலன் நீதிவானவன் நீள்மதி ளரங்கத் தம்மான் திருக்**
**கமல பாதம் வந்தென் கண்ணின் உள்ளன ஒக்கின்றதே'**

இப்பதிகத்தில் அரங்கப் பெருமானை 'பாதாதிகேசமாக'ச் சேவித்து மகிழ்கிறார்.

நம்மாழ்வார்

வைணவ ஆழ்வார்களுள் தலைசிறந்தவர் பாண்டிநாட்டு ஆழ்வார் திருநகரியில் பிறந்தவர் பிறந்தது முதல் ஞானம் பெற்று வேதசாரமான பாடல்களை இயற்றியுள்ளார். பிறந்த பதினாறாண்டு வரை வாய் பேசாது புளியமரத்தடியில் தவமிருந்தார். இவரைக் குருகூர்மாறன், சடகோபன், பாரங்குசன், வருளாபரணன் எனப் பெரியோர் அழைப்பர். திருவிருத்தம் திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்பன இவர் பாடிய நூல்கள். இவற்றை முறையே இருக்கு, யஜுர், அதர்வண, சாம வேதங்களின் பிழிவு என்று மொழிவர். இவற்றில் பொதுமைக் கொள்கையும், ஆழ்ந்த இறையின்ப உணர்வும் பொதிந்தவை இவர் பாசுரங்கள் இவரது பெருமையை உணர்ந்து அடிமை பூண்டார் மதுரகவியாழ்வார் கம்பர் 'சடகோபரந்தாதி' பாடி இவரை ஏந்தினர் என்பர்.

**'உண்ணும் சோறும் பருகும் நீரும் தின்னும் வெற்றிலையும்**
**எல்லாம் கண்ணன் எம்பெருமான்'**

என்றே கணீர் வாரப் பாடுகின்றார், நம்மாழ்வார். இறைவன் திருப்புகழை எடுத்து முழக்குவேனேயன்றி,

**வாய்கொண்டு மானிடம் பாட வந்த கவியோ, னல்லேன்'**

என உறுதி கலந்த நெஞ்சுடன் கூறுகின்றார். கடவுளின் பொது இயல்புகளை விரிந்துரைக்கும் பாடல்களில் ஒன்று பின்வருமாறு.

**'உயர்வற உயர்நலம் உடையவன் எவன் அவன்**
**மயர்வற மதிநலம் அருளினன் எவன்அவன்**
**அயர்வறும் அமரர்கள் அதிபதி எவன் அவன்**
**துயரறு சுடரடி தொழு தெழு என் மன்னே'**

“எல்லா நாட்டிற்கும் எல்லாச் சமயத்தார்க்கும் எல்லா இனத்தார்க்கும் உரியவர் நம்மாழ்வார்” என்பார் திரு.வி.க.

**மதுரகவியாழ்வார்**

நம்மாழ்வாரின் சீடர் திருக்கோளூரில் தோன்றியவர் குருவின் பெருமை பேசும் ‘கண்ணிநுண் சிறுத்தாம்பு’ பரசுரங்கள்தான் இவரது படையல்கள் நம்மதாழ்வாரைக் குறித்து.

**‘தேவுமற் றறியேன் குருகூர்நம்பி**
**பாவி னின்னிசை பாடித் திரிவேனே’**

என்று பாடியுள்ளார். தம்மைப் பணி கொண்ட குருகூர் நம்பியின் பெற்றியை

**‘பயன்அன்று ஆகிலும் பாங்கலா ஆகிலும்**
**செயல் நன்றாகத் திருத்திப்பணி கொள்வான்**
**குயில் நின்றுஆர் பொதில்சூழ குருகூர் நம்பி**
**முயல்கின்றேன் அவன்மொய்அழற்கு அன்யையே’**

என்று பாடுகிறார்.

பாண்டிநாட்டு வில்லிபுத்தூர் ஊரினர் விஷ்ணு சித்தர் பட்டர்பிரான் என்ற திருநாமங்கள் உடையவர் திருமாலுக்குப் பூமாலை சாத்தி புனைத்தேத்தி வழிபாடு செய்தவர் ‘பெரியாழ்வார் திருமொழி’ ‘திருப்பல்லாண்டு’ இவரது நூல்களாகும். கண்ணனைக் குழந்தையாகக் கண்டு அவன் குறும்பைச் சித்திரிக்கும் பாடல்களை இவர் தாய்மை உணர்ச்சி குமிழியிட எழுதியுள்ளார். பிற்காலத்துப் பிள்ளைத்தமிழ் இலக்கியத்துக்கு வழிகாட்டியாக இவரது பாடல்கள் விளங்குகின்றன. கண்ணனைப் பெரியாழ்வார் தாலாட்டுகின்றார்.

**‘மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி**
**ஆணிப்பொன் னால்செய்த வண்ணச் சிறுதொட்டில்**
**பேணியுனக்கு பிரமன் விடுதந்தான்**
**மாணிக்குறளனே, தாலேலோ**
**வையமளந்தானே தாலேலோ’**

**ஆண்டாள்**

பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள் ஆண்டாள். இவர் அணிந்த மாலையை இனிதாக ஏற்றான் திருமால் என்பர். ஆதலின் ‘சூடிக்கொடுத்த சுடர்க்கொடி’ எனப் பெற்றார். கண்ணனைக் காதலனாகவும், தன்னைக் காதலியாகவும் கற்பித்து இவர் பாடியுள்ள ‘நாச்சியார் திருமொழி’ப் பாடல்களில் காதலுணர்ச்சியின் கவின் மிகுந்த சித்திங்களைக் காணலாம்.

**‘வாரண மாயிரம் சூழ வலம் செய்து**
**நாரணன் நம்பி நடக்கின்றான் என்றெதிர்**
**பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்**
**தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழீ நான்’**

என்று கண்ணனை மணம் புணரக் கனவு கண்டார். குயிலும், காரும், சங்கமும், கண்ணன் நலம் காட்டப் பாடினார்.

கண்ணன் இதழ்ச் சுவையை அவன் கையிருக்கும் சங்கிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள ஆண்டான் பாடும் அழகிய பாசுரம் இது.

**‘கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ**
**திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ?**
**மருப்பு ஒசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்**
**விருப்புற்றுக் கேட்கின்றேன், சொல் ஆழிவெண் எங்கே’**

அப்பதிகத்தின் நிறைவில்.

**‘எய்ந்த புகழ்ப் பட்டர்பிரான் கோழை தமிழ் ஈரைந்தும்**
**ஆய்ந்து ஒத்த வல்லார் அவரும் அணுக்கரே’**

என்று பாடுவோரையும் அரவைணத்துப் பரந்தாமன் பக்கம் சேர்க்கிறார் ‘பாலை’ தந்த கோதை ஆண்டாள்.

‘ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடிய’ இவரது திருப்பாவை முப்பதும் முழு மாணிக்கங்கள் ‘அமுதனைய சொற்கள் நிரம்பிய பாடல்கள்’ எனப் பாரதியார் குறிப்பிடுகிறார். வைகறையின் புதுப்பொலிவும், நாட்டின் செழிப்பும், கண்ணன் மேல் கொண்ட மோக உணர்வும் திருப்பாவையில் ததும்புகின்றன. ஆண்டாள் திருப்பாடல்கள் பெண்மையின் பேரின்ப அமுதூறும் இனிமை சேர்ந்தவை.

**திருமங்கையாழ்வார்**

கள்ளர் குடியினைச் சேர்ந்த இவர் குறுநில மன்னராக இருந்தவர். திருமால் பணிக்காவும், அடியார் பணிக்காகவும் திருமாலையே வழிப்பறிக் கொள்ளை செய்தார். இவர் மங்கைமன்னர் திருவரங்கத்தின் மூன்றாவது சுற்றுமதில் கட்டும் பொருட்டு, நாகை பௌத்த ஆலயத்தைக் கொள்ளையிட்டார் என்பர். பெரிய திருமொழி திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை சிறியதிருமடல், பெரிய திருமடல் என்னும் ஆறு நூல்களையும் இவர் அருஞ்சுவை கலந்து பாடினார். ‘நெஞ்சுக் கிருள்கடி தீபம்’ இவரது பாசுரங்கள்.

நாராயணன் திருநாமம் தரும் பெருஞ்செல்வத்தை ஒரு பாடலில் அழகுறக் கூறுகின்றார்.

'குலந்தரும் செலவும் தந்திடும் அடியார் படுந்
துயராயின் எல்லாம்
நிலம்தரச் செய்யும், நீளவிசுமபருளும், அருளொடு
பெருநில மளிக்கும்
வலம்தரும் மற்றும் தந்திடும், பெற்ற தாயினு
மாயினவை செய்யும்.
நலம்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.'

குலசேகராழ்வார்

சோழநாட்டு மன்னர் குடியில் தோன்றி இராமபிரான் வாழ்க்கை நெறியில் மனமார ஈடுபட்டவர். இராமாயணக் கதை கேட்ட கரகிரி தூடணர் மீது படை எடுக்கக் கோபித்தார் என்பர். இவரது இனிய பாசுரங்களைப் பெருமாள் திருமொழி எனக் குறிப்பிடுவர். இராமாயணக் கதைகளைத் தம் பாட்டில் சுருக்கியுரைத்துள்ளார். இராமனது குழந்தைப் பருவத்தைச் சுவையாக அனுபவித்துப் பாடியுள்ளார். தேவகி தசரதன் பாத்திரங்களாக மாறி கண்ணன் திருப்புகழை இசைத்துள்ளார்.

'மண்ணுபுகழ் கௌசலை தன்மணி வயிறு வாய்த்தவனே!
தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய் செம்பொன்சேர்
கன்னிநன்மா மதின்புடைசூழ் கணபுரத் தென்கருமணியே!
என்னுடைய இன்னமுதே! இராகவனே! தாலேலோ!'

என்பது இவர் இனிய பாசுரங்களில் ஒன்று.

தொண்டாடிப்பொடியாழ்வார்

சோழநாட்டினர் (திருமண்டங்குடி) இவரது பிள்ளைத் திருநாமம் விப்நாராயணர் நாராயணன் திருவுள்ளம் இரங்கத் தொண்டரடிப்பொடி ஆழ்வாராகியப் பாமாலைகள் புனைந்தார். திருமாலை, திருப்பள்ளி எழச்சி ஆகியன இவர் பாடிய நூல்கள் திருவரங்கப் பொருமானை ஏந்தும் திருமாலை சந்தைக்கினிய செவிக்கினிய பாடல்கள் கொண்டது. பரமத கண்டனமும் படிந்தது.

'பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செய்கண்
அச்சுதா அமரரேறே! ஆயர்தம் கொழுந்தேஎன்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகமாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளாலே'

இவரது திருப்பள்ளியெழுச்சிப் பாடலும் மதுவிரிந்தொழுகும் மலச்செண்டுபோல் நறுமணம் கமழ்வது.

## 3. சமண இலக்கியங்கள்

சமணர்கள் தமிழில் தொட்டுச் செல்லாத துறையே கிடையாது. நீதிநூல்கள், பெரிய காவியங்கள், சிறுகாப்பியங்கள் உரைநடை நூல்கள், இலக்கண நூல்கள் முதலிய பல துறைகளிலும் தமிழை வளப்படுத்தியவாகள் சமணர்கள் தொல்காப்பியமும், குறளும் கூட இவர்கள் தந்தவை என்பர்.

### அ. நீதிநூல்கள்

#### 1. நாலடியார்

நீதி இலக்கியங்களுள் திருக்குறளுக்கு அடுத்த சிறப்பைப் பெறுவது நாலடியார். ‘ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி’ என்னும் பழமொழி இதன் பெருமையைப் பறை சாற்றுகிறது. நாலடி வெண்பாக்கள் நானூறு கொண்ட இந்நூலுக்கு அடிவரையறை அளவினால் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இது நாலடிநானூறு, வேளாண்வேதம் என்றும் கூறப்படுகிறது. இந்நூலின் பெருமையைக் கருதி இதற்கு ‘ஆர்’ என்னும் உயர்திணைச் சிறப்பு விகுதி (நாலடி - ஆர்) தரப்பட்டுள்ளது. இதற்கு சிறப்பை உடைய முதல் தமிழ்நூல் இதுவே.

நாலடியார் பாடல்களை இயற்றியோர் பெயர் தெரியவில்லை. சமணப் புலவர்களால் இவை இயற்றப்பட்டவை என்ற நம்பிக்கை உளது.

#### 2. திணைமாலை நூற்றைம்பது

கணிமேதாவியார் பாடிய அகப்பொருள் நூல் இது. ஐந்திணை நூல்களுள் இதுவே பெரியது. இதில் 153 வெண்பாக்கள் உள்ளன. குறிஞ்சி, நெய்தல், முல்லை மூன்றிலும் 31 பாடல்களும் ஏனைய இரண்டிலும் 30 பாடல்களும் காணப்படுகின்றன.

‘வினை விளையச் செல்வம் விளையும், பெரியார் பெருமை பெரிது’ என்பன போன்ற அரிய கருத்துக்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

**‘மாயவனும் தம்முனும் போலே மறிகடலும்**
**கானலும் சேர்வெண் மணலும் காணாயோ’ (58)**

கடலுக்குக் கண்ணனையும் வெண்மணலுக்குப் பலராமனையும் புலவர் உவமித்துள்ளார்.

கடல்நீரைக் குடித்த மேகம் கடலுள் இருந்த மாமரத்தை வெட்டிய முருகனது வேலைப் போன்று மின்னியது. இவ்வுவமைகளில் புராணக் கதைகள் இடம்பெற்றுள்ளன.

ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது ஆகியன நாலைந்திணை எனப்படுகின்றன.

3. பழமொழி

ஒவ்வொரு பாடலும் இறுதியில் ஒரு பழமொழியைக் கொண்டு, நீதிக்கருத்தை விவரிக்கும் முறையில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் அருகதேவனை வணங்கும் வாழ்த்துப்பாடல் உட்பட நானூறு வெண்பாக்கள் உள்ளன. இதற்குப் பழமொழி நானூறு என்றொரு பெயரும் உண்டு. இதனை இயற்றியவர் மூன்றுறையரையனார்.

பழமொழியில் சங்ககால மன்னர்கள், வள்ளல்கள், புராணக் கதைகள் பற்றிய குறிப்புக்கள் பல இடம்பெற்றுள்ளன.

கரிகால் சோழன் நரைத்த முதியவன் போல வேடமிட்டு இளமையில் நீதி வழங்கிய செய்தியை,

**‘உரைமுடிவு காணான் இளமையோன் என்ற**
**நரைமுது மக்கள் உவப்ப நரைமுடித்துச்**
**சொல்லால் முறைசெய்தனன் சோழன் குலவிச்சை**
**கல்லாமல் பாகம் படும்’** (6)

என்ற பாடலில் காணலாம்

இந்நூலில் மக்களிடம் வழங்குகிற சிறந்த பழமொழிகள் பல இடம்பெற்றுள்ளன. அவற்றுள் சில,

**‘பாம்பு அறியும் பாம்பின்கால்’** (7)
**‘நுணலும் தன் வாயால் கெடும்’** (114)

4. சிறுபஞ்சமூலம்

கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, சிறுநெருஞ்சி என்னும் ஐந்தின் வேர்களும் சிறுபஞ்சமூலம் என்னும் மருந்தாகும். இம்மருந்தைப் போன்று இந்நூலில் கூறப்படுகிற நீதிமொழிகளும் நற்பண்பு நல்லொழுக்கமாகிய நலத்தைக் கொடுக்கும் எனும் கருத்தில் இந்நூல் சிறுபஞ்சமூலம் (ஐந்து சிறிய வேர்) என்று பெயரிடப்பட்டுள்ளது.

வில்வம், பெருங்குமிழ், தழுதாழை, பாதிரி, வாகை என்னும் ஐந்தும் பெரும்பஞ்சமூலம் எனப்படும்.

சிறுபஞ்ச மூலத்தில் சமண சமயக் கடவுள் வாழ்த்துப்பாடல் முதலில் இடம்பெற்றுள்ளது. இது தவிர 100 பாடல்கள் உள்ளன என்பது இலக்கிய அறிஞர்களின் கொள்கை. ஆனால், இதில் 5 பாடல்கள் (85-89) முற்றிலுமாகக் கிடைக்கவில்லை. மேலும், புறத்திரட்டில் 3 மிகைப் பாடல்கள் உள்ளன. இதிலுள்ள ஒவ்வொரு வெண்பாவும் ஐந்து நீதிகளைக் கூறுகிறது.

காரியாசான் இந்நூலை இயற்றினார் என்றும் அவர் மாக்காயன் என்பவரின் மாணாக்கன் என்றும் சிறப்புப் பாயிரம் குறிப்பிடுகிறது. இவரும் கணிமேதாவியாகும். ஒருசாலை மாணாக்கர் ஆவர்.

சிறுபஞ்சமூலம் ஒத்த கருத்துக்களைத் தொகுத்து உரைக்கிறது.

**‘கற்புடைய பெண்அமிர்து கற்றடங்கினான் அமிர்து**
**நற்புடைய நாடமிர்து நாட்டுக்கு நற்புடைய**
**மேகமே சேர்கொடி வேந்தமிர்து சேவகனும்**
**ஆகவே செய்யின் அமிர்து** (4)

அமுதத்திற்கு ஒப்பானவர்களை இப்பாடல் தொகுத்துக் கூறுகிறது.

5. ஏலாதி

1. பங்கு ஏலம், 2. பங்கு இலவங்கப்பட்டை, 3. பங்கு நாககேசரம், 4. பங்கு மிளகு, 5. பங்கு திப்பிலி 6. பங்கு சுக்கு என ஆறு பொருள்கள் கலந்து செய்யப்படுவது ஏலாதிச் சூரணம் இச்சூரணத்தைப் போன்று ஒவ்வொரு பாடலிலும் கூறப்படுகிற ஆறு அறக் கருத்துக்களும் நன்மை பயக்கும் என்று கருதி, இந்நூலுக்கு ஏலாதி எனப் பெயர் சூட்டப்பெற்றுள்ளது. ஏலம் + ஆதி ஏலாதி இதன் பெயர் ஒரு சுவடியில் ஏலவாதி என்றுளது.

ஏலாதியை இயற்றிய கணிமேதாவியாரே திணைமாலை நூற்றைம்பது என்ற நூலுக்கும் ஆசிரியர். இவர் மாக்காயன் என்பவரின் மாணாக்கர். இந்நூலில் கடவுள் வாழ்த்து நீங்கலாக 80 வெண்பாக்கள் உள்ளன. கடவுள் வாழ்த்து சமண சமயம் சார்ந்தது.

ஏலாதி கொல்லாமை, புலால் உண்ணாமை, திருடாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, வாய்மை போன்ற கருத்துக்களுக்கு முதன்மை தருகிறது. இவை சமண சமயத்தில் சிறப்பாக வலியுறுத்தப்படுவன ஆகும்.

**‘தாய்இழந்த பிள்ளை தலைஇழந்த பெண்டாட்டி**
**வாய்இழந்த வாட்வினார் வாணிகம் போய்இழந்தார்**

**கைத்தூண் பொருள்இழந்தார் கண்ணிலவர்க்கு எந்தார்**

**வைத்து வழங்கி வாழ்வார்.**' (79)

சில பாடல்களில் மகடூஉ முன்னிலை காணப்படுகிறது.

ஆகிய நூல்கள் சமணர்கள் வழங்கிய கொடையாகும்.

**ஆ. காப்பியங்கள்**

சமண சமயத்தார் நல்கிய காப்பியங்கள் பலவாகும். ஐம்பெருங்காப்பியங்களுள் சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, வளையாபதி ஆகிய மூன்றும் பெருங்கதை மேரு மந்திரபுராணம் ஆகிய காப்பியங்களும் சமணர்கள் தமிழுக்கு அளித்த கொடையாகும்.

இவற்றுள் மேரு மந்திரபுராணம் என்பது 'மேரு மந்தா' என்னும் இரு அரச குமாரர் வரலாற்றைக் கூறுவது 12 சருக்கங்களையும் 1450 பாடல்களையும் கொண்டது. ஆசிரியர் வாமனர் என்பர்.

மல்லிநாதர் புராணம், சாந்திபுராணம், மாபுராணம் போன்றவையும் சமண சமயங்கள் இரண்டு ஆகும்.

**1. சிலப்பதிகாரம்**

இதன் ஆசிரியர் இளங்கோவடிகள். தமிழ் காப்பியங்களுள் நினைக்குந்தோறும் இனிப்பதாகவும் படிக்குந்தோறும் புதுமையை விளைவிப்பதாகவும் விளங்குவது சிலப்பதிகாரம். மகாகவி பாரதி 'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்' என இதனைப் போற்றுகிறார்.

கண்ணகி நல்லாளின் கதை என்னும் ஒரு பொருளை விவரிக்கிற முப்பது பாடல்கள் (காதைகள்) இதில் உள்ளன. அவற்றுள் புகார்க் காண்டத்தில் பத்தும் மதுரைக்காண்டத்தில் பதின்மூன்றும் வஞ்சிக்காண்டத்தில் ஏழும் உள்ளன. இதுவே தமிழில் கிடைக்கப்பெற்றுள்ள முதல் காப்பியமாகும்.

நீண்ட பாடல் என்னும் யாப்பு அமைப்புக்குச் சங்கப் பத்துப்பாட்டுக்கள் முன்னோடி எனலாம். ஆனால் கதை என்னும் கருத்தமைவு சிலப்பதிகாரத்திலேயே முதலில் காணப்படுகிறது. இது ஒரு தனித் தமிழ்க்காப்பியம் என்பதனை, 'இச்சரித்திரம் வேறு பாஷையிலிருந்து வந்ததென்று சொல்வதற்கிமில்லை' என்று உ.வே. சாமிநாதையர் கூறுகிறார்.

உலக வாழ்வியலை நிலைப்படுத்துவது சிலப்பதிகாரத்தின் கருவாக அமைந்துள்ளது. இந்தக் காப்பியம் நெஞ்சில் நிலைத்து நின்று இனித்ததற்கு மூன்று விழுமிய பொருள்கள் காரணமாகும்.

‘அரைசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற்றா வதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்.

என்னும் மூன்றும் கருத்துக்களும் நாடு, குடும்பம், உலகம் என்னும் மூன்று நிலைகளில் வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவன. ஒரு நாட்டின் சீரான வாழ்வியலுக்கு அறநெறி பிறழாத அரசியல் அமைப்பும் அதன் நடைமுறைகள் அடிப்படையாக அமைகின்றன. குடும்பத்தின் சீரான வாழ்வுக்கு அதன் தலைவியின் பண்புகளும் ஒழுக்கங்களுமே உயிர்நாடி ஆகின்றன. மனிதர்களிடம் மட்டுமின்றி, அனைத்துயிர்களிடமும் சமத்துவத்தையும் அருளுணர்வையும் உருவாக்க வல்லது. ஊழ்வினை பற்றிய சிந்தனை இச்சிந்தனை உலகியலை நிலைப்படுத்த வல்லது.

2. சீவக சிந்தாமணி

சீவக சிந்தாமணி தமிழ் இலக்கிய வரலாற்றில் மற்றோர் அதிகாரத்தைத் தோற்றுவித்துள்ளது. விருத்தம் என்னும் பாவினைத் திறம்பட அமைத்துக் காப்பியம் பாடிய முதல் கவிஞராக இதன் ஆசிரியர் திருத்தக்கதேவர் விளங்குகிறார். இதனால் இவரை விருத்தாப்பாவின் தந்தை என்று இலக்கிய வரலாறு கருதுகிறது.

வீரமாமுனிவரைப் பெரிதும் கவர்ந்த நூல்களுள் சீவக சிந்தாமணியும் ஒன்று. அவர் திருத்தக்கதேவரைத் தமிழக கவிஞர்களின் இளவரசன் என்று செந்தமிழ் இலக்கணத்தில் பாராட்டுகிறார். ஜி.யு. போப் சீவகசிந்தாமணியைத் தமிழிலக்கிய இலியட் ஒடிசி என்று புகழ்கிறார்.

சீவக சிந்தாமணி ஷேத்திர சூடாமணி, கத்திய சிந்தாமணி, ஸ்ரீபுராணம் என்னும் வடமொழி நூல்களைத் தழுவி இயற்றப்பட்டது. கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்தது. மதுரையில் இருந்த திரமிள சங்கம் எனும் சமணத்தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றப்பட்டது என்பர்.

3. வளையாபதி

வளையாபதி நூல் முழுமையாக கிடைக்கவில்லை. எனவே இதன் அமைப்புக் குறித்தோ கருத்துக் குறித்தோ தெளிவாக அறிவதற்கு இயலவில்லை.

வளையாபதி நல்வழிப்படுத்துகிற அற நெறிகள் பலவற்றை எடுத்துரைக்கிறது. ஊழ்வினை, மனைவியைப் பேணுதல், ஏற்புடைமை, பிறர்மனைவியை விரும்பாமை, சிற்றின்பம் விழையாமை, வாய்மை, கொல்லாமை, கள்ளாமை, புலனடக்கம், புலால் மறுத்தல், இளமை

நிலையாமை, யாக்கை நிலையாமை, அன்னதானச் சிறப்பு, மக்கட்பேறு போன்ற கருத்துக்கள் இதன் பாடல்களில் காணப்படுகின்றன.

**'பொறையிலா அறிவுபோகப்**

**புணர்விலா இளமை மேவத்**

**துறையிலா வனச வாவி**

**துகிலிலாக் கோலத் தூய்மை**

**நறையிலா மாலை கல்வி**

**நலமிலாப் புலமை நன்னீர்ச்**

**சிறையிலா நகரம் போலும்**

**சேயிலாச் செல்வம் அன்றே.'**

என்று இந்நூல் பேசுகிறது.

மக்கட் பேறில்லாதவர்க்கு எத்துணைச் செல்வம் இருப்பினும் வாழ்வு பயனற்றதாகிவிடும் என்பதனை ஒப்புமை உடைய பல செய்திகளைத் தொகுத்து உவமையாக்கி இப்பாடல் விவரிக்கும் திறம் இன்புற்று மகிழ்தற்குரியது.

**'செந்நெல் லங்கரும்பி னோடிகலும் தீஞ்சுவைக்**

**கன்னலங் கரும்புதான் கமுகைக் காய்ந்தெழும்**

**இன்னவை காண்கிலன் என்று பூகமும்**

**முன்னிய முகில்களால் முகம்பு தைக்குமே'**

இயற்கை விவரிப்பில் புலவர் தேர்ந்தவர் எனற்கு இது சான்று.

**இ. ஐஞ்சிறுகாப்பியங்கள்**

தமிழில் சுட்டப்பெறும் ஐஞ்சிறு காப்பியங்களான 1. சூழாமணி, 2. நீலகேசி, 3. உதயணகுமாரகாவியம், 4. யசோதா காவியம், 5. நாக்குமாரகாவியம் ஆகியன சமணக் கொடையாக அமைவன.

**ஈ. இலக்கண நூல்கள்**

சமணர் படைத்துத் தந்த இலக்கண நூல்கள் தமிழுக்குப் பெரிய செல்வங்களாகத் திகழ்கின்றன.

1. யாப்பருக்கங்கலக் காரிகை 2. யாப்பருக்கலம், 3. நேமிநாதம், 4. நன்னூல், 5. அகப்பொருள்விளக்கம் 6. வச்சணந்தி மாலை, 7. தண்டியலங்காரம் ஆகிய இலக்கண நூல்கள் சமணர்களின் ஆக்கங்களாகும்.

### உ. நிகண்டுகள்

சொற்களுக்குப் பொருள் அறியத் துணைபுரியும் நிகண்டுகளைத் தமிழுக்கு நல்கியவர்கள் சமணர்களே ஆவர். மண்டல புருடரின் சூடாமணி நிகண்டு, திவாகரரின் திவாகரநிகண்டு, பிங்கலரின் பிங்கலந்தை நிகண்டு ஆகியன சமணர்களின் கொடையாகும்.

### ஊ. உரைநடை நூல்கள்

வசனநடையிலான 1 ஸ்ரீபுராணம் 2 உத்தரபுராணம், 3. கத்திய சிந்தாமணி ஆகிய நூல்கள் சமணர்கள் தமிழுக்கு நல்கிய உரைநடை நூல்களாகத் திகழ்கின்றன.

### எ. சிற்றிலக்கிய நூல்கள்

'நரிவிருத்தம்' நாற்பது பாக்களைக் கொண்டது. திருத்தக்க தேவரால் இயற்றப்பட்டது. 'திருநூற்றந்தாதி'யை எழுதியவர் உதீசி முனிவர் அவிரோதியார் இயற்றிய நூல் 'திருவெம்பாவை'.

இவை தவிர 'கிளிவிருத்தம்' 'எலிவிருத்தம்' 'திருக்கலம் பகம்' 'ஆதிநாதர் பிள்ளைத் தமிழ்' 'நேதிநாதர் பிள்ளைத் தமிழ்' 'அப்பாண்டை நாதர் உலா' போன்ற சிற்றிலக்கிய நூல்கள் தமிழுக்குச் சமணக் கொடையாகத் திகழ்கின்றன.

### ஏ. பிறநூல்கள்

நெல்லிலக்க வாய்பாடு, சிறுகுழி வாய்பாடு ஆகிய வாய்பாடு நூல்களும், சினேந்திரன்மாலை, 2. சோதிடநீதி ஆகிய சோதிட நூல்களும் தேவேந்திர முனிவர் இயற்றிய சிவசம் போதனை என்னும் சமண சித்தாந்த நூலும் சமணர்கள் தமிழுக்குத் தந்தவை.

### ஐ. உரைகள்

தொல்காப்பியத்திற்கு உரை நல்கிய இளம்பூரணர் நன்னூலுக்கு உரைதந்த மயிலைநாதர் திருக்குறளுக்கு உரைத்த காலிங்கர் ஆகியோர் சமணரேயாவர்.

## 4. பௌத்த இலக்கியங்கள்

தமிழ்நாட்டில் புகுந்த பௌத்த சமயம் படர்ந்து பரவுவதற்குத் தமிழ்மொழி துணைநின்றது. பல துறைகளில் பௌத்த சமயத்தினர் தமிழ்த்தொண்டு புரிந்தனர். எனினும் சமணரது நூல்கள் போல விரிந்த அளவில் பௌத்தரது நூல்கள் காணப்படவில்லை.

### அ. காப்பியங்கள்

'பௌத்தர் தந்த காப்பியங்களில் சிறந்தவை 1. மணிமேகலை 2. குண்டலகேசி ஆகியனவாகும்

1. **மணிமேகலை**

ஐம்பெரும் காப்பியங்களுள் சிலப்பதிகாரத்திற்கு அடுத்த பெருமைக்கு உரியது மணிமேகலை. தமிழில் கிடைக்கப்பெற்றுள்ள முதலாவது சமயப் பிரச்சார காப்பியம் இது. காப்பியத் தலைவி மணிமேகலை பல சமயங்களை சார்ந்த அறிஞர்களைக் கண்டு, பல சமயக் கொள்கைகளை அறிகிறாள். அனைத்திலும் பௌத்த நெறியே மேலானது என்பதை நிலைநாட்டுகிறாள். சமயப் பிரச்சாரத்தின் உச்சநிலையாகக் கண்ணகி பௌத்தத்தைத் தழுவ முனைகிறாள்.

மணிமேகலை முப்பது நீண்ட ஆசிரியப் பாட்டுக்களைக் கொண்டுள்ளது. முப்பதும் காதைகள் என்ற பெயரைப் பெற்றுள்ளது. இக்காப்பியத்திற்கு ஆசிரியர் இட்ட பெயர் மணிமேகலை துறவு என்பதாகும்.

மணிமேகலைக் காப்பியத்தின் கரு வீடுபேறு அடைதல் ஆகும். பௌத்த நெறிகளை அறிந்து, இவ்வுலக ஆசைகளைத் துறந்து நோற்றால் அன்றி, பிறவிப் பிணி நீங்காகது என்ற சமயப் பிரசாரமே இதன் கரு ஆகும்.

2. **குண்டலகேசி**

இது விருத்தப்பாவினால் ஆனது. அகலக்கவி குண்டலகேசி விருத்தம் என்ற பெயர்களும் இதற்கு உண்டு. இந்நூல் முழுமையாக கிடைக்கவில்லை.

கேசி என்னும் பெயரில் தருக்க நூல்கள் எழுதப்பெற்றன. குண்டலகேசி தருக்க நெறிகள் நிறைந்த பௌத்த சமயக் காப்பியம். நாதகுத்தனார் இதன் ஆசிரியர் ஆவார்.

3. **விம்பசாரகதை** - இந்நூல் புத்தரின் சீடனாகிய பிம்பிசார வரலாற்றை விளக்குகின்றது. இம்மன்னனின் மகன் அஜாதசத்ரு தந்தையைச் சிறையிட்டுக் கொன்றான். பின்னர் தவறுக்கு வருந்தி, பௌத்த சமயம் புகுந்தான். நீலகேசி உரையில் வரும் இந்நூலின் மேற்கோள் பாட்டு பின்வருமாறு

**'உலும்பினி வனத்துள் ஒண்குழைத் தேவி**
**வலம்படு மருங்குல் வடுநோ யுறாமல்**
**ஆன்றோ னவ்வழி தோன்றின னாதலின்**
**ஈன்றோள் ஏழ்நாள் இன்னுயிர் வைத்தாள்'**

ஆ. பிறநூல்கள்

1. சித்தாந்தத் தொகை

பௌத்த சமயச்சித்தாந்தங்களைத் தொகுத்துக் கூறும் இந்நூல் காணக்கிடைக்கவில்லை. சிவஞானசித்தியார் நூலுக்கு உரை தந்த ஞானப்பிரகாசர் மேற்கோளாகக் காட்டுகிறார். நீலகேசியின் ஒரு பாட்டு உரையிலும் இவ்வாறு ஒரு குறிப்பு உள்ளது என்பர்.

2. திருப்பதிகம்

புத்தரைப் பற்றிய துதிப்பாடல்களைக் கொண்ட நூல் பதிக மரபிலான இந்நூலின் சில பாடல்கள் கிடைத்துள்ளன என்பர். மேற்சுட்டிய இரு நூல்களிலுமே இந்நூல் மேற்கோளிடப்படுகின்றன.

3. அபிதம்மாவதாரம்

தம் மாணாக்கி ஒருத்தியின் வேண்டுகோளுக்கு இணங்கி புத்ததத்தர் இயற்றிய நூல் இது.

தமிழ் இலக்கியச் செல்வத்தின் ஒரு பகுதியான பௌத்த நூல்கள் இழந்துவிட்டது குறித்து வருந்தும் மயிலை சீனிவேங்கடசாமி 'ஒருநாடு தனது பொருட்செல்வத்தை இழந்து வறுமையில் வாடுவதைவிட இலக்கியச் செல்வத்தை இழந்து வாடுவது பெரிதும் வருந்தத்தக்கது' என்றார்.

4. வீரசோழியம்

பௌத்தர்களின் தமிழ் இலக்கணக் கொடைக்குச் சான்றாக அமையும் இந்நூல் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற தமிழிலக்கணம் ஐந்தையும் கூறுகிறது. வடமொழி இலக்கண விதிகளைத் தமிழுக்கும் பொருந்திக் கூறும் இந்நூல் புத்தமித்திரரால் இயற்றப்பட்டது.

## 6. இஸ்லாமிய இலக்கியம்

நெடுநாள் அரபு நாடுகளுடன் தமிழகம் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தமையினாலும், கி.பி. 1300இல் மாலிக்காபூரின் தமிழ்நாட்டுப் படையெடுப்பாலும் தமிழரில் பலர் இசுலாமிய சமயத்தைத் தழுவினர். இந்தத் தமிழ் இசலாமியர்கள் இலக்கியப் பணிகள் புரிந்து தொண்டாற்றினர். பெருங்காப்பியங்கள் பிரபந்தங்கள் சமய நூல்கள் பலவற்றை இசுலாம் சமுதாயம் தமிழுக்கு நல்கியுள்ளது.

**இசுலாமியக் காப்பியங்கள்**

கி.பி. 1548-1894ஆம் ஆண்டுகட்கு இடைப்பட்ட 246 ஆண்டுகளின் பரப்பில் 16 இசுலாமியக் காப்பியங்கள் தோன்றியுள்ளன. அதிலும் (1807-1821) பதினைந்து ஆண்டுகட்குள் 9 காப்பியங்கள் உருவாகியுள்ளன என்று குறிப்பிடும் மு. சாய்பு மரக்காயர், 'இசுலாமியக் காப்பியங்கள் நபிகள் நாயகம், சுலைமான் நபி, இபுராஹிம் நபி, யூசு.ஃப் நபி, இமாம் ஹுசைன், முஹ்யித்தீன் ஆண்டகை, நாகூர் ஆண்டகை, ரி.ஃபாயி ஆண்டகை போன்ற வரலாற்று நாயகர்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு பாடப்பட்டவை' என்கிறார்.

மேலும், இக்காலகட்டத்தில் ஆலிபட புலவரின் 'மி.ஃராஜ் மாலை' முகம்மது நூருத்தீன் புலவரின் 'மூசா நபி புராணம்', பக்கீர் மதார் புலவரின் 'இராஜமணிமாலை' குஞ்சுமுகப் புலவரின் 'செய்யிதத்து படைப்போர்' போன்ற 9 சிறு காப்பியங்களையும் இசுலாமியப் புலவர்கள் எழுதியுள்ளனர் என்பது அவர்தம் குறிப்பு.

**சீறாப்புராணம்**

இசுலாமியத் தமிழ் நூல்களுள் தலைசிறந்தது சீறாப்புராணம் என்னும் காப்பியமே தமிழ்மரபு தழுவி நபிகள் நாயகத்தின் வரலாறு கூறுவது இந்நூல் (சீறா - வாழ்க்கை வரலாறு விலாதத்துக் காண்டம் நுபலத்துக் காண்டம் ஹிஜ்ஜிரத்துக் காண்டம் என்னும் முப்பெரும் பிரிவுகளும், 92 படலங்களும் 5027 பாடல்களும் கொண்டது.

ஆசிரியர் உமறுப்புலவர் கி.பி. 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

**இராசநாயகம் காவியம்**

இராசநாயகம் என்னும் காப்பியம் பாடிய புலவர் வண்ணக்களஞ்சியப் புலவர். தீன் விளக்கம் அலிபாதுஷா நாடகம் போன்றன இவரது பிற நூல்கள் மிக நயமான **முகயித்தீன்** புராணத்தை இயற்றினார்.

**இருபதாம் நூற்றாண்டில் எழுந்த காப்பியங்கள்**

இருபதாம் நூற்றாண்டில் 'யூசு.ஃப் கலைகா', 'நெஞ்சில் நிறைந்த நபிமணி,' 'நபிகள் நாயகம் அருட்காப்பியம்' முதலான 12 இசுலாமியக் காப்பியங்கள் மரபுக் கவிதை வடிவிலும் வலம்புரி ஜானின் 'நாயகம் எங்கள் தாயகம்' மு. மேத்தாவின் 'நாயகம் ஒரு காவியம்' அதிரை அருட்கவி முஹம்மது தாஹாவின் 'நபிபுகழ் காவியம்', அபூஹாஷிமாவின் 'அண்ணலே யாரஸுலுல்லாஹ்' போன்ற 9 இசுலாமியக் காப்பியங்கள் புதுக்கவிதை வடிவிலும் வெளிவந்திருக்கின்றன.

## இசுலாமியக் சிற்றிலக்கியங்கள்

### பிள்ளைத்தமிழ் நூல்கள்

இசுலாமியத் தமிழ் இலக்கியத்திற்கு சவ்வாதுப் புலவர் வண்ணக்களஞ்சியப் புலவர் அலியார் புலவர், மதாறு சாகிப் புலவர் போன்ற பலர் பிரபந்த நூல்களைப் படைத்தும் வளம் சேர்த்துள்ளனர். இசுலாமியர்கள் செய்த பிள்ளைத்தமிழ் நூல்களில் தலைசிறந்தது நபிகள் நாயகம் பிள்ளைத்தமிடை நபிகளைக் குழந்தையாகப் பாவித்து, மக்கமாநகரின் பொலிவினைப் பாடும் இந்நூலைப் பாடியவர், செய்யிது அனபியா சாகிபு ஆவர். (தென்காசி வட கரையூர் செய்யிது மீரா லெப்பையின் புதல்வர்) முகியித்தீன் ஆண்டவர் பிள்ளைத்தமிழ் நூலை இயற்றியவர். செய்யிது முகியித்தீன் கவிராயர் நாகூர் ஆண்டவர் எனப் புகழ்பெற்ற சாகுல் அமிது மேல் பாடப்பட்ட நாகூர் பிள்ளைத்தமிழ் குலாம் காதிறு நாவலரின் மகன் ஆரிய நாவலர் பாடியது. பாத்திமா நாயகி பிள்ளைத்தமிழ் பெண்பாற்பிள்ளைத் தமிழ் நூலாகும். சதாவதான செய்குத்தம்பிப் பாவலர் (1407) 1 கோட்டாற்றுப் பிள்ளைத் தமிழ் 2 நீதிவெண்பா, 3, நாயக மான்மிய மஞ்சரி ஆகியன பாடியுள்ளார்.

### அந்தாதி நூல்கள்

இசுலாமிய இலக்கிய வரிசையில் சிறப்புற்று விளங்கும் அந்தாதி நூல்கள் பல, அவற்றுள் சிறந்தது **திருமதீநத்தந்தாதி.** இசுலாமிய அரசரின் பழைய தலைநகரான மதீன நகரைப் பொருளாய்க் கொண்டது. ‘இலக்கணக்கடல்’ ஆ.கா. பிச்சை இபுறாகீம் புலவர் பாடியது. **திருமக்கமாத் திரிபு அந்தாதி** பாண்டித்துரைத் தேவரின் தமிழ்ச்சங்கத் தலைவரான நாகூர் வா. குணலாம் காதிறு நாவலர் இயற்றியது. இசுலாமியத் திருத்தலமான நாகூரைப்பற்றிய **நாகை அந்தாதி**யைச் செய்கு அப்துல் காதிறு நாயினார் ஆலிம் எழுதியுள்ளார்.

### ஆற்றுப்படை நூல்கள்

இசுலாமியர் தந்த ஆற்றுப்படை நூல்களிற் சிறந்தது **மதுரை சங்கத்துப் புலவராற்றுப்படை.** இந்நூலுள் தமிழ்நாட்டின் பெருமையும், பழமையும் மதுரை நகரின் சிறப்பும், பாண்டித்துரை தேவரின் புகழும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. வா. குணம் காதிறு நாவலர் பாடிய அரிய நூல் இது.

### அம்மானை நூல்கள்

அம்மானைப் பாக்களும் இவர்களால் பாடப்பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்று நபி அவதார அம்மானை. இந்நூல் **‘சீறா’**வின் ஆசிரியரான உமறுப்புலவர் மகனார் கவிக்களஞ்சியப் புலவர் 1713ஆம் ஆண்டில் எழுதியது நபிகளாரின் மருமகளார் சலீமா அலியைப் புகழந்து

பாடும் நூல் ப்பரத்தியார் அம்மானை இதனை மதுரை உலக நயினாரின் மகன் செய்யிது மீறாப் புலவர் 1704இல் இயற்றினார்.

இசைத் தமிழோடு தொடர்புடைய பல பிரபந்தங்களையும் முஸ்லீம் புலவர்கள் தந்தனர். பாமர இலக்கியங்களான மாலை கும்மி தாலாட்டு திருப்புகழ் ஏசல் முதலியன இவர்களால் இயற்றப்பட்டன.

1. **திருப்புகழ்**

சந்தநயம், பொருள் செறிவு, சொல்லாட்சி மிக்க பாடல்கள் கொண்ட இந்நூலை இயற்றியவர் காயல்பட்டினம் காசீம் புலவர்.

நவரத்தினத் திருப்புகழ் யாழ்பாணம் அசனா லெப்பை பாடியது.

முகிதீன் ஆண்டவர் திருப்புகழ் முகதீன் கவிராயர் பாடியது.

## போர் இலக்கியங்கள் (War Ballad)

இசுலாமியப் பாவாணர்கள் தமிழ் இலக்கியத்தில் சில புதிய சோதனைகளும் செய்தனர். அச்சோதனையில் விளைந்த இலக்கியங்களில் 'War Ballad' என்ற போற்றத்தக்க படைப்போர் பிரபந்தம் சிறந்தது. அசனலிப்புலவர் இபுனியம் படைப் போர் இந்திராயன் படைப்போர், உச்சிப்படைப்போர் 'வடோச்சிப் போர்' 'தாகிப் படைப் போர் ஆகிய நூல்களைத் தந்துள்ளார். குஞ்சு மூசுப்புலவர் 'செய்தத்துப் படைப் போரை'யும் காளை அசன் அலிப்புலவர் 'ஹுசைன் படைப் போரை'யும் தந்தனர்.

மேலும் சில இசுலாமியச் சிற்றிலக்கியச் சிறப்பு நூல்களும் அவற்றைப் படைத்தோர் பெயர்களும் வருமாறு

1. **முனாஜத்து** மாலை - செய்யிது முகமது ஆகிய (முனாஜத்து கடவுளுக்கு விண்ணப்பம்.)

2. **யூசுபி நபி இஸ்ஸா**- மதாறு சாயிப் புலவர் (இஸ்ஸா - கதை கூறல்)

3. **மசலா** - வினா விடை கொண்டது. விடுகதை போன்ற அமைப்புடையது இவ்வகையில் தோன்றிய நூல்கள் பின்வருமாறு

நூறு மசலா - ஆசிரியர் தெரியவில்லை

ஆயிர மசலா - வண்ணப்பரிமளப் புலவர்

வெள்ளாட்டி மசலா - செய்து அப்துல் காதிறு லெப்பை

4. **நாமா** - கதை நூல் வரலாறு

1. மி∴ராஜா நாமா - மதாறு சாகியு

2. நூறு நாமா - செய்யிது அகமது மரைக்காயர்

**உரைநடை நூல்கள்**

சமயக் கருத்துகளை வலியுறுத்தவும் விளக்கவும் இசுலாமிய இலக்கியத்துள் தோன்றிய உரைநடை நூல்களும் அவற்றை படைத்த ஆசிரியர்கள் பெயர்களும் பின்வருமாறு

முஸ்லிம் அத்வைத மூலமொழி - முகம்மது அப்துல் ரகுமான்

உலூமுத்தீன் - செய்யது அகமது கபீர்

பஞ்சா வரலாறு விளக்கம் - காதிறு களிப்புலவர்

இசுலாமிய ஞானபோதம் - தாவுத் ஷா

நாட்டுப்புறப் பாடல் வகைகளில் இசுலாமிய நெறி பற்றி பாடியவர்களும் உண்டு. குழந்தைப்பாட்டு, தொழிற்பாட்டு, ஏற்றப்பாட்டு, காதற்பாட்டு முதலிய பாடல்கள் இவ்வகையில் குறிக்கத்தக்கன.

**ஞான நூல்கள்**

**குணங்குடி மஸ்தான் சாகிபு**

இவரது நூல்கள் - மனோன்மணிக்கண்ணி, முகையதீன் சதகம், ஆனந்தக்களிப்பு, அகத்தீசர் சதகம், நந்தீசர் சதகம், நிராமயக் கண்ணி ஆகியனவாகும்.

**தக்கலை பீர்முகமது சாகிபு**

மற்றொரு சிறந்த ஞானி தக்கலை பீர்முகமது சாகிபு ஞானமணி மாலை, ஞானக்குறம், ஞானசரநூல், ஞானப்பூட்டு, ஞானநடனம், ஞானப்புகழ்ச்சி, ஞானச் சுடர்ப்பதிகங்கள், ஞானப்பால், ஞானரத்தினக் குறவஞ்சி, பிஸ்மில் குறம், ஆனந்தக் களிப்பு ஆகிய நூல்களைப் பாடியுள்ளார்.

**செய்குத் தம்பி பாவலர்**

கோட்டாற்றுப் பிள்ளைத்தமிழ் திருக்கோட்டாற்றுப் பதிற்றுப் பத்தந்தாதி, திருநாகூர் திரியந்தாதி, நபிகள் நாயக மான்மிய மஞ்சரி போன்ற பல நூல்களைப் பாடியவர்.

## 6. கிறிஸ்தவ இலக்கியங்கள்

முன்னாளில் சமணரும் பௌத்தரும் போலவும், பின்னாளில் இசுலாமியர் போலவும், கிறிஸ்தவர்கள் தமிழ்மொழிக்குச் செய்த தொண்டு இலக்கிய வரலாற்றில் நீங்கா இடம்

பெறுவதாகும். ஐரோப்பியர் தொடர்பால்தான் இன்று நம் இலக்கியம் பன்முகங்களிலும் பீடுநடை பயில்கின்றது. கிறிஸ்தவர்களின் வருகையால், தமிழுக்குக் கிட்டிய வளங்கள் பல. இலக்கியப் படைப்புகள் அச்சுவாகனமேறவும், உலக அளவில் பழந்தமிழ் இலக்கியங்கள் உலா வரவும், புத்திலக்கியங்களான சிறுகதை, புதினம், தன்வரலாறு, நவீன நாடகம் முதலான வகைகள் தமிழில் உதயமாகக் காரணமானவர்கள் கிறித்தவர்கள்.

**1. தத்துவபோதக சுவாமி**

இயற்பெயர் ராபர்ட். டி. நொபிலி.

இவர் இயற்றிய நூல்கள் 1. ஞானோபதேசம், 2. மந்திரமாலை, 3. ஆத்துமநிர்ணயம், 4. தூஷணதிக்காரம், 5. சத்திய வேத லட்சணம், 6. சகுண நிவாரணம், 7. பரமசூட்சுமாபிப்பிராயம், 8. கடவுள் நிர்ணயம், 9. புனர்ஜன்ம ஆட்சேபம், 10. நித்யஜீவன் சல்லாபம், 11. தத்துவக்கண்ணாடி, 12. சேசுநாதர் சரித்திரம், 13. தவசுச் சதகம், 14. ஞானதீபிகை, 15. நீதிச்சொல், 16. அநித்ய நித்ய வித்யாசம், 17. பிரபஞ்ச விரோத வித்யாசம், 18. தமிழ் போர்ச்சுகீசிய அகராதி.

**வீரமாமுனிவர் (1680-1742)**

இத்தாலி நாட்டு வெனீசில் பிறந்தார். இவரது இயற்பெயர் **கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி** ரோமாபுரி விட்டு சமயப் பணி புரிய வந்த இவர் சுப்ரதீபக் கவிராயர் முதலான பல ஆசிரியர்கள் மூலம் தமிழறிவு பெற்றார். தெலுங்கு, சமஸ்கிருத மொழிகளில் புலமை பெற்றார்.

'தைரியநாத சுவாமி' என்னும் பெயர் கொண்ட இவர் சூசையப்பர் வரலாற்றை அரிய செந்தமிழ்க் காவியமான **'தேம்பாவணி'** என இயற்றினார்.

இவர் இயற்றிய மற்ற செய்யுள் நூல்கள் - திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கலமாலை, கலிவெண்பா, அன்னை அழுங்கல் அகராதி, கித்தேரியம்மாள் அம்மானை.

உரைநடையை வளம் செய்த இவர் நூல்கள் பல வேதியர் ஒழுக்கம், வேதவிளக்கம், பேதக மறுத்தல், ஞானமுணர்த்தல், திருச்சபைக் கணிதம்.

கதைச்சுவை மலிந்த படைப்புகளும், இவர்பால், பிறந்தன 'வாமன கதை' 'பரமார்த்தகுரு கதை' இத்துறையில் சிறந்தவை.

**தெய்லர் ஐயர் (Rev. W. Tayler)**

தமிழில் பல சிறு நூல்கள் இயற்றியுள்ளார். வேதத்தாட்சி, வெற்றி வேற்கை - ஆங்கில மொழிபெயர்ப்பு, தமிழ் கற்க உதவும் ஆங்கில நூல் முதலியன இவர் இயற்றியவை

**பவுரிசையார் (Rev. J.Ph. Fabricius)**

ஜெர்மனி தேசத்தினர் (1717-1791) மெச்சத்தக்க உரையாளர் இவர் எழுதிய பிரார்த்தனைப் புத்தகம் சிறப்பானது Pilgrims Progress ஐந்தமிழ்ப்படுத்தினார்.

**கிளார்க் ஐயா**

தீர்க்கதரிசன வியாக்கியானம், போதக ஒழுக்கம் ஆகியன இவர் எழுதியவை.

**எச்.எ. கிருஷ்ண பிள்ளை** (1827-1900)

இவரது நூல்கள் இரட்சண்ய யாத்ரிகம், இரட்சண்ய மனோகரம், இரட்சண்யக் குறள், இரட்சண்ய சமய நிர்ணயம் என்பனவாகும். ஜான் பனியன் என்னும் மேனாட்டறிஞர் எழுதிய 'மோட்ச யாத்திரை' நூலைத் தமிழில் '**இரட்சண்ய யாத்ரிகம்**' என்ற பெயரில் காப்பியமாகப் பாடியவர். 4,000 பாடல்களை கொண்ட இந்நூல் கம்பராமாயணத்தோடு ஒப்புநோக்கத்தக்கது. இச்சாயல் கருதியே இவரைக் **கிறித்தவக் கம்பன்** என்றும் அழைப்பர். இவர்தம் நூலில் சிலுவையில் அறைபட்ட ஏசுவின் அருள்வாக்கை பின்வருமாறு பாடுகின்றார்.

**'தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்தி**
**பன்னரிய பலபாடு படும்போதும் பரிந்தெந்தாய்**
**இன்னதென அறிகில்லார் தாம் செய்த திவர்பிழையை**
**மன்னியுமென் றருட்கனிவாய் மலர்ந்தார்நம் அருள்வள்ளல்'**

**வேதநாயம்பிள்ளை** (1826-1889)

தமிழில் முதல் நாவல் என்ற இலக்கிய உலகம் உச்சிமேல் வைத்துப் போற்றும் '**பிரதாப முதலியார் சரித்திரம்**' இவரது ஒப்பற்ற படைப்பாகும். இவரது மற்றொரு நூல் '**சுகுண சுந்தரி சரித்திரம்**'.

பல பாடல் நூல்களும் இவர் படைத்துள்ளார். 1. நீதி நூல் 2. பெண்மதி மாலை 3. சர்வ சமய சமரசக் கீர்த்தனை ஆகியனவாகும்.

**வேத நாயக சாஸ்திரியார்** (1774-1864)

இவரது சிறந்த படைப்பு இயேசுநாதரைத் தலைவராகக் கொண்டு பாடிய 'பெத்லகேம் குறவஞ்சி'. மேலும் பேரின்பக்காதல், ஜெபமாலை, ஞானஉலா, இயேசுவின் பேரில் பதங்கள், ஞானத்தச்சன் நாடகம். ஞான ஏற்றப்பாட்டு, சென்னப்பட்டணப் பிரவேசம் முதலிய நூல்களும் பாடியுள்ளார்.

**சதாசிவம்பிள்ளை (Arnold)**

மெய்வேத சாரம், சத்போத சாரம், இல்லற நொண்டி, திருச்சதகம், வெல்னையந்தாதி, நன்னெறி மாலை, நன்னெறிக் கொத்து, உலக சரித்திரம், வான சாஸ்திரம், பாவலர் சரித்திர தீபிகம், நன்னெறி கதா சங்கிரகம் ஆகியன தந்தவர்.

**பவர் ஐயர்** (1658 - 1865)

பைபிளைத்திருத்தமுறச் செய்தவர் இவர் எழுதிய வேறு நூல்கள் வேத அகராதி தர்மசாஸ்திரசாரம், நியாயப்பிரமாண விளக்கம், விசுவாசப்பிரமாண விளக்கம் ஆகியனவாகும்.

**சற்குணம் வின்பிரெட் ஐயர்** (1810-1879)

நாசரேத் ஊரினர். பன்மொழிப்புலவர், ஜான்பனியனின் (Holy war) திருப்போராடல், தாவீதேசன், அம்மானை, உதிர மகத்துவம், இரத்வாவளி நாடகத் கதை ஆகியன இவர்தம் நூல்களாகும்.

**சிதம்பரம் பிள்ளை**

ஊர் சங்வேலி, நூல்கள் நியாய இலக்கணம், தமிழ் வியாகரணம், இலக்கிய சங்கிரகம்.

**பிலிப்பு-டி-மெல்லோ** (1725-1790)

இலங்கையைச் சார்ந்தவர், பன்மொழிப் புலவர் சத்தியத்தின் செயம், மருதப்பக்குறவஞ்சி நூலாசிரியர்.

**வித்துவான் சாமிநாத பிள்ளை**

புதுச்செரியினர், நசரைக் கலம்பகம், சாமிநாதன் பிள்ளைத்தமிழ் ஆகியவற்றை இயற்றியவர். எல்லிஸ் துரையின் ஆசிரியர். இவர்தம் சிறந்த நூல் 'ஞானாதிக்கராயர் காப்பியம்'.

இவ்வாறு தமிழ் இலக்கிய உலகில் கிறிஸ்தவ நூல்களும் தம் பங்களிப்பை ஆற்றி வருகின்றன.

# 7. அறநூல்

| பதினெண் கீழ்க்கணக்கு | | | |
|---|---|---|---|
| வ.எண். | நூல் | ஆசிரியர் | பாடல்கள் |
| 1. | திருக்குறள் | திருவள்ளுவர் | 1330 |
| 2. | நாலடியார் | சமணப்புலவர்கள் | 400 |
| 3. | நான்மணிக்கடிகை | விளம்பிநாகனார் | 103 |
| 4. | இனியவை நாற்பது | பூதஞ்சேந்தனார் | 41 |
| 5. | இன்னாநாற்பது | கபிலர் | 41 |
| 6. | பழமொழி | மூன்றுறை அரையனார் | 400 |
| 7. | ஆசாரக்கோவை | பெருவாயின் முள்ளியார் | 100 |
| 8. | முதுமொழிக் காஞ்சி | மதுரைக் கூடலூர்கிழார் | 110 அடிகள் |
| 9. | திரிகடுகம் | நல்லாதனார் | 101 |
| 10. | சிறுபஞ்சமூலம் | காரியாசான் | 103 |
| 11. | ஏலாதி | கணிமேதாவியார் | 81 |

பயிற்சி வினாக்கள்

1. திருவைந்தெழுத்தின் பெருமைகளை திருஞானசம்பந்தரின் வழிநின்று விளக்குக.

2. இறைவனின் பெருமைகளை திருநாவுக்கரசர் தேவாரம் வழிநின்று விளக்குக

3. நம் பாடப் பகுதியில் அமைந்த திருவாசகப் பாடல்களில் சிறப்புகளை விவரிக்க

4. யாக்கை நிலையாமை குறித்து திருமூலரின் கருத்துகளை விளக்குக

5. வறுமையால் வாடுவோர் நிலை கண்டு வள்ளலார் எவ்வாறு வருந்துகின்றார்.

6. குலசேகர ஆழ்வார் வேண்டும் பிறவிகளிலும் பாடப்பகுதி கொண்டு எடுத்து இயம்புக.'.

7. இரட்சணிய மனோகரம் பாடல் வழி பிறப்பின் பண்பை விளக்குக.

8. மூதுரை பாடல்கள் உணர்த்தும் உண்மையினை புலப்படுத்துக

9. பணம் தந்து அதன் வகைகளை குறிப்பிடுக.

10. வினைமுற்று - விளக்குக

11. இடைச்சொல்லின் சிறப்பிலக்கணத்தை கூறுக

12. ஏகார இடைச்சொல் பொருள் கொள்ளும் இடங்களை கூறி விளக்குக.

13. நீ விரும்பும் புத்தகம் ஒன்றை அனுப்பித் தருமாறு பதிப்பகத்தாருக்கு கடிதம் எழுதுக

14. வறுமையை வென்று சாதனை படைத்தவர் குறித்து எழுதுக

15. வெற்றி பெறுதல் எளிதானது என்பதை எடுத்துரைக்க

16. தனது மனப்போக்கு நேர்வழியில் செல்ல எத்தகைய வழிமுறைகளை செயல்படுத்த வேண்டும்.

17. பிறர் மீது வெறுப்பு கொள்ளாது நல்லவற்றை எண்ணுவதால் நேரும் விளைவுகள் யாவை?

18. சுந்தரனார் பற்றிய பல ஆதாரங்கள் கிடைக்காமல் போனதற்கான காரணம் யாது?

19. சுந்தரனாரின் எழுத்துப்பணி குறித்து எழுதுக

20. சுந்தரனாரின் தமிழ் உணர்வு குறித்து எழுதுக

21. மனோன்மணியம் நாடக கதையையும் அமைப்பையும் விளக்குக

22. மனோன்மணியம் தவிர சுந்தரனார் மேற்கொண்டிருந்த பிற இலக்கிய பணிகள் பற்றி எழுதுக.

23. பன்னிரு திருமுறையின் அமைப்பினை எழுதுக

24. சமண சமய காப்பியங்கள் குறித்து எழுதுக

25. இஸ்லாமிய இலக்கியங்கள் பற்றி கட்டுரை வரைக

**வினாத்தாள் வடிவம்**

**பகுதி அ (5 x 5 = 25 மதிப்பெண்கள்)**

கொடுக்கப்பட்டுள்ள எட்டு வினாக்களில் எவையேனும் ஐந்திற்கு விடையளி

**பகுதி ஆ (5 x 5 = 25 மதிப்பெண்கள்)**

கொடுக்கப்பட்டுள்ள எட்டு வினாக்களில் எவையேனும் ஐந்திற்கு விடையளி.